



இலக்கிய சாம்ராட்
டாக்டர் கோவி. மணிசேகர

கோவி. மணிசே கரனார் கொடுத்ததென
ஆவி மகிழூட்டும் ஆயிரமாய் - பூவாத
பூவாய்ப் பொலிந்து புகழ்தந்து வாழியவே
சாவா நிலையார் தமிழ்!

- கவியரசு கண்ணதாசன்


பூம்புகார் பதிப்பகம்
127 (ப. எண் : 63), பிரகாசம் சாலை (பிராட்வே)
சென்னை - 600 108.
தொலைபேசி : 25267543


Rs.300/-

குற்றாலக் குறிஞ்சி

இலக்கிய சாம்ராட்
டாக்டர் கோவி. மணிசேகரன்

# குற்றாலக் குறிஞ்சி

சாகித்திய அகாதமி
விருது பெற்ற
நாவல்



இலக்கிய சாம்ராட்
டாக்டர் கோவி.மணிசேகரன்

# குற்றாலக் குறிஞ்சி

வரலாற்று இசை ஞானப் புதினம்

(சாகித்திய அகாடமி விருது பெற்றது)

இலக்கிய சாம்ராட்

டாக்டர் கோவி. மணிசேகரன்

பூம்புகார் பதிப்பகம்

127 (ப.எண். 63) பிரகாசம் சாலை (பிராட்வே),
சென்னை - 600 108.
தொலைபேசி : 044 - 25267543

விலை ரூ. 300.00

பூம்புகார் வெளியீட்டு எண் : 969
முதல் பதிப்பு : செப்டம்பர், 2012
இரண்டாம் பதிப்பு : செப்டம்பர், 2019 O. No. : 02901437
உரிமை : ஆசிரியருக்கு P. C. No. : 9810KI11
அச்சிட்டவர்கள் : சுதின் பிரஸ், சென்னை #600 013.

# காணிக்கை

என் இசையாசான்
இசைமாமன்னர்
**சித்தூர் சுப்பிரமணியப் பிள்ளை**
அவர்களுக்கும்

என் குருகுல நண்பன்
இசைமாமன்னன்
**மதுரை சோமசுந்தரத்துக்கும்**
**(மதுரை சோமு)**

இந்நூல்...



# கோவி பெற்ற விருதுகள்

1. சாகித்திய அகாடமி (மத்திய அரசு)
2. திரு.வி.க. (மாநில அரசு)
3. மாமன்னர் இராசராசன் (தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகம்)
4. கலைஞர் விருது
5. ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார்
6. தமிழ் வளர்ச்சித் துறை (அரசு)
7. தமிழ் வளர்ச்சித் துறை (அரசு)
8. தமிழ் வளர்ச்சித் துறை (அரசு)
9. மன்னார்குடிக் கல்லூரி: செங்கமலத் தாயார் விருது.
10. சென்னைப் புத்தகக் கண்காட்சி: சிறந்த எழுத்தாளர்.
11. வில்லி தேவசிகாமணி
12. வி.ஜி.பி.
13. அன்னை ராஜலட்சுமி
14. புதுவை வ.உ.சி.
15. காஞ்சி காமகோடி பீடம்
16. காஞ்சி காமகோடி பீடம்
17. ஞான ஒளி (வி.ஜி.பி.)
18. முகம் (இதழ் விருது)
19. குழந்தை எழுத்தாளர் சங்கம்
20. இலக்கிய சாம்ராட்
21. ஞான சூரியன்
22. சாகித்திய சக்கரவர்த்தி
23. இலக்கிய ராட்சஸன்
24. இலக்கிய ராசராசன்
25. இலக்கிய மேதை
26. தமிழ் இலக்கிய மாமணி
27. கவி ராஜ சிங்கம்
28. புதினப் பேரரசு
29. புதினச் செம்மல்
30. முத்தமிழ் வித்தகர்
31. எழுத்துலக வேங்கை
32. நாவல் மாமணி
33. மதுரத் தமிழ் மாமணி
34. கம்பன் விருது
35. சேக்கிழார் விருது
36. இளங்கோ விருது
37. காளிதாசன் விருது
38. எழுத்தரசு
39. மனோன்மணீயம் சுந்தரனார்
40. சங்கரதாஸ் சுவாமிகள்
41. தினத்தந்தி ஆதித்தனார் - மூத்த அறிஞர் விருது (தமிழகத்தின் மிகப்பெரிய விருது)
42. அண்ணாமலைப் பல்கலைக் கழகம் (சங்கீத பூஷணம்) நிறுவனர் விருது
43. 'கல்கி' இதழ் சிறப்புச் சிறுகதைப் போட்டி - முதல் பரிசு
44. 'தினமணிக் கதிர்' நாவல் போட்டி - முதல் பரிசு

# பதிப்புரை

இது ஓர் அபூர்வப் புதினம்.

கோவியாரைப் பற்றி, பேராசிரியரும் பேரெழுத்தாளருமான டாக்டர் மு.வ. அவர்கள் 'நாடறிந்த நல்ல எழுத்தாளர்' என்று முத்திரை பதிக்கிறார்.

கோவியவர்களின் எழுத்துலகப் பாதை, பேராசிரியப் பெருமக்களின் பாதை என்றும் சொல்ல முடியாது; இன்றைக்குள்ள எழுத்தாளர்களின் பாதை என்றும் கூறிவிட முடியாது. கவிதை நடையழகுப் பாங்கான கோவியின் பாதை, ஓர் அலாதியான தனிப்பாதை. எனவேதான் மூத்த எழுத்தாளரான மீ.ப. சோமு, இவரைப் பற்றிக் கூற முனைந்த போது, 'கோவியின் நூலைப் படிப்பதற்குத் தனியான அனுபவம் தேவை' என்கிறார்.

மூதறிஞர் ராஜாஜி, பாவேந்தர், பேரறிஞர் அண்ணா, நாமக்கல் கவிஞர், கலைஞர், கல்கி, கே.ஏ. அப்பாஸ், டாக்டர் மு.வ., அகிலன், க.நா.சு., இன்னும் பல எழுத்தாளர்களின் பாராட்டுகளுடன், பாரதரத்னா எம்.ஜி.ஆர். அவர்களின் இனிய வாழ்த்தினையும் பெற்றவர். எனவேதான் இன்று 45 விருதுகளுக்கிடையே, இந்தியத் தேசிய விருதுவான சாகித்திய அகாடமி விருதும், தமிழகத்தின் தலைசிறந்த விருதுவான தினத்தந்தி ஆதித்தனாரின் 'மூத்த தமிழறிஞர்' விருதினையும் பெற்றுத் திகழ்ந்து கொண்டிருக்கிறார் கோவியவர்கள்.

கோவி, சக்தியை நோக்கித் தவம் செய்து வருபவர். இதுவல்லவோ இவருக்கு மேலான சக்தி? கவிஞர் திலகம் எஸ்.டி. சுந்தரம் பாடுவார்:

**'கோவிமணி சேகரன்எம் குலவுதமிழ்க் குரிசிலிவன்**
**நாவில்தமி ழோசைமிகு நற்றமிழன்; சமயபுரத்**
**தாயருளைப் பெற்ற மகன்.'**

ஆகா! சமயபுரத் தாயருளின் பரிபூரண கடாட்சம் பெற்ற கோவியார்க்கு மேலும் மேலும் பல விருதுகள் வரினும் ஆச்சரியப்படுவதற்கில்லை. கோவியாரின் பல நூல்களை வெளியிடும் பூம்புகார் பதிப்பகம் இந்த நூலையும் வெளியிட்டு வாழ்த்தி மகிழ்கிறது.

**– பூம்புகார் பதிப்பகம்**

நாதசுரச் சக்கரவர்த்தி

**டாக்டர் நாமகிரிப்பேட்டை கிருஷ்ணன்**

## அணிந்துரை

குற்றாலம்–

குளிநீர் அருவிகளின் கூத்து மேடை.

குறிஞ்சி–

பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறையே பூக்கும் அபூர்வமான மலர்.

"குற்றாலக் குறிஞ்சி"– என்ற டாக்டர் கோவி. மணி சேகரன் அவர்களின் இந்த நாவல், குற்றால நீர் அருவியின் குளுமையோடு குதிபோட்டுச் செல்கிறது. குறிஞ்சிப் பூவின் அழகைக் கொண்டு, படிப்பவர் மனத்தில் பரவசம் உண்டாகச் செய்கிறது.

அபூர்வமாகக் காணப்படும் குறிஞ்சியைப் போல 'குற்றாலக் குறிஞ்சி' நாவலும் தமிழுக்குக் கிடைத்த அபூர்வமான சொத்து என்றே சொல்ல வேண்டும்.

நாட்டைக் குறிஞ்சி, பாடவும் கேட்கவும் இனிக்கும் பளிங்கு நீரோடை போன்ற ராகம்.

மேகராகக் குறிஞ்சி பாடினால் மழைவரும் என்பார்கள். மேகராகக் குறிஞ்சியில் அமைநத சமபந்தரின் தேவாரப் பாடல்கள் இசைத் தேனடைகள் என்றால், 'குற்றாலக் குறிஞ்சி' தேனடையில் தோய்ந்த வேர்ப்பலா.

குறிஞ்சி என்ற ராகத்தின் பெயரையே தன் பெயராகக் கொண்டு, தாழ்ந்த குலத்தில் பிறந்துவிட்ட பெண். அவளின் சீலம், ஞானம், தமிழ்ப் பாட்டையே பாடுவேன் என்கிற வீரம், மக்களுக்காக மக்கள் மத்தியில் மட்டுமே பாடுவேன்; சமஸ்தானங்களை, ஜமீன்களை, கலெக்டர்களை, வெள்ளைக்காரத் துரைகளை மதியேன்; அவர்களுக்காகப் பாடேன் என்ற தியாகம்; இவையே குறிஞ்சியின் ஆரோகணம், அவரோகணம், ஆலாபனை எல்லாம். இதில் வரும் ஞானசுந்தரம், ராஜகாந்தி, முத்து சாமி தீட்சிதர், ஆனைய்யா, நெல்சன் துரை, அபிராம பட்டர், தியாகய்யர், கோபாலகிருஷ்ண பாரதியார், சரபோஜி மன்னர் எல்லாம் பக்க வாத்தியங்கள் – பிசிரில் லாத பின்னணிக்குப் பொருந்தி வருகிற பக்க வாத்தியங்கள். சத்தம் அதிகமில்லாத சங்கீத வாத்தியங்கள்.

நாவலின் ஒவ்வோர் அத்தியாயமும் ஓர் இராகத்தின் பெயரில் அமைந்திருக்கிறது. கற்பனை இல்லாத கலை உண்டா? அதுவும் சங்கீதத்தில்? கற்பனைதானே சங்கீதத்துக்கும் ஆதார சுருதி?

நான் நேரம் கிடைக்கிறபோதெல்லாம் நிறையப் புத்தகங்கள், பத்திரிகைகள் படிப்பேன். 'குற்றாலக் குறிஞ்சி'யை நான் படித்தேன் என்று சொல்வதை விட, எனது நாதசுர வாத்தியத்தால் வாசித்தேன், மகிழ்ந்தேன் என்று சொல்வதே பொருத்தமாக இருக்கும்.

'குற்றாலக் குறிஞ்சி' நாவல், தாள–லயம் பிறழாத–சுருதி பிசகாத சுத்தமான சங்கீதம்.

தமிழ்ச் சோலையில் இதுபோன்ற இசை மழை இன்னும் நிறையப் பொழிய வேண்டும் – இலக்கியம் தழைக்க வேண்டும்.

பாராட்டுகள் – வாழ்த்துகள்.

அன்பன்

**நாமகிரிப்பேட்டை கிருஷ்ணன்**

## அரங்கம்

**1947**–ஆம் ஆண்டு...

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் படிக்கிறபோது 'எங்கள் நாடு' என்கிற தினச் செய்தித்தாளின் ஞாயிறு மலரில் 'புரட்சிப் புலவன் அம்பிகாபதி' எனும் தொடர் நாடகத்தை எழுதி வந்தேன். அப்போது இசைக் கல்லூரித் தலைவராக இருந்த இசைமாமேதை – சுருதிலயச் சக்கரவர்த்தி திரு. சித்தூர் சுப்பிரமணியப்பிள்ளை அவர்களிடம் குருகுல வாசமிருந்தும், இசைக்கல்லூரியில் பயின்றும் வந்தேன். அங்கே எனக்குத் தமிழறிவூட்டிய ஆசான்கள், பேராசிரியர் அ. சிதம்பரநாதன் செட்டியார் அவர்களும், பேராசிரியர் லெ.ப.கரு. இராமநாதன் செட்டியார் அவர்களும், பேரா சிரியர் சிந்தாமணி நாயுடு அவர்களுமாவர்.

எனது தொடர் நாடகத்தைப் படித்துவந்த சித்தூர்ப் பிள்ளை, "ஏன்டா, இந்தச் சங்கீதத்தை மையமா வச்சு ஒரு கதை எழுதேன்" என்றார்.

என் குருநாதர் ஆசையைப் பூர்த்தி செய்ய இத்தனை ஆண்டுகள் பிடித்தன. அன்று தரித்த கதைக்கர்ப்பம் 1987–இல் வெடித்துப் பிரசவமானது.

'இதயம் பேசுகிறது' ஆசிரியரும் என்னரும் நண்பருமான திரு.மணியன், இதற்கு ஆதரவு தந்து 1989–இல் தொடராக

வெளியிட்டார். எனது இசைப் புலமையை உலகுக்கு எடுத்துச் சொன்ன நண்பருக்கு முதல் நன்றியை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் அந்தக் காலத்திலேயே அபூர்வ ராகப் பயிற்சியில் ஆனந்தம் கொள்வேன். இவ்விதம் ஆனந்தம் கொள்ள உறுதுணையாக நின்றவன் என் குருகுல நண்பன் சுருதிலயச் சக்கரவர்த்தி மதுரை சோமு என அன்புடன் அழைக்கப் பெறும் மதுரை சோமசுந்தரம்.

நானும் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் – இசைக் கல்லூரியில் 'சங்கீதபூஷணம்' வகுப்பில் படிக்கிற போது, இறுதியாண்டு தேர்வில் 4–களை சவுக்கத்தில் மிஸ்ர சாதித் திரிபடைத் தாளத்தில் 'பல்லவி' ('பல்லவி' என்பது தமிழில் தொல்காப்பியம் படித்த நிலை போன்றது) பாடி, நீதிபதிகளாய் அமர்ந்திருந்த மகாவித்துவான்கள் புல்லாங்குழல் புருஷோத்தமர், திருப்பாம்புரம் டி.என். சுவாமிநாதப் பிள்ளை, இசைப் பேராசிரியர் சாம்ப மூர்த்தி ஐயர் போன்றோர் (அயர்ந்து போகுமளவிற்குப் பைரவி ராகத்தில் பாடி) பாராட்டினைப் பெற்று முதல்தரச் சிறப்புத் (நான் ஒருவன் மட்டுமே) தேர்வடைந்து திறுவனர் விருது பெற்றேன். அன்றே – எனது ஆரம்பமே விருதுதான்! இவ்விதமான பல்லவியை அக்கல்லூரியில் முன்னும் எவரும் பாடியதில்லை; இன்னும் எவரும் பாடியதாக எனக்குத் தெரியவில்லை.

முழுக்க முழுக்க இசைக்கருவூலப் புதினமாக எழுந்து விளைந்ததால், தஞ்சையின் பிற்கால வேந்தனும், கலை வேந்தனுமான சரபோஜி அரசனே என்முன் காட்சி தந்து கரம் கூப்பினான். இவனது காலமே தென்னிசையின் பொற்காலம் என்றால் 'மிகையாகாது.

இசையென்பது உயர்ந்தவர்களிடமே இருக்க வேண்டுமா என்று எண்ணிப் பார்த்தேன். நான் தாழ்ந்தோரை மதிக்கும் தன்மை கொண்டவன். எனவேதான் எனது கதாநாயகி குறிஞ்சியைத் தாழ்த்தப்பட்ட குலத்திலிருந்து தேர்ந்தெடுத்தேன். அவள் ஒரு புலைச்சி. அவளைச் சந்திப்பவர்களோ... புதினம் புரிய வைக்கும்.

* ரகுநாத நாயக்கனையும் மறந்துவிட முடியாது. அவனையும் புதினமாக எழுதி இருக்கிறேன்



இப்புதினம் 1992–ஆம் ஆண்டுக்கான மத்திய அரசின் சாகித்திய அகாடமி விருது பெற்றது. எத்தனையோ மாபெரும் மாநில விருதுகளைப் பெற்ற எனக்கு, இது காலம் கடந்த விருதுவானாலும் அகாடமி தன்னைக் கவுரவித்துக் கொள்ளத் தவறவில்லை என்று எண்ணுகிற போது மாமன்னன் ராசராசனும், தமிழ்த்தென்றல் திரு.வி.க.வும், ராஜா சர் அண்ணாமலைச் செட்டியாரும் மகிழ்ந்துகொள்ளத்தான் செய்கிறார்கள்.

நான் சாகித்திய அகாடமி விருதுபெற்ற போது ஆயிர மாயிரம் வாசக நெஞ்சங்கள் நேரிலும் தந்திகள் மூலமாகவும் கடிதங்கள் மூலமாகவும் என்னை அரவணைத்து, மகிழ்ந்து பாராட்டி, வாழ்த்துத் தெரிவித்தனர். இவர்கள் மட்டுமா? தவத்திரு குன்றக்குடி அடிகளார், பேராசிரியப் பெரும்புலவர் பா. நமசிவாயம், பேராசிரியர் டாக்டர் மணவாளன், பேராசிரியர் டாக்டர் பூ.சொல்விளங்கும் பெருமாள், பேராசிரியை டாக்டர் சக்திப் பெருமாள், பெரும் விமர்சகரும் பேராசிரியருமான டாக்டர் தா.வே. வீராசாமி போன்ற பலப்பல பேராசிரியர்களும் எனக்குக் கடிதங்கள் மூலமும், நேரிலும் உற்சாகமூட்டும் வகையில் பாராட்டி வாழ்த்துத் தெரிவித்தனர். இவ்வளவு ஏன்?

குங்குமம் இதழில் பராசக்தி கேள்வி பதிலில் கலைஞர் அவர்கள் பதில் சொல்லுவார்:

> "இது நான் பெற்ற விருது போன்றது." – என்று.

பேராசிரியப் பெரும்புலவர் பா.நமசிவாயம் எழுது கிறார்:

> "மொழிந்த நும் பாடல் குற்றம் குற்றமே" என்ற பரம்பரையில் இன்று உங்களை விட்டால் வேறு யார் இருக்கிறார்கள்?
>
> சாகித்திய அகாடமி உங்கள் சாதனையின் அங்கீ காரம். முதுகில் குத்தும் கல்லாப் புல்லர்களை மன்னிக்கலாம்; கற்ற புல்லர்களை இனம் கண்டு ஞான உழவாரத்தால் செதுக்கித்தள்ள உங்களை விட்டால் வேறு ஒருவ[illegible]ம் இல்லை. எப்படி இந்த

ஆற்றலனைத்தும் உங்களை யடைந்து பெருமை யடைகின்றன?"

இப்படியான பெருமைகள் அன்றும் சரி; இன்றும் சரி; என்றும் எனக்குண்டு. அகாடமி குழுவினர்க்கு, குற்றாலக் குறிஞ்சி கரம்கூப்பி நன்றி கூறுகிறாள்.

குறிஞ்சியை ஆங்கிலம், இந்தி, கன்னடம், மலையாளம் ஆகிய மொழிகள் சந்தித்து (மொழிபெயர்ப்பு -Translation) அரிய பெரிய பாராட்டுகளை வழங்கி இருக்கின்றன.

இந்தப் புதினத்துக்கு நாதசுரச் சக்கரவர்த்தி அணிந்துரை வழங்கி இருக்கிறார். இது இசையிலக்கியம், எனவே இந்த இசை மகானிடம் அணிந்துரை பெற்று மகிழ்ந்தேன். நாமகிரியாருக்கு எனது நன்றி.

பதிப்புலகில் 'பூம்புகார் பதிப்பகம்' சோழப் பேரரசுக்கு ஒப்பானது. தொடக்க கால முதல் என் நூல்களை வெளியிட்டு வருகிறவர்கள். இனியும் வெளியிடுவர். பூம்புகார் பதிப்பகத்தைப் புனித நெஞ்சுடன் வாழ்த்துகிறேன்; நன்றி கூறுகிறேன்.

எனது மகோன்னத வளர்ச்சியைப் பாராட்டி வாழ்த்தும் என்னரும் வாசக நெஞ்சங்களை வணங்குகிறேன்; வாழ்த்துகிறேன்.

*மிக்க அன்புடன்*

**கோவி. மணிசேகரன்**

*12/11, பீட்டர்ஸ் காலனி,*
*சென்னை – 600 014.*
*தொ.பே. : 044 – 28518787*



**கோவியின்**

# குற்றாலக் குறிஞ்சி

## தமிழ்த்தாயின் வைரத்தோடு

பத்திரிகையுலக ஜாம்பவான்
திரு.சாவி அவர்கள் தமது 'சாவி'
பத்திரிகையில், ஒரு வாசகர் கேட்ட
கேள்விக்குச் சொன்ன பதில்:

கேள்வி : கோவி. மணிசேகரன் பற்றி...
பதில் : தமிழ்த்தாயின் வைரத்தோடு.

*(இதழ்:10.09.1994)*

★

## PURPOSE OF LIFE
## DEVOTION AND MUSIC

The Noval attains the level of a modern classic by all literary standards.

One wishes that the book gets translation properly into English and moves into international circuits for the kind of occolade that it Deserves.

**THE HINDU**
(21.11.2000)

# இராகம் - 1



# பூபாளம்

பிரணவத்தின் அலங்கார தேவதையாம் பூமியெனும் பேரழகி புல்லாங்குழல் ஏந்திப் பூபாளம் பாடத் தொடங்கி விட்டாள்.

யாழினிமை அவளுக்குத் தெரியாதா?

இராஜ திசையாம் இராக திசையில் உதயம் காணும் குங்குமச் சூரியனுக்குப் பூபாளமும் குழலும்தானே பொன்னான வரவேற்பு?

பிரபஞ்சத்தின் நித்திய மகா சக்கரவர்த்தியான ஆதிபகவன் வருகை தருகிறான் என்பதை எடுத்துக்காட்ட, செக்கர் வானில் சிவப்பு நிறம் பாயிரம் வழங்குகிறது.

உதயதம்பூர் ஒலித்துக் கொண்டே இருக்கிறது. அது படைப்பு ரகசியத்துப் பவித்திர நாதமாயிற்றே! 'ஓம்' எனும் பிரணவப் புன்னகையாயிற்றே! சுருதிதானே இந்த அகிலத்துக்கே ஆதாரம்!

தம்பூர் நாதத்துள் நாதமாய் ஒலிக்கும் அந்தரகாந்தாரச் சூட்சுமத்தை மட்டும் புரிந்து கொண்டால்...

ஆ! சூரியன் வருகை கண்டு பூமிக் காதலி பூரித்துப் போகிறாள்! புல்லாங்குழலில் பூபாளம் மேலும் புளகிக்கிறது...

கபதா... பகரீ... ரிகபா... கரிசா...

புள்ளினங்களெல்லாம் பூபாளத்தைத் துள்ளிப் பறந்து தொடருகின்றன...

தகத்தகாயமாய்ச் செம்பரிதியின் ஜோதி எழுகிறது; சித்திரைத் திங்களின் இளவேனில் பருவம் சித்திரம் தீட்டி மகிழ்வதுபோல உதயம் காண்கிறது.

புன்னையும் தாழையும் சண்பகமும் பூரித்து மணக்கின்றன.

அரண்மனையின் மேன் மாடத்தில் நின்று சரபோஜி மன்னர், ஆதித்த இருதய மந்திரத்தை ஜபிக்கிறார்.

தஞ்சை மாநகரத்தைத் தலைநகராகக் கொண்ட ஒரு காலத்திய சோழநாடு மகிழ்கிறதோ இல்லையோ; சுயநலத்துக்காக அடிமையாகிப் போன சுந்தரகலாப் புருஷரான அவரது அகம் மகிழ்கிறது.

ஆ... எப்படியிருந்த சொர்க்கம் படைத்த சோழப் பேரரசின் தலைநகரம் தஞ்சை மாநகரம்? இப்போது எவ்வாறெல்லாம் சோர்ந்தும் ஊர்ந்தும் தேய்ந்தும் இறுதியில் மராட்டியர் மடியில் சாய்ந்தும், இப்போது இரண்டாம் சரபோஜி மன்னரின் கரங்களில் அமர்ந்து தீய்ந்தும், இறுதியில் ஆங்கிலக் கும்பினியரின் புஜங்களுக்குப் பயந்து மாய்ந்தும் பல நிஜங்களை ஜீரணிக்க முடியாமல் ஜீவித்துக் கொண்டிருந்தது.

கி.பி. பத்தொன்பதாம் நூற்றாண்டின் (1829) இடைப் பகுதி...

தமிழகத்தின் இடுப்பு முறிந்த பகுதியானாலும், சங்கீதத்தின் எடுப்பு நிறைந்து ஏமமுற்று விளங்கியது; சப்த சுரங்களின் சாம்ராஜ்யமாகத் துலங்கியது.

சூரிய வணக்கம் முடித்த சரபோஜி மன்னர், அரண்மனைக் கூடத்தில் சில முக்கிய அதிகாரிகளின் வருகைக்காக



மன்மத ராகத்து ஆரோகண –அவரோகணம் புரிபடாது உலவிக் கொண்டிருக்கிறார்.

அன்புக்குப் பாத்திரமான மனைவி அகல்யாபாய், காலை உணவுக்கு அழைத்தும் மறுத்து அனுப்பி வைத்து விட்டார். அவரது நெஞ்சில் அந்நாளைய புகழ்பெற்ற பாடகி குற்றாலக் குறிஞ்சி என்பாள், இன்ப நீர்வீழ்ச்சி கொட்டி, இனிய இசை எழுப்பிக் கொண்டிருக்கிறாளே!

ஐம்பத்திரண்டு வயதில் இப்படி ஓர் ஆசையா? ஆனாலும் பார்வைக்கு ஐம்பத்திரண்டைத் திருப்பிப் போட்டது போலத் திடகாத்திரமாக இருப்பார்.

அடிக்கடி கனத்த உடலை அசைத்து உலவிக் கொண்டே, கனத்து அடர்ந்திருந்த மீசையையும் நீவி விட்டுக் கொள்கிறார். முத்தம் கொடுப்பதற்கு இது எவ்வளவு மோசமான தடங்கல் என்பதை எத்தனை பேர் உணர்ந்திருக்கிறார்கள் – அவரும் உணர்ந்து கொள்ள?

குறிஞ்சியோ ஓர் அக்கினி அழகி...

இது அவருக்கு எங்கே புரியப் போகிறது? மனம் மட்டும் குறிஞ்சி, குறிஞ்சி என்று குறிஞ்சி ராக ஆலாபனை செய்கிறதே!...

எதிர்பார்த்திருந்த அதிகாரிகளான சர்க்கேல் (மந்திரி) ராஜேஸ்ரீ ராமோஜி சர்ஜேராவ் கட்கேவும், அவைப் புலவர் கோட்டையூர் சிவக்கொழுந்து தேசிகரும் வருகை தந்து வணங்கி நிற்கிறார்கள்.

உலவிய கால்கள் களவியலில் கசிந்து நிற்கின்றன.

"தேசிகரே! நீங்கள் சென்றதற்கு அந்தக் குற்றாலக் குறிஞ்சி என்னதான் சொல்லியனுப்பினாள்? பகிரங்கமாகவே சொல்லலாம்!"

தயங்கிய புலவர் வெட்கமின்றிச் சொன்னார்: "என் தலைகுனியும்படிச் சொன்னதைத்தான் என்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. 'தமிழைப் படித்த நீங்கள், தமிழுணர்வற்ற மராட்டிய மன்னன் மீது 'சரபேந்திர பூபாலக் குறவஞ்சி' நாடகம் இயற்றிக் கூலிக்கு மாரடிக்கும் தமிழ் வியாபாரியாகிய நீங்கள், என்னை அழைக்கத்

தூது வந்தது வெட்கமாக இல்லை? நான் வந்து உங்கள் மன்னர் முன் பாடுவதாவது?... போய் வாருங்கள்!' என்று விரட்டியது தான் மிச்சம்!"

சரபோஜி சண்டமாருத போஜியானார்.

இப்போது சர்க்கேல் ராமோஜி சமனப்படுத்தத் தொடங்குகிறார்: "சாகேப்! நமது அரண்மனையில் சங்கீத மேருகளிருக்க பாமரப்பாட்டுக்காரியை அழைப்பதில் பல சங்கடங்கள் முகிழ்க்கலாம்! ஒரு தாழ்ந்த இனத்தவளைக் கொண்டு வந்து சபையில் கௌரவிப்பது கலைச் சிகரங்களின் கண்களில் நெருப்பைக் கொட்டுவதாகும்!"

"சங்கீதத்துக்கு ஜாதி ஏது சர்க்கேல்?"

"ஏனில்லை? சுத்த மத்திம ஜாதி, பிரதி மத்திம ஜாதி என்றில்லையா?"

"அவற்றை எவரும் தீண்டப்படாததாக ஒதுக்குவதில்லையே! சோறு கிடைக்காத ராகமானாலும் ஆகிரியை ஒதுக்கித் தள்ளுவதில்லையே? அழுகை ராகமானாலும் முகாரியை மூலையில் பதுக்கி விடுவதில்லையே? குறிஞ்சி, புலைச்சியேயானாலும், புலால் மறுத்துக் கலைத் தவமியற்றும் புண்ணியச் சொரூபிணியாம்! மகாவித்துவான் தீட்சிதரின் இசை மனத்தைத் தித்திக்கச் செய்த சிஷ்யையாம்! ஆ! இப்படிச் செய்தால் என்ன?"

"எப்படி மகாராஜா?"

"பொன்னையா பிள்ளை சகோதரர்கள் ஸ்ரீமுத்துசாமி தீட்சிதரின் மூத்த சீடர்கள். இப்போது நம்மிடையே இருப்பவர் *சிவானந்தம்! பொன்னையாபிள்ளை தனித்து இருந்தாலும் மான்யம் வழங்கி வருகிறோம். அவர்களது குருகுலத்தில் வந்தவள் குறிஞ்சி. அவர்களையே அனுப்பினால் குறிஞ்சி மறுக்கமாட்டாள் அல்லவா?"

"இவர்கள் கௌரவம் பாராது செல்ல வேண்டுமே?"

"சம்பளம் தருபவன் சரபோஜி! எப்படியும் குறிஞ்சி இந்த அரண்மனைக்கு விஜயம் செய்தாக வேண்டும்!"

* வடிவேலு என்பவர் திருவிதாங்கூர் சமஸ்தானத்திலும், சின்னையா என்பவர் மைசூர் சமஸ்தானத்திலும் பணியாற்றச் சென்றுவிட்டார்கள்.



சரபோஜி பாடும் மன்மத ராகம் சர்க்கேலுக்குப் புரிபடவில்லையா என்ன? இளமையில் முத்தாம்பாள் என்பவளைக் காதலித்தார்; பலியிட்டார். இப்போது முதிய வயதில் குறிஞ்சியோ?

ஆணையை நிறைவேற்ற அவர்கள் புறப்பட்டனர்.

இப்போது குறிஞ்சி எங்கிருக்கிறாள்?

விசாரித்ததில் கும்பகோணம் சங்கர மடத்திலிருப்பதாகத் தெரியவந்தது.

**கா**ஞ்சி காமகோடி பீடாதிபதிகளின் கும்பகோண சங்கர மடத்தில், 'ஹரஹர சங்கர, ஜயஜய சங்கர' கோஷம் எழுந்தவண்ணமிருக்கிறது. ஜோதியில் ஒன்று சங்கர ஜோதியல்லவா?

அப்போதைய *காஞ்சி காமகோடி பீடாதிபதியாக விளங்கியவர் ஐந்தாவது (64-வது) ஜகத்குரு ஸ்ரீ சந்திர சேகரேந்திர சரஸ்வதி சுவாமிகள்.

புலித்தோலாசனத்தில் அமர்ந்தவாறு குழுவினருடன் வந்த குறிஞ்சியை வரவேற்று அமரச் செய்கிறார். குறிஞ்சியும், பாதம் பணிந்து பதவிசாக அமருகிறாள்.

"என்ன குறிஞ்சி! நலமா?"

ஸ்ரீ ஆசார்யாள்பால் அபரிமிதமான அன்பும் பக்தியும் பூண்ட குறிஞ்சி சொன்னாள்: "தங்கள் ஆசீர்வாதம் சுவாமி! அடியவள் புதிய ராகம் ஒன்று கண்டுபிடித்திருக்கிறாள். தங்கள் முன் பாடி முதல் அரங்கேற்றம் செய்ய வந்திருக்கிறேன்."

உடன் வந்த பக்கவாத்தியக்காரர்களும், குறிஞ்சியை உயிருக்கு உயிராக நேசிப்பவனுமான ஞானசுந்தரமும், தொலைவில் கைகட்டி நிற்கிறார்கள். மற்றபடி சங்கர பக்தர்கள் சர்வ பவ்வியமுடன் கைகட்டி நிற்கிறார்கள்.

'பாடு' என்பதுபோல் சங்கர சமிக்ஞை.

* 'தஞ்சை மராட்டிய மன்னர் கால அரசியலும் சமுதாய வாழ்க்கையும்' – கே.எம்.வேங்கடராமையா.

வழக்கமாக சுருதி மீட்டும் கற்பகத்தை அவள் அழைக்கவில்லை. அவளே தம்பூரைத் தாங்கி, மீட்டி குரலை இழைக்கிறாள்.

ஆ! சுருதிதான் குறிஞ்சியா? குறிஞ்சிதான் சுருதியா?

சுருதி என்கிற சூட்சுமச் சொல்லுக்கே அர்த்தமான அந்த அத்வைத அவதாரபுருஷர் காமகோடி பீடாதிபதி கண்களை மூடிச் சுருதியுடன் ஐக்கியமாக...

சங்கர கோஷ சப்தம் அமைதி பெறுகிறது.

குறிஞ்சி தன்னால் உருவாக்கப்பட்ட குற்றாலக் குறிஞ்சி ராகத்தை அலாபிக்கிறாள். அந்த அபூர்வ ராகம் ஆசார்ய சுவாமிகளை ஆனந்தப் படுத்துகிறது.

பிறகு ஒரு சுலோகத்தை விருத்தமாகப் பாடுகிறாள்.

**குருர் பிரம்மா குருர் விஷ்ணு:**
**குருர் தேவோ மஹேஸ்வா:**
**குருஸ் ஸாக்ஷாத் பரப்ரம்ஹ**
**தஸ்மை ஸ்ரீ குரவே நமஹ:**

ஸ்ரீ ஆசார்யாள் இதயத்தே குறிஞ்சி ஒரு பொன்விளக்கு சோதியாய்த் தெரிகிறாள்.

இவள் மக்களைப் பாடுகிறவள்; சமுதாயத்தைப் பாடுகிறவள்; தமிழில் மட்டுமே பாடுவது என்கிற சங்கல்பம் கொண்டவள்; சமஸ்கிருதத்தில் பாடுகிறாளே!...

இசை என்பது புரிந்தவர்க்கு மட்டுமே என்று இருக்கிற காலத்தில் – இருண்ட காலத்தில் அதனை நீக்கி, இசை என்பது உலகமொழி; அதன் வரிவடிவம் அந்தந்த தேசத்துக்குரிய தாய்மொழி என்கிற புதிய சித்தாந்தத்தைப் போதித்துத் தமிழில் மட்டுமே பாடி மக்களின் பேராதரவு பெற்று இசையை ஒளிமயமாக்கியப் பிரகாச தேவதையாயிற்றே இந்த குறிஞ்சி! இவளா சமஸ்கிருதத்தில் பாடினாள்? ஓ... தன் பொருட்டுப் பாடினாளோ?

கர்நாடக சங்கீதத்தை மென்மைப்படுத்திக் கனிரச சங்கீதமாக்கியவள். இவள் பாடினால் பசுவின் மடி, கரம் படாமலேயே பால் சுரக்கும்! கொசுவும்கூட குழுமியுள்ளவர்களின் ரத்தத்தைக் குத்தி ருசி பார்க்க மறந்து விடுமே!



ஆ! இவளல்லவோ இசைவாணி?

ஸ்ரீ ஆசார்யாள் மனத்தே அத்வைதம் அலகில் ஜோதியாகிறது! அங்கே புலைச்சியாவது? புரோகிதனாவது? பேதமாவது? அபேதமாவது? மனிதனாவது? மகாதேவனாவது? எல்லாம் ஒன்றுதானே? ஆதிசங்கர பகவத்பாதாள் அருளிய அத்வைதம் இதுதானே?

"குறிஞ்சி! அந்த அபூர்வராகத்தை இன்னொரு முறை ஆலாபனை செய்!"

மீண்டும் தம்பூரில் அபூர்வம் ஐக்கியமாகிறது.

நிதநி, நிதநி, பதநிசா...

புரிகிறது...

இது. இது...

ச்நிதம, ச்நிதம கமபகரிசா...

ஓ... நாம் நினைத்தது போலில்லையே! பிரதி மத்திமம் சேர்ந்திருக்கிறதே!

"போதும் குறிஞ்சி! இந்த ராகத்தின் பெயர்?"

"குற்றாலக் குறிஞ்சி!"

"ஓகோ! உன் பெயருடன் உனது ஊரின் பெயரையும் இணைத்து வைத்து விட்டாயோ? சங்கீத வித்துவான்கள் தங்கள் பெயருடன் ஊர்ப்பெயரை இணைத்து வைத்துக் கொள்வதுபோல, நீ ராகத்தையே இப்படி வைத்தது பாராட்டுக்குரியது. ஆமாம்; எனக்கே இதன் ஆரோகண – அவரோகணத்தைக் கண்டுபிடிக்க முடியவில்லை. ஆனாலும் எங்கோ கேட்ட ராகம்போல... பிரதிமத்திம மயக்கம் புரிய வைக்க மறுக்கிறது."

குறிஞ்சி, குறிஞ்சிப் பூவாய்ச் சிரிக்கிறாள்.

"எனக்கு வக்கிர ராகமான நாட்டைக் குறிஞ்சி என்றால் மிகவும் பிடிக்கும். ராகத்தில் சிறந்ததல்லவா? அதனைப்

பிரதிமத்திம ராகமாக்கினேன். சரிகம நிதநி பதநிசா; சநிதம கமபகரிச."

"பிரமாதம், பிரமாதம்! எனக்கு ஒரு சின்ன அபிப்பிராயம் தோன்றுகிறது."

"சொல்லுங்கள் சுவாமி! ஏற்கிறேன்!"

"அதாவது, அவரோகணத்தில் 'கமபகரிச' என்று வருகிறதல்லவா? அதன் மத்திமத்தை *'பாஷாங்கமாக்கி – அதாவது சுத்தமத்திமமாகவே மாற்றிப் பாடிப் பார்!"

பாடிப் பார்க்கிறாள். அது முன்பிலும் மூர்ச்சனை ரசம் சொட்டுவதாக இருக்கிறது. 'ஓகோ' என்று அவளது உள்மனமே உணர்ந்து உருகுகிறது.

"அருமையாகவும், இனிமையாகவும் இருக்கிறது சுவாமி! இந்த ராகத்து வக்கிர, பாஷாங்கம்... என் பிறப்புக்கு எவ்வளவு பொருத்தமாக இருக்கிறது சுவாமி?"

அத்வைதம், ராகசாந்தி கொள்கிறது.

"குறிஞ்சி! நீ ராகத்தை வக்கிரப்படுத்தினாய் – அது ராகத்தோடு இருக்கட்டும்; நான் சுரத்தை பாஷாங்கப் படுத்தினேன். அதுவும் சுரத்தோடு இருந்துவிட்டுப் போகட்டும்! நீ சம்பூரணமாகவே இருக்க வேண்டும்! நாராயண..."

பளீர், பளீர், பளீர்...

இதயத்தே மின்னல்கள் ஏழு சுரமாய் மின்னுகின்றன; சம்பூரணமாக இடிக்கின்றன.

இதன் பொருள்... வியாக்கியானம்... தாத்பரியம்?

'நீ வக்கிரமாகிவிடாதே! நீ பாஷாங்கமாகிவிடாதே!' – இதுதான் அர்த்தமோ?

குறிஞ்சியின் விழிகளில் தெய்வத்தின் குரல் கேட்கிறது. ஆசார்யப் பெருமானுக்கும் புரிகிறது. "குறிஞ்சி! என்னுடன் வருகிறாய்! எழுந்து உள்ளே வா!"

* இசையிலக்கணத்தில் ராகாங்கம், உபாங்கம், பாஷாங்கம், கிரியாங்கம் என நான்கு பிரிவுகள் உண்டு. பாஷாங்கம் என்பது கனாங்கம் களங்கம்.



"சுவாமி! நான்..."

குறிஞ்சியின் பதற்றம் அத்வைதத்தின் அறிஞர் பெருமான் அறியமாட்டாரா? அவரது இதயத்தே உபநிஷத்தின் ஒரு சாரமான கேனோபநிஷத் ஒலிக்கிறது...

'எதை ஒருவன் மனத்தால் உணருவதில்லையோ, ஆனால் மனம் எதனால் உணரப் பெறும் என்று கூறுகிறார்களோ அதுவே பிரம்மம் என்று நீ அறிவாயாக! எதனை இதுதான் பிரம்மம் என்று உபாசிக்கிறார்களோ அது பிரம்மம் அல்ல!'

கூனிக்குறுகி குறிஞ்சி, ஸ்ரீ ஆசார்யாள் பெருமானைப் பின் தொடருகிறாள்.

கூடியிருந்த கண்கள் சில கூசுகின்றன.

ஏன்? காரியஸ்தரான கணபதி சாஸ்திரிகளின் கண்கள் கூட ஏதோ தீட்டுப் பட்டுவிட்டதாகத் திணறுகின்றன. வேறொன்றுமில்லை. பேதாபேதம்தான்! அத்வைதத்துக்குத் தீண்டாமை எது? ஆதிசங்கரபகவத் பாதர்களின் ஆதி அந்தம் அறியாதவர்கள்.

வெகுநேரம் கழித்து காஞ்சிமா முனிவரும் குறிஞ்சியும் வெளியே வருகிறார்கள். குறிஞ்சியின் முகத்தில் முன்னிலும் கூடிய ஒரு ஞானஒளி! உள்ளே சென்று திரும்பியதன் இரகசியம் என்ன? இரகசியம் என்ன? அது ஒரு மந்திர உபதேசம் என்பதன் மறைவு எவர்க்கும் புரிய நியாயமில்லையே!

காஞ்சிப் பெருமானின் பாதம் பணிந்து குறிஞ்சி விடை பெறுகிறாள்.

"நாராயண!"

கும்பகோணத்துச் சங்கர மடத்துக்கு வெளியே மக்கள் கூட்டம். எல்லாருமே குறிஞ்சியின் ரசிகப் பெருமக்கள். அனைவரையும் கரம் கூப்பி, அந்த ஊர் பிரசித்தி பெற்ற கலாரசிகையான சீமாட்டி கோமதியம்மாள் இல்லம் செல்ல சாரட்டில் ஏறிக் கொள்கிறாள். ஞானசுந்தரமும்

உடன் ஏறிக்கொண்டான். பக்கவாத்தியக் குழுவினருக்குத் தனியாக இரட்டை மாட்டுப் பெட்டி வண்டி.

கோமதியம்மாள் மாளிகையை அடைந்து ஓய்வு கொள்ள அறையினுள் செல்கிற போது...

தெரு வாசலில் அடிமிதித்து வந்தாற் போன்று குதிரைகளின் குளம்படி ஓசைகள்...

தஞ்சை சரபோஜி மன்னர் அனுப்பிய தூதுவர்கள், 'விதியின் தூதுவர்களோ, சதியின் தூதுவர்களோ அன்றி நிதியின் தூதுவர்களோ – யாரே அறிவர்?' என்பது போல இறங்கிக் கொண்டிருந்தனர்.

இராகம் – 2



# சுத்த தன்யாசி

கோமதி மாளிகை என்பது ஒரு குலமாதுவின் கோயில் போல...

மாளிகையுள் விருந்துபசாரம் நடைபெறுகிற வேளையில்...

கதவு தட்டும் சத்தம்...

சீமாட்டி கோமதியம்மாளே வந்து கதவைத் திறக்கிறாள்.

இசைமேதைகளான தஞ்சை பொன்னையா பிள்ளையையும் சிவானந்தம் பிள்ளையையும் கண்டுவிட்ட மாபெரும் சங்கீத ரசிகையான கோமதி, கரம் கூப்பி வரவேற்றாள். உடன்வந்த சேனாதிபதி பிரவகர ராஜேஸ்ரீ கிருஷ்ணாஜி கேசவப் பண்டிதரும் உள்ளே சென்றார். ஏனைய வீரர்கள் வெளியே நின்று கொண்டனர்.

மூவரையும் அமரச் செய்த கோமதி, "அடியாள் ஒரு கலாரசிகை!" என்றாள்.

"அறிவோம்; நாங்கள் குறிஞ்சியை உடனடியாகப் பார்த்தாக வேண்டும்" என்றார் பொன்னையாப் பிள்ளை.

இதற்குள் உள்ளிருந்த குறிஞ்சியும் ஞானசுந்தரமும் கேள்விப்பட்டு, ஓடோடி வந்து சகோதரர்களுடைய பாதங்களைத் தொட்டு வணங்கினர்.

தங்கள் குருவாகிய இசைமகான் முத்துசாமி தீட்சித ருடைய மூத்த சீடர்களாயிற்றே!

சகோதரர்கள் நலம் விசாரித்து நோக்குகிறார்கள்.

ஆ! அன்று பார்த்த குறிஞ்சியா இவள்? பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை பூக்கும் குறிஞ்சிப் பூவைப் போல...

புகழின் மெருகு அவளது தேகத்தில் பொன்னாய் மின்னுகிறது...

கம்பனின் இராமாவதாரக் காப்பியம் போல, காளி தாசனின் சாகுந்தலம் போல...

இருமொழி வல்லவர்களான சகோதரர்கள் இவ்வாறெல் லாம் எண்ணிப் பார்க்கிறார்கள்...

சேனாதிபதி கிருஷ்ணாஜி குறிஞ்சியின் அழகில் சொக்கி அலைமோதி கிறுகிறுத்துப் போனார்.

'ஓ... நமது மன்னர் சரபோஜி இந்த மகோன்னதப் பேரழகைப் பாராமலேயே மன்மதக் கனவு காண்கிறார்; அந்தக் கனவில் இசையின் புகழ்க் கிரீடம் மட்டுமே மின்னி மின்னி வண்ணக்கோலம் வரைந்து பார்க்கிறார்; இந்த தேவதா சொரூபத்தை நேரில் காண்பாரேயானால்...?"

மன்மத மண்டபம் கட்டி ரதி நிவேதம் செய்தாலும் மலைப்பதற்கில்லையே!

நெற்றியில் அரும்பிய வியர்வை முத்துக்களைத் துடைத்துக் கொண்டே சேனாதிபதியை, சிவானந்தம் பிள்ளை அறிமுகம் செய்கிறார்.

கமல மொட்டுக்களாய் கரங்கள் கூம்புகின்றன.

"விருந்து சாப்பிட்ட பிறகு வந்த விஷயம் குறித்துப் பேசலாமே!" என்றாள் கோமதி.



சேனாதிபதி கிருஷ்ணாஜி மன்னர் சரபோஜியாய்ச் சிரிக்கிறார்.

"வந்த விஷயம் நிறைவேறட்டும்; விருந்து பிறகு."

பொன்னையா பிள்ளைக்கு இந்த முரட்டுத்தனமான பதில் பொருத்தமாகத் தெரியவில்லை. அவரே வந்த நோக்கம் பற்றி எடுத்துரைத்தார்.

"நான் எதிர்பார்த்தேன்" என்றளவில் கூறிய குறிஞ்சி, சூன்யமாய்ப் புன்னகை பூக்கிறாள்.

"அப்போது, இன்றே புறப்பட வேண்டியதுதானே, குறிஞ்சி?" என்றார் சிவானந்தம்.

"மன்னிக்கவும்! நான் எதிர்பார்த்தேன் என்றுதான் சொன்னேனேயொழிய, ஏற்றுக்கொண்டேன் என்று சொல்லவில்லை. நீங்கள் என் குருநாதருக்குச் சமானம். உங்கள் சங்கீத ஞானத்தின் முன்னே நான் வெறும் பல்லவி! நீங்கள் சரணத்தைத் தாண்டி, இசைத் தாயிடம் சரணாகதித்துவம் அடைந்து விட்ட மேதைகள்! என்னைத் தேடி வந்திருக்கவே கூடாது. என்னை வருமாறு ஆணை பிறப்பித்திருந்தால் உங்கள் இல்லம் தேடி ஓர் இசையின் யாசகியாக வந்திருப்பேன். ஆனால் வந்து விட்டீர்கள்; மன்னர் உத்தரவு! தியாகபிரும்மம், மன்னரின் அழைப்பை மறுத்து கல்யாணி பாடிவிட்டார். என்னால் காமவர்த்தினி பாட முடியாது. சரபோஜி மன்னரின் கல்யாண குணங் களை நானறிவேன். என்னையும் அவர் அறிந்து கொள் ளட்டும்."

ஜோதிமயமான அழகுப் பிரகாசம், நீதிமயமான நினைவுடன் கரம் கூப்புகிறது.

சேனாதிபதி கிருஷ்ணாஜி, சினந்த சீற்றமுடன் எழுந்து கொண்டார், "முடிவு இதுதானா குறிஞ்சி?"

"குறிஞ்சி என்ன, உங்கள் ஆஸ்தானத்தில் மாதம் ஐம்பது சக்கரம் (ரூபாய்) சம்பளம் வாங்குகிறவள் என்றா எண்ணி விட்டீர்கள்?"

சரபோஜியின் அவையில், சிவானந்தம் போன்ற சீரிய மேதைகளின் சம்பளமே மாதம் ஐம்பது சக்கரம்தான்.

சுந்தரி என்கிற நாட்டிய மாதுக்கு மட்டும் ஐம்பத்தைந்து சக்கரம். இல்லையென்றால் அரசன் கட்டளைக்கு இவர்கள் அடிபணிய முடியுமா?

மேலும் குறிஞ்சி சொன்னாள்:

"நான் ஒரு கச்சேரிக்கே நூறு சக்கரம் வாங்குகிறவள். சரபோஜி மன்னரும் இதனை வழங்கலாம். ஆனால், நான் சரச போகங்களை எத்தனை முறை வழங்க வேண்டும் என்பது எனக்குத் தெரியும். நான் பாஷாங்கத்துக்காகப் பிறக்கவில்லை; இராகாங்கத்துக்காகப் பிறந்தவள்; ராஜாங் கத்துக்காகவல்ல! போய்ச் சொல்லுங்கள் சேனாதிபதி யாரே!"

"அரச விரோதம் ஆபத்தானது!"

அவள் கலகலவென்று சிரிக்கிறாள். அந்தச் சிரிப்பிலும் சப்தசுர ஜாலங்கள் கேட்கின்றன.

"சேனாதிபதியாரே! மன்னவனும் நீயோ என்று கேட்ட மாப்புலவன் வாழ்ந்த நாடு இது! உன்னை நம்பியோ தமிழை ஓதினேன் என்று கேட்ட தன்மானப் புலவன் வாழ்ந்த நாடு இது! நான் தமிழ்வெறி கொண்டவள். மராட்டிய மமதைக்கு மண்டியிட முடியாது. இவள் குறிஞ்சி; வறிஞ்சியல்ல. போய் வாருங்கள்!"

அவள் மீண்டும் தஞ்சைச் சகோதரர்களின் தாள்பணிந்து வேகமாக உள்ளே சென்று விட்டாள்.

சேனாதிபதியின் அவசர புத்தி, செயலை அபசுரப் படுத்தி விட்டது. சகோதரர்களுக்குச் சங்கடமாக இருந்தது.

கோமதி எவ்வளவு கேட்டுக் கொண்டும், விருந்துக்கு மறுத்து அவர்கள் விடைபெற்றுப் புறப்பட்டனர்.

மறுநாள், குறிஞ்சியும் குற்றாலம் நோக்கிப் புறப்பட்டு விட்டாள்.

மாலைக் கதிரவன் மேற்கு மஞ்சத்தில் சயனிக்க ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறான்.

தொலைவிலிருந்தே, அந்தக் குற்றால நீர்வீழ்ச்சியைக்



கண்கொட்டாமல் கவனித்து ரசிக்கிறாள் குற்றாலக் குறிஞ்சி.

ஆ! ஒரு காலத்தில் - சின்னஞ்சிறுமியாக இருந்த போது இந்த நீர்வீழ்ச்சியில் எப்படியெல்லாம் குளித்து மகிழ்ந்து இருக்கிறோம்!

ஆண்களும், பெண்களும், சிறார்களும் மாலைக் குளியலில் மனம் குளிர்ந்து கொண்டிருக்கிறார்கள்.

அன்றைய மாலைப்போது முழுவதும், தான் பிறந்த மண்ணான குற்றாலத்தைச் சுற்றிச் சுற்றிச் சுவைத்து அமைதியாக ஒருபுறம் அமர்ந்து ஐந்தருவியில் ஐக்கியமாகி எங்கோ சிறகடித்துப் பறந்து கொண்டிருக்கிறாள் குறிஞ்சி. பக்கத்தே ஞானசுந்தரம்.

தன்னை யாசிக்க வந்த சரபோஜியின் தன்யாசி ராகம், அந்த அருவியின் மெல்லிய ஓசையில் கேட்பதுபோல உணருகிறாள். ஆனால் இது சுத்த தன்யாசியல்லவே?

அந்த அருவியைப் பற்றி ஒரு காலத்தில் தமிழ் ஞானசம்பந்தர் பாடிய வரி நினைவுக்கு வருகிறது.

'கொம்பார் சோலைக் கோல வண்டு யாழ் செய் குற்றாலம்..."

சுத்த தன்யாசியில் மெல்லப் பாடிப் பார்க்கிறாள்...

"குறிஞ்சி! இருண்டு வருகிறது. இரவு கச்சேரி. கோயிலுக்குப் போக வேண்டாமா?"

ஞானசுந்தரம் ஞாபகப்படுத்தினான்.

"கோயிலுக்கா? என்னை உள்ளே அனுமதிப்பார்களா, ஞானி?"

அவள் அவனை ஞானியென்றே அழைப்பாள். அந்த ஞான சமுத்திரத்தின் கதையே வேறு. அது ஓர் ஆசான் கதை; ஆனந்த காதல் கதை!

"நாம் வந்திருப்பதே கோயில் கச்சேரிக்கு என்றிருக்க, உன்னை அனுமதிக்க மறுப்பதாவது?"

ஞானசுந்தரத்தை நோக்கி குறிஞ்சி சிரித்த சிரிப்பு, 'நீயும் ஒரு புலையனாக இருந்து தொலைக்கக் கூடாதா?' என்பது போலிருந்தது.

"என்ன குறிஞ்சி சிரிக்கிறாய்? நான் பிராமணனாக இருப்பதால்தானே எனது காதலை ஏற்க மறுக்கிறாய்?"

"அத்துடன் ஞானகுருவாகவுமிருந்து விட்டீர்களே!"

"குறிஞ்சி! பிறப்பால் நீ தயங்குவதானால் ஒன்றைச் சொல்வேன். நீ பாடிய சுத்த தன்யாசி ராகம் எதில் பிறந்தது? கரகரப்பிரியாவில் பிறந்ததாக அடம் பிடிப்பதில் அர்த்தமிருப்பதாகத் தெரியவில்லை. தன்யாசி போல, சுத்த தன்யாசியும் தோடியில் பிறந்தது என்றால் ஒதுக்க முடியுமா? உனது பிறப்பும் அப்படியே! நான் பிராமணனாக இருந்தால் என்ன? நீ புலைச்சியாக இருந்தால் என்ன? நந்தனைக் காட்டிலும் சிறந்த நாயன்மார் உண்டா?"

கெண்டை மீன்கள் இடம் மாறின போல, குறிஞ்சியின் கயல்விழிகள் இமையாமல் நோக்குகின்றன.

அந்த நீலவிழிகளில்தாம் ஞானசுந்தரம் நித்தநித்தம் சொக்கி வருகிறானே! நினைவிழந்து விக்கி வருகிறானே!

இருவரும் குற்றாலத்தை ரசித்தவாறு நடக்கிறார்கள். வழியேற மக்கள் நின்று குறிஞ்சியைத் தங்கள் வழிபாட்டுக் குரிய தெய்வமாக எண்ணிக் கரம் கூப்புகிறார்கள். அந்த மண்ணில் பிறந்தவளாயிற்றே குறிஞ்சி!

"குறிஞ்சி! சங்கர மடத்தில் ஸ்ரீ ஆசார்யாள் பெருமான் உள்ளே அழைத்துச் சென்றதைப் பற்றி என்னிடம் சொல்லவே இல்லையே!"

ஒரு கணம் நின்ற அந்த ஒயிலரசி ஓம்கார மந்திரமாய் முறுவலிக்கிறாள்.

"உபதேசம் செய்தார். மேலும் என்னைக் கேட்க வேண்டாம். நான் சொல்லவும் கூடாது. ஒருகால் நீங்களாகவே புரிந்துகொள்ள நேர்ந்தாலும் நேரலாம்!"



அவர்கள் குற்றால நாதரையும் குழல்வாய் மொழியம்மையையும் தரிசிக்கக் கோயில் நாடி நடந்தனர்.

பத்து நாழிகைகளை விழுங்கி, இரவு ஏப்பம் விட்டுக் கொண்டிருந்தது.

**ஆ**ங்கிலேய ஆட்சி, பரவலாக ஆக்கிரமித்துக் கொண்டு வந்த காலமாதலால், அரங்கம் சற்று முன்னேற்றமாகக் காணப்பட்டது.

பந்தல் முழுவதும், தொங்கும் கண்ணாடிக் குவளை விளக்குகளில் கனத்த மெழுகுவத்திகள் எரிந்து ஒளி பரப்பிக் கொண்டிருந்தன. ஆயினும் வெளியே மக்களின் நலன் கருதி ஆங்காங்கே தீப்பந்தங்கள் எரிந்து பழைமையை நினைவு கூர்ந்தன.

திருநெல்வேலி ஜில்லாவே திரண்டு வந்துவிட்டது போன்று மக்கள் கூட்டம். அந்தக் காலத்தில் இரவு நிகழ்ச்சி என்றால் விடிய விடிய சுவைக்கும் வேர்ப்பலா இனிப் பாயிற்றே! அவசர யுகத்தின் மேம்போக்கான நுனிப்புல் ரசனை, அப்போது தலை நீட்டிப் பார்க்கவும் நாணப் பட்ட காலம். அதுவும் குற்றாலக் குறிஞ்சியின் கச்சேரி என்றால்...

அவளது பாட்டு மக்களின் நெஞ்சில் கூடுகட்டி விட்ட தேன்கூடு.

புரியாத மொழியில் கச்சேரியைக் கேட்டுக் கேட்டுப் புளித்துப் போன அல்லது கனத்துப் போன போக்கினை மாற்றி, ஒரு புதிய வித்தியாச விதையை விதைத்தவள் குறிஞ்சி.

வித்துக்குள் விருட்சம் இருப்பதை உணர்ந்து சத்துக்குள் சராசரத்தைக் காட்டச் சிந்தித்தவள்.

சங்கீதத்தின் கனமான பாரத்தைக் குறைத்து அபாரமாக்க முனைந்தவள்; வெற்றி கண்டவள். அந்த வெற்றிக்கான காரணம் அவள் தாய்மொழியில் பாடியது!

தெய்வங்களையே பாடிப் பாடி அலுப்புத் தருவதைத் தவிர்த்து, மனிதனைப் பாடினாள்; மக்கள் படும் பாட்டினைப் பாடினாள்; சமூகத்தைப் பாடினாள்.

சமுதாய முன்னேற்றத்தைப் பாடினாள்; தேசத்தைப் பாடினாள்; ஏன்? உலகையே பாடினாள்...

அவளது குழுவில் பல்வேறுபட்ட வாத்தியங்கள்.

வீணை, [*]பிடில், குழல், [†]மயூரி, மிருதங்கம், கஞ்சீரா, கடம், முகர்சிங்...

போதாவா?

போதாக்குறைக்கு, குறிஞ்சியின் பாட்டில் அசுணமா பறவையாகி மயங்கிய ஜான் என்கிற ஆங்கிலேயன், அவளை ஒரு தெய்வ சந்நிதானத்தைச் சுற்றி வருவது போலச் சுற்றி வந்ததோடல்லாது, விஞ்ஞான அறிவு படைத்த அவன், ஒரு விநோதக் கண்டுபிடிப்பை மேற்கொண்டு வெற்றியும் கண்டான். அது...

எதிரொலி நிறைந்த மலைப்பிரதேசத்துப் பாறைகளைச் சோதித்து, அந்தப் பாறைகளைப் பலகை பலகையாகச் செதுக்கிச் சீவி, அரங்கின் பக்கவாட்டில் நிறுத்தி வைப்பதன் மூலம், [‡]கச்சேரி ஒலியை அவை மேலும் பெருக்கிக் காட்டின.

இசையரங்கை அமைப்பவனே ஜான்.

அன்றைய அரங்கம் பிரமாதமாக அமைந்து காணப் பட்டது.

அரங்கத்தில் குறிஞ்சியும் ஞானசுந்தரமும் வருகை தர, எங்கும் கரவொலிகள்; வாழ்த்துக் குரலொலிகள்.

குருநாதரான முத்துசாமி தீட்சிதர் பெருமானை வணங்கி அமருகிறார்கள்.

இரு குரலிசையில் இருவர் பாடுவதிலும் ஒரு வித்தியாச மான இன்பப் போதையை - சங்கீதத்தையே மதுவாக்கிய போதையை உருவகம் செய்திருந்தார்கள்.

[*] வயலினை அப்போது பிடில் என்றே சொல்லுவர். இது சரபோஜி மன்னர் காலத்தில் அறிமுகமாகிப் பிரசித்தம் பெற்றது.

[†] 'மைக்' முறைபோல; இது எனது கற்பனையின் கண்டுபிடிப்பு.

[‡] 'மைக்' முறைபோல; இது எனது கற்பனையின் கண்டுபிடிப்பு.



இருவர் ஒன்றாகப் பாடுவது என்பது இயல்பானது. ஆனால் அந்நாளில் ஆணும் பெண்ணுமாகப் பாடுவது?

ஒரே பாட்டை மாறி மாறிப் பாடுவது? சமயத்தில் அவள் பல்லவியாகவும், இவன் அனுபல்லவியாகவும் பாடுவது? ஆலாபனை முதல் சுரவிந்நியாசம் வரை, சங்கீத கனத்தைக் குறைத்து மென்மையாகவும், இனிமையாகவும், நயமாகவும் பாடுவது? லயப்பிரமாணத்தையும் ஒரு வயப் பிரமாணமாக்கிப் பாடுவது...?

மக்களிடம் எப்படிக் கொடுத்தால், எவ்வாறு கொடுத் தால், எதுவும் போய்ச் சேரும் விதத்தில் சேர்ந்துவிடும் என்கிற மகத்துவமான உண்மையைப் பரிபூரணமாகவே அவர்கள் உணர்ந்திருந்தனர்.

தோழிப் பெண் கற்பகம் தம்பூர் மீட்டுகிறாள். வாத்தியங் கள் சுருதிகளைச் சோதித்துக் கொள்கின்றன.

கடவுள் வாழ்த்துக்கு அவர்கள் புறம்பானவர் களில்லையே! ஆனால் திருக்குறளின் கடவுள் வாழ்த்தை மட்டுமே பாடுகிறவர்கள், பாடவும் தொடங்கினர். பத்துக் குறள்களையும் இருவரும் பத்து ராகங்களில் மாறி மாறிப் பாடுவர். ஆனால் அன்றைக்கு ஒரு மாறுதல். 'அகர முதல' என்ற பாடலை குறிஞ்சி, சுத்த தன்யாசியில் ஆரம்பித்தது தான். ஞானசுந்தரத்தை மோனத்தில் ஆழ்த்துவதற்கு மாறாக, மோகத்தில் ஆழ்த்திவிட்டது.

கூட்டத்தில் எள் விழுந்தால் ஓசை கேட்கும் அமைதி.

அடுத்து, தான் பிறந்த ஊராகிய குற்றாலத்து மகிமை நிறைந்த மண்ணையும் அதன் மலைகளையும் புகழ்ந்து ஓகோவென்று பாடுகிறாள் குறிஞ்சி.

அந்தச் சமயத்தில்தானா அப்படி ஓர் அசம்பாவிதம் நிகழ வேண்டும்?

திடுமென்று நூற்றுக்கணக்கில் குதிரைகளின் குளம்படி ஓசைகள்...

செவி மடுத்த மக்கள்...

"கொள்ளைக்காரர்கள்; கொள்ளைக்காரர்கள்!" என்று கூச்சலிட்டு அரண்டு மருண்டு அலைமோதி உருண்டு புரண்டு எழுந்து திசைக்கு ஒருவராக ஓடுகிறார்கள்.

குதிரைகள் சகிதமாக கூட்டத்துள் புகுந்த கொள்ளைக் காரக் கொடியவர்கள் கரங்களில், வாட்கள் மின்னின; துப்பாக்கிகள் பேசின.

இது சரபோஜி மன்னரின் சூழ்ச்சியாக இருக்குமோ என்று சினந்து, பாடலை நிறுத்திய குறிஞ்சி, பல கணங்கள் பதறிப் போய் நோக்குகிறாள்...

என்ன செய்வாள்?

## இராகம் – 3



# ராஜகாந்தி

ஸ்ரீ ருக்குற்றாலநாதர் கோயில் வாசல் திடலில் குழுமியிருந்த மக்கள், தத்தம் உயிருக்காகவும் உடமைகளுக் காகவும் போராடி, திசைக்குத் திசை அலைமோதி ஓட முயல்கிறார்கள்.

எங்கும் ஓலம் நிறைந்த அவலக் குரல்கள்...

குதிரைகளில் வந்தவர்கள், குறிஞ்சி எண்ணியதுபோல சரபோஜி மன்னரால் ஏவப்பட்டவர்கள் அல்லர். இது எத்துணைக்கு இழுக்கை இழுத்துத் தோளில் நிறுத்தும் என்பதை எண்ணிப் பாராதவரா மராட்டிய மன்னர்?

வந்தவர்கள் உண்மையிலேயே கொள்ளைக் கூட்டத் தினர். அவர்கள் வந்ததே உற்சவ காலத்தில் கோயில் நகைகளைக் கொள்ளையடித்துச் செல்லத்தான். ஆனால் இப்படி ஓர் அபூர்வ கச்சேரி அங்கு நிகழ்கிறது என்பது எதிர்பாராதது.

ஒரு காலத்தில் தமிழகத்தைக் களப்பிரர்கள் ஆக்கிரமித்த போதுதான் கொள்ளைக் கூட்டத்தின் கொடும்பாவித் தனத்துக்கே அதிகப்படியானத் தாம்பூலத் தட்சிணை

வைக்கப்பட்டது. பின்னர் கடுங்கோன் பாண்டியனும், சிம்ம விஷ்ணு பல்லவனும் தோன்றினார்களோ, இவர்கள் கொட்டம் அடங்கியதோ! ஆனால், சோழநாடு மட்டும் இவர்களால் சிம்மசொப்பனம் கண்டு சிதைவுற்று வந்தது. சோழ சூரியனான விஜயாலயச் சோழன் வருகைக்குப் பிறகுதானே இந்தக் கொள்ளையர்களின் விலா எலும்புகள் முறிக்கப்பட்டன!

பிறகு வெகுகாலம் கழித்து இந்தப் பாழும் தமிழர்களிடையே ஒற்றுமைக்குத் தீண்டாமை ஏற்பட, முகலாய மாலி காஃபூரின் நுழைவால், மார்தட்டி, போர் கொட்டி, தேரோட்டிய தமிழகம், பேர் கெட்டு, பெருமை கெட்டு, ஊர் கெட்டு உதாசீனமடைந்தது.

அன்றைக்கு வீழ்ந்த வீழ்ச்சி...

நாயக்கர் ஆக்கிரமிப்பாலும், நவாப்புகளின் துராக்கிரமிப்பாலும், மராட்டியரின் லீலாக்கிரமத்தாலும் இப்போது போதாக்குறைக்கு ஆங்கிலேயரின் அட்டகாசாக்கிரமத்தாலும்...

தமிழகம் எழுச்சி பெறாமல் எடுப்பார் கைப்பிள்ளையாக ஏங்கியது; சோங்கியது; ஏன்? தூங்கியது!

எல்லைகள் முழுவதும் தொல்லைகள்; எங்கு நோக்கினும் கொள்ளைகள்; பெண்களின் கற்பிலோ எரியும் கள்ளிகள்.

வெறி கொண்டு இசை நிகழ்ச்சிக் கூட்டத்தில் நுழைந்த கொள்ளையர்த் தலைவன் ராஜகாந்தி, எதிர்பாராத இந்தக் கச்சேரிக் கூட்டத்தை விரட்டியடிக்க வேகம் கொண்டு அதாகதம் செய்கிறான்.

அற்புதமாக அமைந்த இசையரங்கு இப்படி அல்லோல கல்லோலப்படுவது கண்டு, அரங்கிலிருந்த பக்க மேளக்காரர்கள் வாத்தியங்களைச் சுருட்டிக் கொண்டு உயிர் தப்பினால் போதும் என்று முனைகிறபோது...

'உம்'காரக் குரலெழுப்பிக் கனல் கக்கும் கண்களுடன் நோக்குகிறாள் கான ஞானகலாவல்லி குறிஞ்சி.



"நானே தப்பிக்க முயலவில்லை; உங்களுக்கு என்ன அவசரம்? எனது பேரழகை விடவா நீங்கள் இந்தக் கொள்ளைக்காரர்களுக்குப் பிரதானம்?"

குறிஞ்சியின் கூற்றைக் கண்டு, ஞானசுந்தரம் குலை நடுங்கிப் போனான்.

"குறிஞ்சி! இது பிடிவாதம்! இவர்களிடம் நாம் அகப்பட்டுச் சித்திரவதைப்பட வேண்டுமா?"

"ஞானி!"

அதட்டலுடன் நோக்குகிறாள்.

மேற்கொண்டு அவன் சொல்ல நினைத்ததைச் சொல்லவில்லை; சொல்லவும் அவசியமில்லை. அவள் கண்களை மூடித் தியானத்தில் மூழ்கிவிட்டாள்.

கூட்டத்திடையே ஒரே களேபரம்.

இதில் இன்னொரு விசித்திரம்...

குறிஞ்சியின் அபரிமிதமான இசை நிகழ்ச்சியைக் கேள்விப்பட்ட புதுக்கோட்டை அரசர் ராஜ ரகுநாதத் தொண்டைமான், அப்படி என்னதான் குறிஞ்சியின் பாட்டில் நாரத நயமும், நந்தியின் லயமும் இருக்கின்றன என்பதனைப் பார்த்தறிய, தமது அமைச்சரைத் தக்க துணை வீரர்களுடன் புனை வடிவத்தில் அனுப்பி வைத்திருந்தார். ஒருகால் அந்த வாணியே மறு அவதாரமானால், கனகாபிஷேகம் செய்தாவது சமஸ்தானத்துக்கு அழைத்து வருமாறு கட்டளைப் பணித்திருந்தார்.

இந்த மாதிரி நேரத்தில் இப்படியான அசம்பாவிதம் நிகழ்ந்து விட்டதில் புதுக்கோட்டை அமைச்சருக்கு மன வேதனையேயானாலும் தம்முடன் வந்த வீரர்களின் புயங்களைச் சோதித்துப் பார்க்க அவர் உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை. இத்தனைக்கும் துப்பாக்கி ஏந்திய *கும்பினி வீரர்களும் உடன் வந்திருந்தனர்.

எதையும் முன் ஆலோசனையும் புத்திச் சாதுரியமுடனும் அணுகும் அமைச்சர், என்னதான் நடக்கிறது என்பதைத்

* ஆங்கிலேயர்களை அந்நாளில் கும்பினியர் என்றே அழைத்தனர்.

தொலைவிலிருந்தே கவனித்தார். அவருக்குத் தெரியும், வந்திருப்பவன் கொள்ளையர்த் தலைவன் ராஜகாந்தி என்று. இவன் அந்நாளைய பிரசித்தி பெற்ற ராட்சஸன்.

ராஜகாந்தியைப் பற்றிச் சுருங்கச் சொல்ல வேண்டு மானால், அவன் பெயரைச் சொன்னால் அந்நாளைய குழந்தைகள் அழுவதை நிறுத்திவிடுமாம்! அவனது பெயர் அரசர் சரபோஜிக்கே அலுக்கு (பயம்) என்றால் ஏனை யவர்களைப் பற்றிப் பிலுக்கத் (சொல்ல) தேவையில்லை.

குறிஞ்சிக்கு மட்டும் ஏதும் கொடுமை நிகழ்ந்துவிடக் கூடாது என்பதால், புதுக்கோட்டை அமைச்சர், தமது ஆட்களை அனுப்பி ரகசியக் காவல் போட்டிருந்தார். இது குறிஞ்சிக்குத் தெரிய நியாயமில்லை. அவள் இன்னமும் தியானத்தில் மூழ்கி மந்திரங்களை ஜபித்துக் கொண்டிருக்கிறாள்.

**அ**ந்தத் திவ்ய மந்திரம்... திருமந்திரம்...

அதர்வண வேதத்துப் பத்திரகாளி பிரத்தியங்கிரா தேவியின் பிரத்தியேகமான மந்திரம்.

அன்றைக்கு காஞ்சி மாமுனிவர் ஸ்ரீ ஆசார்ய சந்திர சேகரேந்திர சரஸ்வதி சுவாமிகள், பாஷாங்க பாஷ்யம் போதித்ததோடல்லாது ஏன் உள்ளே அழைத்துச் செல்ல வேண்டும்?

உள்ள அழைத்துச் சென்றவர், "குறிஞ்சி! நீ எந்த இஷ்ட தேவதையைப் பூஜிக்கிறாய்?" என்று கேட்டார்.

"பத்ரகாளி பிரத்தியங்கிராதேவி!"

பிரமித்துப் போனார் வேதப்பிதா மகனார்.

"உனக்கு இந்தத் தெய்வத்தைப் பற்றி ஏதேனும் தெரியுமா?"

"ஒன்றும் தெரியாது. 'ஓம் பிரத்தியங்கிராதேவி நமஹ!' என்று மட்டும் ஜபிக்கச் சொல்லி என் தந்தை சொல்லித் தந்திருக்கிறார்."

இவள் தந்தை கொஞ்சம் விஷயம் தெரிந்தவன் தான் என்றெண்ணிய ஸ்ரீ ஆசார்யாள் சுவாமிகள், "நீ



வழிபடுகிற தெய்வம் பயங்கர தேவதை! ஆனால், அவளது சித்தி உனக்குக் கிடைத்து விடுமேயானால் எதையும் வென்று விடலாம். இராவணன் மகன் இந்திரஜித் பூஜித்த தேவதை! புவனேஸ்வரியின் தேகம் கொண்டாலும் சிம்ம முகம் படைத்துச் சிம்மம் போல கர்ஜிப்பவள்! மண்டையோடுகளை மாலையாக அணிந்த பிரேத தெய்வம்! பயந்து விடாதே! இவளையே நீ கெட்டியாகப் பிடித்துக்கொள். இவள் சுகச்சொரூபிணி! அதர்வண வேதமாகிய மந்திர வேதத்தில், சௌகை சாகையில் முப்பத்திரண்டு ரிக்குகளும் பிப்பிலாத சாகையில் நாற்பத்தெட்டு ரிக்குகளும் மந்திரங்களாக உள்ளன. உனக்கு இவற்றில் மூலாதாரமான மந்திரத்தை உபதேசிக்கப் போகிறேன்! இந்த மந்திரங்களைக் கண்டு பிடித்த அங்கிரஸ், பிரத்யங்கிரஸ் என்ற மகரிஷிகளை மறந்து விடாதே! தெரிந்தோ தெரியாமலோ நீ இவளை பூஜித்ததால் புலையர் குலத்தில் பிறந்தாலும் தீட்சிதர் பெருமானால் இசைத்தீட்சை பெற்று இங்கே என்முன் நிற்கிற பாக்கியம் பெற்றிருக்கிறாய்!" என்று கூறிய ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி சுவாமிகள், குறிஞ்சியின் செவிகளில் மந்திரங்களை ஓதி, மனத்துக்குள் சொல்லி மனனம் செய்து கொள்ளச் செய்கிறார்.

குறிஞ்சியின் சுழிமுனையில் ஒரு மின்னல் பளிச்சிடு கிறது.

"என்ன தெரிகிறது குறிஞ்சி?"

"சுழிமுனையில் ஒரு மின்னல் தெரிகிறது சுவாமி."

"நீ சித்தி பெற்று விட்டாய்! இதுதான் சமிக்ஞை. ஆனால் ஒரு நிபந்தனை. நீ பாடும் குற்றாலக் குறிஞ்சி ராகத்துக்கு மட்டுமே இந்த மந்திரத்தை மனத்தில் ஜபித்துப் பாட ஆரம்பிக்க வேண்டும். தீய காரியங்கள் எவற்றுக்குமே இதனைப் பயன்படுத்தக் கூடாது. இந்த ரகசியத்தை எவருக்குமே சொல்லவும் கூடாது. சத்தியம் செய்!"

"பத்ரகாளி பிரத்தியங்கிரா பரமேஸ்வரி மீது சத்தியம்!"

"குறிஞ்சி! எப்போதுமே இதன் பீஜமான – 'க்ஷ்கரகமான 'க்ஷம்' என்ற நிதரிசனத்தை மறந்து விடாதே!"

"க்ஷம்."

குறிஞ்சியின் தியானத்தில் பீஜமந்திரங்கள் பீறிட...

கண்களைத் திறந்து நோக்குகிறாள்.

கொள்ளையர்க் கூட்டம் மக்களைச் சின்னாபின்ன மாக்கிக் கோயில் நகைகளைக் கொள்ளையிடுவதற்கு ஆயத்தமாகின்றன...

எங்கும் ஓலக்குரல்கள்...

வானில் *ஓம்காரத்தை வரைவது போன்ற ஓர் ஒளிக் கீற்று மின்னலாய்த் தோன்றி மறைகிறது.

'பரத்தில் மறைந்தது பார்முதல் பூதம்; பரத்தை மறைத்தது பார்முதல் பூதம்; பொன்னில் மறைந்தது பொன் அணிபூஷணம்; பொன்னை மறைத்தது பொன்னணிப் பூஷணம்' என்று திருமூலர் வாக்கை அடிக்கடி இசைமேதை முத்துசாமி தீட்சிதர் சொல்வதை நினைத்துப் பார்த்துக் கொண்டே குறிஞ்சி, பின்னால் தம்பூருடன் அமர்ந்திருந்த கற்பகத்தை நோக்கிக் கண்ணசைக்கிறாள்.

தம்பூர் ஓம்காரமாய் ஒலியெழுப்பத் தொடங்குகிறது.

வாத்தியங்களான பிடிலுக்கும் மயூரிக்கும் மட்டுமே வேலை தரக் கட்டளைப் பணித்து, எடுத்த எடுப்பில் குரலைக் கம்பீரமாக மேல் சட்சமத்தில் நிறுத்த...

களேபரத்தில் ஒரு சின்ன அசைவு....

மேல் சட்சமத்தில் (ச்) நிறுத்திய குரல், சதுர்சுருதி ரிஷபத்தை (ரி) தொட்டு, சட்சமத்தோடு ஊசலாடி அந்தர காந்தாரத்தில் (க) ஆவேசமாக நிற்கிறது....

குற்றாலக் குறிஞ்சி ராகம் இப்படியா அரங்கேற வேண்டும்? சாதனை புரிய வேண்டிய ராகம், இவ்விதம்

* அக்காலத்தே இருந்த முத்துசாமி தீட்சிதர், தியாகப் பிரம்மம் வரலாறுகளைப் படிக்கிறபோது, இதைவிட அதிசயிக்கத்தக்க அற்புதங்கள் நடைபெற்றிருக்கின்றன என்பதைக் காண முடிகிறது. இதனை மூடநம்பிக்கை என்று ஒதுக்குவதை விட, மூடநம்பிக்கை எதுவும் இருக்க முடியாது.



சோதனையில் ஆழ்ந்து, போதனையைப் புரிய வைக்கப் போவதுதான் என்ன? என்ன? என்ன?

ஒரு கையில் குதிரையின் சேணமும், மறுகையில் துப்பாக்கியுமாகச் சுழன்ற கொள்ளையர்த் தலைவன் ராஜகாந்தி, ஒரு கணம் விதிர்த்து திரும்பி நோக்குகிறான். சேணத்தைப் பிடித்து இழுத்துக் குதிரையை நிற்க வைக்க, அது முன்னங்கால்களை மேலே தூக்கி, வாயில் நுரை தள்ளக் கனைக்கிறது.

இவ்வளவு பெரிய கொள்ளை நடக்கிறது... எவ்வளவு துணிவாக இவள் பாடத் தொடங்குகிறாள்?

குற்றாலக் குறிஞ்சி ராகத்தை, காளி சொரூபமாக, பிரத்தியங்கிராதேவி சொரூபமாக, சிம்ம கர்ஜனைபோல ஆலாபனை செய்கிறாள், பாடலில்லை; அதற்கான லயத்தைத் தேடவில்லை. வெறுமனே ஆலாபனம்... வெறி கொண்ட உச்சஸ்தாயி ஆலாபனம், மயூரியும் பிடிலும் அந்த ராகத்தை மேலும் மலைக்கச் செய்கின்றன.

நிதநி, பதநி, க...

நிதநி, பதநி, க...

என்று ஆலாபித்து வந்தவள், 'மக, மக, மக' என்று பிரதிமத்திம மூர்ச்சனை கொடுத்து, 'கம்பகரிச, கம்பகரிச' என்று வருகிறபோது, சுத்தமத்திம பாஷாங்கத்தைக் கலந்து ஆலாபிக்கிறபோது...

கொலை நெஞ்சனான ராஜகாந்தியே "ஆகா!" என்று அலறிவிட்டதைப் பார்க்க வேண்டுமே!

நெருப்புக் கண்கள் பொறிபறக்க, நெஞ்சிலே பொறுப் பிலாக் கொலையுணர்வு நெறியிழக்க, உருவத்திலே கறுப்பை அப்பிய கடோத்கஜனைப் போல் வெறியுணர் வுடன் நோக்கிய ராட்சஸன் ராஜகாந்தியா?

புதுக்கோட்டை அமைச்சர் நோக்குகிறார்.

ஓ... இதுதான் தவத்தில் அப்பியசிக்கிற சங்கீதமோ?

சரிகமநிதநிபதநிசா... என்று ஆரோகண ஆலாபனையில் சுருதி சேர சட்சமத்தில் குறிஞ்சி தனது குரலை இழையச் செய்து நிறுத்திக் கண்மூடி அமர்ந்திருந்த காட்சி...

ராட்சஸனான ராஜகாந்தியின் ராட்சஸம், கொஞ்சம் கொஞ்சமாக விலக...

அவனது கொடிய குணங்கள் சநிதபம கம்பகசரி என்று ஒவ்வொரு சுரமாக அவரோகிக்கிறபோது...

அந்த கம்பகரிச–வின் பாஷாங்க சுத்த மத்திமம் இதயத்தே சிம்ம ரூபிணியாக அமர்ந்து கர்ஜித்து, அவனது கொலைக் கர்ஜனையின் பீடத்தையே எரித்து விடுகிறது.

இப்போது, குறிஞ்சி வேகமாக – மிக வேகமாக – சங்கதிகள் சகிதம் கொண்ட வேகமாக – பிர்க்காக்கள் கொற்கை முத்துக்களாய் உதிரும் வேகமாகச் சுருதியுடன் ராகத்தைச் சஞ்சரிக்கிற போது...

இது என்ன கந்தருவ மயக்கம்?

ராஜகாந்திக்கு அசுணமாப் பறவையின் மயக்கம்; ராஜ நாகத்தின் அடக்கம்; மதம் கொண்ட யானையின் மலைப்பு...

மலைத்து, சிலைத்து, நிலைத்துப் போன ராஜகாந்தியைக் கண்ட புதுக்கோட்டை அமைச்சர், இதுதான் சமயம் என்று கருதி, தமது ஆட்களை ஏவி விலங்கிடும்படி ஆணையிட, அந்த ஆணை சுறுசுறுவென்று செயல்பட்டு விட்டது.

ஓ... இசைக்கு அடிமையாகி விட்டோம்! இப்போது விலங்கு அடிமைப்படுத்தி விட்டது!

தலைவன் விலங்கிடப்பட்டதைக் கண்ட கூட்டத்தினர், இவ்வளவுக்கும் காரணம் இந்தப் பாடகிதானே என்று அவள் மீது பாயச் செல்ல, புதுக்கோட்டை வீரர்கள் எதிர்க்க...

ஓங்கிக் கர்ஜிக்கிறான் ராஜகாந்தி:

"நண்பர்களே! அவள் என் மகள்! அவள் என் மகள்! அவள் உடம்பில் ஊசி முனையளவு ரணமானாலும் என் தலையை நானே சீவிக் கொள்வேன். தப்பி ஓடிவிடுங்கள்; தப்பி ஓடிவிடுங்கள்! என் மீது நம்பிக்கையிருந்தால் தப்பி



யோடுங்கள்! எந்த சங்கீதம் எனக்கு விலங்கிட்டதோ, அதே சங்கீதம் என்னை விடுதலை செய்யும், போய் விடுங்கள்!"

ராஜகாந்தியின் கர்ஜனைக்குரல் கேட்ட நம்பிக்கையுள்ள தோழர்கள், புதுக்கோட்டை வீரர்களிடம் பிடிபடக்கூடாது என்கிற நினைவுடன் மூலைக்கு ஒருவராகப் புரவியில் பறந்தனர்.

'ஆ! எவ்வளவு நம்பிக்கையுடன் இந்த கொள்ளையர்த் தலைவன் கூறினான்! எந்தச் சங்கீதம் எனக்கு விலங்கிட்டதோ, அந்தச் சங்கீதம் என்னை விடுதலை செய்யும்!"

அரங்கை விட்டெழுந்த இசை தேவதை – குறிஞ்சி, ராஜகாந்தியை நோக்கி நடந்து வருகிறாள். அவளது காலில் அணிந்திருந்த கொலுசுகள் கூட சப்தசுரங்களாய் ஒலிக்கின்றன.

அருகில் வந்து நின்ற குறிஞ்சியை, விலங்கிட்ட கரங்களுடன் விழிகளில் நீர்மல்க, வணங்கித் தலை பணிகிறான் ராஜகாந்தி: "மகளே! மகளே! மங்கையிடம் மயங்காதவன் உன் இசையில் மயங்கி விட்டேன்; மதுவில் மயங்காதவன் உனது சங்கீதத்தில் சரணடைந்து விட்டேன்."

குறிஞ்சியின் கண்கள் குற்றால அருவியாக மாறி விட்டன.

"மகளே என்றழைத்த தந்தையே! உங்கள் பெயர்?"

"ராஜகாந்தி."

நடுங்கிப் போகிறாள் குறிஞ்சி. தமிழகமே குலை நடுங்கும், வாலியையொத்த பலம் பொருந்திய ராஜகாந்தி இவர்தானா?

"என்ன மகளே யோசிக்கிறாய்?"

"உங்கள் பெயரே ஓர் அபூர்வராகம்! எனவேதான் எனது அபூர்வராகத்தில் நீங்கள் மயங்கிப் போனீர்கள்! இது ஒரு முன்பிறவித் தொடர்பு!"

குறிஞ்சி பொங்கி வந்த கண்ணீரைத் துடைத்துக் கொள்கிறாள். பக்கத்தில் நின்றிருந்த புதுக்கோட்டை அமைச்சரை நோக்குகிறாள்.

"நீங்கள் யாரோ?"

"நான் புதுக்கோட்டை ஜமீனின் முதலமைச்சன்."

"ஓகோ!"

"உங்களை எங்கள் சமஸ்தானத்துக்குக் கனகாபிஷேகம் செய்து அழைத்துவர எங்கள் அரசர் ஸ்ரீராஜ ரகுநாத தொண்டைமான் அவர்கள் அனுப்பி வைத்தார். வந்த இடத்தில் இப்படி ஓர் அசம்பாவிதம் ஏற்பட்டு விட்டது. ராட்சஸனை மயக்கவல்ல ராகம் பாடிய ராகதேவதையே! எங்கள் அரசர் அழைப்பினை ஏற்பீராக!"

குறிஞ்சியின் சிரிப்பில் நெருஞ்சிமுள் குத்துவது புதுக் கோட்டையாருக்குப் புரிகிறது.

"நான் சமஸ்தானங்களுக்குக் கூடிய வரை பாட வருவ தில்லை. காரணம், பாட வரும் பெண்கள் பஞ்சணை யில் சல்லாபிக்க வேண்டும் என்று சமஸ்தானாதிபதிகள் விரும்புவது சகஜமாய்ப் போய்விட்ட காலம் இது! நான், நீங்கள் குறிப்பிட்ட ராக தேவதை; போக தேவதையல்ல! ஆனாலும் உங்களை நம்பி வருகிறேன்! ஒரு நிபந்தனை."

"நிபந்தனையைச் சொல்லலாம்!"

"என்னை மகளே என்று பாசமுடன் அழைத்த இந்தத் தந்தையின் விலங்குகளை அவிழ்த்து விடுதலை செய்யுங்கள்!"

இந்த எதிர்பாராத நிபந்தனையைக் கேட்டு புதுக் கோட்டை அமைச்சர் புரியாமல் திணறியபோது...

"அது நடவாத காரியம்!" என்று ஒரு புதிய குரல் கணீரென்று ஒலிக்க, அனைவரும் திரும்பிப் பார்த்தனர்.

# இராகம் – 4



# சந்திரசேகரப்பிரியா

இவ்வளவு கம்பீரமாகத் தடை சொல்கிறவர் யார் என்பதனை அறிந்து திரும்பியபோது...

ஓ... இவர்தான் திருநெல்வேலிப் பாளையக்காரரோ?

சமஸ்தானத்தில்தான் இந்தச் சங்கீத மழையில் நனைய முடியாது. தெய்வ சந்நிதானத்திலாவது செவிகள் படைத்ததன் பயனைப் பெற எவ்வளவோ விரைந்து வந்தும் சங்கீதத்தைக் கேட்க முடியவில்லையே! ஆனாலும் பயங்கர கொள்ளைக்காரன் பிடிப்பட்டான் என்பது சப்த சுரங்களிலும் இனிமையான செய்தியாக அவருக்குப் பட்டது.

பின்னே பரிவாரங்கள் நின்றவண்ணமிருக்கின்றன.

ஆ! இவள்தான் குறிஞ்சியா?

இவளது அபரிமிதமான பேரழகில் வயதான தமது மனமே வழுக்கி விழுந்து விட்டதென்றால்... வாலிபர் கள்?

இமையசைத்தாலே இறந்துபடுவரே!

இந்த அழகுக்குள் இப்படியோர் தேவகானம் கூடுகட்டி இருக்கிறதென்றால், சமஸ்தானங்களை வெறுக்கும் செருக்கு இவளிடம் சரணடைந்திருப்பது இயல்புதானே?

கொடிய கொள்ளைக்காரனை மயக்கவல்ல சங்கீதத்தை நாம் கேட்க முடியாமல் போய்விட்டதே! இது போதை நிறைந்த இசையாகவல்லவோ இருக்க வேண்டும்?

இவளது புகழ் கொடிகட்டிப் பறக்கிறதென்றால்...

இவள் பூமியின் மீது நிற்கவில்லை. பூமி இவளது கால் சுண்டு விரலின் மீது சுழன்று கொண்டிருக்கிறது...

கனன்ற கண்களுடன் குறிஞ்சி, தன்னை நோக்குவதை உணருகிறார் திருநெல்வேலிப் பாளையக்காரர். குறுக்கே நின்றதன் கோபம்.

அந்த நடுஇரவியின் நிசப்தத்தில், தீப்பந்தங்கள், பொடிதாக வெடிபட்டு புகையைக் கக்குகின்றன...

"என்ன அப்படிப் பார்க்கிறீர்கள் பாளையக்காரரே!"

"தீப்பந்த புகையிலேயே நீ இவ்வளவு அழகாய் இருக்கிறாயே என்றுதான்..."

விலங்கோடு போராடும் ராஜகாந்தியின் சீற்றம் ராஜநாகமாகப் படமெடுக்கிறது!

"ஏ, பாளையம்! பொருளைத் திருடும் என் போன்றவர்களைக் காட்டிலும் பொம்பளையைத் திருடும் உன் போன்றவர்களுக்கு விலங்கிட வேண்டும்! சமுதாயச் சட்டவமைப்பு தலைகீழாக இருக்கிறது."

பாளையத்தின் கௌரவம் பதறிப் போனது. "டேய் ராஜகாந்தி! திருட்டுப் பயலே!"

"டேய் பாளையம்! குருட்டுப் பயலே!"

பாளையக்காரர் வாளையுருவ, ராஜகாந்தி விலங்குடன் கைகளையோங்க...

"மகளே என்றழைத்த தந்தையே, அமைதி!"

இடைப்புகுந்த குறிஞ்சி, தனது புன்னாகவராளிக் கண்களால் ராஜநாகத்தை அமைதிப்படுத்துகிறாள்.

அதுவரை அமைதியாக இருந்த புதுக்கோட்டை அமைச்சர் நாவசைத்தார்: "திருநெல்வேலிச் சீமானே! தடை போட்டது உங்கள் வரை சரியானாலும், விடை போட்டது வெட்கும்படியாகிப் போய் விட்டது! தமிழ்க் கலை தந்த ஒரு மானுட வாணியை இப்படித் தகாத முறையில் நடத்தியது அடியேனுக்கே கோபம் வந்ததென்றால்... இந்தக் கொடியோனுக்கு ஏன் வராது? கொடியவனானாலும் சங்கீதத்தில் கொடி கட்டிய ராவண னாகி விட்டான் இந்த ராஜகாந்தி!"



எங்கோ கோட்டான்கள் அலறும் சத்தம்...

புதுக்கோட்டை அமைச்சரின் பதிலைக் கேட்டுப் புலியாக நகைக்கிறார் பாளையக்காரர்.

"இவள் ஏதோ உங்கள் மகள் என்பது போல வக்காலத்து வாங்கிப் பேசிவிட்டீர்கள்! தொண்டைமானின் அமைச்சர் என்பதால் மன்னிக்கிறேன்! நீங்களிருப்பது எனது எல்லைக்குள்!"

"அதனால்? குறிஞ்சியை உங்களிடம் ஒப்படைக்கச் சொல்லுகிறீர்களா?"

"இல்லை; ராஜகாந்தியை என்னிடம் ஒப்படைக்க வேண்டும்!"

"மறுத்தால்?"

"திரும்ப முடியாது!"

"புதுக்கோட்டைப் பகை தேவைதானா?"

"திருநெல்வேலிக்கு அது தேவையென்றால்..."

பாளையக்காரர் முடிக்குமுன் ராஜகாந்தி கர்ஜித்தான்: "புதுக்கோட்டை அமைச்சர் பெருமானே! சங்கீதத்தில் மயங்கியபோது என்னைச் சரணடையச் செய்துவிட்டீர்கள்! அதே சங்கீதத்தின் மீதும் அதனைப் பாடிய எனது பெறாமல் பெற்ற மகள் குறிஞ்சியின் மீதும் சத்தியம் வைத்துச் சொல்கிறேன். விலங்கை அவிழ்த்து விடுங்கள்! இவர்கள் விலா எலும்புகளை நான் ஒருவனே முறித்துவிட்டு மீண்டும் விலங்கை மாட்டிக் கொண்டு சத்தியத்தைக் காப்பேன்! நான் கொள்ளைக்காரன்தான்!

கொடியவன்தான்! ஆயினும் சத்தியத்துக்குக் கட்டுப்பட்ட ராஜநாகம்! அவிழ்த்து விடுங்கள்!"

"அவசியமில்லை ராஜகாந்தி! நானும் பரிவாரங்களுடன் தான் வந்திருக்கிறேன்! பாளையக்காரரால் முடிந்ததைப் பார்த்துக் கொள்ளட்டும்!"

புதுக்கோட்டை அமைச்சர் இவ்விதம் கூறியதும், அடுத்த கணமே சவாலை ஏற்றதுபோல் திருநெல்வேலிப் பாளையக்காரர் தமது பரிவாரங்களுக்குக் கட்டளையிட, பாளையத்து திவான் ஓரடி முன்வந்து, "வீணில் புதுக் கோட்டையைப் பகைத்துக் கொள்வது திருநெல்வேலிக்கு அழிவைத் தரும். புதுக்கோட்டைத் தொண்டைமான் ஆங்கிலக் கும்பினியாரின்* அன்புக்குரியவர். மேலும், இப்போதைய புதுக்கோட்டைத் தொண்டைமானின் அண்ணார் ராஜா விஜயரகுநாதராய தொண்டைமான் ஒரு சீர்மைமிகு செம்மல்! அவரால் திருநெல்வேலி பல நன்மைகளைப் பெற்றது. எதிர்த்துத்தான் ஆக வேண்டுமானால், எனது பதவியை இக்கணமே ராஜினாமா செய்கிறேன். தமிழ் தந்த இசைச் செல்வம் குறிஞ்சியை நீங்கள் பார்த்த முறை தகாத முறை!" என்று கூறி தலை பணிந்தார்.

திருநெல்வேலி பரிவாரங்களும் அசையவில்லை.

புதுக்கோட்டை அமைச்சர் சொன்னார்: "என்ன இருந்தாலும் திருநெல்வேலி தென்பாண்டிய நாடல்லவா? அதன் பண்பாடு என்னை வெற்றி பெறச் செய்து விட்டது. பாளையக்காரரே அவசரப்பட்டு விட்டீர்கள். இப்போது உங்களை நான் மன்னிக்கிறேன்!"

அமைச்சர் சாரட்டு வண்டியில் ஏறிப் புறப்பட்டார். உடன் குறிஞ்சியும் விலங்கிட்ட ராஜகாந்தியும் பரிவாரங் களுடன் புறப்பட்டனர்.

---

*ஆங்கிலக் கும்பினியரால் 'ஹிஸ் எக்ஸலென்ஸி' என்ற விருதுவைப் பின்னாளில் பெற்றவர்.

'கள்ளர் சரித்திரம்' – பேராசிரியர் ந.மு. வேங்கடசாமி நாட்டார் (1928).



**பு**துக்கோட்டை அரண்மனை, குற்றாலக் குறிஞ்சியே வருகை தந்து விட்டாள் என்பதில் பூரித்துப் புளகித்துப் போனது.

ராஜகாந்தி பிடிப்பட்டதுகூட ஒரு பெரிய ராஜ வெற்றியாகத் தெரியவில்லை.

அரசர் ஸ்ரீராஜ ரகுநாத தொண்டைமான் நடந்தவற்றைக் கேள்விப்பட்டு ஒருபுறம் வியப்பும், மறுபுறம் வேதனையும் அடைந்தாலும், குறிஞ்சிக்கு வேண்டிய பணிவிடைகளில் ஊசிமுனையளவும் குறைவேற்படாதவண்ணம் ஆணை பிறப்பித்திருந்தார். மக்களின் செல்வாக்கு பெற்ற இனிக்கும் பொன்மாங்கனியல்லவா அவள்?

அவள் ஒரு நிபந்தனை விதித்தாள். அதாவது –

"என்னைப் பாடச் சொல்லப் போகிறீர்கள். புரிகிறது. ஒப்புகிறேன். ஆனால் எனது கச்சேரி முடியும்வரை ராஜ காந்தியைச் சிறையிலடைத்து அகௌரவிக்கக் கூடாது. மகளே என்றழைத்தவனல்லவா? தனியறையில் வைத்துப் பூட்டிக் காவல் நிறுத்தினாலும் தகுந்த முறையில் பராமரிக்க வேண்டும்."

அறவழி தவிரப் பிறவழி தெரியாத இளம் வயது ஆண மூகரான புதுக்கோட்டைத் தொண்டைமான் இதனை ஏற்கவே செய்தார்.

அன்றைய ஓய்வுக்குப் பிறகு மறுநாள் பாடுவதாக அறிவித்திருந்தாள் இசைத் தேவதை குறிஞ்சி.

**அ**ந்த விசாலமான கலையழகுமிக்க அறையில், தரை யிலேயே அமர்ந்து சுவரில் சாய்ந்து கண்மூடி எது குறித்தோ சிந்திக்கிறாள்...

ஆ! கொள்ளைக்காரனாக இருந்தாலும் அவனது இதயத்தே ராஜகம்பீரம் படைத்த ராஜகாந்தி ராகமல்லவா குடியிருக்கிறது.

ஒரு பக்கம், ஒரு தலைக் காதலால் உருகிச் செத்துவரும் ஞானசுந்தரம், தம்பூரை மீட்டிக் காதல் நாதத்தில் கவனத்தைக் கலந்து கொண்டிருக்கிறான்.

அறை முழுவதும் அகிற்புகை; தம்பூரின் நாத அலைகள்...

கண்களை மூடி அரம்பை சொரூபமாக அமர்ந்திருக்கும் குறிஞ்சியின் குறை சொல்லாப் பேரழகை, ரகசியமாகத் திருடியவாறு தம்பூரில் நாதத்தைத் தணித்துக் கொண்டிருந்தான் ஞானசுந்தரம்.

"குறிஞ்சி!"

"ம்ம்..."

"என்ன யோசனை?"

"ராஜகாந்தியை எவ்வாறு விடுவிப்பது என்று!"

"நம்புகிறாயா?"

"நம்புகிறேன்; எந்தக் குற்றாலக் குறிஞ்சி ராகம் அவரைப் பிடிபடச் செய்ததோ, அதே ராகம் விடுபடவும் செய்யும் என்று நம்புகிறேன்! எனது சங்கல்பத்தையே முறியடிக்கச் செய்துவிட்ட சம்பவமல்லவா இது? காஞ்சி மாமுனிவர் என்னைக் கைவிட மாட்டார்!"

"அவர் உனக்கு ஏதோ உபதேசித்து இருக்கிறார்."

"அப்படித்தான் வைத்துக் கொள்ளுங்களேன்!"

"அப்படியானால் நீ முதலில் அவரைத் துதித்து கச்சேரியைத் தொடங்குவதுதான் சாலப் பொருத்தம்."

நெற்றிச் சுழிமுனையில் ஒரு மின்னல்; உண்மை தானே?

"நல்ல கருத்து ஞானி!"

"அது மட்டுமல்ல; அவர் பேராலேயே இருக்கும் சந்திரசேகரப்பிரியா எனும் அபூர்வ ராகத்தில் அவரைத் தோத்திரம் செய்து தொடங்கு! நான் இன்று உன்னுடன் பாடப் போவதில்லை. சமஸ்தானம் விரும்புவது உனது சங்கீதமே!"

"ஞானி! இந்தச் சங்கீதம் நீங்கள் அளித்த பிச்சை; இதன் பிரகாசம் உங்களைச் சார்ந்ததுதானே?"



"அறிவேன்; ஆனாலும் சந்தர்ப்பம் அறியாதவனா நான்? ஏதோ... சந்திரசேகரப்பிரியா ராகத்தைக் கொஞ்சம் ஞாபகப்படுத்தி ஆலாபனை செய்து பார்!"

அதுவரையிலும் தம்பூர் ஒலித்துக் கொண்டே இருக்கிறது.

ஆதார சுருதியில் குறிஞ்சியின் அனைத்து நரம்புகளும் சேதாரமின்றிச் சேருகின்றன...

முதலில் சந்திரசேகரப்பிரியா ராகத்தின் ஆரோகண சுரத்தை ஆராதித்துப் பார்க்கிறாள்...

ச...ரி...க...ப...த...நி...சா...

திடுமென்று தம்பூர் சுருதி நிற்கிறது.

ஆரோகணம் சொன்ன குறிஞ்சியின் கண்கள் தம்பூரை நோக்குகின்றன.

ஞானோதயமாய் இமையாது நோக்குகிறான் ஞானசுந்தரம்.

"என்ன ஞானி?"

"இந்த அபூர்வராகம் எதன் ஜன்யம்?"

"வகுளாபரணம்..."

"எத்தனையாவது மேளகர்த்தா?"

"..............."

"பதினான்காவது. நீ கைசிகி நிஷாதம் (நி) பாடவில்லையே! காகலியல்லவா ஒலித்தது!"

குறிஞ்சியின் நினைவில் நிஷாத தடுமாற்றம்...

ஞானசுந்தரம் ஆரோசை, அமரோசை சொல்லி ஆலாபிக்கிறான்.

சரிகபதநிசா... சநிதபகரிசா...

இராக வித்தாரம் அவனது குரலில் முத்தாரமாக மூர்ச்சனை காட்டுகிறது... அதுவும் ஒரு தேவகான குரலாயிற்றே!

ஞானப்பூர்வமான ஞானசுந்தரம் இசை மகா ஞானஸ் தனாயிற்றே!

குழைந்தும் இழைந்தும் தழைந்தும் போன குறிஞ்சி, ஞானசுந்தரத்துக் கமகத்தில் காதல் வயப்பட்டு, "ஞானீ!" என்றலறியவாறு எழுந்து சென்று அவனது பாதங்களில் நெற்றியைப் பதிக்கிறாள். அந்த நெற்றிச் சுழிமுனையில்...

இரவு நிலவு சுருதி கூட்ட...

அரண்மனைக் கொலுமண்டபத்தில் குறிஞ்சி பாடும் சந்திரசேகரப்பிரியா ராகத்தில், ஸ்ரீ சங்கராசாரியப் பெருமான் சந்திரசேகரேந்திர சரஸ்வதி சுவாமிகளே பிரகாசிக்கிறார்...

அன்றைக்கு ஸ்ரீ ஆசார்யாள் பெருமான் முன் பாடிய அதே சமஸ்கிருத சுலோகத்தைச் சந்தனத் தமிழில் வந்தனை செய்கிறாள்.

**குருவே நான்முகன்; குருவே திருமால்;**
**குருவே சிவன்; குருவே நிறையிறை!**
**குருவே...**
**கும்பிடுகிறேன்; கும்பிடுகிறேன்!**

ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சுவாமிகளின் பிரியத் தைப் பெற்ற அடுத்த கணம்...

வேறு எதையும் அவள் பாட விரும்பவில்லை.

புதுக்கோட்டை அரசர் ராஜரகுநாத தொண்டைமான் விரும்பிக் கேட்டுக் கொண்டது இதுதான். ஒரு கொடிய கள்வனையே மயக்கிய அந்த குற்றாலக் குறிஞ்சி ராகத்தை எத்தனை நாழிகை பாடினாலும் இன்புறுவேன்! அது ஒன்றே போதும்...

அவரே ஒரு சங்கீத கலாரசிகர்தானே?

அமைதியை வாழ்த்தும் தம்பூரின் இனிய நாதம்...

யாரும் தும்மல் வந்தாலும் அடக்கிக் கொள்ள வேண்டும்; இல்லையேல் மூக்கறுப்படும் தண்டனை நிறை வேறினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.



இமைகளை மூடித் தியானித்து அதர்வண மந்திரத்தை ஆராதித்த பிறகு...

நிதநி பதநி ச்ா...

சுருதியில் ஆலாபனை, சுகம் காணத் தொடங்கு கிறது...

சரிகம நிதநி பதநிச்ா...

நீண்ட நேரம் நீள்விழிகளைச் சுருதியில் குரலிழைய நிறுத்துகிறாள்...

அப்போது அவளது குண்டலமணிந்த காதுகளில் ஒலிக்கும் சொற்கள்...

'நண்பர்களே! என் மீது நம்பிக்கையிருந்தால் தப்பி யோடுங்கள்! எந்தச் சங்கீதம் எனக்கு விலங்கிட்டதோ, அதே சங்கீதம் என்னை விடுதலை செய்யும்!"

"மகளே! மகளே! மங்கையிடம் மயங்காதவன், மதுவிடம் மயங்காதவன், உன் இசையில் மயங்கி விட்டேன்!"

கொள்ளையர் தலைவன் ராஜகாந்தி, பிள்ளைத்தமிழில் – பிரமாதமான தமிழில், சத்திய நம்பிக்கையுடன் சாற்றிய சாரமிக்க சொற்கள்...

காலையில் ஞானசுந்தரம், "நம்புகிறாயா, குறிஞ்சி," என்று கேட்டபோது, அவள் சொன்ன பதில்: "நம்பு கிறேன்! எந்தக் குற்றாலக் குறிஞ்சி ராகம் அவரை பிடிப்படச் செய்ததோ அதே ராகம் விடுபடவும் செய்யும் என்று நம்புகிறேன்!"

ஓ... சரபக்தி! கிருபாஜனனீ! பக்த பிரியயே! புராதனீ! பெண்ணையுணர வைக்கும் பிரத்யங்க ரூபிணி! பிரேத போஜனீ! வாகினீ! பிரத்யங்கிர பரமேஸ்வரீ! க்ஷம், க்ஷம், க்ஷம்...

பீஜமந்திரம் சுரத்துக்குச் சுரம் பீறிட்டு, அரண்மனையை மட்டுமல்லாது, வெளியே அரணாக நிற்கும் ரசிக மக்களையும் வசந்தத் தாலாட்டி வயப்படுத்துகிறது...

ஆ... இராகமா ஆலாபனை செய்கிறாள்?

அதிலே யோகமிருந்தது; மோகமிருந்தது; போகமிருந்தது...

பக்தி இருந்தது; முக்தி இருந்தது; சக்தி இருந்தது...

அரண்மனை அறைக்குள் விலங்குடன் சிறைப்பட்டிருந்த ராஜகாந்தி மட்டும் எந்தத் தெய்வத்தையும் வேண்டிக் கொள்ளவில்லை. அவன் குறிஞ்சியாகிய பாடகியையே வேண்டிக்கொள்கிறான். 'மகளே! இங்கேயும் என்னை மயக்கி விடாதே! நான் தப்ப வேண்டும்! தப்ப வேண்டும்!'

ஆனாலும், அவனைக் குற்றால அருவி போலப் பாய்ந்து வரும் அந்த ராகம் அடிக்கடி மயக்க, அதிலிருந்து விடுபட நாழிகைக்கு நாழிகை சிலிர்த்து விழிக்கிறான்...

மேல் ஸ்தாயியில் குறிஞ்சியின் குரல் ஒலிக்கிறது...

ஆ! ஸ்ரீ ஆசார்யாள் சுவாமிகள் சொன்ன பாஷாங்க மத்திமத்தில் நிறுத்தி, பின்னர் அதே மத்திமத்தை (ம) உபாங்கமாகவும், பாஷாங்கமாகவும் உபாங்கமாகவும் பாஷாங்கமாகவும்...

சுத்தமாகவும் களங்கமாகவும் மாறி மாறி ஆலாபனை செய்தபோது...

ஓ...

# இராகம் – 5



# பைரவி

அரசர் ராஜரகுநாத தொண்டைமான் கருணை விழிகளில், கங்கைப் பிரவாகமா? காவிரிப் பிரவாகமா? இல்லை குற்றால நீர்வீழ்ச்சிதானா?

குறிஞ்சியாகவா பாடுகிறாள் குறிஞ்சி?

வாணியன்றோ வாய்ப்பாட்டு பாடுகிறாள்?

சமஸ்தானத்து முதல் கச்சேரி என்பதாலா?

சே, சே!

ஒரு ரத்தக்கறை படிந்த மனம், ரசிகனாகிச் சித்தம் தடுமாறிச் சிறைபட்டுக் கிடக்கிறானே என்கிற நாரதாவேசமோ? அன்றி அனுமந்தாவேசமோ?

இசைவெள்ளம் கரைபுரள ஆலாபிக்கிறாள்...

ஓ... இதுதான் புதியதாகக் கண்டுபிடித்த குற்றாலக் குறிஞ்சி ராகமோ? கொலைஞனையும் சுவைஞனாக்கி, வியப்பே வியந்து விக்கித்த புதுமை ராகமோ?

அந்த ராகம் புதுக்கோட்டையில் முகவரி சொல்லி, வானத்தை அண்ணாந்து பார்க்கிற புகழ்ப் புயலாகிறது...

அந்த அபூர்வராகத்தை பிடிலும் குழலும் வீணையும் சொரூபமாக்கினாலும், மயூரி வாத்தியம் மட்டும் முருகனை அகவி அழைக்கிறது...

ஆலாபனை முடிகிறது.

குறிஞ்சியின் மைகொண்ட கயல்விழிகள் மெய் கொண்டு இமைகளை மூடி மேனி சிலிர்க்க, 'தீட்சிதர் பெருமானே!' என்று குருவை அழைக்கின்றன.

தோகையனைய இமைகள் திறக்கின்றன.

மிருதங்கத்துக்கு ஒரு சமிக்ஞை; அடுத்து *கடத்துக்கும், முகர்சிங்குக்கும், டோலக்குக்கும்...

அவளது புதிய இசைமுறைக் கச்சேரியே அலாதியானது. கனத்தை எளிமையாக்கிய கற்கண்டுப் பந்தலில் கனிச்சாறு மழையாயிற்றே! மதிவாணர்கள் மட்டுமே ரசித்த இந்த இசைப் பளுவை இலேசாக்கி மக்கள் தோள் சுமக்கும் பூப்பல்லக்காக்கிய புதிய முறையாயிற்றே!

அவளது சமிக்ஞை கண்டு...

'நம்' – மிருதங்க சாப்பு. அது ஒரு தொடக்க சமிக்ஞை. தொடர்ந்து மிருதங்கம் 'தத்தாங்கிட தகதரிகிட' என முழங்க, கடமோ, 'தித்தாங்கிட திகதரிகிட' என முழங்க, டோலக்கோ, 'தத்தித்தா, தத்தித்தா, தத்தித்தா...'

மூன்று வாத்தியங்களுக்குமே முகர்சிங் மோகத்தைக் கிளறுகிறது...

இப்படி, மரபு தவறி, வழக்கமாகக் கச்சேரியில் சில வித்துவான்கள் மாவரைக்கிற பாணியைத் தவிர்த்து, லயம் என்கிற பெயரால் தொடையைப் புண்ணாக்கிப் பாமர மக்களைப் பயமுறுத்துவதை விடுத்து, புதிய மரபில் இசையென்றால் ஓரறிவு படைத்த ஜீவனையும் ஒரு கணம் மெய் சிலிர்க்க வைப்பது என்கிற சித்தாந் தத்தையே அவள் சீவக சிந்தாமணிக் காப்பியம் படித்ததில்

* அந்தக் காலத்தில் இத்தனை வாத்தியங்களும் இருந்தன. இவை நடுவே வந்தவையல்ல. மயூரி ஒன்றுதான் இப்போதைய வழக்கில் மாறிவிட்டது.



அறிந்தவளாயிற்றே? தமிழ்ப் புலவன் எடுத்து வளர்த்த தவப்புதல்வியல்லவா!

பாடலைத் தொடங்குகிறாள்...

**விலங்குகளே! வனவிலங்குகளோ – கை**
**விலங்கு என்ன செய்யும்?**

ஆ! என்ன பல்லவி இது?

குற்றாலக் குறிஞ்சிக்காக அமைந்த பாடலல்லவே இது? புதிதாகப் பாடலைக் கற்பனை செய்து இயற்றி இருக்கிறாள்...

பல்லவியைப் பாடி அவள் சுருதியில் நிற்கிறபோது...

மிருகங்களே எனது இசையில் மிருதுவாகிறபோது கைவிலங்கு ஏன் கரையாது என்கிற அருத்தமோ?

அந்தப் பனிமலைப் பார்வதியின் பவித்திரமான பேரழகு இந்த இசைமலைப் பேரழகின் இனிய முகத்தில் படருகிறது...

ஆ! கையெடுத்துக் கும்பிடும் அழகல்லவா இது?– என கரம் கூப்புகிறார் தொண்டைமான்!

எவர் கண்களில்தாம் ஆனந்த நீர் படர்ந்து பரமானந் தத்தைப் பறைசாற்றவில்லை?

அனுபல்லவி பாடி சரணத்தைத் தொடங்குகிறபோது, பத்திரகாளி பிரத்தியங்கிரா தேவியையே முத்திரை பதித்து முழக்குகிறாள்; அழைக்கிறாள்!

தெய்வங்களை எங்கே எப்போது அழைத்துப் பாட வேண்டுமோ, அங்கே அப்போது அழைத்துப் பாட வேண்டும் என்கிற புதிய கொள்கை படைத்த தமிழ்ப் பாடகியல்லவா குறிஞ்சி! தமிழர்தம் வாழ்வைப் பாடு பவள் அல்லவா குறிஞ்சி! தமிழச் சமுதாயத்து முன் னேற்றம் குறித்துப் பாடுபவளல்லவா குறிஞ்சி! ஏன்? உலகின் எந்தக் காப்பியங்களும் சொல்லாமல், தமிழ்க் காப்பியங்கள் மட்டுமே ஆரம்பமாகக் கூறும் 'உலகு' என்ற சொல்லின் உண்மை புரிந்து உலகைப் பாடுபவளாயிற்றே குறிஞ்சி!

ஓ... சரணத்தின் மூன்றாம் அடியை உச்சஸ்தாயியில் பாடுகிறாள்...

வழக்கமாக ஞானசுந்தரமும் சேர்ந்து பாடுகிறபோது வரிகளைப் பங்கிட்டுச் சங்கதிகளைச் சேர்த்துப் பாடி மகிழ்விப்பர். சமயத்தில் வார்த்தைகளைக் கூடப் பங்கு போட்டுப் போட்டிச் சங்கீதமாக்குவர். இது அவர்களது புதிய கண்டுபிடிப்பு; புகழ் பெற்றதன் ஆதார ரகசிய ஆணிவேர். ஆனால் இப்போது?

குறிஞ்சி மட்டுமே பாடினாலும் அது குறிஞ்சிப் பூவாய் அதிசயிக்கவும் செய்தது.

பக்கமேளங்கள் சமத்திலிருந்து, வழக்கத்தைத் தள்ளி, கால், அரை, முக்காலாக இடைபுகுந்து லயத்தின் நயத்தை லாகவமாகப் பேசுகிறபோது...

சேதனங்கள் அசேதனங்களாகின்றன; அசேதனங்கள் சேதனங்களாகின்றன... அசைவது அசையாததுமாக, அசையாதது அசைவதுமாக...

அரண்மனைத் தனியறையில் சிறை வைக்கப்பட்டிருந்த ராஜகாந்திக்கு அந்தப் பாட்டு புரிகிறது...

தனக்காகப் பாடுகிற பாட்டு...

அவன், அன்றுபோல மயங்கிவிடக் கூடாதே என்று குறிஞ்சியையே தெய்வமாக எண்ணிக் கும்பிட்டு மானசீக மாகக் கேட்டுக் கொள்கிறான்.

'மகளே! நான் மயங்கக் கூடாது; தப்பிக்க மார்க்கமிருக் கிறதா என்று தேடுகிறேன்; தேடுகிறேன்...'

குற்றாலக் குறிஞ்சி ராகத்தின் சுரவிந்நியாசம், விநோத விசித்திரமாக, இடையிடையே ஆலாபனைக் குழைவுடன்...

ஆ! அந்த 'கமபகரிச' என்கிற பிரயோகத்தில் மத்திம பாஷாங்கம் மயக்குகிற போது...

அறைச் சிறைக்காவலர்கள் நிற்கிறார்களா? தூங்குகிறார் களா?



ஓரடி நீண்ட சங்கிலியுடன் பிணைக்கப்பட்ட விலங்குக் கரங்களை, கதவு கம்பிகளின் வழியே நீட்டிய ராஜகாந்தி, ஒரு சேவகன் இடுப்பில் செருகியிருந்த சாவியை எடுத்துக் கொண்டு, முயன்று அறைப் பூட்டைத் திறந்து வெளிப்பட்டு விடுகிறான்.

அவனா திறந்தான்? குற்றாலக் குறிஞ்சி ராகமல்லவா திறந்து விட்டது?

அரண்மனையின் மண்டபத்தையடைந்த ராஜகாந்தி, கூட்டத்துடன் கூட்டமாக நிற்கிறான். மது உண்ட மயக்கம் போல் மயங்கிக் கிடப்பவர்கள் கண்களில் அவன் எங்கே தெரிகிறான்?

ஆனாலும், அவன் தப்பித்து ஓடவில்லை, திருடர்களில் மனிதனில்லையா, என்ன?

குறிஞ்சி பாட்டை முடிக்கிறாள்.

அவள் முடித்ததை எவர் உணர்ந்தனர்? இன்னமும் அவர்கள் மயக்கத்திலிருந்தே விடுபடவில்லையே!

"சபாஷ் மகளே!" என்று ராஜகாந்தி கர்ஜித்த பிறகு தானே அனைவருமே விழிப்புக் கண்டனர். அசேதனங்கள் சேதனங்களாயின.

வயதில் சிறியவளானாலும் குறிஞ்சியின் பாதங்களில் விழுந்து வணங்குகிறான் ராஜகாந்தி.

அரசர் கண்கள் முதல் அனைவருடைய கண்களிலும் ஆச்சரியம் மேலிட்டு, உடைந்த இதயங்களை ஒட்டச் செய்து, உணர்வுகளுக்கே உயிரூட்டுகிறது.

'எந்தச் சங்கீதம் என்னைப் பிடிபடச் செய்ததோ அந்தச் சங்கீதம் விடுபடச் செய்யும்!' என்று ராஜகாந்தி குற்றாலத்தில் கூறிய சொற்களை நினைவு கூர்ந்து பார்க் கிறார் புதுக்கோட்டை அமைச்சர்.

ஓ... இது சங்கீதமல்ல; அதற்கும் மேலே, அதற்கும் மேலே...

எவ்வளவு நம்பிக்கை இந்தக் கொள்ளைக்கார ராஜ காந்திக்கு? ஒரு மகாஞான ரசிகனுக்குக்கூட இந்த நம்பிக்கை ஏற்படாதே!

அரியணையை விட்டெழுந்த அரசர் ராஜரகுநாத தொண்டைமான், குறிஞ்சியை நோக்கி வந்து நிற்க, குறிஞ்சியும் எழுந்து நின்று வணங்குகிறாள்.

"என் தங்கையே! சங்கீத சக்கரவர்த்தினி! உன்னை மகளே என்றழைத்த கொலைகாரனை - கொள்ளைக்காரனை - தப்பு தப்பு - சங்கீத ரசனையுள்ளவன் இவ்வாறு இருக்க முடியாது. ஏதோ சந்தர்ப்பம் இவனை இப்படி யாக்கி இருக்கிறது... இவனை விடுதலை செய்வது ராஜதரும மில்லையென்றாலும் உனது இசை தருமத்தையும், நீ கேட்டுக் கொள்ளாமலேயே அவனே விடுதலையாகி வந்த அதிசயத்தையும் கண்டு, வழிகூட்டி அனுப்புகிறேன். அவனுக்குப் புத்தி சொல்லியனுப்புவது உனது கடமையாக விட்டுவிடுகிறேன்!"

தொண்டைமான் குரலில் ரசனையின் மனமாற்றம்.

ராஜகாந்தியே பதில் சொன்னான்:

"புதுக்கோட்டை சீமானே! நான் கொலை, கொள்ளை நடத்தியதாகக் கேள்விப்பட்டிருப்பீர்கள். ஆனால் எவளை யாவது கற்பழித்ததாகக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? நான் ஏழைகளின் வயிற்றெரிச்சலை எப்போதாவது கொட்டிக் கொண்டிருக்கிறேனா? தருமம் செய்யும் தனவந்தர்களின் வாசற்படியைத் தாண்டியிருக்கிறேனா? ஏழைகளின் வியர்வையில் ஏழடுக்கு மாளிகை கட்டுகிறானே... அவன் தான் எனது முதல் எதிரி! கற்பழிப்பதிலேயே கால சுகம் காண்கிறானே... அவன்தான் எனது இரண்டாம் எதிரி! மக்களின் கல்விக்காகவோ, முன்னேற்றத்துக்காகவோ பயன்படாமல் கோயில்களில் பொன்னும் பொருளும் குவிக்கின்றானே... அவன்தான் மூன்றாம் எதிரி. பசி என்றால் ஒரு படுபாவியும் பணம் தரமாட்டான்; பாவங்களைத் தீர்க்க, கோயில் என்றால் கொட்டித் தீர்க்கிறான். கோயிலைக் கண்டுபிடித்தவன் புத்திசாலி. ஆனால், கையில் உள்ள பணம் அறவழியில் செலவா காமல் புறவழியில் கொள்ளையடிப்பவனைவிட நான் கொடியவனா? நான் ஏன் கொள்ளைக்காரனாக மாறி னேன்? அழகிய பெண்களைக் கண்டுவிட்டால் கத்தியை



நட்டுக்கல்யாணம் செய்துகொள் என்று கட்டாயப்படுத்திக் காமலீலை செய்கிறானே அந்நிய மராட்டிய அரசன்... அந்தக் கொடுமை சகியாது கொலைகாரனானேன்! ஆங்கிலக் கும்பினியன் செய்யும் அட்டூழியம் கண்டு பொறுக்க மாட்டாமல் கொள்ளைக்காரனானேன்! ஆனால், ஏழை களின் பங்காளனாக இருக்கிறேன்; இது தவறா? ஐந்து சக்கரத்துக்குத் தங்கள் பெண்களை விற்கும் அக்கிரமம் முளைத்து இருக்கிறதே! இது சமூக தருமமா? நான் சொன்ன அனைத்தும் தவறு என்று சொல்லுங்கள்... நான் வணங்கும் குறிஞ்சியின் தலையில் சத்தியம் செய்து இவற்றிலிருந்து விடுபடுகிறேன். சொல்லுங்கள் தொண்டைமானே?"

"தவறில்லை; தவறில்லை; தவறில்லை!" குறிஞ்சிதான் ஆவேசமாகக் கூச்சலிட்டாள்.

"மகளே என்றழைத்த ராஜகாந்தி! எனது இசையின் பெயரால் உனது விடுதலையை யாசிக்கிறேன்! ஆனால் இந்தப் புதுக்கோட்டை ராஜ தருமத்துக்குக் களங்கம் வராமல் நடந்து கொள்!"

"மகளே! நீ சொன்ன ராஜகாந்தி ராகமாகவே நடந்து கொள்வேன். ஆனால் அது எப்படி இருக்கும் என்று நீ பாடி நான் கேட்க வேண்டும்,"

"அடுத்த மூன்றாம் நாள் திருமழபாடிக் கோயிலில் கச்சேரி! அங்கே பாடுவேன். வந்து கேள். ஆனால் இங்கு மயங்கியதுபோல் அங்கு மயங்கி அகப்பட்டுக் கொள்ளப் போகிறாய்? எல்லாருக்குமே தொண்டைமான் இதயம் இருக்க முடியாது."

"வருவேன் மகளே! அங்கே நீ குற்றாலக் குறிஞ்சி ராகம் பாடக்கூடாது."

"பாடித்தான் ஆகவேண்டும். எனக்குப் பேசும் கச்சேரி கட்டணத்தைவிட, அந்த ஒரு ராகம் மட்டும் தனி யாக நூறு சக்கரம் (ரூபாய்) சன்மானம் பெறுகிறது. பாடாமலிருக்க முடியுமா? ஆனால் நான் ராஜகாந்தி

பாடியதும் சமிக்ஞை செய்வேன். நீ போய்விடு! அரசர் தொண்டைமான் அனுமதியுடன் நீ விடை பெறலாம்."

அரசர் ராஜரகுநாத தொண்டைமான் அனுமதியளிக்க, ராஜகாந்தி அனைவரையும் பணிந்து விடைபெறுகிறான். அப்போது சொன்னான்: "மகளே, குறிஞ்சி! நான் எங்கிருந்தாலும் உன் பக்கத்தில் இருப்பதாக எண்ணிக் கொள். உனது கற்பை எவனாவது முட்டிப் பார்க்க எண்ணிப் பார்ப்பானேயானால், அவனது முழங்கால்களை வெட்டி எறிவேன். இது நீ பாடும் குற்றாலக் குறிஞ்சி ராகத்தின் மீது சத்தியம்!"

ராஜகாந்தி அனைவரையும் வணங்கி விடுதலை பெற்று வெளியேறினான்.

"அரசே! நாங்களும் புறப்படலாம் அல்லவா?"

"என் வேண்டுதலுக்கிணங்கிப் பாட வந்த உனக்கு சன்மானம் வழங்க வேண்டாமா?"

"நான் உங்கள் வேண்டுதலுக்கு வரவில்லை; ராஜ காந்தியின் விடுதலைக்கு வந்தேன். அதுவே எனக்குக் கனகாபிஷேகம் செய்ததுபோல!"

"குறிஞ்சி இப்படிப் பேசலாம்; ஆனால் என் தங்கை இப்படிப் பேசலாமா?"

விதிர்த்தும் வியர்த்தும் போனாள் வேல்விழியாள் குறிஞ்சி.

"அண்ணனின் அபிப்பிராயம்?"

"நாளை உனக்குக் கனகாபிஷேகம்!"

"தேவையா?"

"தேவை!"

"ஏற்கிறேன்; அரசர் என்ற முறையிலல்ல; அண்ணன் என்ற முறையில்..."

குறிஞ்சியும் ஞானசுந்தரமும் விடைபெற்றுக்கொண்டு தங்களுக்குகென ஒதுக்கப்பட்ட தனியறை நாடிச் சென்றனர்.



இதில் அதிகமாகப் பூரித்துப் போனவன் ஞானசுந்தரம்.

இரவுக்கன்னி நிலவைத் தாலாட்டிக் கொண்டிருக்கும் இனிய காட்சியை மேன்மாடத்து நிலா முற்றத்தில் அமர்ந்து ரசித்துக் கொண்டிருந்தாள் குறிஞ்சி.

அருகே அமர்ந்திருந்த ஞானசுந்தரமோ, குறிஞ்சியாகிய தேயாத நிலவை ரசித்துக் கொண்டிருக்கிறான்.

"குறிஞ்சி!"

"ம்ம்!"

"இன்று உனது பாட்டு அபாரம்!"

"நீங்கள் கொடுத்த பிச்சை!"

"ஆனால் எனது பிட்சாப்பாத்திரம்தான் இன்னமும் காலியாகவே இருக்கிறது."

ரதிநிவேதம் ராகாங்கமாகச் சிரிக்கிறது.

"ராகாங்க சிரிப்பு வேண்டாம் குறிஞ்சி! பாஷாங்கச் சிரிப்பைச் சிரிக்கலாமே!"

அவள் பைரவி ராகமாகப் பார்க்கிறாள்.

"இந்தப் பார்வையின் அர்த்தம்?"

"பைரவி!"

"உண்மையைச் சொன்னாய்! சம்பூரணமான நட பைரவி ராகத்தைப் பாடுபவர்களில்லை. ஏன்? நடபைரவி, ஒரு சுரத்தை பாஷாங்கமாகக் கொண்டு விட்டதால் அது பைரவியாகி, நாடு முழுவதும் புகழ் பெற்றதுமல்லலாமல், ராக நயத்திலும் புகழ் பெற்று விட்டது! வக்கிரமற்ற சம்பூரண ராகத்தில் ஒரே சுரப்பாஷாங்கம் கண்ட ஒரே ராக மல்லவா? அதுவும் அவரோகணத்தில் பாஷாங்கம். அவரோகணம் என்பது பெண்! ஆரோகணம் என்பது ஆண்! நீ எப்போது பாஷாங்கமாவது? நான் எப்போது ஆரோகணமாவது?"

ஆ! பாலுணர்வை இசை ஞானமுடன் எவ்வளவு பக்குவமாகச் சொல்லி விட்டான் ஞானசுந்தரம்! குறிஞ்சி குதூகலித்துப் போனாள். "ஞானி! நீங்கள் ஞானிதான்!"

"இப்படியே என்னைப் புகழ்ந்து சாகடிக்க முடிவு செய்துவிட்டாயா? நீ பாஷாங்கமாகாவிட்டால், நான் பாஷாணமாவேன்!"

"ஞானீ!" பதறிப் போனாள் குறிஞ்சி.

"உன் பாட்டைக் கேட்டுக் கொள்ளைக்காரன் மயங்குகிற போது, உன்னைக் கொள்முதல் செய்து கொண்டவன் எத்தனை நாள்கள் மயங்கிச் சாவது?"

"ஞானி! என்று குருநாதர் வீட்டை விட்டு வெளியே வந்தோமோ அன்று முதல் தொடங்கிய நாடகம் இது! அன்று முதல் எதைச் சொன்னேனோ அதையே இன்றும் சொல்லுகிறேன். நான் புலைச்சி; தாழ்ந்த குலத்தவள். நீங்கள் பிராமணர்; மேலும் நீங்கள் எனது குருநாதரைப் போல்!"

"அதனால்தான் உனது காதலைக் காணிக்கையாகக் கேட்கிறேன்."

"தருவேன். புலச்சியை மணந்த புண்சொல் உங்களுக்குத் தேவையா? ஞானி! உங்களுக்கிருக்கும் ஆசை எனக்கில்லையா? நமது கச்சேரியை ரசிப்பவர்களெல்லாம் ரதி-மன்மதன் போலிருக்கிறார்கள் என்று கூறுவது என் காதில் விழவில்லையா? ஐயோ! நான் புலைச்சி! புலைச்சி! புலைச்சி! பச்சையாகச் சொன்னால் பறைச்சி; கொச்சையாகச் சொன்னால் சண்டாளச்சி! இவை சமுதாயம் எங்களுக்குக் கொடுத்த இரக்கமற்ற விருதுகள்!"

ஞானசுந்தரம் ஞானமாகச் சொன்னான்: "ஆனால் இச்சையாகச் சொன்னால் நீயே அசல் பிராமணத்தி! எவருக்குக் கிடைக்கும் உனக்குக் கிடைத்த பாக்கியம்? ஆசார்யாள் பெருமான் ஆசியுடன் உபதேசம் பெற்ற நீ புலைச்சியல்ல; கலைச்சி! பறைச்சியல்ல; நிறைச்சி! சண்டாளச்சியல்ல; எனது பெண்டாளச்சி! என்னை குரு என்கிறாயே அதற்கும் விளக்கம் சொல்லுகிறேன். உனது மானசீகக் குரு ஸ்ரீ தீட்சிதர்; நான் ஞானசீகக் குரு! போதுமா? இன்னும் தேவையா?"

ஞானசுந்தரம் குரலில் அடாணா ராகம் எதிரொலித்தது.



"ஞானி! உங்கள் அடாணா ராகம் பிரமாதம்! அடாணா கோபத்துக்குரிய ராகம்தான்!"

"காரணம் அதுவும் வக்கிரம், பாஷாங்கம்; ஆனால் தோஷாங்கமல்ல!"

"நீ இல்லையேல் நான் எங்கே ஞானி?"

"இதையே நான் கேட்கிறேன்; நீ இல்லையேல் நான் எங்கே?"

குறிஞ்சியின் விழிகளில் நீர் முத்துக்கள்.

"நான் பாஷாங்கமாகத்தான் வேண்டுமா ஞானி?"

"ஸ்ரீ ஆசார்யாள் பெருமான் சொன்னதன் அர்த்தமே வேறு! குற்றாலக் குறிஞ்சி ராகம் போல வக்கிர பாஷாங்கமாகி விடாதே என்றுதான் சொன்னார். வக்கிர பாஷாங்கமோ, இருசுர பாஷங்கமோ நல்ல பெண்மணிக்கு உவமை கூற முடியாது. வக்கிர பாஷாங்கமென்பது போக்கிரித்தனமான பொண்டாட்டி! இருசுர பாஷாங்கமென்பது விபசாரியான பொண்டாட்டி! நீ அவரை பைரவி போல் வாழலாமா என்று கேட்டிருந்தால் 'ததாஸ்து' என்றிருப்பார். காரணம், நீ என்னைக் காதலிப்பது அந்த மகானுக்குத் தெரியாதே!"

ஓ... பைரவி, பைரவி, பைரவி...

ராகத்தில் சிறந்தது நாட்டைக் குறிஞ்சியல்ல; பைரவி!

"ஞானி! உங்கள் காதலை எப்போதோ ஏற்றுக் கொண்டு தானே நாம் இசை மணக்க வாழ்ந்து வருகிறோம்! ஒப்புக் கொள்கிறேன். சித்திரை மாதம் என்பது இளவேனில் மாதமாகச் சிந்தனாவாதிகள் புகழ்ந்தாலும் என்னைப் பொறுத்தமட்டில் நெருப்பு மாதம்! தைப்பாவையாகிய தமிழ்ப் பாவை மாதம் பிறக்கட்டும்! பிள்ளையார் சுழி பிறக்கும்; வாழ்வின் வழி திறக்கும்; வயிற்றில் விழி பிறக்கும்! அதுவரை பொறுக்க முடியாதா?"

அவன் பதில் சொல்லாமல் போய் படுத்துக் கொண்டான்.

அவனது விரகதாபம் அவளுக்கு மட்டும் இல்லையா? மீண்டும் நிலாமுற்றம் சென்று அந்தக் களங்கமான – பாஷாங்கமான நிலவைக் கவனிக்கிறாள். மார்பகங்கள் விம்மிப் புடைக்கின்றன. குளித்தறியா கற்பின் குற்றாலத்தில் மெல்லிதான நீர்வீழ்ச்சி.

மண்குடம் இன்று பொன்குடமாகி அதில் பாலையும் தேனையும் பழச்சாற்றையும் நிரப்புவார்கள் என்பது எதிர் பார்த்ததா?

அருமை தந்தை குற்றாலம் மீனாட்சிசுந்தரம் பிள்ளையின் மிருதங்கத்தின் சுநாதமான ஓசை எங்கோ ஒலிப்பது போலக் கேட்கிறது!

குறிஞ்சியின் கதைதான் என்ன?

# இராகம் – 6



# குறிஞ்சி

வற்றாத அழகின் வார்ப்படத்தில் பிரமன், குற்றாலக் குறிஞ்சியைப் பொன்னாய் உருக்கி வார்த்துப் பூவுலகத் தேவதையாகப் படைத்து விட்டான் என்று குற்றால மக்கள் பேசி மகிழ்கிற அளவுக்குத் தகத்தகாயமாய்ப் பிறந்து, தரித்திரத்தில் வளர்ந்து, தசமியில் பூப்படைந்து, நாள்களை நகர்த்திக் கொண்டிருந்த ஒரு ஞாயிற்றுக்கிழமையன்று...

மிருதங்க சக்கரவர்த்தியான தந்தை மீனாட்சிசுந்தரம் பிள்ளை மீளாத் துயிலுக்கு ஆளாகிப் போனார்.

தெருவிலும் வீட்டினுள்ளும் கூட்டம் திணறிப் போய் நிற்கிறது.

கடலில் புயல் மையம் கொண்டு விட்டது போலக் கொந்தளித்துக் குமுறிப்போன குறிஞ்சி, தந்தையார் கடைசியாக வைத்துவிட்டுப் போன சொத்தான மிருதங்கத்தை எடுத்து மடியில் கிடத்தி, தாறுமாறாக வாசிக்கிறாள்.

தந்தையை மடியில் கிடத்தி அழுது பார்த்துப் பெற முடியாத உயிரை, இந்த மிருதங்கத்தின் மூலம் முயல்கிறாளோ என்று பார்ப்பவர் பரிதவிக்கின்றனர்; பரிதாபிக் கின்றனர்.

மிருதங்கத்தை அவள் வாசிப்பதாகத் தெரியவில்லை; ஏன்? நேசிப்பதாகவும் தெரியவில்லை. ஏதோ ஏசிப்பது போல ஏறுமாறாகச் சொற்கொட்டுக்களை முழக்குகிறாள்...

தாளத்தில் களங்க (கலப்பு)மான சங்கீரண ஜாதியில் வாசிக்கிறாள். வாசிக்க முடியுமா?

கண்களில் துன்பியல், குற்றால நீர்வீழ்ச்சி கண்டு மாணிக்க மார்பகங்களில் பாய்ந்து, இதயத்து எரிமலையைத் தணிக்க முடியாது தணிக்க முயல்கிறது...

என்ன செய்வாள்? இழப்பினை எவ்வாறு பெறுவாள்? எதிர்காலத்தை எங்ஙனம் நிர்ணயிப்பாள்?

மிருதங்கம் சொல்லி வைத்ததும், மிகுந்த நேரத்தில் அவரளவுக்குத் தெரிந்த சங்கீதப் பூக்களைச் சரங்கோத்து அவளது கூந்தலில் செருகி அழகு பார்த்ததும்தானே அவர் வைத்துவிட்டுப் போன சொத்தும், சுகமும்.

குறிஞ்சி என்ற பெயரை மட்டும் தெரிந்துதான் வைத்தாரோ? தெரியாமல்தான் வைத்தாரோ?

அவர் காதலித்ததும் இப்படித்தான்.

குற்றாலத்துச் சேரியில் புவனா என்கிற புலைச்சியையும் தெரிந்துதான் காதலித்தாரோ? தெரியாமல்தான் காதலித்தாரோ?

காதலுக்கு இனமில்லை என்பது காப்பியத்தோடு நிற்க வேண்டிய காண்டம்; ஆனால் சமூகத்தில் அது ஒரு கண்டம்.

இனத்தில் பெண்களிருந்தும் இதயத்தில் இடம் பிடித்து விட்டவளல்லவா புலைச்சி புவனா? இதனால் அவர் எத்தனை புரட்சிகளைச் சந்திக்க நேர்ந்தது? இந்த மானுட சமுதாயத்தை அவர் 'தூ' என்று காறி உமிழ்ந்தார்!

அவர் சொன்ன பதில்:

"என்னடா, ஜாதி? பெரிய ஜாதி? ஆதிதாளம் போன்று ஆதிக்குடி மக்களைவிட ஒரு ஜாதியா? ஆதி என்ற சொல்லை திருவள்ளுவன் முதல் குறளில் ஏன் வைத்தான்?"



பன்னிரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு பிறப்பது குறிஞ்சி மலர் என்பதால் குறிஞ்சி என்று பெயர் வைத்தாரோ?

ஒருவேளை, இசகுபிசகான ராகம் குறிஞ்சி என்பதால் இவ்வாறு சூட்டினாரோ? சங்கராபரணம் என்கிற சக்கர வர்த்தி ராகத்தில் பிறந்தாலும் குறிஞ்சி இசகுபிசகான ராகம்தானே?

இசையிலக்கணப்படி இதனை நிஷாதாந்தி என்றும் சொல்ல முடியாது; தைவதாந்தி என்றும் வாதிக்க முடியாது, வர்ஜவக்கிரமென்றும் சோதிக்க முடியாது. இது ஒரு சொப்பனராகம்! மேலேயும் செல்ல முடியாது; கீழே இறங்கவும் தயக்கம் – மனித சமுதாயத்தில் சில ஜாதிகளைப் போல...

சித்தரஞ்சனி ராகம் ஒரு நிஷாதாந்தி சித்திரம்! இந்தப் பித்த ரஞ்சனி போன்ற குறிஞ்சி ராகம் அழகு லட்சணத்தில் சேர்த்தியா? அவலட்சணத்தில் சேர்த்தியா? தாழ்ந்த ஜாதியில் சேர்த்தியா? உயர்ந்த ஜாதியில் சேர்த்தியா? கலப்பு ஜாதியில் சேர்த்தியா? களங்க ஜாதியில் சேர்த்தியா?

ஓ...

புரிந்தே பெயர் வைத்த மீனாட்சிசுந்தரம் பிள்ளையின் பூதவுடல் சாய்ந்து கிடக்கிறது. மனைவியை இழந்தது மட்டுமல்லாது இப்போது மகளையும் தவிக்க வைத்து மறைந்து போனாரோ?

குறிஞ்சி வாசிக்கும் மிருதங்க ஒலி அந்த வீதியையே நடுக்குறச் செய்கிறது. அவள் உடைந்து போக வாசிக்கிறாளோ? இல்லை, அது உடைந்து போக வாசிக்கிறாளோ?

ஆ! அந்த மிருதங்கம்தான் எத்தனை மகாவித்துவான்களுக்கு வாசித்து மகிமை பெற்றது?

எவ்வளவு நேரம்தான் இந்தக் காட்சியை ஊராரும் உறவினரும் பொறுத்துக் கொள்வர்? யார் சொல்லிக் கேட்கிறாள்? எவர் சொல்லி நிறுத்துகிறாள்? அவளது விரல்கள் ஊழிநடம் புரிகின்றன.

ஒருவர் துணிந்து சத்தமிடுகிறார்:

"பிணத்தைக் குளிப்பாட்டுங்கப்பா! நேரமாவலே?"

பிணத்தை... பின் என்ன செய்ய முடியும்?

நோய்வாய்ப்பட்ட நைந்த உடலாயிற்றே! நேரம் கடத்த லாமா?

படுத்த படுக்கையாக இருந்தபோது அவர் எதிர்பார்த் திருந்த ஒரே உருவம் அருமை நண்பர் விருபாட்ச கவிராயர். திருவாரூருக்கு எத்தனையோ முறை எத்தனையோ பெயர் களிடம் சொல்லியனுப்பியாகி விட்டது.

பரிசுத்த இதயங்கள் இறப்பில்தான் சந்திக்கும் என்பது போல அன்று பார்த்து வருகை தந்தார் விருபாட்ச கவிராயர்.

அருமை நண்பன் இறந்து விட்டானா?

வீதியில் வருகிறபோது மிருதங்க ஓசை கேட்டதே! அவன் வாசிக்கிறான்; அதனைக் கேட்டு மக்கள் ரசித்தவாறு கூடியிருக்கிறார்கள் என்றல்லவா நினைத்தேன்!

"ஓ... மீனாட்சி... மீனாட்சி..." என்று கதறியவாறு ஓடிச்சென்று கவனிக்கிறார்.

தலை தலையாக அடித்துக் கொண்டு தவித்தும் துடித்தும் போனார் தமிழ்ப் பெருந்தகை விருபாட்ச கவிராயர்.

யார் மிருதங்கம் வாசிப்பது, இந்த நேரத்தில்?

விளக்கம் கேட்டு வியக்கிறார்.

ஓ... குறிஞ்சி, குறிஞ்சி, என் மகளே!

விக்கி விக்கி விசும்புகிறார்.

பிள்ளைவாளின் சீடன் சொன்னான்:

"கவிராயரே! உங்களைத்தான் அவர் நிமிஷத்துக்கு நிமிஷம் எதிர்பார்த்தார். இறக்கும்போது அவர் சொன்னது, 'குறிஞ்சியைக் கவிராயரிடம் ஒப்படைத்து விடுங்கள். அவளை ஒரு சங்கீத கலாபூஷணியாக்கி என் ஆத்மாவைக் குளிரச் செய்யச் சொல்லுங்கள்' என்பதுதான்!"

கவிராயர் கண்களைத் துடைத்துக் கொண்டு அறை யினுள் பிரவேசிக்கிறார்.



மிருதங்கம் சாகவில்லை; இதோ உயிருடனிருக்கிறது என்பது போல விரல்களில் கதியின் ஜதிமழை! கண்களில் விதியின் சதிமழை!

மெல்ல அவளருகே சென்று, கவலை தேங்கிய நடுங்கும் கரத்தால் தோளைப் பற்றி அழுத்த...

'தகதிமிதா' என மிருதங்கம் வாய்மூட....

அமைதியோ, அமைதி.

தக– தகுதியான, திமி– (அறிவு) சமுத்திரம், தா–தருக வென நின்ற அமைதியோ?

அண்ணாந்து கவனித்த குறிஞ்சி, "பெரியப்பா!" என்ற அலறலுடன் துடித்து எழுந்து அவரைச் சேர்த்துக் கட்டி கொண்டு தோளில் தலைபுதைத்து உலகமே இருண்டு விட்டதுபோல உரக்கக் கதறியழுகிறாள்.

கவிராயர், அவளது கண்ணீரைத் துடைத்துத் தேற்று கிறார்.

'உறங்குவதுபோலும் சாக்காடு' என்று தமிழில் மட்டும் தேற்றவில்லை; 'புனரபி ஜனனம் புனரபி மரணம்' என்று சமஸ்கிருதத்திலும் தேற்றுகிறார். ஜனனம் என்பது பூபாள ராகமானதால், மரணம் என்பது முகாரி ராகம் என்று இசையிலும் தேற்றுகிறார்...

விருபாட்ச கவிராயர், நண்பர் மீனாட்சிசுந்தரம் பிள்ளைக்கு ஈமக்கிரியைகளை முடித்துவிட்டு, குறிஞ்சி யுடன் திருவாரூர் நோக்கிப் பயணமானார்.

திருவாரூரில் ஒரு பள்ளியாசிரியராக இருந்தார் விருபாட்ச கவிராயர்.

அப்போதெல்லாம் கல்வியைக் கறும்பலகையாக்குவது கிடையாது; நெஞ்சங்களாக்குவர். வினாத்தாள்களின் மூலம் பணத்துக்குக் கனா காண்பதில்லை; குணத்தாள் களில் (கால்களில்) பணத்தைக் கொட்டிய காலம். வகுப்பின் முதல் பிரிவுப் பாடமே வாழ்வின் முதல் தேவை யான பண்பாடு. பிறகுதான் எண்பாடு; எழுத்துப்பாடு!

எண்ணும் எழுத்தும் இரு கண்களானால், பண்பாடு ஒன்றே நெற்றிக்குள் மறைந்திருக்கும் கண்பாடு!

தமிழ் அந்த வீட்டின் கட்டில்; அதில் குறிஞ்சி நன்றாகவே சயனிக்க முடிந்தது. ஆனால் மீனாட்சி சுந்தரம் பிள்ளை சொல்லிச் சென்ற இசைத் தொட்டிலில் அவளைத் தாலாட்ட வேண்டுமே!

கவிராயருக்கு அது ஒன்றும் எட்டாக் கனியாகத் தெரியவில்லை.

திருவாரூரில் பிறந்து, அந்த மண்ணுக்கே இசை மகிமை தந்த மும்மூர்த்திகள்தாமே முத்துசாமி தீட்சிதரும், தியாகப் பிரும்மமும், சியாமா சாஸ்திரிகளும்?

தியாகப்பிரும்மம் திருவையாறு நோக்கிச் சென்று விட்டார். சியாமா சாஸ்திரிகளோ தஞ்சாவூர் கோயில் பணியில் தமது காலத்தை இறைவழிபாட்டில் கழித்துக் கொண்டிருந்தார். முத்துசாமி தீட்சிதரும் எட்டையபுரத்துச் சமஸ்தான வித்துவானாகச் சென்று, அங்குப் பிடிக்காமல், திருவாரூர் வாழ்வே போதும் என்று திரும்பி வந்து விட்டவர்.

விருபாட்ச கவிராயருக்கு மிக்கவும் வேண்டப்பட்டவர் முத்துசாமி தீட்சிதர்.

ஆவணி அவிட்ட சுபதினத்தில் குறிஞ்சியை அழைத் துக் கொண்டு புறப்பட்டார் கவிராயர்.

வழிநெடுகப் பல்வேறுபட்ட சிந்தனைகள்...

குறிஞ்சியோ புலைச்சிக்குப் பிறந்தவள்.

பிரம்மோபதேசியான தீட்சிதரிடம் மாணவியாக்குவது தரும நியாயத்துக்கு அப்பாற்பட்டதல்லவா? பின்?

இந்த பாஷாங்க சுரத்தை ஒரு ராகாங்கத்துடன் சேர்ப்ப தாவது? சங்கீதம் பாஷாங்கமாகலாம்; ஜனங்கள் பாஷாங் கமாகலாம்; ஏன்? சக்கரவர்த்தியும் பாஷாங்கமாகலாம்! சாஸ்திரம் பாஷாங்கமாகலாமா? பின்?

அப்படிப் பார்த்தால் சங்கீதமும் ஒரு சாஸ்திரம்தானே? இந்தச் சங்கீதத்தையே அழுகை ராகமான முகாரியில் 'சங்கீத சாஸ்திரக்ஞானமு' என்று ஐயர்வாள் பாடவில்லையா? சங்கீதம் தோஷமற்றது! அதற்குப் பாவம் பைரவியாகவும், புண்ணியம் நடபைரவியாகவும் இல்லையா? பின்?



திருவாரூர் தியாகேசப் பெருமான் மீது பாரத்தைப் போட்டுவிட்டு, சுந்தரமூர்த்தி நாயனார் நடந்த சுந்தரப் பூமியில் குறிஞ்சியை அழைத்துக் கொண்டு சுதந்திரமாக தீட்சிதர் இல்லத்துள் நுழைகிறார் கவிராயர்.

முத்துசாமி தீட்சிதரும், பூணூல் புனித காரியத்தை முடித்துக் கொண்டு, சீடன் ஞானசுந்தரம் தம்பூரை மீட்ட... குருகுக ஞானத்தைத் திருத்தணிகை முருகன்பால் பெற்ற அந்த 'குருகுக' முத்திரையுடன் கூடிய ஸ்ரீ நாதாதி குருகுஹோ ஜயதி' என்கிற மாயாமாளவ கௌளை ராகப் பாடலைப் பாடத் தொடங்குகிறார்.

எதிரே...

சீடகோடிகளான, அருமை சகோதரர்கள் சின்னசாமி தீட்சிதர், பாலசாமி தீட்சிதர் ஒருபுறம்...

மறுபுறம், தமிழ்ப்புலவர் திருக்கடையூர் பாரதி, வள்ளலார் கோயில் அம்மணி, நாட்டிய கலாமணியான திரிவாரூர் கமலம், ஆவுடையார் கோயில் வீணை வேங்கட ராமய்யர், தேவூர் சுப்பிரமணியஐயர், கூறைநாடு ராமசாமி, திருவழுந்தூர் பில்வவனம், திருவாரூர் நட்டுவனார் ஐயாசாமி முதலானோர்...

ஆனால் பிரதம சீடர்களான தஞ்சை (சொந்த ஊர் தஞ்சையல்ல) சகோதரர்களான பொன்னையாபிள்ளை, சின்னையாபிள்ளை, சிவானந்தம்பிள்ளை, வடிவேலு பிள்ளை ஆகிய நால்வரும் முக்கியமான விசேஷ நாள்களில் திருவாரூர் வந்து தங்கள் குருவைச் சந்தித்துச் சேவித்துச் செல்வார்கள். அன்றைக்கு ஆவணி அவிட்டமாதலால் அவர்களும் வந்து சிறப்பு விருந்தினர்களைப் போலத் தனிமையில் அமர்ந்திருந்தனர். ஒவ்வொருவரும் அந் நாளைய சமஸ்தானத்து மகாவித்துவான்கள் – நட்டுவனார் களாயிற்றே!

சங்கீதத்தின் அரிச்சுவடி ராகமல்லவா மாயாமாளவ கௌளை?

வாசற்படியில் நின்றிருந்த கவிராயரும் குறிஞ்சியும் தங்களை மறந்து ரசித்துப் பிரமித்துப் போகிறார்கள்.

ஓ... இது ஒரு கனமான சங்கீதம்...

பாடலை முடித்துக் கண் திறந்து கவனித்த தீட்சிதர் பதறிப் போனார். "கவிராயரே! இதுவரை நின்று கொண்டா இருந்தீர்கள்?"

விருபாட்ச கவிராயரும் சிரித்துக் கொண்டே, "நானா நின்றேன்? எனது ஆத்மா நின்றது?" என்று கூறியவண்ணம் அருகில் சென்றமர்ந்தார். குறிஞ்சி, கொஞ்சமும் தாமதியாமல், தீட்சிதர் திருவடிகளில் விழுந்து வணங்கினாள்.

வாழ்த்துக் கூறிய தீட்சிதர், "எழுந்திரு மகளே!" என்கிறார்.

மகளே...

மங்கல அழைப்பு...

"யார் கவிராயரே இவள்?"

யார்? ஏ, வள்ளுவப் பெருந்தகையே! நன்மை பயக்குமானால், பொய்மை வாய்மை தரும் என்று நீ சொல்லி இருக்கிறாய்! இதோ, நான் வாய்மை பொருட்டுப் பொய் சொல்லப் போகிறேன்.

"என் நண்பர் ஒருவருடைய பெண். வீட்டுக்கு வேலைக்காரி தேவைன்னு பெரிய தீட்சிதரம்மா சொல்லி இருந்தார்கள். ஊர் குத்தாலம், அனாதைப் பெண், அதனால் அழைத்துக் கொண்டு வந்தேன்!"

"ஓகோ!"

முத்துசாமி தீட்சிதர் தமது தாயார் சுப்புலட்சுமியம்மாளை நோக்குகிறார். சுகமான மௌனத்தின் சுமங்கலி அவர்கள்.

ஆனால், கன்னங்கரேலென்றிருந்த – சற்று வாய்த்துடுக்கு நிறைந்த முதல் மனைவியோ, "வேலைக்காரியாக வந்தவளை மகளேன்னு அழைக்கறதாவது? என் மகள் அன்னபூரணி காதுலே இது கேட்டிருக்கணும்?" என்று பொறிந்து தள்ளினாள்.

திடுக்கிட்டுப் போனவர் விருபாட்ச கவிராயர் மட்டுமல்ல; குறிஞ்சியும்தான்.



விஞ்சையர் உலகைவிட்டு வழிதவறி இங்கு வந்துவிட்டவளோ என்று குறிஞ்சியின் பேரழகு, பலர் கண்களைப் பளீரிட, அழகின் எதிர் அர்த்தம் கொண்ட முதல் மனைவி பொறாமையின்பால் பட்டுப் பொறிந்து தள்ளுகிறாள் என்பதனையுணர்ந்து, வயதில் மிக்கவும் சிறியவளான செக்கச் செவேலென்று அழகுத் தோற்றம் கொண்டவளான இளைய மனையாள் குறுக்கிட்டாள்:

"அக்கா! நீங்க அன்னபூரணியைப் பெத்தவங்க! நான் எந்தப் பூரணியையும் பெறாதவ! அவரு வாயாலே மகளேன்னுட்டாரு! அதை நான் ஏத்துக்கறேன்!"

பெரிய மனைவியின் கண்கள் பெரிதாக விரிந்து சிவப்பாய் கனன்றன.

தீட்சிதர் இப்போது குறுக்கிட்டார், அவர் பரமேஸ்வரி மீது பவித்திர பக்தி பூண்டவர்.

"எதுக்கு இரண்டுபேரும் அடிச்சிக்கணும்! அன்னை பராசக்திக்கு முன்னே அனைத்துப் பெண்களும் மகள்கள் தானே? இந்த வீட்டுல ஒரு வேலைக்காரியைக் கூட நீ உருப்படியா வச்சு குப்பை கொட்டலை! இவளையாவது வச்சுண்டு குப்பை கொட்டணுமேன்னுதான் இளையவ ஏத்துகிட்டா! இவளைப் பார்த்தா அந்த ஈஸ்வரி பாலாம்பிகை மாதிரியே நேக்குத் தோணுது!" என்றார் தீட்சிதர்.

பெரிய மனைவி மோவாய்க்கட்டையைத் தோளில் இடித்தவாறு உள்ளே சென்று விட்டாள்.

தீட்சிதர் கேட்டார்: "பெயர் என்னம்மா?"

"குறிஞ்சி!" என்றாள் குறிஞ்சி.

அற்புதமான ஒரு ராகத்தின் பெயர் கொண்ட, அப்சரஸ் மாதிரியான ஒரு பெண், ஆவணி அவிட்டமும் அதுவுமாக வேலைக்காரியாக வந்து நின்றது ஆச்சரியத்தையே விளைவித்தது.

பாலாம்பிகைதான் இப்படி ஏதேனும் சோதிக்க அவதாரம் பூண்டு வந்திருக்கிறாளா?

கவிராயர் மனம் மட்டுமல்லாது, குறிஞ்சியின் இதயமும் பலவாறு அலைமோதியது.

விருபாட்ச கவிராயர் கேட்டார்:

"என்ன தீட்சிதர் யோசிக்கிறீர்கள்? உங்களுக்குள் இவளால் சர்ச்சை வருமானால் அழைத்துக் கொண்டு போய்விடுகிறேன்!"

திருத்தமான ஒரு சிரிப்புடன், தீர்க்கமாக தீட்சிதர் சொன்னார்: "நான் யோசிப்பது அதுவல்ல கவிராயரே! அந்த பாலாம்பிகையே எனக்குப் பணிபுரிய வந்திருக்கிறாளோ என்று யோசிக்கிறேன்! நெருஞ்சி முள் மீது நடப்பதுபோல் பாட வேண்டிய ராகம் குறிஞ்சி ராகம். இந்த ராகத்தை எனக்கு மட்டுமே பணிவிடை செய்ய அமர்த்திக் கொள்கிறேன்."

தீட்சிதரின் மனம், குறிஞ்சி ராகத்து இசகுபிசகான ஆரோகண – அவரோகணத்தை மெல்ல இசைத்துப் பார்த்துக் கொள்கிறது.

"சநி சரிகமபத... தபமகரிசநிச...

ஆனால் கவிராயர் மனமோ தீண்டாமையையே அலசிப் பார்க்கிறது.

புருஷோத்தமரான தீட்சிதர் எங்கே? புலைச்சியின் ரத்தத்தில் உதித்தவளெங்கே?

ஓ... கேவலம் விலைமகளுக்குத் தீண்டாமை இல்லை; இந்தப் புலைமகளுக்கு மட்டும் தீண்டாமை என்ன வேண்டிக் கிடக்கிறது?

கவிராயர் கண்கள் திருவாரூர் கமலத்தைப் பரிசீலிக்கின்றன.

சே! இது மிருதங்கத்தின் ஜலதரங்கம்!

ஓ... தமிழே! நீ எந்த ஜாதி?

* ச்– இப்படிப் புள்ளிவைத்த 'ச' மேல்சட்சமம் – அதாவது கச்சேரியில் குரலை மேலே உயர்த்தி உச்சரிக்கிற – ச். எனவேதான் புள்ளி. இது ஒருவித குறியீடு. கீழே புள்ளி வைத்த 'நி', ஆதாரமாக இருக்கிற 'ச' சுரத்தின் கீழ்ச்சுரம் – கீழ்நிலை நிஷாதம். எனவே கீழே புள்ளி.

# இராகம் – 7



# கோகிலானந்தி

ஆ! அந்த மிருதங்கம் மறைந்து இன்றைக்கு ஏறத்தாழ ஆறு ஆண்டுகள்...

அவ்வப்போது அந்த மிருதங்கத்தின் இனிய நாதம் பிரமையாய் ஒலிக்கிறது. அதுதானே அவளை அடிக்கடித் தட்டி எழுப்பிக் கொண்டிருப்பது? 'திரும்பிப் பார்! திரும்பிப் பார்' என்று எச்சரிப்பது?

கோகிலானந்தி என்றாலே குயில்களின் ஆனந்தம் என்று பொருள்? கோகிலம் – குயில்.

இன்னமும் அந்த இணைக்குயில்கள் – குறிஞ்சியும் ஞான சுந்தரமும் போல ஒன்று மாறி ஒன்றாகவும் இணைந்தும் பாடிக் கொண்டே இருக்கின்றன. குறிஞ்சியின் இந்தப் புதிய கற்பனையைக் கற்றுக் கொடுத்தவையே இந்தக் குயில்கள் தாமே?

குரல் பேதம், சுருதி பேதம்... ஓ... கோகிலானந்தி ராகத்தை ரசிப்பது போல...

அமைதியின் இன்பத்தை இந்த இணைக் குயில்கள் ஒரு கலா ரசனையுடன் அனுபவிக்கின்றன போலும்!

வானில் வட்ட நிலா அவளைக் கண்டு சிரிக்கிறதோ அல்லது நிலா ராகம் பாடுகிறதோ? அப்படி ஒரு ராகமில்லை. இருந்தால் பாடுமோ?

குறிஞ்சி தன்னுள் சிரித்துக் கொள்கிறாள்! பிறப்பால் புலைச்சி; வாழ்ந்து வருவதோ வேதாக்கினி; எண்ணமோ இசை வேள்வி...

'அடிப்பெண்ணே! எங்களுக்குக் கொஞ்சம் ஓய்வு தரக் கூடாதா?' என்று அவளது இமைகள் இரைஞ்சுகின்றன.

நேரே அறையினுள் சென்று மஞ்சத்தில் சாய்கிறாள்.

நீல நயனங்கள் நித்திரைக்கு வேண்டினாலும், கோல மார்பகங்கள் மம்மர் நோய் கண்டு விம்முகின்றன.

ஞாலத்து முதல் வெளிச்சமாம் நாகரிக வெளிச்சமே மன்மதன் கண்களிலிருந்துதானே உதயம் கண்டது? துறந்தவர் மறுப்பர்; அவர்களும் பிறந்த பின்னர்தான் துறந்தனர்?

மஞ்சத்திலுறங்கும் கானசுந்தரமாம் ஞானசுந்தரத்தின் மோனமான ஆணழகை ரசிக்கிறாள்.

அன்னநடை பயிலும் மென்னிடைக்குக் கீழிருக்கும் மேகலாபரணத்து மாணிக்கம் – சிருஷ்டியின் சிறந்த கற்பனை – அறிவின் உதயமின்னல் – அமைதியின் மெல்லிய கொடியாய் மின்னத்தான் செய்கிறது...

மம்மர் முகில்களின் மோதல்களால் ஏற்படும் அப்சரஸ் மின்னல்! அங்கே இடியோசை இயல்பாகக் கிடையாது.

தைத்திங்கள் வரை நாள் குறிப்பிட்டது அவளாலும் தாங்கிக் கொள்ள முடியாத ஒப்பந்தம்தான்.

மீண்டும் ஞானசுந்தரத்து மோனப் பேரழகை நோக்கு கிறாள்...

ஆ! மீசை மட்டுமிருந்தால்? சீ! இவருக்கு அசிங்கமாக இருக்கும்! அதற்குரிய முகமே வேறு! இது மென்மையின் ஆண்மைக் கம்பீரம்! மௌனமான அழகு ராகம்! நாம் இவரை பிராமணர் என்றும், தீட்சிதர் பெருமானின் நிழலாய் நின்று இசை போதித்த பிம்பகுரு என்றும் சொல்லி வருவது ஒரு போலியான கதை! சங்கர மடத்துக்குச் செல்லுமுன் இந்தக் கதை எங்கு சென்று ஒளிந்து கொண்டிருந்தது?



குயில்கள் இன்னமும் கோகிலானந்தி ராகம் பாடிக் கொண்டிருக்கின்றன.

அவள் அதன் அவரோகணத்தை மட்டுமே இசைத்து அல்லது அசைத்துப் பார்க்கிறாள்...

"ச்நிதபமகச..."

"குறிஞ்சி! எதுவும் ஆரோகணமாக இருக்கவேண்டும்."

என்ன! ஞானசுந்தரம் இன்னும் தூங்கவில்லையா?

"இன்னுமா தூங்கலை?"

"கல்யாணமான பிறகு பெண்கள் பின்னே தூங்க வேண்டும்; காதலிக்கிறபோது ஆண்கள் பின்னே தூங்கு கிறார்கள்!"

அவள் மென்மையான கலகலப்புடன் சுநாதமாய்ச் சிரிக்கிறாள்.

"அவரோகணத்தை ஏன் சொல்ல வேண்டும், குறிஞ்சி?"

"பெண்கள் எப்போதும் அவரோகணமாய் இருந்தால் தான் உலக நாகரிகம் உருப்படும்!"

"சபாஷ்!"

ஞானசுந்தரம் எழுந்து அமர்ந்து கொள்கிறான். "நீ பாடிய அவரோகணத்து மேளகர்த்தா?"

"ஷண்முகப்பிரியா."

கோகிலங்கள் இப்போது கூடிக் குலவுகின்றனவோ என்னவோ குரல்கள் படபடத்துக் கேட்கின்றன.

"எங்கோ கோகிலங்கள் ஆனந்திக்கின்றன குறிஞ்சி...!"

"அதனால்தான் நான் அவரோகணம் பாடினேன்...!"

"குறிஞ்சி!" – அதிர்ந்து போன ஞானசுந்தரம் அதன் ஆரோகணமாகிறான்; தன்னை மறந்து சுரம் சொல்லு கிறான்; "சகமதநிச்!"

அவன் அவளது பக்கத்தே வந்தமருகிறான்.

"ஞானீ!" – அரண்டு போகிறாள் அழகின் நிலாமகள். ஆ! அவள் நிலவுப் பேரழகிதானே? தாய்க்குப் பதினைந்து நாள் தேய்வு; இந்தச் சேய்க்கு ஐந்து நாள் தேய்வு...

"குறிஞ்சி! உன்னை நான் அறியாதவனா? நாம் கனவில் கற்பழிந்து வருகிறோம். இது பாவமல்லவா? நிர்பந்தங்களும் ஒப்பந்தங்களும் நம்மை நிம்மதியிலிருந்து விலக்கி, முடிவில்..."

"ஞானீ!"

"ஒரு சுரம் பாஷாங்கமாவது தாம்பத்திய சம்சாரி; பைரவி போல! இரு சுர பாஷாங்கமாவது தேகாத்திய விபசாரி, பெஹாக் ராகம் போல! இரண்டு மத்திமம், இரண்டு நிஷாதம் வரவில்லையா? இப்போதும் நான் உன்னை மாத நிபந்தனையை மீறவில்லை. என்னை நிம்மதி இழக்கச் செய்துவிடாதே!"

குறிஞ்சியின் நாசியில் நீண்ட பெருமூச்சு.

"இப்போது என்னை என்ன செய்யச் சொல்லுகிறீர்கள், ஞானீ?"

"நான் பாஷாங்கத்தைத் தொடவில்லை. அதன் பாஷைகளுடன் பேச வை!"

வியந்து போகிறாள் வேல்விழியாள்.

"கொஞ்சம் சங்கீத பாஷையில்தான் இதனைச் சொல்லுங்களேன்!"

"இது புரியவில்லையா?"

"புரிகிறது; வசப்படுத்தவில்லை."

"பைரவி ராகத்தின் அவரோகணச் சதுர்ஸ்ருதி பாஷாங்க தைவதத்தைத் தொடவில்லை. அதாவது உனது..."

"போதும்! கன்னிமையான நடபைரவியும் வேண்டாம். தாய்மையான தைவத பாஷாங்கமும்; வேண்டாம். *சகம தநிச் சநிதமகச... இல்லையா?"

* சல்லாப ராகம் – வகுளாபரணத்தில் பிறந்தது.



அவன் வர்ஜமாய்ப் (குறைபட்ட சுரமாய்) புன்னகை புரிகிறான்.

"இந்த ராகத்துக்குப் பெயர், ஞானி?"

"எனக்குத் தெரியாது; வேண்டுமானால் வள்ளுவப் பெருமான் சொன்ன 'ஊடுதல்' என்ற பெயரை நம் வரை சூட்டி மகிழ்வோம்! அதற்கின்பம் கூடி முயங்கப் பெறுவது பைரவியாக இருக்கட்டும். இது... தையில் நமது மெய்யில் அரங்கேறட்டுமே!"

ஞானசுந்தரத்தின் தமிழ்ப் புலமையையும் இசைப் புலமையையும் கண்டு மயக்கமுற்றுப் போன குறிஞ்சி, அப்படியே அவனை அள்ளி அணைத்து இதழ்களோடு இதழ்கள் பொருத்தி முத்த ராகம் பாடத் தொடங்கிவிட்டாள். இதன் ஆரோகணை அவரோகணம் என்னவோ? மாபெரும் இசை ஞானியான மன்மதனைத்தான் கேட்க வேண்டும்!

இருவர்க்குமே முதல் உணர்வு! முக்கனியின் ரசஉணர்வு! முத்தமிழின் சத்தினிமையுணர்வு! ஏன் சலனமற்ற ஆண்–பெண்ணின் சத்திய உணர்வு!

குயில்கள் இன்னமும் கோகிலானந்தி பாடுகின்றன.

ஊடல்ராக மயக்கத்திலிருந்து இன்னமும் அவர்கள் விடுபடவில்லை.

தித்திக்கும் சொல்பாடும் தீஞ்சுவை அதரங்களில் தேனாறு பாய்கிறது.

மார்பகத்துப் பட்டுத் துணிக்கதவு, படீரெனத் திறந்து பட்டும், அங்கே தொட்டுப் பார்க்கும் துணிவு ஞானசுந்தரத்துக்கு வரவேண்டுமே!

'இச்'சென்னும் ஓசையோடு இயன்றவரை சுருதி பிறழாமல் நிற்கிறார்கள்.

ஆனால், அந்த ஓசை மட்டும் விட்டு விட்டும் வேறு பட்டும் இப்போது ராகமூர்ச்சனைகளாய் மாறுபடுகிறது...

"போதும் ஞானீ! போதும் ஞானீ! வரமளித்தவள் நான்! வரம்பு மீறாமல் பார்த்துக் கொள்ள வேண்டியவர் நீங்கள்! போதும், போதும்!"

ஊடல் ராகத்திலிருந்து விடுபட்ட ஞானிக்குக் கூடல் அவசியப்பட்டது. ஏன்? அவளுக்குமே அவசியப்பட்டது. ஆயினும், அத்து மீறுவது அவர்களுக்கு அப்போதைக்கு அதருமமாகப்பட்டது.

இருவர் முகங்களிலும் வியர்வைத் துளிகள். தனது முந்தானையால் முதலில் ஞானசுந்தரத்து முகத்தைத் துடைத்துப் பின், தனது முகத்தைத் துடைத்துக் கொள்கிறாள் குறிஞ்சி.

இருவருமே புன்முறுவலில் புவனகாந்தாரி பாடி, தனித் தனியே இருந்த மஞ்சம் நாடிப் படுத்து நித்திரைக்குரிய நீலாம்பரியை ஆராதிக்கத் தொடங்கினர்.

**பொ**ன்னாய் விடிந்த பொழுதுக்குப் பிறகு...

புதுக்கோட்டைத் தொண்டைமான், அரண்மனையில் குறிஞ்சிக்குப் பொன் முழுக்காட்டுகிறார்.

புதுக்கோட்டை பூரிப்புக் கண்டது.

அன்றைய பகல் விருந்து முடிவுற்றதும் தக்க துணைகளுடன் குதிரைகள் பூட்டிய சாரட்டு வண்டியிலும் பெட்டி வண்டிகளிலும் திருமழபாடி நோக்கிப் பயணமாயினர் குறிஞ்சிக் குழுவினர்.

வழிநெடுக தங்கவேண்டிய இடங்களில் தங்கி, இளைப் பாறிப் பயணத்தைத் தொடர்ந்து கொண்டிருந்தனர்.

நகரங்கள் முழுவதும் பிரமுகர்கள். குறிஞ்சி விஜயம் அவர்களுக்குக் குங்கும ரூபியான அந்தப் பரமேஸ்வரி விஜயம் போலாயிற்றே!

திருச்சிப் பாளையக்காரர் எவ்வளவு கெஞ்சிக் கூத்தாடியும் சமஸ்தானங்களில் பாடுகிற வழக்கமில்லை என்று மறுத்துவிட்டாள்.

"புதுக்கோட்டை சமஸ்தானத்தில் மட்டும் பாடலாமா?"

"அது வேறு கதை!"

"ராஜகாந்தி கதையா?"



"இருக்கலாம்!"

இதற்குமேல் அவள் பதில் சொல்லாமல் திருமழபாடி நோக்கிப் புறப்பட்டு விட்டாள்.

குறுக்கு வழியாக அவள் மழபாடிக்குச் சென்றிருக்கலாம். ஆனால் அவளது கண்கண்ட தெய்வம் சமயபுரத்து மாரியம்மனைத் தரிசிக்காமல் போகலாமா? அதுவும் இவ்வளவு தூரம் வந்து?

குறிஞ்சியின் வருகை சமயபுரத்துக்கே பெருமை தருவதாக இருந்தது. ஆனால் குறிஞ்சியோ முத்துமாரியம்மனிடம் பெருமை தேடிக் கொள்ளவல்லவோ வந்திருக்கிறாள்.

சந்நிதிக்குச் சென்று அண்டசராசரமாய் வீற்றிருக்கும் சமயபுர மாரியம்மனைத் தரிசிக்கிறாள். மனத்தில் செம்மை இருந்தால்தான் அந்தக் குங்கும ரூபியான கோமளவல்லியின் முகத்தில் புன்முறுவல் நிறைந்த பேரொளி தெரியும்! அல்லாதவர்களுக்கு அவள் ஓர் அகோர ராட்சஸமாய்ப் பயமுறுத்தி அலறடித்து ஓட வைத்து விடுவாளே!

ஆளுயரத்துக்கு அமர்ந்திருக்கும் அந்தச் சக்திக்கெல்லாம் மகாசக்தியான சமயபுரம் மாரியம்மனைக் கண்ணீர் மல்க வேண்டிக் கொள்கிறாள்.

சமயத்தில் (கூப்பிட்ட போதெல்லாம் அல்ல) வரம் தரும் சமயபுரத்தவளாயிற்றே! அனுதினமும் அவளை வேண்டுபவரின் ஆபத்து காலத்தில் 'வந்தேன்' என்று குரல் கொடுத்து வருகை தரும் சமயபுரத்தவளாயிற்றே! பிரகாசப் பேரொளியாயிற்றே!

ஓம்காரியான அந்த மகாசக்தியை...

*"ஓம்காரி ராகத்திலேயே சந்நிதியின் வாசற்படியில் நின்று சந்நதம் கண்டவளைப் போலப் பாடி மகிழ்விக்கிறாள். பின்னர் தாள் பணிந்து எழுந்து கண்ணீரைத் துடைத்துக் கொண்டு விடைபெறுகிறாள் குறிஞ்சி.

ஆ! அங்கு மக்கள்தாம் கூடினரோ? இல்லை அந்த மகா சக்திதான் கூட்டியதோ?

* கரகரப்பிரியாவில் பிறந்த ராகம். ஆ: சரிகமபதச்- அ: ச்தபமகரிச.

அவள் அனைவரையும் வணங்கி விடைபெற்றுக் கொண்டு திருமழபாடி நோக்கிப் பயணமாகிறாள்.

கொள்ளிடத்தில் நீர் கரைபுரண்டு ஓடிக்கொண்டிருக்கிறது.

கரையையொட்டியது போலிருந்தது அந்தப் பழம் சிறப்பு வாய்ந்த *மழுவாடிப் பெருமான் கோயில்.

குறிஞ்சி வருகை தந்துவிட்டாள் என்பதனையறிந்து சுற்றுச் சூழலிலிருந்து அனைத்து மக்களும் திரண்டு வந்து குவிந்து விட்டனர். எங்கு நோக்கினும் கட்டுச் சோறு மூட்டைகள்தாம்!

திருமழபாடிப் பிரபுவான ராஜாராமன் என்பவர் மாளிகையில்தான் குறிஞ்சிக்குழு தங்கியிருந்தது. அக்காலத்தில் இசைச் சேவை என்பது இறை சேவை மாதிரி.

கோயிலின் வெளிப்புறத்தே பெரிய பந்தல். கச்சேரி அரங்கத்துக்கான எதிரொலிப்பாறைப் பலகை முதல் விளக்கலங்காரம் வரை அனைத்தையும் கவனித்துக்கொள்ள முனைந்தான் ஆங்கில விஞ்ஞானியான ஜான்.

சின்னஞ்சிறிய ஊரானாலும் பெண்ணம் பெரிய உள்ளங்கள் வாழ்கிற ஊர் என்பதைச் சுற்றிப் பார்த்து வருகிற போதே குறிஞ்சி புரிந்து கொண்டாள்.

'எங்கே ராஜகாந்தி? எங்கே ராஜகாந்தி?' குறிஞ்சியின் கண்கள் அலைமோதுகின்றன.

அன்றைய ஓய்வுக்குப் பிறகு, இரவு கச்சேரி ஆரம்பமானது.

கொள்ளிடக் கரையோரத்தில் நீர் வெள்ளம் புரண்டு வந்துவிட்டதா என்பதுபோல மக்கள் வெள்ளம்.

அரங்கம் முழுவதுமாக வாத்தியங்கள் சுருதி சுத்தமாகக் காத்திருக்கின்றன.

* இப்போது வைத்தியநாதப் பெருமான் என்கிறார்கள். மழவர்கள் ஆண்ட மழவர்பாடி (புறநானூறு) மழபாடியாயிற்று. மழுவாடி என்பது கோயில் கொண்ட ஈசன் நாமம். 'மழபாடி மேய மழுவாளனார்' என்பது அப்பர் வாக்கு.



குறிஞ்சியின் கண்கள் அலைமோதுகின்றன. ராஜகாந்தி வந்திருப்பானா? நிச்சயம் வந்திருப்பான்.

ஒரு சின்ன முன்னுரையாக குறிஞ்சி பேசுகிறாள்; ராஜகாந்திக்காகத்தான்...

"மழபாடி மக்களே! இந்தப் பழம்பெரும் கோயில் அப்பர், சுந்தரர் ஆகிய நாயன்மார்களால் பாடல் பெற்ற புகழுக்குரியது. நான் சுந்தரமூர்த்தி நாயனார் இங்கு பாடிய 'பொன்னார் மேனியனே' என்ற பாடலை ராஜகாந்தி ராகத்தில் முதல் பாடலாகப் பாடுகிறேன்!"

எங்கும் கரவொலிகள், எங்கிருந்தோ ஒரு குரல் கேட்கிறது: "சபாஷ் மகளே, சபாஷ்."

ஓ... ராஜகாந்தி...

தம்பூர்நாதம்...

*ராஜகாந்தி ராக ஆலாபனை...

பாட்டு ஆரம்பமாகிறது...

சுந்தரமூர்த்தி நாயனார் பாடிய பண் வேறு. அவர் இப்போது எதிரே இருந்தால் இந்த ராஜகாந்தி ரசனையில் சொக்கிப் போயிருப்பார்.

'மன்னே மாமணியே! மழபாடியுள் மாணிக்கமே!' என்ற வரியை குறிஞ்சி, என்ன விதமாகவெல்லாம் சங்கதி போட்டுக் குழைந்தாள்?

கூட்டத்தோடு புனைவடிவில் நின்றிருந்த ராஜகாந்தியின் கண்களில் கொள்ளிடமே கரைபுரண்டது என்றுதான் சொல்ல வேண்டும்.

"மகளே! மகளே" – மனத்தின் முனகல்...

குறிஞ்சி மேலும் தனக்கே உரிய பாணியில் கச்சேரியைத் தொடங்கினாள்.

அவள் என்ன, வழக்கமான மார்க்கத்தைப் பிடித்துக் கொண்டு வழக்காடி வழக்காடி முடிவில் மக்கள் மனத்தில்

* சுவர்ணாங்கியில் பிறந்தது.
ஆ: சரிகபதநிச் – அ:ச்நிதமகரிச.

அழுக்காடிப் போன அர்த்தமற்ற பாணியையா பின்பற்று கிறாள்? அவளது கச்சேரிக்கே குறிஞ்சிப் பாணி என்கிற பெயராயிற்றே!

ஞானசுந்தரமும் குறிஞ்சியும் ஆலாபனையானாலும், பாடலானாலும், சுரவிந்நியாசமானாலும் பகிர்ந்தும், சமயத்தில் போட்டியிட்டும், இடையே வாத்தியங்களுக்கு இடம் கொடுத்தும்...

சில சமயங்களில் ஆலாபனை செய்யாமல், வெறும் லயவாத்தியங்களை முழக்கச் செய்து பல்லவி தொடங்கு வாள்...

சில சமயம், சுருதி வாத்தியங்கள் பல்லவியைப் பாடும்; குறிஞ்சி அனுபல்லவியில் ஆரம்பிப்பாள்...

அவள் கொள்ளிடத்தைப் பாடினாள்; அங்கு வாழ் மக்களைப் பாடினாள். அவர்கள் விவசாயம் எவ்வளவு முக்கியம் என்பதைப் பாடினாள்; மக்கள் படும் துன்பத்தைப் பாடினாள்; பொதுவாக எல்லாருக்கும் புரியும் தமிழில் பாடினாள்...

அவள் 'குற்றாலக் குறிஞ்சி' ராகம் பாடவில்லை. காரணம், அதற்கான தனி சன்மானம் என்பது ராஜாராம் பிரபுக்கு ஒத்துவரவில்லை.

களைக்கட்டிப் பாடிக்கொண்டு வருகிறபோது...

கூட்டத்தில் பெருத்த சலசலப்பு கண்டது.

ஏனிந்த சலசலப்பு?

ராஜகாந்தி மீண்டும் அகப்பட்டுக் கொண்டானோ?

அதுவரை ஆனந்தமாகப் பாடிவந்த குறிஞ்சி, இப்போது அரண்டு மருண்டு போனாள்.

## இராகம் – 8



# தன்யாசி

ஏ! ராகங்களே! என் ராஜகாந்தி அகப்பட்டுக் கொண் டாரா? 'மகளே' என்று வாயினிக்க அழைத்த மானுஷ்ய ராகம் அகப்பட்டுக் கொண்டதா?

அரண்டு போன குறிஞ்சி, ஏற்பட்ட பரபரப்புக்கான காரணம் வேறு என்பதனையறிந்து சாமாராகம் போல அமைதி கண்டாள்.

என்ன! சரபோஜி மன்னரின் அவையை அலங்கரிப்பவர் களுள் ஒருவரான மகாவித்துவான் ஆனைய்யா வருகிறாரா? அனைத்துச் செவிகளையும் தேனாய் இனிக்கச் செய்து வந்தவள் இப்போது தனது செவியில் தேன் வந்து பாய் வதை உணருகிறாள்.

வயதான அந்த இசை ஞானப்பழத்தை வழிவிட்டுக் கரம் கூப்பி வரவேற்கிறார்கள்.

அவர் அரங்கத்து முன்னே வந்து அமர்ந்த மறுகணம், "கான கலா ஞானப்பழமே!" என்று அலறியவளாய் அரங்கத்தை விட்டெழுந்த குறிஞ்சி, இறங்கி வந்து பாதம் பணிந்து சேவிக்கிறாள். உடன் ஞானசுந்தரமும் நெட்டங்க மாக விழுந்து பணிகிறான்.

"எழுந்திரு மகளே" என்று கூறிய ஆனைய்யா, அவளது தோள்களைப் பற்ற..

துடித்துப் போய், "ஐயா" என்றலறி விட்டாள் குறிஞ்சி.

இவள் ஏன் இவ்விதம் அலறுகிறாள்?

புரிகிறது என்பது போன்ற ஆனைய்யாப் புன்னகை.

தமிழில் பாடுவது அவமானம் என்று கருதிய இசைப் பொற்காலத்தில், தமிழில் பாடிய சுந்தரத் தமிழர் ஓரிருவருள், ஆனைய்யா சகோதரர்களும் அடங்குவர்.

இவர்களுக்கு முன்னே வாழ்ந்த முத்துத்தாண்டவரும் அருணாசலக் கவிராயரும் தமிழ்த்தாய் செவிகளின் முத்துத் தோடுகள் என்றால், இவர்கள் காலத்தே வாழ்ந்து வரும் கோபாலகிருஷ்ண பாரதியார் வைரக்குழைகள், ஆனைய்யா சகோதரர்களோ, அந்த இனிய செவிகளின் கொப்புகள் என்று கூறலாம்.

"தீண்டாமை கருதி, நான் தொட்டதும் திடுக்கிட்டு விட்டாயா மகளே! இந்தக் கொடுமை படித்தறிந்த பாமர மனிதர்களோடு தொலையட்டும். கலைஞர்களுக்கு வேண்டாம்! ஆமாம்; நீ ஏன் உன்னைப் புலைச்சி என்று கருத வேண்டும்? மிருதங்க சக்கரவர்த்தி மீனாட்சிசுந்தரம் பிள்ளையின் மகள் என்று ஏன் எண்ணக் கூடாது?"

"அப்படி எண்ணுவதைத்தான் நான் அவமானம் என்று எண்ணுகிறேன். நான் ஒரு புலைச்சி என்று சொல்லிக் கொள்வதில் பெருமைப்படுகிறேன். நந்தனுக்குக் கிடைத்த பெருமை இந்தக் குறிஞ்சிக்கும் குவிய வேண்டும். எனது சங்கீதம் பிள்ளைச் சங்கீதமல்ல; பிற்பட்டோர் சங்கீதம்; தமிழ்ச் சங்கீதம்!"

"தமிழிசை பிற்பட்டோர் சங்கீதமா?"

"இன்றைய நிலையில் *இது இப்படித்தானிருக்கிறது!" நான் என்றாவது கோபாலகிருஷ்ண பாரதியாரைச் சந்திக்கிற சந்தர்ப்பம் கிடைக்குமானால் பிறந்ததன் பயனடைவேன்!"

"நான் மட்டும் தமிழில் பாடவில்லையா?"

* இன்றைக்கு மட்டும் என்ன வாழுகிறதாம்?



"நந்தன் சரித்திரத்தையா நீங்கள் பாடினீர்கள்?"

"என் மீது உனக்கு ஏதோ கசப்பு இருக்கிறது."

"நிறையவே இருக்கிறது. சரபோஜி அரண்மனையில் 'ஒரு புலைச்சி சங்கீதம் பாடுகிறாளாம்! இதனைச் சந்தை மாடுகள் ரசிக்கின்றனவாம்' என்று சமஸ்தான திலகமான மேரு சுவாமிகள் கேலி செய்ய, சேர்ந்து சிரித்தவர்களுள் நீங்களும் ஒருவராமே?"

"உண்மை; ஒப்புக் கொள்கிறேன்!"

"ஒரு புலைமகள் தமிழில் பாடுகிற கலைமகள் என்று ஏன் மறுத்திருக்கக் கூடாது?"

"உன் பாட்டை நான் கேட்டறியேன்! மேலும் நீ வர்ணம், ஜாவளி, தில்லானா போன்ற சங்கீத முறைகளை மேடையில் பாடுவதைக் கேலி செய்கிறாயாமே?"

"கேலி செய்யவில்லை; சங்கீதத்தைப் போலியாகப் பிறர் கேட்டு ரசிக்க முடியாத வேலியாகப் பாடி வருவதைச் சாடினேன். இப்படியே சங்கீதம் வளர்ந்தால் இன்னும் இருநூறு ஆண்டுகளில் இந்த தெய்வீகக்கலை, *காலியாகி விடும் என்பது எனது கணிப்பு! வர்ணம், ஜாவளி, தில்லானா போன்றவை யாவும் பயிற்சி இலக்கணங்கள், கச்சேரியைக் கவரக்கூடியனவல்ல. ஆனால், நாட்டியக் கலையின் நயங்கள்; நான் மறுக்கவில்லை."

உண்மைதானே என்பது போல நோக்குகிறார் ஆனைய்யா.

"ஐயா! நான், உங்கள் மகாவித்துவான்கள் விமரிசனப்படி நேற்று முளைத்த காளான்! உங்கள் மகாவித்துவான் பல்லவி கோபாலய்யா சொன்னதுபோல், 'சோட்டி பச்சா! இந்தச் 'சோட்டி பச்சா' ஒரு சந்தேகம் கேட்கலாமா?"

"கேள் குறிஞ்சி!"

"அடதாள வர்ணம் எதற்காக இரண்டு லகு தள்ளி— அதாவது எட்டு அட்சரம் தள்ளி ஆரம்பமாகிறது? எல்லா அடதாள வர்ணங்களுமே இப்படித்தான்; ஏன்?"

* ஒன்றுமில்லாமல் ஆகி, இன்றைக்குத் திரை இசையால் தென்னிசை (கருநாடகச் சங்கீதம்) அருகி வருகிறது.

ஆனைய்யா அசையாமல் அரண்டு போனார். ஏன்? சமத்திலோ, அரை இடம் தள்ளியோ ஆரம்பிக்கலாமே! எதற்காக எட்டு அட்சரம் தள்ளி ஆரம்பிக்க வேண்டும்?

"எனக்கே புரியவில்லை குறிஞ்சி!"

"கல்யாணி ராகத்தில் வனஜாட்சி வர்ணம் உண்டாக்கிய–என்னை 'சோட்டி பச்சா' என்று கூறிய–பல்லவி கோபாலய்யாவையே கேட்டு வையுங்கள். ஒரு நாள் சந்திப்பேன். பதில் சொல்லட்டும். என்னடா, இவ்வளவு செருக்காகப் பேசுகிறாளே என்று எண்ண வேண்டாம். வித்துவான்கள் எவரும் என்னை மதிப்பதில்லை. வேதனை!"

"நானே மதித்து வந்திருக்கிறேனே!"

"மக்கள் மதிக்கிறார்கள்; ஏன் மதிக்கிறார்கள் என்பதனையறிய வந்திருக்கிறீர்கள்; அவ்வளவே!"

"நீ சாஸ்திரிய சங்கீதத்தை அவமதிக்கிறாய்! அது எனக்கும் வேதனைதான்!"

"சத்தியமாகக் கிடையாது. எனது குருநாதர் ஸ்ரீமுத்து சாமி தீட்சிதர் சங்கீத சாஸ்திரத்து இமயமலை! நான் அவமதிப்பேனா? ஆனால், அவரையும் எதிர்ப்பேன்! அது என் சுதர்மம்! ஐயா, இலக்கணம் படிப்பதற்கு! அதனையே மேடையில் பேசினால் யார் ரசிப்பார்? நீங்கள் சொன்ன வர்ணம், ஜாவளி போன்றவை இலக்கணம். நன்னூலைப் படித்துவிட்டு நன்னூலையே எழுதினால் என்ன பயன்? காப்பியம் எழுத வேண்டும்! மக்களை வயப்படுத்தாத எதுவுமே நீடிப்பதில்லை. மக்களோடு இரண்டறக் கலவாத எதுவுமே காலத்தை வெல்வதில்லை! குறிப்பிட்ட சில வட்டத்துக்குள் மட்டுமே பிறமொழிப் பாடல்கள் குபேர சம்பத்தாக இருக்கலாம்! ஆனால், மக்களுக்குப் புரிகிற மொழியில் என்றைக்குப் பாடுகிற நிலை வருகிறதோ அன்றுதான் சங்கீதம் பரிமளிக்கும். இதிலும் நான் கொஞ்சம் வித்தியாசப்படுகிறேன். கடவுளைப் பாடுவதை நான் வெறுக்கவில்லை. அது துதிப்பாடலாக இருக்கட்டும். அதற்காக கச்சேரி முழுவதுமே இதனைப் பாடினால் இருக்கிற பக்தியைக்கூட நாம் இழந்துவிடச் செய்கிற பாவகாரியத்தைச் செய்கிறோம்! நான் மனிதர்களைப் பாடுகிறேன்; மனித வாழ்வைப் பாடுகிறேன். நாட்டு முன்னேற்றத்தைப் பாடுகிறேன். பாடுவதிலும் ஒரு புதுமுறையைக் கையாள்கிறேன். இளங்கோவடிகளுக்கும் கம்பனுக்கும் உள்ள வித்தியாசம் என்ன என்று பகுத்தறிந்தால் கானல் வரிக்கும் சுந்தர காண்டத்துக்குமுள்ள வித்தியாசம் புரியும்! இதனையே ஏன் இசைமுறையில் வித்தியாசப்படுத்தக் கூடாது? காளிதாசனுக்கும் பவபூதிக்கும் உள்ள வேறுபாடு அறிந்தால் இசையின் கூறுபாடுகளிலும் ஒரு புதிய கோலம் வரைந்து பார்க்கலாம்! ஒரே மாதிரியான கச்சேரி பாணியென்பது இன்றைக்கு இனிப்பாக இருக்கலாம். நாளை கசந்துவிடும்! என் குருநாதர் ஸ்ரீ முத்துசாமி தீட்சிதர் கூட நான் மரபை மீறுவதாகக் கோபப்பட்டதாகக் கேள்வி! நான் கவலைப்படவில்லை. நான் மக்கள் பாடகி! என் குருநாதர் தொல்காப்பியர்; நான் கம்பன். விளக்கம் போதும் என்று நினைக்கிறேன்!"



ஆனைய்யாவின் ஒரு புருவம் ஆச்சரியத்தாலும், மறு புருவம் அதிர்ச்சியாலும் நெளிகின்றன.

ஓ.. இந்த இளம் பருவத்தில் இந்தப் பெண்ணுக்கு இத்துணை பக்குவ முதிர்ச்சியா?

எல்லோரும் சூரியனுக்காகக் கோலம் போட்டால், இந்தக் குறிஞ்சி, சூரியனைப் பிடித்தல்லவா சூரியகாந்திராகக் கோலம் போடுகிறாள்!

"தவறாகப் பேசி இருந்தால் என்னை மன்னித்து விடுங்கள் ஐயா!"

ஆனைய்யா பதில் ஏதும் சொல்லாமல், அவர் செய்த செயல்தான் பலரைத் தூக்கிவாரிப் போடச் செய்து விட்டது. என்ன செய்தார்?

கையெடுத்துக் கும்பிடுகிறார்.

"ஐயா!"

அக்கினிக் குஞ்சு அலறிப் போனது.

ஆனைய்யா தோலுரித்த உண்மையைத் தொடுக்கிறார். "குறிஞ்சி! நான் உன்னைக் கும்பிடவில்லை; மூன்று வயதில்

ஞானப்பாலுண்டு தோடுடைய செவியனைப் பாடி னானே தமிழ் ஞானசம்பந்தன், அவனை உன்னுருவில் பார்த்துக் கும்பிட்டேன்! நான் உன் பாட்டைக் கேட்டு பரமானந்திக்கவே வந்தேனேயல்லாது, சரபோஜி மன்னர் அனுப்பிய தூதுவனாக, தயவு செய்து எண்ணிவிடாதே! அப்படி வந்திருந்தால் எனது 'ஐயா சகோதரர்கள்' சகிதமாக வந்திருப்பேன். பக்கத்திலிருக்கும் மகாராஜபுரத்தில் உறவினர் வீட்டு விசேஷத்துக்கு வந்தவன். நீ வருவதாகக் கேள்விப் பட்டேன். இந்தத் தமிழிப்பாவையைத் தரிசிக்கலாமே என்று வந்தேன்!"

"ஐயா! தரிசனம் என்பது பெரிய வார்த்தை!"

"நீயோ பெரியவளாக என் நெஞ்சில் உயர்ந்து விட் டாயே! நல்லது குறிஞ்சி! ஜனங்கள் உனது பாட்டைக் கேட்கக் காத்திருக்கிறார்கள்; இந்தக் கிழவனோடு மேலும் பேசினால் பொறுமை இழந்து விடுவார்கள். நான் உனது வயதையும் பருவத்தையும் வைத்துத் தவறாக சரபோஜி அரண்மனையில் விமரிசித்து இருந்தால் அதற்காக நாணப் பாடுகிறேன். எந்தரோ மகானுபாவுலு! போய் பாடு! என் மனம் குளிரத் தமிழில் பாடு!"

தமிழில் பாடு...

உங்களுக்காகத் தெலுங்கிலும் பாடுகிறேன் என்று கூறத் தான் வாய் திறந்தாள். ஆனால் தமிழமர்ந்த நாவு தயங்கி விட்டது.

மீண்டும் ஐயாவின் கால்களைத் தொட்டு கண்களில் ஒற்றிக் கொண்டே குறிஞ்சியும் ஞானசுந்தரமும் அரங்கில் அமர்ந்தனர்.

எள் விழுந்தால் ஓசை கேட்கிற அமைதி.

தம்பூரின் சுருதி, அமைதியை ஆராதிக்கிறது.

ஞானசுந்தரத்தின் காதுகளில் குறிஞ்சி ஏதோ கிசுகிசுக் கிறாள். அவனது இதழ்களில் தன்யாசி ராகப் புன்முறுவல்.

பநிச்தா... மபகாரிசா... சகமபா... நிச்கா... ரிச்சாநிதபா... மகாரிசா... நிதா... பநிசா...

ஞானசுந்தரம் ஆரம்பத்திலேயே சுரமாகவே தன்யாசியை அறிமுகம் செய்து நிறுத்த...



குறிஞ்சி ஆலாபனையாக தன்யாசி ராகத்தைப் பிழியோ பிழியென்று பிழிந்து சாற்றைப் பருகச் செய்கிறாள்; இனிக்க இனிக்கப் பருகச் செய்கிறாள்!

எங்கும் 'ஆகா' ஒலிகள்.

ஆனைய்யாவோ, "தாயே! மங்களாம்பிகே! நீதான் குறிஞ்சி ரூபத்தில் பிறந்திருக்கிறாயோ!" என்று முனகி ஆனந்தக் கண்ணீர் மல்குகிறார்.

*அக்காலத்தில் மிகப் பிரசித்தமான தமிழ்ப்பாடல் ஆனைய்யா இயற்றிய தன்யாசி ராகப் பாடலான 'பருவம் பார்க்க நியாயமா?' என்பது.

அதனையே குறிஞ்சிப் பாடத் தொடங்க...

ஆ! எழுந்த கரவொலிகள் கேட்டுக் கொள்ளிடமே, கொள்ள இடமின்றி இரண்டோடும் நீர் மடையை உடைத் துக் கொண்டதோ என்பது போன்ற உணர்வை ஏற்படுத் தியது.

மெய்சிலிர்த்த அதிர்ச்சி கண்டார் மேதை ஆனைய்யா. எந்த நேரம் பார்த்து எந்தப் பாடலைப் பாடி என்ன கேள்வி கேட்கிறாள்?

தான் எழுதிய பாடலையே பாடித் தன்னையே 'பருவம் பார்க்க நியாயமா?' என்று யாசிக்கிறாளே! அதுவும் தன் னையே யாசிக்கும் உள்ளத்தை உருக்கும் தன்யாசி ராகத் தில்! இப்பாடலை நாம் தன்யாசி ராகத்தில் உருவாக்கி யதன் பயனை இப்போதல்லவா அடைந்து அனுபவிக்க நேர்ந்திருக்கிறது! ஏ! மங்களாம்பிகே! அகஸ்தீஸ்வரப் பெருமானே! 'எனது பருவத்தைப் பார்த்து சங்கீத எடை போடுவது என்ன நியாயம்?' என்று கேட்காமல் கேட் கிறாளே இவள்!

குறிஞ்சியும் ஞானசுந்தரமும் ஏதோ இசைச் சந்நதம் வந்தவர்களைப் போல மாறி மாறிப் போட்டியிட்டுப் பாடலைச் சுரவிந்நியாசங்களைப் புதுமுறையில் இணைத் துப் பாடிய காட்சி...

இடையே பக்க மேளங்களும், புதிய கதியில் வரைந்த கோலம்...

* இக்காலத்திலும் மிகப்பிரசித்தம்.

கொசுக்கள் கூட, பிளந்தவர்கள் வாயில் நுழையாது மயங்கி அவரவர் மடிகளில் விழுந்து போயின. ஆங்காங்கே எரியும் தீப்பந்தங்கள் கூட அசைய மறுத்தன.

ஓ...! எந்தரோ மகானுபாவுலு...!

ஆனைய்யா அந்த அற்புத சங்கீதத்தை மக்கள் ரசிக்கும் வண்ணம் பாடிய – எளிமைப்படுத்திய சங்கீதத்தைத் தாய் மொழியில் பாடுகிற சங்கீதத்தைக் கேட்டுக் கொண்டே தியாகராஜ சுவாமிகளின் இந்த 'எந்தரோ மகானுபாவுலு' பாடிய சம்பவத்தை மனத்திரையில் இசைச் சித்திரமாய் வரைந்து பார்த்துக் கொள்கிறார்.

ஓ... சங்கீதம் என்றால் இதுதானோ?...

**தி**ருவிதாங்கூர் மன்னர் சுவாதித் திருநாள் மகாராஜா. தியாகப் பிரும்மத்தைத் தமது அரண்மனைக்கு எழுந்தருளுமாறு வேண்டி, இசையின் இமயமான ஸ்ரீ கோவிந்த மாராரை அனுப்பி வைக்கிறார்.

சரபோஜியையே மறுத்து விட்டவர், இந்தச் சுவாதித் திருநாளையா ஏற்கப் போகிறார்?

இசையின் இமயமான – ஷட் (ஆறு) காலப் பல்லவி பாடுவதில் ஜாம்பவானான கோவிந்தமாராரை தியாகப் பிரும்மம் நன்றாகவே அறிவார். எனவே, அந்தப் பல்லவியைப் பாடி காட்ட வேண்டிக் கொள்ள, மாராரும் சபை நடுவே ஸ்ரீ ராகத்தில் அந்தப் பயங்கரச் சாதனை நிறைந்த பல்லவியைப் பாடுகிறார். அதுவும் ஷட் (ஆறு) காலம் பாடுகிறார்.

பல்லவி என்பது பாடலின் முதல் வரி என்பதற்கும் பெயர்; இசையின் கடைசி இலக்கணத்துக்கும் பெயர். சுருதி ஞானம் பெறுவதைவிட *லயஞானம் கடினம்.

* இது மறைந்த மகாவித்துவான்கள் நைனாப்பிள்ளை, சித்தூர் சுப்பிரமணியப் பிள்ளையுடன் மறைந்து போயிற்று. ஏதோ கொஞ்சம் ஒட்டிக் கொண்டிருப்பது என் குருகுல நண்பன் மதுரை சோமுவிடம். இதுவும் மறைந்து போயிற்று. இதனால் ஏனையவரிடம் இல்லை என்பதாகவல்ல அருத்தம், சில நாதசுர மேதைகளிடம் என்றும் இருக்கும்.



சுருதிஞானம் லயஞானம் இரண்டும் பெறுவது என்பது கலைமகளின் அபரிமிதமான அருள் பெற்றவராக இருக்க வேண்டும்.

கோவிந்தமாரார் பாடி முடித்ததும் ஸ்ரீ ராமச்சந்திர மூர்த்தியின் அருளைப் பெற்ற தியாகப் பிரும்மம், மெய் மறந்து கரம் கூப்பித் தொழுகிறார்.

ஆ! இதுவல்லவோ சங்கீதம்! அசுர சாதனை என்பது இதுதானோ? லட்சணமான சங்கீத மேன்மை லயத்தில் தான் அடங்கி இருக்கிறதோ?

"மாராரே! இப்பேர்ப்பட்ட மகாவித்துவானைப் பெற்ற உங்கள் சுவாதித் திருநாள் மகாராஜன் என்னை அழைக்க வேண்டிய அவசியமில்லையே!"

மாரார் கரம் கூப்பிச் சொன்னார்.

"பிரும்மமே! நாங்கள் பாடுகிற சங்கீதம் பாறைகளை உடைப்பது போன்றது. நீங்கள் பாடுகிற சங்கீதம் பனித் துளிகளை அகற்றுவது போன்றது. எங்கள் மகாராஜா தங்கள்பால் பக்திகொண்டு அழைப்பு விடுத்து இருக்கிறார்!"

ஏழுமலையான் உயரத்துக்கு எட்டிய சங்கீதமான கோவிந்தமாரார் எத்தனையோ படிகள் இறங்கி, பாதாளத்தில் நின்று சொன்ன பதிலைக் கேட்டு பாகாய் உருகிப் போனார் தியாகப் பிரும்மம்.

"வருவேன்; வயது இடம் தரவில்லை; மன்னிக்கவும். நீங்கள் சங்கீத மகான். "சங்கீத மகான்!" என்று மெய்ப் புளகம் கண்ட தியாகராஜ சுவாமிகள் அக்கணமே பாடுகிறார்; எந்தரோ மகானுபாவுலு..."

அதே ஸ்ரீராகத்தில் பாடுகிறார். 'மகான்கள் எங்கெங்கோ இருக்கிறார்கள்! அவர்களனைவருக்குமே எனது வணக்கங்கள்!'... பாடலின் அர்த்தம்.

**க**ண்களில் நீர் ஆனந்தமாகப் பெருக மகாவித்துவான் ஆனைய்யா, குறிஞ்சியின் குயிலோசையை ரசித்தவண்ணம், 'எந்தரோ மகானுபாவுலு'வை நினைத்துப் பார்க்கிறார்...

மகத்துவம் எங்கு உதயமாகிறது என்பதையும் மனத்தில் அசைபோட்டுப் பூரித்துப் போகிறார்.

ஓ... நாம் நியாய அநியாயங்களைப் பாராது இவளை அரண்மனையில் விமரிசித்து விட்டோமோ!

ஆனைய்யா இவ்வாறு நினைக்கையில்...

சற்றும் எதிர்பாராமல், தன்யாசியில் பாடி வந்த குறிஞ்சி, சரணம் வருகிறபோது வேண்டுமென்றே ஒரு மாறுதலுக்குத் தெலுங்கில் பாடவே வியந்து போகாதார் யார் என்பதைவிட, வியர்த்துப் போகாதார் யார் என்று தான் சொல்ல வேண்டும்.

இது என்ன கொள்கைக்கு மாறான பிறமொழிப் பாடல்? மக்களிடையே புரியாத மொழியில் பாட வேண்டாம் என்கிற பலத்த எதிர்ப்பு; மிகச் சிலருக்கு மட்டுமே புரிகிறது!

பார்த்தீர்களா! மக்களுக்குப் புரிகிற மொழியில் பாடுகிற நியாயமும், புரியாத மொழியில் பாடுகிற அநியாயமும் என்பதைச் சான்றாகக் காட்டுவது போல குறிஞ்சி தெலுங்கில் பாடத் தொடங்கினாளோ?

இல்லவே இல்லை; பருவம் பார்ப்பதிலும் நியாய–அநியாயம் வேண்டாமா என்பதை ஆனைய்யாவுக்குப் புரிய வைக்கவே பாடினாள்.

அதே தன்யாசி ராகத்தில் தியாகராஜ சுவாமிகள் பாடிய பாடலின் சரணம் அது...

'நியாயா நியாயமு, தெலுசுனு ஜகமுலு' நியாயம்–அந்நியாயம் எது என்பது உலகுக்குத் தெரியும்!

சரணம் பாடி... அதே கீர்த்தனையின் பல்லவியான, 'சங்கீத ஞானமு, பக்தி வினா... சன்மார்க்கமு கலதே... மனஸா!' என்று பாடியவள் வசனத்தால் விளக்குகிறாள்.

'பக்தியும் சன்மார்க்கமும் மனத்தில் இல்லை என்றால் சங்கீத ஞானம் எவர்க்குக் கிடைக்கும்? அது மூன்று



வயது ஞான சம்பந்தரானால் என்ன? பதினெட்டு வயது குறிஞ்சியானால் என்ன?'

எங்கும் ஒரே கரகோஷம்.

ஆனைய்யாவும் தம்மை மறந்து கரவொலி எழுப்புகிறார்.

கச்சேரி முடிந்து அனைவரும் அன்புடன் விடைபெறுகிறார்கள். ஆனைய்யா ஆனந்தக் கண்ணீருடன் ஆசீர்வதித்து விடைபெறுகிறார்.

அப்போது பார்த்து ஒருவன் ஓர் ஓலை நறுக்கைக் கொண்டு வந்து குறிஞ்சியிடம் நீட்டினான்.

அந்த ஓலை நறுக்கைப் படித்துப் பார்த்த குறிஞ்சியின் நெஞ்சில் அதுவரை இருந்த அமைதி அலைமோதத் தொடங்கி விட்டது.

# இராகம் – 9



# முக்தாம்பரி

ஓலையில் ராஜகாந்தி ரகசியம் பேசினான்.

'இரவு பன்னிரண்டு மணிக்கு மேல் உன்னைச் சந்திக்கிறேன்; அவசரமானது; அவசியமானது – ராஜகாந்தி.'

நெஞ்சு ஏன் அலைமோதாது?

ஓலையைக் கொண்டு வந்தவன் ராஜகாந்தியின் ஆள். கொடுத்தது போலவே ஓலையைத் திரும்பப் பெற்றுக் கொண்டும் புறப்பட்டு விட்டான்.

இது ஞானசுந்தரத்துக்கும் தெரியாது; தெரியபடுத்தவுமில்லை. கேட்டதற்கு 'காலையில் பேசிக் கொள்ளலாமே!' என்று மழுப்பி விட்டாள்.

அந்த மாளிகையில் அனைவரும் விருந்துண்டு அயர்ந்து நித்திரையில் கனவுக் கச்சேரி செய்து கொண்டிருந்தார்கள். சிலர் அபசுரமாகக் குறட்டையொலிகளையும் எழுப்பிக் கொண்டிருந்தனர்.

தோட்டத்துவாசற்படிக்குச் சற்றேதள்ளியிருந்த புன்னை மரத்தடியின் வேரின் மேலமர்ந்து விழித்துக் கொண்டு ராஜகாந்தியின் வருகைக்காகக் காத்திருக்கிறாள் குறிஞ்சி. கண்களோடு இமைகள் தனி ஆவர்த்தனம் நடத்துகின்றன. தூக்கம். இருந்தாலும் என்ன செய்ய?



எதற்காக ராஜகாந்தி வரவேண்டும்?

மீண்டும் அகப்பட்டுக் கொள்ளவா?

வேலியோரமாக இருந்த இருட்டில் சலசலப்பு; ஓர் உருவம் மெல்ல அசைந்து வருவது தெரிகிறது; கரிய போர்வை. ராஜகாந்தியாகத்தானிருக்க வேண்டும். வேறு யார் வரப்போகிறார்கள்?

குறிஞ்சி எழுந்து நின்று கொண்டாள்.

கொஞ்சம் பயமாகவும் இருந்தது. பேய் பிசாசுகளின் மீது அதிகப்படியான நம்பிக்கை இருந்த காலம் அது.

வானில் மிதக்கும் வெள்ளித்தட்டு வேறு வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது.

அருகே வந்து நின்ற உருவம் கரிய போர்வையை நீக்குகிறது.

ஆ! ராஜகாந்தி! அந்த உருண்டு திரண்ட கண்களும் கனத்து மதர்த்த மீசையும், மேல்நோக்கி அள்ளிச் செருகிய கூந்தலும்...

முன்பு கடோத்கஜனாக நினைத்த குறிஞ்சி, இப்போது ஐயனாரப்பனாக உருவகப்படுத்திக் கவனிக்கிறாள்.

"நீ போகலையா?"

"இல்லை; 'குற்றாலக் குறிஞ்சி' ராகம் பாடப் போவதில்லை என்று கேள்விப்பட்டேன். ஏன் போக வேண்டும்? மங்களம் பாடுகிறவரை மனநிறைவோடு கச்சேரியை ரசித்தேன். ஆ! மகளே! அந்த ஆனைய்யாவை அசத்தி விட்டாய்! மகா கர்வம் படைத்த ஆட்களில் அந்த ஆளும் ஒருவன்! பருவம் பார்க்க நியாயமா என்று பாடினாயே... பலே ஜோர்! ஏதோ தன்யாசி ராகம்னு பேசிக் கொண்டார்கள். அதைவிட நியாய அநியாயம் இந்த உலகத்துக்குத் தெரியும் என்று பாடினே பாரு – பாதி பாட்டு வரைக்கும் ஆனைய்யா பாட்டும் பாடி படார்னு தெலுங்குல பாடினது 'எனக்கு ஒண்ணும் தெலுங்கு தெரியாம இல்லேடா கழுதைகளா' என்று செவுட்டுலே அறைஞ்சா மாதிரி இருந்தது!"

குறிஞ்சியின் நீலவிழிகளில் அதுவரை ஆவர்த்தனம் செய்து வந்த நித்திரை ஜதிகள், எங்கோ ஓடி மறைந்து விட்டன. அங்கே நீர்த்திரை.

ஆ! கொள்ளைக்காரனுக்கு இப்படி ஒரு சங்கீத ரசனையா? அல்லது இந்தக் கொள்ளைக்காரனையும் ரசிகனாக்கியது தனது ஏழிசை முகவரியா?

ஓ... பிரத்தியங்கிரா பத்திரகாளி! நீ கொடுத்த வரப் பிரசாதம்!

"ராஜகாந்தி! நீ இப்படியே என் சங்கீதப் பித்துப் பிடித்து அலைந்து எங்காவது சரபோஜியிடம் மாட்டிக் கொள்ளப் போகிறாய்!"

"ஆ... சரபோஜி! பொல்லாத சரபோஜி! எனக்கு அவன் நிலாப்பூச்சி விளையாட்டு; பச்சை குதிரை விளையாட்டு மாதிரி! அன்றைக்குக் குற்றாலத்தில் என்னை அடிமைப் படுத்த வேண்டும்னு ஒரு ராகம் பாடினியே குற்றாலக் குறிஞ்சி... அது ஒன்றுக்குத்தான் நான் அகப்படுவேன்; மற்றபடி என்னைப் பிடிக்கிறதும் ஒன்றுதான்; நிலாவைப் பிடிக்கிறதும் ஒன்றுதான்! இப்பவும் நான் ஏன் உன்னை அவசரமா சந்திச்சேன் தெரியுமா?"

"அதை முதல்லே சொல்லு!"

"பயப்பட மாட்டியே?"

"நீ இருக்கிறபோது எனக்கென்ன பயம்?"

நீ இருக்கிறபோது எனக்கென்ன பயம்?

'ஆ! எந்தச் சங்கீதம் என்னை அகப்படச் செய்ததோ அதே சங்கீதம் என்னை விடுவிக்கும்' என்று நாம் சொன்ன பதில் போலிருக்கிறதே!

"என்ன ராஜகாந்தி தயக்கம்?"

"எல்லா இடங்களிலும் என்னால் உதவிட முடியுமா என்று தான் தயங்குகிறேன். நீ செல்கிற இடங்களுக்கெல்லாம் என்னால் வந்து கொண்டிருக்க முடியுமா என்றுதான் தயங்குகிறேன். இங்கே நான் வந்தது என் பெயரில் ஏதோ ராகம் உண்டு என்று நீ சொல்ல, அதைக் கேட்க நான் வந்தேன்."



"எப்படி இருந்தது?"

"அந்த இனிமையை ரசித்தபோது என் பெயரையே மாற்றிக் கொள்ளலாமா என்று தோன்றியது."

"இதைவிட உன் குணத்தை மாற்றிக் கொண்டால்?"

"அப்படி என்ன மகளே பொல்லாத குணம் படைத் தவன் நான்? ஐந்து சக்கரத்துக்கு ஓர் அழகிய பெண்ணை விற்கும் கொடுமையான காலமாகி விட்டதே என்று நான் கொள்ளைக்காரனாக – தீவிரவாதியாக மாறியது தவறா? ஒரு ஏக்கர் தஞ்சை நிலம் இரு சக்கரத்து (ரூபாய்)க்கு விலை போகிற இந்தக் காலத்தில், வறுமை தாண்டவமா டலாமா என்று வன்முறைப் புரட்சிக்காரனாக மாறியது தவறா? வெள்ளையனைவிட நான் கொள்ளையனா? நாயக்கன் ஆண்டான்; இஸ்லாமியன் ஆண்டான்; மராட்டியன் ஆண்டு கொண்டு இருக்கிறான்; இப்போது வெள்ளையன் வெடி வைத்துக் கொண்டிருக்கிறான்! இந்தத் தமிழ்நாட்டுத் தலையெழுத்து – தமிழ்மொழியின் தலையெழுத்து இப்படித்தான் அழிய வேண்டுமென் றால், இந்த நாட்டு மானம் மரியாதையுள்ள ஒவ்வொரு தமிழனும் ராஜகாந்தியாக மாற வேண்டும்; மாறியே தீர வேண்டும்!"

உணர்ச்சி வயப்பட்டுப் பேசிய ராஜகாந்தியின் கழுத்தை இடது கரத்தால் பற்றி வலது கரத்தால் அவனது வாயைப் பொத்தினாள் குறிஞ்சி. அவளது கண்களில் கொஞ்சம் கொஞ்சமாக வற்றிக் கொண்டிருக்கும் காவிரியின் நீர்ப் பிரவாகம்! சத்தம் கேட்டு எவராவது வந்து விட்டால்?

ஆ! இவன் ஒரு புதிய திருக்குறளைத் தீட்டுகிறான்...

குறிஞ்சியின் குறிஞ்சி மலர் போன்ற மென்மையான தொடுவுணர்வை – ஸ்பரிசத்தை தேகத்தில் கண்ட ராஜ காந்தி, "மகளே! நான் பெறமால் பெற்ற மகளே! நீ தொட் டதால் ராஜகாந்தியின் கொள்கை தூய்மையுடையது என்பது நிரூபணமாய் விட்டது! போகட்டும். சொல்ல

வந்ததைச் சொல்லிவிட்டுச் செல்கிறேன். ஆனாலும் பயப்படாதே! ராஜகாந்தியின் உயிர் உன்னிலும் பெரிதல்ல! நீ தஞ்சை செல்லும் வழியில், புதியதாக வந்திருக்கிறானே உதவி கலெக்டர் சாம்சன்... அவன் உன்னைக் கடத்தப் போகிறான்!"

"ராஜகாந்தி!"

"பயப்படாதே மகளே! உன்பால் நான் அடிமை கொண்டு விட்டது இதற்குள் தமிழகம் முழுவதுமே தெரிந்து விட்டது. கும்பினி வெளியிடும் செய்தித்தாளிலும் பிரசுரமாகி விட்டதாம்! ஆகவே, உன்னைக் கடத்தி, அதன் மூலம் என்னைப் பிடிக்க முடிவு செய்திருக்கிறானாம் – உதவி கலெக்டர் சாம்சன்."

"நீ சரணடையாவிட்டால்?"

"உன் கற்பு அவனுக்குச் சரணடைய வேண்டும்."

"ராஜகாந்தி."

"மகளே! என் மீது உனக்கு நம்பிக்கையில்லை; அதனால் இப்படி அலறி விட்டாய்!"

"நீ அகப்பட்டுக் கொள்வதா?"

"உனது கற்பு பறிபோவதா?"

"வழி."

"நீ செல்கிற வழியில் ராஜகாந்தி அது குறித்துச் சிந்திப்பான். எவரிடமும் சொல்லாதே! தைரியமாகப் பயணப்படு! வாலி, தனது வாலில் ராவணனை முடித்துத் தூக்கி வந்து குழந்தைகளுக்குப் பொம்மை விளையாட்டாக்குவான் என்பது தெருக்கூத்து! இந்த ராஜகாந்திக்கு வால் இல்லை; வாள் உண்டு. சரபோஜியையே நீ விளையாடும் பொம்மையாக்குவேன். தைரியமாகப் பயணப்படு!"

ராஜகாந்தி மேலும் நேரம் கடத்தாமல் குறிஞ்சியின் தாடையைத் தட்டிக் கொடுத்துவிட்டு வேகமாக விரைந்தான்.



குறிஞ்சி படுக்கை அறை நாடி நடந்தாள். எங்கே தூக்கம் வரப் போகிறது?

தஞ்சைக்குத் தெற்கே ஏறத்தாழ இருபது கல் தொலைவில் பட்டுக்கோட்டைக்குச் செல்லும் ராஜபாதையில் இருந்தது அந்த *ஒருத்தி நாடு. அதுதான் குறிஞ்சியின் இப்போதைய குடியிருப்புத் தலம்.

அந்த ஒருத்தி நாடும், அங்கே முன்னொரு காலத்தில் வாழ்ந்த சரபோஜியின் அருமைக் காதலி முக்தாம்பாளின் காப்பியமனைய கதையும், †முக்தாம்பரி எனும் அபூர்வ ராகத்துக்குச் சமமான கதை! சரபோஜி மன்னருக்கே பிடித்த தோடி ராகத்தில் பிறந்த ஜன்யமல்லவா? ஆனால், அந்த ஒருத்தி நாட்டுப் பேரழகி முக்தாம்பாளின் ஜன்யமும் ஜனனமும், மரணமும்தான் குறிஞ்சிக்கு சரபோஜியின் மீது ஏற்பட்ட கோபத்தின் காரணங்களில் ஒன்று.

அந்தக் கதையே வேறு; அதன் காரணமே வேறு; அது ஒரு பழங்கதை.

இப்போது குறிஞ்சி அந்த முக்தாம்பரி ராகத்தை அசை போட்டுப் பெருமூச்சு விட்டவண்ணம் பயணமாகிக் கொண்டிருக்கிறாள்.

விலாங்குடி வழியாகக் குதிரைகள் பூட்டிய கோச்சு வண்டி வேகவேகமாக வருகிறது. ஏன் வேகத்தைக் கூட்டி ஓட்டச் சொல்லுகிறாள் குறிஞ்சி? ஒருவருக்குமே புரியவில்லை.

ஒரு கட்டத்துக்கு வந்ததும் திடுமென்று தொலைதூரத்தில், புரவிகளில் வரிசை கட்டி வழிமறித்துப் பல ‡கும்பினிச் சிப்பாய்கள் துப்பாக்கி ஏந்தியவண்ணம் நின்றனர்.

அரண்டு போகாதார் யார்?

வேகமாக ஓடிவந்த கோச்சு வண்டியும், பின்னால்

* இன்றைய ஒரத்த நாடு.

† ஆ: சரிகமபநிச் ; அ: ச்நிதமகரிச.

‡ கம்பெனியை அந்நாளில் கும்பினி என்பர்.

வந்த குதிரைகள் பூட்டிய கூண்டு வண்டிகளும் வேகம் குறைந்து குறிப்பிட்ட இடத்தில் நின்றன.

உதவி கலெக்டர் சாம்சன், தனது புரவியை லாகவ மாகச் செலுத்திக் கோச்சு வண்டியருகே வந்து நின்று, "ஏ, குறிஞ்சி! வண்டியை அரண்மனையை நோக்கி ஓட்டச் சொல்!" என்றான்.

துணைக்கு வந்த துவிபாஷி மொழி பெயர்க்குமுன், குறிஞ்சிக் குழுவிலிருந்த விஞ்ஞானி ஜான் இறங்கி வந்து ஆங்கிலத்திலேயே கேட்டான்: "காரணம்?"

"நீ ஒரு ஆங்கிலத் துரோகி!"

"இல்லை; இசையின் அடிமை! எங்களை அரண் மனைக்கு அழைக்கும் காரணம்?"

குறிஞ்சியே இப்போது துணிந்து கோச்சிலிருந்து குதித்து ஓடிவந்து, ராஜகாந்தி சொன்னதை அவளாகவே சொல்வது போலச் சொல்லி, "இதுதானே காரணம்?" என்றாள். மொழிபெயர்ப்புக்குப் பிறகு, அவளது கண்களில் அக்கினிப் பொறிகள் ஆங்கிலத்தைப் பொசுக்கின.

"ஆமாம்; ராஜகாந்தியை எங்களிடம் ஒப்படைத்து விட்டு நீங்கள் போகலாம். அதுவரை எங்கள் அரண்மனை யில் கௌரவமாக, ஆனால், காவலோடு இருக்கலாம்."

"ராஜகாந்தி வர மறுத்தால்?"

"வருவான்!"

"வர மறுத்தால்?"

"உன்னைக் கற்பழிப்பேன். அப்போது அச்செய்தி கேட்டுக் கொதித்து ராஜகாந்தி வருவான். சுட்டுப் பொசுக்குவேன். புறப்படுங்கள்!"

சாம்சனின் கர்ஜனை, பயணத்தைத் தஞ்சை அரண்மனை நோக்கித் திருப்பியது.

சரபோஜி மன்னருக்கு, இந்தச் சரித்திரத்தையே எரிக் கும் செய்தி தெரியவரவே, அவரது கலாவிருட்சத்தின் வேரிலேயே தீப்பிடித்தது போலுணர்ந்து திகைப்புக் கண்



டார். சகலகலா ஞானியல்லவா? மராட்டியன் என்பது வேறு; மகாகலைமாமணி என்பது வேறு!

திருவிடைமருதூரில் தங்கி இருந்த மகன் இளவரசன் *சிவாஜி காய்ச்சல் கண்டு மருத்துவர்கள் கவனித்து வருவ தாக கேள்விப்பட்டுப் புறப்படவிருந்தார். இந்த நேரத்தில் இப்படி ஓர் இடியா?

அருமை மனைவி அகல்யாபாய் அப்போது அவசர அவசரமாக ஓடிவந்து ஓர் ஓலை நறுக்கை நீட்டுகிறாள். அதை வாசித்த சரபோஜிக்கு மேலும் ஓர் இடி!

ராஜகாந்திதான் எழுதி இருந்தான்.

'குறிஞ்சி கற்புக்கு ஏதேனும் பங்கம் வருமேயானால் திருவிடை மருதூரிலிருக்கும் உங்கள் மகன் சிவாஜியின் தலையை அரண்மனைக்கு அனுப்பி வைப்பேன்!'

– இப்படிக்கு ராஜகாந்தி.

ராணி அகல்யாவின் கண்களைத் துடைக்கிறார் மன்னர் சரபோஜி. எங்கிருந்து வந்து தொலைந்தான் இந்தப் புதிய துணைக் கலெக்டர் சாம்சன்!

சுறுசுறுவென்று முயற்சிகளை மேற்கொள்கிறார் சரபோஜி.

அப்போதைய தஞ்சையின் ஆங்கிலக் கும்பினியின் பிரதிநிதியாக இருந்தவன் †ஜான் ஃபைஃப். அவனிடம் முறையிடுகிறார். "என்னதான் நான் நாட்டை அடகு வைத்துவிட்டாலும், நாட்டு மக்களையுமா அடக்கு வைத்து விட்டேன்?" என்று கர்ஜிக்கிறார்.

பிரதிநிதி என்ன செய்வான்?

கலெக்டர் நெல்சனுக்குச் செய்தி பறக்கிறது. சென்னை யிலிருக்கும் கவர்னர் வாஷிங்டனுக்குச் செய்தி உடனடி யாகப் பறக்க வேண்டும். அவ்வளவு வேகமான இறக்கை களை எங்கே தேடுவார் சரபோஜி!

---

* இரண்டாம் சிவாஜி; முதல் சிவாஜி என்பவர் இந்து மதத்தைக் காத்த புனேயின் ரத்த ஞாயிறு; எனது 'ரத்த ஞாயிறு' நாவல் படிக்க.

† Residence John Fife.

நாளைய மாலைப் போதுக்குள் ராஜகாந்தி சரணடைய வேண்டும். இது தண்டோராவின் பயங்கர நிபந்தனை.

இறக்கைகள் என்ற சொற்கள் உதயம் கண்ட மறு கணம்...

ஆ! *பாஜ், பாஜ்...

அவர் வளர்க்கும் அற்புத ராஜாளிப் பறவை. பிற தேசத்திலிருந்து கொண்டு வந்த அபூர்வ வல்லூறு. அது அவரிடம் பேசும்; அவர் அதனிடம் பேசுவார். மிருகங்களின் பாஷைகளுக்கென்றே பல நூல்களைச் சேகரித்த கலைவேந்தரல்லவா சரபோஜி?

பறவை, மிருகபாஷை அற்புதம் மட்டுமா? பல்வேறு அற்புதங்களைத் திரட்டி அவற்றுக்கென ஒரு நூலகத்தை– இன்றும் இலங்கும் தஞ்சை சரஸ்வதி மகாலை நிறுவிய கலைக் காவலர் சரபோஜி!

வருவது வரட்டு சிந்திப்போம்...

**ம**றுநாள் மாலை; அந்திப்போது அவலமாய் சிரிக்கிறது.

அரண்மனையின் ராஜவாசலான ஜெயவாசலில், ஒரு பலியாட்டைப் போல குறிஞ்சி எனும் இசைக்கொழுந்தை நிற்க வைத்திருக்கிறான் கொடும்பாவியான உதவி கலெக்டர் சாம்சன்.

இதற்குள் கேள்விப்பட்டு, ஒருத்தி நாட்டிலிருந்து ஓடி வந்த வளர்ப்புத் தந்தையான விருபாட்ச கவிராயர் காலில் விழுந்தே கெஞ்சுகிறார்.

ஆ! தமிழ், காலில் விழலாமா? 'சிவபக்தி விலாசம்' எழுதிய தவபக்தித் தமிழ், தாள் பணியலாமா? பணிந்து விட்டதே!

'சரபேந்திர பூபாளக் குறவஞ்சி' எனும் காப்பியமெழுதி சரபோஜியைக் குளிரச் செய்த தமிழ்மேதை கோட்டையூர்

* Baj A Falcon : Bhonsale Vamsa Charitra - by V. Sreenivasacharry, B.A. (இதன் படமும் தஞ்சை சரஸ்வதி மகாலில் இருக்கிறது.)



சிவக்கொழுந்து தேசிகர். சினந்து துடித்துப் போகிறார். அவரும் எவ்வளவோ கெஞ்சிக் கூத்தாடுகிறார்.

சரபோஜி மட்டும் என்ன செய்வார்?

கலெக்டர் நெல்சன் ஒரு பெண்பிள்ளைப் பொறுக்கி. மகா கலையினளும், இளமையினளும், அழகியுமான குறிஞ்சியை அனுபவிப்பது குறிஞ்சித் தேனைச் சுவைப்பது போலல்லவா என்று கண்டுகொள்ளாமல் விட்டு விட்டான். அவன் சொல்லியனுப்பிய காரணம், 'ராஜகாந்தி என்கிற கொடிய கொள்ளைக்காரன் முக்கியமேயொழிய உங்கள் சரிகமபதநி முக்கியமல்ல!'

நேரம் நெருங்குகிறது...

ராஜகாந்தி வரப்போவதில்லை.

கலெக்டர் நெல்சனிடமிருந்து சாதகமான பதில் வரவில்லை.

சென்னை கவர்னர் வாஷிங்டனுக்கு இந்நேரம் செய்தி சென்றிருக்குமோ என்னமோ?

குறிஞ்சியைப் பார்க்கப் பார்க்க சரபோஜி மன்னருக்கு அநியாயமாக வஞ்சிக்கப்பட்ட பழைய காதலி முக்தாம்பாளின் அழகு ராகமான முக்தாம்பரி கேட்கிறது...

வருவது வரட்டும் என்று ஏதோ ஒரு முடிவின் கீழ் துணிந்து விட்டார்.

# இராகம் – 10



# சூத்திரதாரி

'பாஜ்' எனும் அந்த அபூர்வ ராஜாளிப் பறவை இதயத்தே சிறகடிக்கிறது.

எண்ணித் துணிக கருமம்...

மீண்டும் ஒருமுறை வேண்டுதல் விடுக்கிறார் சரபோஜி மன்னர்.

"மிஸ்டர் சாம்சன்! மறுபடியும் மறுபரிசீலனை செய்யுங்கள்; சிந்தித்துப் பாருங்கள். நான் தஞ்சையைத் தான் கும்பினியாரிடம் கொடுத்துக் கையொப்பமிட்டுக் கும்பிட்டேனேயொழிய, அதிகாரங்களை அர்ப்பணித்து விடவில்லை; மக்களை உங்கள் அடிமைகள் என்று எழுதித் தரவில்லை; அது முடியவும் முடியாது. ஒரு கொள்ளைக்காரன் இந்த இசைப்பொழிலுக்கு ரசிகனானான் என்பதற்காக, பொழிலை அழிக்க எண்ணுவது பொறுத்துக் கொள்ள முடியாத வேதனை! இவளை நீங்கள் வஞ்சிக்க முயன்றால் மக்கள் கொதித்து எழுவர்! தஞ்சை மண் மட்டுமல்ல; தமிழக மண்ணே வெடிக்கும்!"

மன்னர் சரபோஜி ஆங்கிலத்தில் மாப்புலமை பெற்றவர். சுவார்ஷ் எனும் அறிஞர் பெருமானாகிய பாதிரியாரால் வளர்க்கப்பட்டு மேதைமையின் முகவரியை இலக்கணப் பிசிறின்றித் தெரிந்து கொண்டவர்.



எப்போது குறிஞ்சியின் பேரழகை சாம்சன் கண்கள் கண்டனவோ, அப்போதே அந்தக் கண்கள், காதுகளை அறுத்துப் போட்டுவிட்டனவே! சரபோஜியின் சரங்கோத்த சொற்கள் காற்றில் கலந்து போயின.

அவன் ஏளனமாகச் சிரிக்கிறான்.

"எனக்கு ராஜகாந்தி தேவை!"

அத்துடன் குறிஞ்சியும் தேவை என்பதுபோல அவனது கண்கள் மீன்கொத்திப் பறவையாக மாறி, குறிஞ்சியின் கயல்விழிகளை நோக்குகின்றன.

இப்போது குறிஞ்சி ஏளனமாகச் சிரிக்கிறாள்.

குறிஞ்சியைப் பெண்டாளவே இந்தச் சண்டாளச் சூத்திரதாரியான சாம்சன் நாடகமாடுகிறான் என்பது சரபோஜி மன்னருக்குப் புரிகிறது. நெஞ்சு குமுறுகிறது. அவருக்கும் அந்தக் குறிஞ்சி மலர் மீது ஒருதலைக் காமம், ரதித்தவம் செய்து வருகிறதே! முன்பு இசையை நேசித்தார். இப்போது அரம்பையே பணிப்பெண்ணாகத் துடிக்கும் அவளது அழகை வேறு கண்டுவிட்ட பிறகு?

ஆனால் சூத்திரதாரியாக நாடகமாட அவர் விரும்பவில்லை. கோத்திரம் கேட்டு, குலம் கேட்டு, பாத்திரமறிந்து பிச்சை கேட்கவே நினைத்தார். அது ஒரு நேர்மையுள்ள நெஞ்சுக்குரிய நினைவு.

மூடியிருந்த மோகமொட்டு, ரகசியமாய் இதழ் விரித்து மன்மதமாய் மணத்தது; மகரந்தமாய் இனித்தது.

ஐம்பது வயது எங்கே?

பதினெட்டு வயது எங்கே?

அசுர காமம் அழகைப் பார்ப்பதில்லை; காப்பியக் காமம் வயதைப் பார்ப்பதில்லை.

மன்னர் பரம்பரைக்கு வயதேது? மலர்களின் நந்தவனத்தில்தான் பேதம் ஏது?

குறிஞ்சியின் நிலாப் பேரழகு எவர் நெஞ்சைத்தான் நெருஞ்சி முள்ளாய்க் குத்தவில்லை?

இந்தச் சூத்திரதாரி நாடகத்தைச் சூட்சமத்தால் அறிந்து தானே ராஜகாந்தி, ரகசியமாக சரபோஜிக்கு ஓலை யனுப்பியது? அது சரபோஜிக்கும் ஓர் எச்சரிக்கையாக இருக்குமல்லவா? இல்லையென்றால் விலாங்குடிப் பாதை யிலேயே இந்தக் கும்பினியரின் விலா எலும்புகளை முறித்துப் போட எந்நேரமாகும்?

ஞானசுந்தரம் கண்ணீர் வடித்தவண்ணம் ஒருபக்கமாக நின்று விசும்பி விசும்பி அழுகிறான். முகாரி ராகத்தைக் கூடப் பாடுவோர் பாடினால் இனிமையாகப் பாடிவிட லாம். அவனது அந்த சோக ராகத்தை எப்படிப் பாடி னாலும் சுரங்கள் கண்ணீர்த் துளிகளாய்த்தான் உதிரும்.

இன்னொருபுறமாய்க் கூடியிருந்த மகா வித்துவான் களுக்கெல்லாம் மகிழ்ச்சி. தங்கள் தொழிலையே பாதிக்கச் செய்ய வந்த எழிலரசி – இசைக் கலையரசி – தமிழ்ப் பொழி லரசியாயிற்றே குறிஞ்சி! அவர்கள் இராகமாலிகைகளாக மாறியதில் அதிர்ச்சியடைய ஒன்றுமில்லை.

இத்தனை கெடுபிடிகளிலும் குறிஞ்சி கொஞ்சமும் கோணாது குறிஞ்சிப்பூவாகவே சிரிக்கிறாளே! எப்படியும் ராஜகாந்தி காப்பான் என்கிற நம்பிக்கையோ? ஓ...

ஆனால், தங்கள் குருகுலத்தைச் சேர்ந்தவளாயிற்றே குறிஞ்சி என்பதால் தஞ்சை பொன்னையாபிள்ளையும் சிவானந்தம் பிள்ளையும் எவ்வளவோ எடுத்துச் சொல்லு கிறார்கள். பயன்?

இந்த நெருப்பனைய கசப்பான நிகழ்ச்சியைக் கேள்விப் பட்டு ஓடோடி வருகிறார் மகாவித்துவான் ஆனைய்யா வும் அவரது சகோதரர்களும்.

வயதான ஞானப்பழமான ஆனைய்யாவின் நாவு வாதாடுகிறது. தமக்குத் தெரிந்த ஆங்கிலத்தில் வாதாடு கிறது.

"மிஸ்டர் சாம்ஸன்! உங்கள் ஏசுபிரான் கற்றுத் தந்த இலக்கணம் இதுதானா? அந்தப் புனிதச் சிலுவையின் மீது ஆணையிட்டுச் சொல்கிறேன்... இவள் ஒரு கலைப் பொக்கிஷம்! என் கண்கண்ட கருவூலம்! எங்கள் கம்பன் கண்ட சீதை! திருத்தக்க தேவர் கண்ட காந்தருவதத்தை! இளங்கோ கண்ட கண்ணகி! இவள் பாட வேண்டிய 'குற்றாலக் குறிஞ்சி' ராகத்தைப் பாட ஆரம்பிப்பாளே யானால், நீயே எரிந்து சாம்பலாவாய்!"



"எங்கே எரிக்கச் சொல்லுங்கள் பார்க்கலாம்!"

ஆனைய்யா கொஞ்சமும் தயங்காமல் இப்போது குறிஞ்சியிடம் தன்யாசிக்கிறார்; தன்னையே யாசிக்கிறார்; "குறிஞ்சி! என் மகளே! பாடு! எனக்காகப் பாடி சங்கீதத் தின் சாம்ராஜ்யம் என்ன என்பதைக் காட்டு. இந்த மேற்கு சங்கீதக்காரனுக்கு மட்டுமல்லாது உன்னால் மேனி எரிச் சலுற்றுப் பொறாமைப்படுபவர்கள் தலைகுனியப் பாடு! பாடு மகளே! பாடு!"

குறிஞ்சியின் நெஞ்சில் பிரத்தியங்கிரா தேவி பத்திரகாளி யாய்க் குமுறிக் கொண்டிருந்தாலும், உதடுகளில் மட்டும் காஞ்சி மாமுனிவரை அமர்த்தி அமைதியாகச் சிரித்துச் சொல்லுகிறாள்:

"இசையின் ஞானப்பழமான நீங்கள் வேண்டி நான் பாடாமல் இருப்பது நல்லதில்லையானாலும், இந்த நாடக மாடிக்காக நான் பாடுவதா? இவன் ஒரு சூத்திரதாரி! நெஞ்சில் எதையோ வைத்துக்கொண்டு இந்த நாடகமாடு கிறான்! நான் சாமா ராகத்தை மட்டும் எனது ஆத்ம நிறைவுக்காகப் பாடுவதில்லை என்று சத்தியம் செய்திருக் கிறேன். ஆனால், சில ராகங்களை வெறுத்து ஒதுக்கித் தள்ளியிருக்கிறேன். அந்த ராகங்களில் ஒன்று *சூத்திர தாரி! இவன் சரசமாடத் துடிக்கும் சரசாங்கி ராகத்தில் பிறந்த இந்த ராகத்தைப் பாடியே இவனைச் சூத்திரத்தில் வளைப்பேன்! பிறகு, எனது அருமை ரசிகன் ராஜகாந்தி யின் வீரதீரபராக்கிரமச் செயலுக்கு மரியாதையில்லா மல் போய்விடும்! இவ்வாறிருக்க, இந்தக் குரங்குக்கு என் குற்றாலக் குறிஞ்சி ராகமாலையை அணிவிப்பதா?"

மொழிபெயர்ப்பைக் கேட்ட சாம்சன், "முட்டாள்! யாரையடி குரங்கென்று சொன்னாய்?" என்று ஆங்கிலத்

* சரசாங்கியில் பிறந்த ராகம்;
ஆ:சரிமபதச்: அ: ச்தபமரிச.

தில் பாய்ந்த சாம்சன் கரத்தைப் பற்றிய ஆனைய்யா, சாபமிடுகிறார்:

"ஏ, சாம்சன்! அவளைத் தொடதே! அந்த மாவீர சாம்சன் தனது பலத்தால் ஒரு சாம்ராஜ்யத்தை அழித்தான்! அவன் பெயர் கொண்ட நீ, காம பலவீனத்தால் உன்னையே அழித்துக் கொள்ளப் போகிறாய்! இது நான் வணங்கும் அகஸ்திஸ்வரன் மீது சத்தியம்! மங்களாம்பிக்கையின் மீது சத்தியம்!"

ஆனைய்யாவின் விழிகளில் அக்கினிப் பிரளயம் தெரிகிறது.

ராஜகாந்தியை குறிஞ்சி எதிர்பார்க்கிறாளா? ஓ... எவ்வளவு பெரிய நம்பிக்கை.

சரபோஜி இப்போது சஞ்சலத்தின் கரங்களில் சரணடைந்து போனார்.

ராஜகாந்தியின் ஓலை ஞாபகத்திற்கு வருகிறது. ஆ! அவனும் ஒரு சூத்திரதாரிதான்! மகன் சிவாஜியின் தலையா? குறிஞ்சியின் கற்பா?

ஓ... குறிஞ்சி தேவை! குறிஞ்சி தேவை...

சரபோஜி சண்டமாருத போஜியாக மாறி விட்டார். வருவது வரட்டும் என்று சிந்தித்ததைச் செயல்படுத்த முனைந்து விட்டார்.

"மிஸ்டர் சாம்சன்! கொஞ்சம் பொறுங்கள்! இதோ ராஜகாந்தியை அழைத்து வருகிறேன்!"

சரபோஜி வேகமாக அரண்மனையுள் நுழைகிறார். அவரால் வேறு எப்படிக் குறிஞ்சியைக் காக்க முடியும்? சென்னை கவர்னருக்குச் செய்தி எட்டியதோ இல்லையோ? திருச்சியிலிருக்கும் கலெக்டர் நெல்சனும், இந்தச் சூத்திரதாரியான சாம்சனுக்குக் காமம் பற்றியதில் துணை கலெக்டராகி விட்டான். வேறு வழி?

அரண்மனையுள் புயலைப் போல் நுழைந்த சரபோஜி மன்னரைக் கண்டு, அனைவருமே ஆச்சரியத்துடன் கூடிய அதிர்ச்சிக்கு ஆளாயினர்.



என்ன! ராஜகாந்தி அரண்மனையுள்தான் இருக்கிறானா?

குறிஞ்சியும் இப்போது கொஞ்சம் குழம்பிப் போனாள். தன் பொருட்டு ராஜகாந்தி சரணடையப் போகிறானா?

அரண்மனையுள் சென்ற சரபோஜி மன்னர், தமது பாசத்துக்குரிய 'பாஜ்' எனும் பயங்கர, அபூர்வ ராஜாளிப் பறவையைக் கூண்டிலிருந்து விடுவித்துக் கையிலேந்திக் கொள்கிறார். முத்தமிடுகிறார். அதன் பாஷையில் ஏதோ சமிக்ஞையால் சொல்லுகிறார். அஃறிணைகளைப் பற்றி ஆய்ந்து, ஓலைச் சுவடிகளாய்க் குவித்த ஒப்பற்ற கலை போஜியாயிற்றே சரபோஜி!

அந்த ராஜாளிப் பறவையுடன் ஜெயவாசலுக்கு வந்த சரபோஜியை அனைவருமே ஆச்சரியமுடன் நோக்குகிறார்கள்.

ஒரு சூறாவளியைப் போல் சாம்சனை நெருங்கிய சரபோஜி, "இந்தா மேன்! நீ கேட்ட ராஜகாந்தி!" என்று ராஜாளியை நீட்ட, எரிச்சலுற்றுப் போன சாம்சனோ "என்னை கேலியா செய்கிறாய்?" என்று அந்த ராஜாளிப் பறவையை இடது கரத்தால் தட்டிவிட, மறுகணம்... மறுகணம்...

கண்களனைத்தும் இமைக்க மறந்தன.

தேகங்கள் சிலிர்த்துச் சிலையாகிப் போயின.

'பாஜ்' எனும் அந்த ராஜாளிப் பறவை, எடுத்த எடுப்பில் சாம்சன் முகத்தில் பாய்ந்து இரண்டு கண்களை எடுத்து வயிற்றுக்குள் விழுங்கி ஏப்பம் விட்டது. அத்துடன் விட்டதா? கொத்தோ கொத்தென்று அவனைக் கொத்துகிறது...

குழுமியிருந்த சாம்சனின் சிப்பாய்கள் துப்பாக்கிகளைத் தூக்கிச் சுட முனைந்தபோது...

கணீரென்று ஒரு கர்ஜனை கேட்கிறது:

"டேய், கும்பினிக் குரங்குகளா? ஒரு குண்டு அந்தப் பறவையின் மீது பாய்ந்தாலும் பல குண்டுகள் உங்களைப் பலியாக்கி விடும்! நான்தான்டா ராஜகாந்தி!"

கன்னங்கரேலென்றிருந்த அரபு நாட்டுக் கறுப்புக் குதிரையில் ஆரோகணித்தவண்ணம் தொலைவில் கையில் இரட்டைக் குழல் துப்பாக்கியுடன் காணப் பட்ட ராஜகாந்தியைக் கண்டு, சரபோஜியே கதிகலங்கிப் போனார் என்றால்...

ஏறத்தாழ இருநூறு கொள்ளைத் துணைவர்கள் துப்பாக்கி சகிதமாக ராஜகாந்திக்குப் பின்னே...

சாம்சனோ, "காப்பாற்றுங்கள்! காப்பாற்றுங்கள்!" என்று ராஜாளிப் பறவையின் தாக்குதலில் மீள முடியா மல் தவியோ தவியென்று தவித்துக் கதறுகிறான். உடலில் அம்பு துளைத்தது போன்று பறவையின் அலகு துளைத் துக் கண்கண்ணாய் ரத்தம் சொட்டுகிறது...

"டேய் சாம்சன்! என்னைப் பார்க்க உனது கண்கள் கொடுத்து வைக்கவில்லை! பாவம் செய்த கண்கள்! குரலையாவது கேள்! என் குறிஞ்சியிடம் எவரேனும் குறும்பு செய்யத் தொடங்கினால், ராஜகாந்தி ராட்சஸ காந்தியாய் விடுவான் என்று உன் கவர்னர் துரைக்குச் சொல்!" என்று கூறி நிறுத்திய ராஜகாந்தி, கரம்கூப்பி நின்ற குறிஞ்சியை நோக்குகிறான். அவளது கண்களில் அவமான ஊற்று!

"மகளே! நான் கும்பிடும் தெய்வம் நீ! நீ என்னைக் கும்பிடலாமா? இது உனக்கேற்பட்ட நல்ல சோதனை! இனி நேராது! மன்னர் சரபோஜி கலையுள்ளம் படைத்த காவலர்! உன்னைத் தக்க காவலுடன் அனுப்பி வைப்பார். பயப்படாதே. நான் எங்கிருந்தாலும் எனது ஆட்கள் உன்னைச் சுற்றிக் கொண்டிருப்பார்கள், வருகிறேன்!"

மையம் கொண்ட புயல் நகரை அழிக்காமல் கரையோடு சென்றது போல, ராஜகாந்தியின் வீரர்கள் புழுதியைக் கிளப்பிப் புயலைப் போல வேகமாகத் திரும்பிச் சென்ற னர்.

சாம்சனை இன்னமும் அந்த ராஜாளிப் பறவை விட வில்லை. ராமபாணமாய்த் துளைக்கிறது.

இராமாயணத்தில் ஜடாயு வதையைப் படிக்காதவர்கள் இங்கே ஜடாயு, சாம்சனை வதைப்பதைப் பார்க்கிறார்கள்.



இராமபாணமோ, இராவணன் உடலைத் துளைத்துத் துளைத்து, 'சீதை இருக்கிறாளா? இருக்கிறாளா?' என்று முழுவதுமாகத் தேடி, முடிவில், 'சீதை எங்குமே இல்லை' என்று திரும்பி வந்து கூறி, இராவணனின் மேன்மையை உணர்த்தியது.

இங்கே 'பாஜ்' பறவையின் அலகு அம்புவோ, 'குறிஞ்சி இங்கே இருக்கலாமா? இருக்கலாமா?' என்று குத்திக் காட்டி, கொத்திக் கொத்தி இம்சிக்கிறது.

கீழே விழுந்த சாம்சன் தரை மீனாய்த் துடிக்கிறான்.

"போதும் பாஜ்! போதும்! வா!" என்று சரபோஜியின் குரல் கேட்ட பிறகே அந்த அபூர்வப்பறவை, ரத்தாபிஷேகத் துடன் சரபோஜியின் தோளில் வந்து அமர்ந்தது.

"இவனைத் தூக்கிச் சென்று மருத்துவமனையில் போடுங்கள்! அடியெடுத்து வைத்தாய் விட்டது! இனி அடி போனால் என்ன? முடியே போனால் என்ன! ஒரு கலைச் செல்வியைக் காத்தோம் என்கிற கௌரவம் சரபோஜிக்கு இருக்கட்டும்! குறிஞ்சியை விருந்தினர் மாளி கைக்கு அழைத்துச் செல்லுங்கள்! மரியாதைகள் அவளது கால்களில் மண்டியிட வேண்டும். ஜாக்கிரதை!"

தோளில் சுமந்த ராஜாளிப் பறவையான 'பாஜ்' பறவை யுடன் அரண்மனையுள் நுழைகிறார் சரபோஜி!

குறிஞ்சியோ, "மன்னா நீ வாழ்க!" என்று மனமாரக் கூறிக் கரங்கூப்பி கண்ணீர் மல்கினாள்.

**பூ**பாளச் சக்கரவர்த்தி கிழக்கு திசையில், வேங்கடமகி என்கிற மாபெரும் இசைமேதை எழுதிய இசை நூலான சதுர்தண்டிப் பிரகாசிகாவைப் போலப் பொன்மேனி காட்டிப் பிரகாசிக்கிறான்.

நேற்று நடந்த நிகழ்ச்சியை அதற்குள் காற்றுத் தூதுவன் நான்கு திசைக் காதுகளிலும் ஓதி வைத்துவிட்டான்.

திருவிடை மருதூரிலிருந்தும் உடல்நலம் பாராது இள வரசன் சிவாஜி வந்துவிட்டான்.

நெஞ்சில் நெருப்பைச் சுமந்து கொண்டு திருச்சி யிலிருந்த கலெக்டர் நெல்சன் வந்துவிட்டான்.

---

* சீதை அவன் மனத்துள் புகுந்திருந்தால்தானே அவள் இருப்பதற்கு?

அரண்மனைக்கூடத்தில் அக்கினித் தேவன் போலமர்ந்து கொண்ட கலெக்டர் நெல்சன், "கூப்பிடு சரபோஜியை!" என்று கூச்சலிடுகிறான்.

ஒரு முழுமையான முடிவுக்கு வந்து விட்டவர் போல அரண்மனைக் கூடத்துக்கு வந்த சரபோஜி, ஒரு கணம் நின்று நெல்சனைக் கவனிக்கிறார்.

அரச தருமப்படி, சரபோஜியைக் கண்டதும் நெல்சன் எழுந்து 'சல்யூட்' – வணக்கம் செய்ய வேண்டும். அவ்விதம் செய்யாமல் அவன் அகம்பாவமாகவே அமர்ந்திருக்க, சரபோஜியின் சஞ்சலம் மேலும் தலைதூக்கிப் பயமுறுத்தியது.

ஒருவிதத்தில் அவர் பொம்மை ராஜன்தானே?

கலையின்பாலும், கலாதேவதையான குறிஞ்சியின் அழகின்பாலும் மயங்கியதோடல்லாது, மகனின் தலையின்பாலும் ஏற்பட்ட பயமல்லவா அவரை 'பாஜ்' பறவையை ஏவச் செய்தது?

இதோ நெஞ்சுத் துணிவோடு நெல்சன் மரியாதையின்றி கால் மேல் கால் போட்டு அமர்ந்து காணப்படுகிறான். இந்தச் சூத்திரதாரி என்ன சூழ்ச்சி செய்ய இருக்கிறானோ?

அந்த நேரம் பார்த்துத்தானா அந்த செய்தியும் வர வேண்டும்?

மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட சாம்சன் மரணித்து விட்டான்.

# இராகம் – 11



## *ராஜாளி

"நீங்கள் நடந்து கொண்டது எந்த தருமத்தில் சேர்த்தி?" என்கிறான் கலெக்டர் நெல்சன். சாம்சன் இறந்து விட்டான் என்கிற செய்தி வேறு எரிமலைகளாய் கண்களில் வெடிக்கின்றன.

"முதலில் நீ இப்படி நடந்து கொள்வது எந்தத் தருமத்தில் சேர்த்தி? உங்கள் யூனியன் ஜாக் கொடி கற்றுக் கொடுத்த மரியாதை இதுதானா?"

சரபோஜி எதிரே இருந்த ஆசனத்தில் அமர்ந்து கால் மேல் கால் போட்டுக் கொள்கிறார். "உங்களை இந்த மண்ணில் அனுமதித்தோமே அது எங்கள் பாவம்!"

இருவருமே ஆங்கிலத்தில்தான் பேசிக் கொள்கிறார்கள். சரபோஜியின் ஆங்கிலத்துக்கு முன்னே நெல்சன் ஆங்கிலம் நெல்லுமி; இது நெல்சனுக்கே புரிந்த நெப்போலியன் உண்மை.

---

* ராசாளி ராகம்தான். முன்னம் ராஜாளி என்ற பெயரில் வழங்கியது. இப்போதும் நாட்டைக் குறிஞ்சியை, நாட்ட குறிஞ்சி என்பது போல, கீரவாணியை, கீர்வாணி என்பது போல பல ராகங்கள் இலக்கணமறியாதார் வாயில் திரிந்து வழங்கவில்லையா? எத்தனையோ உதாரணம் சொல்லலாம். எல்லா ராகங்களுக்கும் அக்காலத்தில் சமஸ்கிருதத்தின் பொருட்டு அவசர அவசரமாகப் பெயர் வைக்கப்பட்டன.

"நீங்கள் எங்களைக் கேலி செய்கிறீர்கள்!" என்றான் நெல்சன், கர்ச்சீப்பால் நெற்றி வியர்வையை ஒற்றியவண்ணம்.

"உன் மரியாதை எதைக் காட்டுகிறது? சமீபத்தில்தான் காசி வரை சென்று திரும்பினேன். கல்கத்தாவிலிருக்கும் உங்கள் கவர்னர் ஜெனரலே என் முன் அமர நாணப் பட்டார். உன் திமிர் உனது காலின் முட்டியில் திருகு வலியைக் கொடுத்து இருக்கிறது!"

"நீங்கள் சாம்சனைக் கொலை செய்த கொலைகாரன். கொலைகாரனுக்கு மரியாதை தேவையில்லை."

"நான் கொலை செய்தேனா?"

"நீங்கள் செய்தால் என்ன? நீங்கள் வளர்க்கும் பறவை செய்தால் என்ன?"

"சிறையிலடைக்க வேண்டியது பறவையை! கொண்டு வரட்டுமா?"

"வேண்டாம், வேண்டாம்." அதிர்ந்து போனான் நெல்சன். அவன்தான் அதன் ராட்சஸ சொரூபத்தை ஆங்கிலச் சிப்பாய்கள் வருணிக்க வியர்த்துக் கொட்டிப் போனானே!

அப்போது ராஜாங்க அமைச்சர் சர்க்கேல் ராஜேஸ்ரீ ராமோஜி அங்கு வந்து செய்தி சொன்னார்: "மன்னர் பெருமானார் சமூகத்துக்குச் சென்னை கவர்னர் செய்தி அனுப்பி இருக்கிறார். அவர் நாளை வருகிறாராம். அது வரை கலெக்டர் தமது மரியாதையைக் காப்பாற்றிக் கொள்ளும்படி உத்தரவு!"

சர்க்கேல் உத்தரவுக் கடிதத்தை நீட்ட, அதனைப் பெற்றுப் பார்த்த சரபோஜி, கலெக்டர் முகத்தில் வீசினார்.

கடிதத்தைப் படித்து முடித்த நெல்சன், மறுகணமே எழுந்து அரசு முறைப்படி 'சல்யூட்' செய்ய, சரபோஜி கலகலவென்று நகைக்கிறார்.

"மிஸ்டர் நெல்சன்! இந்தப் பாழும் தமிழர்களிடையே ஒற்றுமை இல்லாத குறையால் நாயக்கர் முதல் என் போன்ற மராட்டியன் வரை அதிகாரம் செலுத்தி விட்டோம்! ஆயினும் நாங்கள் இந்தியர், ஒத்துப்போய் விட்டோம்! இப்போது இந்தியர்க்குள்ளேயே ஒற்றுமை குலைந்ததால் இங்கிலாந்துகாரர்களாகிய நீங்கள் நுழைந்து விட்டீர்கள்! இது ஒரு சாபக்கேடு! கவர்னர் துரை வரட்டும். உன்னை திருநெல்வேலிக்கு அனுப்ப ஏற்பாடு செய்கிறேன்! திருச்சியில் திருப்பள்ளி எழுச்சி பாடுவது போன்ற ஜபம் அங்கு செல்லாது! சரித்திரம் படைத்த மறவர்குடி மக்களும் களம் கண்ட மாவீரக் கம்பளத்தார்களும் வாழும் பிர தேசம்! உங்கள் தோல் அவர்களுக்குக் கம்பளமாகவோ சம்பளமாகவோ ஆகிவிடக் கூடாது!"



"ஹைநெஸ்! ஹைநெஸ்! வேண்டாம்! வேண்டாம்!"

"நீ போகலாம்!"

நெல்சன் நெஞ்சு தடுமாற விடைபெற்றான்.

அதுவரையிலும் தொலைவில் நின்று கவனித்த இளவரசன் சிவாஜி, தந்தை முன் வந்தமருகிறான்.

"உடல்நலம் எப்படி இருக்கிறது சிவாஜி? நான் அங்கு வரத்தான் புறப்பட்டேன். இடையில் இப்படி ஓர் அசம்பாவிதம்! உன் மனைவி சைதாம்பாயும் வந்திருக் கிறாளா?"

சிவாஜி, முகம் சுருங்கக் குனிந்து கொண்டான். "அவளுக்குத் திருவிடைமருதூரே பிடிக்கிறதாம்!"

"இருந்து தொலைந்து விட்டுப் போகட்டும்! என்ன செய்வது? அக்காள் மகளாயிற்றே என்று கட்டி வைத்தேன். இப்படி அகங்காரியாக இருப்பாள் என்பதை யார்தான் எதிர்பார்த்தார்கள்? போகட்டும். எசவந்தராவ் ராமச்சந்திர ராவ் சூர்வே கடிதம் எழுதியிருக்கிறார். அவரது மகள் காமாட்சிபாய் ரொம்ப நல்ல பெண்! இரண்டாம் திரு மணத்துக்கு நாள் குறிக்குமாறு சொல்லி இருக்கிறேன்."

சிவாஜி சூன்யமாய்ச் சிரிக்கிறான்.

"என்ன சிரிப்புடா இது?"

"அப்பா! கல்யாணமாவதற்கு முன்பு சைதாம்பாபாயும் நல்லவளாகத்தானிருந்தாள். காரணம் அப்போது அவள் எட்டு வயதுச் சிறுமி; நான் பத்து வயதுச் சிறுவன்! இப்போதைய சைதாம்பாபாய் சைத்தானாக இருக்கிறாள்."

"அதனால் என்ன? இப்போது நீ இருபது வயது வாலிபன்! காமாட்சி பதினெட்டு வயது அழகி, தெரிந்து ஏற்பாடு செய்கிற திருமணம் இது."

"அவசரம் வேண்டாம், அப்பா! கொஞ்சம் அவகாசம் கொடுங்கள்!"

"அவகாசத்துக்கு அவசியமே இல்லை! வாக்குக் கொடுத்தாய் விட்டது!"

"அது சரியப்பா! இப்படி ஓர் ஆங்கில அசம்பாவிதம் தேவைதானா?"

"இது சரபோஜி விஷயம்! உனக்கு தேவையில்லாதது. போய் ஓய்வு கொள்!"

சிவாஜி, மௌனமாய் மேன்மாடம் நோக்கி நடந்தான்.

அன்றைய மலையமாருதம் பாடும் மாலைப்போது...

சரபோஜி மன்னர், ஓர் இருபது வயது குறையுமளவுக்கு அலங்கார மன்மதனாய் குறிஞ்சியைக் காணப் புறப்படுகிறார்...

தொலைவில் நின்று கவனித்த அருமை மனைவி அகல்யாதேவி – சிவாஜியைப் பெற்ற இரண்டாம் மனைவி – கணவரின் கலைகளை அறிந்து வைத்திருப்பது போலக் கல்யாண குணங்களையும் அறிந்து வைத்திருப்பவள்.

குறுக்கிட்டாள்: "குறிஞ்சியைப் பார்க்கத்தானே புறப்பட்டீர்கள்?"

சரபோஜியின் விழிகளில் அலமரல்.

"பிரபோ! அது ஒரு தேவதா விலாசம்! அந்த முகவரி உங்களுக்கு ஒத்துவராது."



அகல்யா தேவி மாராட்டிய மொழியில் கவிதா ஞானம் பெற்றவளாதலால் கவிதையாகவே பேசிக் கணவனை நோக்குகிறாள்.

"அகல்யா!" – சரபோஜியின் சினக்குரல்.

"நீங்கள் என்னைக் கல்லாகச் சபித்தாலும் கவலையில்லை! நீங்கள் புல்லாகிவிடக் கூடாதே என்றுதான் பொருமுகிறேன்! வேண்டாம் ஒரு முக்தாம்பாளைக் காதலித்துச் சாபம் பெற்றது போதும்!"

சரபோஜி முக்தாம்பரி ராகமாய்ச் சிரிக்கிறார். "அகல்யா! நான் குறிஞ்சியின் சங்கீதத்தை நேசிக்கிறேன்!"

"அவ்வாறெனில் நானும் வருகிறேன். இருவருமே சென்று கௌரவித்துத் திரும்பலாம்."

அப்போது மாடிப்படிகளிலிருந்து ஒரு குரல் கேட்டது. அது சிவாஜியின் குரல்; ஆனாலும் அது விதியின் குரல். "அப்பா! நானும் வருகிறேன்; அந்த சங்கீத தேவதையை நான் மட்டும் தரிசித்துக் கௌரவிக்கக் கூடாதா?"

இதில் என்ன தவறு என்றே மூவரும் புறப்பட்டனர்.

**அ**டுத்த நாள், ஆதவன், ஆகாயமார்க்கத்து அக்கினி ராஜாளிப் பறவைபோல கிழக்கிலிருந்து பறந்து வருகிறான்.

சென்னையிலிருந்து மேதகு கவர்னர் வாஷிங்டன் வந்தாய் விட்டது. விசாரணை நடத்தியதில் தவறு முழுவதும் கலெக்டர் நெல்சன் முகத்திலிருந்து வெளிப்பட்டது. இவ்வளவு பெரிய உதாசீனம் ஏற்பட்டிருக்கக் கூடாது. காரணம் காமம்! இருவருமே காமத்தின் சொக்கட்டான் ஆடியிருக்கிறார்கள்; சாம்சன் வெட்டுக் காயாகி விட்டான். அவ்வளவே!

மகாவித்துவான் ஆனைய்யாவின் சாட்சிதான் கவர்னரையே கண்கலங்கச் செய்து விட்டது. வாஷிங்டன் துரை, குறிஞ்சியிடம் நேரே சென்று மன்னிப்பு கேட்கவும் செய்த காட்சி, ஒரு காவிய ரசனைக் காட்சிதான்.

தஞ்சை பிரதிநிதியான – ரெஸிடென்டான ஜான் ஃபைஃபை அதிகமாகவே கடிந்து கொண்டார் கவர்னர்

வாஷிங்டன். அவர் முடிவில் கேட்டுக் கொண்டது இதுதான்; "இப்பேர்ப்பட்ட தேவதை பாடி, நான் கேட்க வேண்டுமே!"

ஐயோ! குறிஞ்சி ஒப்புக் கொள்ள வேண்டுமே! ஆனையயா, பொன்னையா, சிவனாந்தம் எடுத்துச் சொன்னதன் பேரில் அவள் ஒப்புக் கொண்டாள். அவளா ஒப்புக் கொண்டாள்? விதியாகிய காலதேவனல்லவா ஒப்புக் கொள்ளச் செய்திருக்கிறான்!

ஆனால் ஒரு நிபந்தனை. ஒரு ராகம்; ஒரே பாட்டு அவ்வளவே!

கவர்னர் வாஷிங்டன் மறுக்கவில்லை. தேவவரம் பெற்ற குரலாமே! அந்தத் தேவ கானத்தைக் கேட்டால் போதாதா?

கச்சேரிக்கான அரங்கவமைப்பை ஜான் சற்று வித்தியாசமாகவே கவனிக்கலானான். சங்கீத மகால் எதிரொலிக்கேற்ப, தனது எதிரொலிப் பாறைப் பலகை களைப் புள்ளிக் கணக்கிட்டுப் பொருத்தி இருந்தான்.

குறிஞ்சிக்கு அப்போது பார்த்து ஓர் அபூர்வ அபிப் பிராயம் தோன்றியது. இன்று பாடப்போகும் ராகத்துக்கு நாகசுரம் தவில் இருந்தால்...

ஞானசுந்தரத்தை அழைத்து, ஆலோசித்து அவனையே அனுப்பி வைத்தாள். "ஞானி! நாகசுர மகாவித்துவான் ராமலிங்கம் பிள்ளையும் தவில் சக்கரவர்த்தி வலங்கைமான் சுந்தரம் பிள்ளையும் தஞ்சையிலிருப்பதாகக் கேள்வி. அவர்களைச் சந்தித்து நான் கேட்டுக் கொண்டதாகச் சொல். நாம் பாடப்போகிற ராகம் நாடகப்பிரியாவில் பிறந்த ராஜாளி ராகம் என்றும் அதன் ஆரோகணம் சரிமபதநிச்; அவரோகணம் ச்தபமகரிச என்றும் சொல்லுங் கள். அவர்களுக்குத் தெரியாமலிருக்கப் போவதில்லை. என்றாலும் எந்த ராஜாளிப் பறவை என்னைக் காத்ததோ அந்த ராஜாளியை நான் கௌரவிக்க இந்த அபூர்வ ராகத்தைத் தேர்ந்தெடுத்தேன்."

"நல்ல தேர்வு குறிஞ்சி!"



ஞானசுந்தரம் உடனடியாகப் புறப்பட்டுச் சென்றான்.

**வி**ளக்குகள் கண்சிமிட்ட இராக் கதாநாயகி நிலாப் பேரழகி, நட்சத்திரத் தோழிகள் ஒளிச்சுருதி கூட்ட பவனி வந்து கொண்டிருக்கிறாள்.

அரண்மனையில் சங்கீதத்துக்கென்றே சங்கீத சிரோன் மணியான சரபோஜி கட்டிய சங்கீத மகாலில் அரசப் பிரதானம் வாய்ந்தவர்கள் மட்டுமே அனுமதிக்கப் பெற்றனர். அப்படியும் மகாலே வெடித்திடுமளவுக்குக் கூட்டம். வெளியே வீரப் பெரு மக்கள்; ஆங்கிலச் சிப்பாய்கள் உட்பட பலரும்!

குறிஞ்சி அன்றைக்குப் பூலோக மேனகையாகத் தன்னை அலங்கரித்துக் கொண்டு மேடைக்கு வந்திருக்க வேண் டாமே என்பது ஞானசுந்தரத்தின் கருத்து. அவள் என்ன செய்வாள்? விதியின் கருத்து அதுவாக இருக்கிறபோது...

அரங்கில் இருவரும் அமருகின்றனர்.

பக்கவாத்தியங்கள்; வழக்கத்துக்கு மாறுபட்டு முன்னே திருவாடுதுறை ராமலிங்கம்பிள்ளை உடம்பெல்லாம் பொன் மயமான அலங்காரத்துடன் நாகசுரம் ஏந்தி அமர்ந்து கொண்டிருக்கிறார்.

இடதுபுறமாக வலங்கைமான் சுந்தரம்பிள்ளை ஆஜானு பாகுவாகத் திறந்த மார்பில் நவரத்தினமாலை புரள, கனத்த பொற்சங்கிலி மின்ன, கைகளில் பொற்கடையம் புலமையைக் காண்பிக்க, இடது கரத்தில் குச்சி ஏந்தி அமர்ந்து காணப்படுகிறார்.

முன்வரிசையில் சரபோஜி மன்னரும், கவர்னர் வாஷிங் டனும், இளவரசன் சிவாஜியும். பின்னே அரச குடும்பத் தினர், ராணிகள், பெண்கள், அக்காமார் எனப்பட்ட தோழிகள் தனிமையில் அமைக்கப்பட்ட மாடத்தில் அமர்ந்து இருந்தனர்.

முன்கூட்டியே தனது புதியமுறை இசைத்தோரணையை நாகசுர, தவிலுக்கு இரகசியமாய்க் கட்டித் தொங்க விட்டிருந்தாள், குபேர அழகு படைத்த குறிஞ்சி.

குறிஞ்சியின் அழகின் அக்கினிப் பிரகாசத்திலேயே பலர் எரிந்து கொண்டிருந்தனர்.

சரபோஜியோ சபலபோஜியாகிக் கொண்டிருந்தார். இளவரசன் சிவாஜிதான் சஞ்சலபோஜியாகவே மாறி விட்டான். இது அழகு சொன்ன பாயிரம்! இன்னும் இசை சொல்லப் போவதோ ஆயிரம்! இதுதான் விதியின் ஏற்பாடு போலும்! அது சொல்லப்போகிற தீவிரம்?

தம்பூர் ஒலிக்கிறது. அதுதான் இசைக் கருவிகளின் ஓம்கார வாத்தியம். குறிஞ்சி, தனது இஷ்டதெய்வமான பிரத்தியங்கிரா பத்திரகாளியைக் கண்மூடிப் பிரார்த்திக் கிறாள். அதே நேரத்தில் ஸ்ரீ சங்கராச்சாரியப் பெருமான் குற்றாலக் குறிஞ்சி ராகத்துக்கு மட்டுமே பயன்படுத்த சொன்ன 'க்ஷும்' மந்திரத்தை ஜபித்தும் கொள்கிறாள். அவள் யார் என்பதை அங்கு நிரூபிக்காமல் வேறு எங்கு நிரூபிப்பாள்?

தவில் பிள்ளைவாளுக்கு குறிஞ்சியின் சமிக்ஞை... 'நான் சொன்னபடி நடக்கட்டும்?'

வலங்கைமானா? வலம்புரிமானா?

இடதுகரத்துக் குச்சியில் ஒருவித ரீங்காரமாக ஒலி எழுப்பித் தொப்பியை 'தொப்'பென்று ஒரு தட்டுத் தட்ட....

ராஜாளி ராகத்து 'ரி' என்கிற ரிஷபத்தில் குறிஞ்சி சுருதி சேருவாளா? சட்சமத்திலல்லவா ஆரம்பிக்க வேண்டும்?

குரல் ரிஷப சுருதியில் இழைகிறது. அதுவும் சுத்த ரிஷபம்... சுத்தமாக இழைகிறது... தேனாய்க் குழைகிறது...

மத்திம பஞ்சமத்தை விட்டு, குரல் தைவத (த) நிஷாதத்தில் (நி) சதுஸ்ருதியாகவும் கைசிகியாகவும் மாறி மாறி இருக்கிறபோது நாககரம் உடன் இழைந்து அவள் தைவதத்தில் நின்றால் அது நிஷாதமாகவும், அவள் நிஷாதத்தில் நின்றால் அது தைவதமாகவும்...

குறிஞ்சியின் புதிய முறை ஏற்பாடுதான்...

இப்போது காந்தாரம் (க) அவரோகணத்துக்குரிய மூர்ச்சனை...



சாதாரண காந்தாரமானாலும் ராஜாளி ராகத்து அசாதாரணமே அதில் அடங்கி இருந்தது.

இடையில் மயூரி வாத்தியம் காந்தாரத்தைத் தொட, பிடிலும் (வயலின்) குழலும் ஆரோகணம் அவரோகணம் சொல்ல, மிருதங்கமும், கடமும், கஞ்சிராவும், டோலக்கும் முகர்சிங்கும் ஒரு முத்தாய்ப்புத் தர, வெறும் நாககரம் மட்டுமே மேல் சட்சமத்தில்...

தவில் விளாசிக் கட்டுகிறது...

பின்...

அமைதி...

தம்பூர்... மயூரி மட்டும்...

ஆ! குறிஞ்சி அந்த அபூர்வராகமான ராஜாளியைப் பாடுகிறாளா? அவள்தான் ராஜாளியாக மாறுகிறாளா? இல்லை, அரண்மனையில் இருக்கிற ராஜாளிப் பறவை யைத்தான் அழைக்கிறாளா?

இடையிடையே ஞானசுந்தரமும் ஆண் ராஜாளியைப் போல எதிர்மறை ஆலாபனை. அவன் ஆரோகணமாய் மேல்நிலையில் பிர்க்காக்களை உதிர்த்துச் சட்சமத்தில் நிற்கிறபோது, குறிஞ்சியோ அவரோகணமாகப் பிர்க்காக் களை உதிர்ப்பாள். அவன் சுருதியில் இழைந்து நிற்கிற வரை அவள் பிர்க்காக்களை உதிர்த்துக் கொண்டே இருப்பாள், கொற்கை முத்துக்கள் சிதறுவனபோல!

திருவாடுதுறை ராமலிங்கம்பிள்ளை அசந்து போனார். இது குரலா? நாககரமா?

இப்போது அவர் கைவரிசையைக் காட்டுகிறார். நாககரம் ராஜாளியாக இறக்கைகளை விரிக்கிறது. புல்லாங் குழல் இடையிடையே ராஜாளிப் பறவைகளின் ஊடலைப் போலக் குரல் கொடுக்கிறது.

மயூரி வாத்தியமோ ராஜாளியிடமும் இந்த ஊடல் ரசனையுண்டோ என்று வியப்பதுபோல காந்தார மூர்ச்ச னையில் அகவுகிறது. அதற்கு ஊடல்தான் தெரியும்

(மயிலுக்கு); கூடல் தெரியாதே! இறைவன் படைப்பிலேயே மயில்களின் போகப் படைப்புதானே புரிந்து கொள்ள முடியாத விசித்திரம்!

ராக ஆலாபனையை ஒரு ராஜாளியின் கம்பீரம் போல முடிக்கிறாள் ராஜ கம்பீர அழகு படைத்த குறிஞ்சியெனும் கோதை நல்லாள்.

அதுவரை எதிரொலித்த அந்தச் சங்கீத மகால் அமைதியோ அமைதி. கைதட்டலாவது? யாருக்கு சுய பிரக்ஞை இருந்தது? இதுவல்லவோ சங்கீதம்!

ஆலாபனை முடிந்ததும் ஏனைய கச்சேரிகளில் வழக்கமாக வயலின் தொடர்ந்து அறுக்கும்! இந்த வழக்கத்தை குறிஞ்சி எப்போதாவதுதான் மேற்கொள்வாள். தந்தி வாத்தியங்கள் மட்டுமல்லாது தாளவாத்தியங்களும் அவளது ஆலாபனையுடனேயே அலங்காரம் பேசி விட்டனவே; நாகசுர தவிலைப்போல! இதுதான் குறிஞ்சி சங்கீதம். இதுவல்லவோ மரபுவழி. மகாவித்துவான்களை மனக்கலக்கமுறச் செய்தது! மக்களைக் கவர்ந்தது! பலர் தொழிலைப் பாதிக்கச் செய்தது!

பல்லவியைத் தொடங்குகிறாள்;

**ராஜாளியே! ஓ... ராஜாளியே! – என்னை**
**ரட்சிக்க வந்த ராஜாளியே!**

பல்லவியா? பலருடைய பல்லைப் பிடித்துப் பார்க்கிறப் 'பல்'அவியா?

வாஷிங்டன் வாய்பிளந்து நோக்குகிறார்.

இந்த நேரத்தில் அந்த அற்புதம் நிகழ்ந்தது.

சங்கீத மகாலை அடுத்திருந்த அரண்மனையறைக் கூண்டில் அதுவரை மயங்கி இருந்த அந்த அபூர்வ ராஜாளிப் பறவை, இப்போது சிறகுகளை விரித்துப் படபடத்து விடுவிக்கச் சொல்லி அடம் பிடிக்கிறது; கத்துகிறது; கூண்டையே அதாகதம் செய்கிறது...

அக்காமார் பெண்களில் ஒருத்தி ஓடிவந்து ராணி அகல்யாதேவியிடம் கூற, ராணி சர்க்கேலுக்குச் செய்தி



யனுப்ப, சர்க்கேல் சரபோஜியின் காதுகளில் ஓத, சரபோஜி பேரதிர்ச்சிக்குள்ளாகி எழுந்தோடுகிறார். அவையில் சின்ன பரபரப்பு...

ராஜாளி கூண்டை நாடிய சரபோஜி அதை சமிக்ஞையில் வினவ, அது அமைதியாக நின்று கேட்பதாவது? என்னைக் கூண்டிலிருந்து விடுவி என்பது போன்ற அதாகதம்...

ஏனிந்த அதாகதம்?

அது கத்துகிறது...

என்ன உற்பாதமோ? பிரகதீஸ்வரா என்று கூண்டை திறந்து விட்டார் சரபோஜி.

ராஜாளி, ராட்சஸ வேகத்தில் பறந்து செல்வதைப் பின்தொடர்ந்து சரபோஜியும் ஓடுகிறார். என்ன நடக்கப் போகிறது?

# இராகம் – 12



# போகலீலா

சங்கீத மழையில் அந்தச் சங்கீத மகாலே நனைகிறது.

ஆனால் இளவரசன் சிவாஜி?

தெப்பமாக, தெப்பமாக, தெப்பமாக...

ஓ... குறிஞ்சி, குறிஞ்சி என்ற அவனது உள்மனக் குகையிலிருந்து யாரோ குரல் கொடுப்பது அவனுக்கு நன்றாகவே கேட்கிறது. உற்றுக் கேட்டதில் அது யாருடைய குரலோ வல்ல; தனது குரல்... தனது குரல்...

அவன் ஆங்கிலம், மராட்டியைவிட தமிழை ஓரளவு அதிகமாகப் படித்தவன்...

கம்பன் சொன்ன வரிகள் நினைவுக்கு வருகின்றன...

'முல்லையைக் குறிஞ்சியாக்கி, மருதத்தை முல்லையாக்கி' என்ற வரியுடன் கூடிய பாடல்...

சே, சே! குறிஞ்சியைக் குறிஞ்சியாக்கி குறிஞ்சியையே குறிஞ்சியாக்கி, குறிஞ்சிதான் குறிஞ்சி என்றால், குறிஞ்சியன்றோ இக்குறிஞ்சி...

மனம் இவ்வாறு பேதலிக்கிறது...

மண்டபமோ கீதமாய், மக்களோ ரசனையாய், விண்டதெல்லாம் இசையல்ல, கொண்டதெல்லாம் கலையல்ல, இதுவன்றோ இசை! இதுவன்றோ கலை?



தேம்பிழி மகரயாழியின் வண்டுகள் இனிது பாட மருதம் வீற்றிருக்குமாதோ! – இவை கம்பநாடான் கற்கண்டுச் சொற்கள்.

இங்கே...

'தேவதைகள் வன்மம் கொள்ள, தேனெல்லாம் 'எட்டி'ப் போக, மூவகைக் கனிச்சாறு முக்காட்டில் புளித்துப் போக, இவன் தேம்பிழி மகரயாழே தீந்தமிழ் மகளாய்ப் பிறந்து, வண்டுகள் வெட்கி ஓட, குறிஞ்சி வீற்றிருக்குமாதோ' வென்றல்லவா தமிழிசையின் வீச்சிலக்கணத்தை மூச்சாய் முழங்குகிறாள்!

காதல் மயக்குற்ற சிவாஜியின் கணிதத்தைக் காலம் கணிக்கிறதா? குறிஞ்சியின் கணிதத்தில் குருவும் சனியும் எங்கிருக்கிறார்கள்? எப்படியிருக்கிறார்கள்? என்பனவற்றைக் கவனிக்கிறதா? புதன் இருக்க வேண்டிய இடத்திலிருந்து உச்சம் பெற்று குருபார்வை பெற்றதால் இந்த நிலையா? ஆனால் சிவாஜியின் எட்டாம் வீட்டுக் காதல் கிரகம் எவ்வாறு இருக்கிறது?

ராட்சஸ வேகத்தில் மண்டபத்துள் நுழைந்த அந்த அபூர்வ ராஜாளிப் பறவையைக் கண்ட அனைவருமே பயந்து கத்தி விட்டனர். வாஷிங்டன் தனது இடுப்பு உறையிலிருந்த கைத்துப்பாக்கியைத் தூக்கிவிட்டார். ஆனால் குறிஞ்சி?

ஆவேசம் கண்டவளைப்போல இடது கரத்தை நீட்டித் தடுக்கும் பாவனையுடன் 'நிதாநி, நிதாநி, ச்தா, ச்தா' என்று ராஜாளியின் மூர்ச்சனையை இசைக்க...

ராட்சஸ வேகத்தில் வந்த ராஜாளி, ரசனையின் தேவ பறவையாய் – அசுணமா பறவைபோல் மயங்கி விழாது அமைதி கண்டு, குறிஞ்சியின் மடியில் சென்று குந்திய காட்சியைக் காண வேண்டுமே!

தேவகானம் என்பதே பூதகணங்களையே பூமாலையாக்குவதாயிற்றே!

அஃறிணை ராஜாளியே இவளது சங்கீதத்துக்கு அடிமை சாசனம் வரைகிறபோது கொள்ளைகாரனானாலும் ராஜ காந்தி உயர்திணையல்லவா?

கற்பனை செய்து பார்க்கிறார் கவர்னர் வாஷிங்டன்!

பாடி முடித்த குறிஞ்சி, பரவசமாய்க் கரங் கூப்புகிறாள்.

மண்டபமே இடிவதுபோலக் கரவொலியும் வாழ்த் தொலியும்!

ராஜாளிப் பறவையை குறிஞ்சி தடவிக் கொடுக்கிறாள். மானத்தைக் காத்த பறவையல்லவா? அது அவளுக்கு முத்தமிட்டது. 'ஓகோ'வென்று பாராட்டுக் குரல் விடுத் தார் வாஷிங்டன்.

ராஜாளியை சரபோஜியிடம் ஒப்படைக்கிறாள் குறிஞ்சி.

சரபோஜியின் சபலம் 'உன்னையும் என்னிடம் ஒப்ப டைக்க மாட்டாயா?' என்பது போலக் கவனிக்கிறது.

சிவாஜியோ...

கண்களில் நீர் திரையிட குறிஞ்சியை நெருங்குகிறான். "குறிஞ்சி! குறிஞ்சிப்பூ பன்னிரண்டு ஆண்டுகட்கு ஒரு முறை பூக்கும்! நீ பன்னீராயிரம் ஆண்டுகளுக்கு ஒருமுறை பிறப்பவள்! நான் கம்பனுக்குப் பிறகு ரசித்தது உனது கானம்தான்!"

தொண்டையில் ஒரு சின்ன அடைப்பு. சிவாஜி மேலும் அங்கு நில்லாது கம்பீரமாக நடந்தான். இன்னும் நின்றால் அவனது இதயம் வெடித்துவிடுமே! இந்த ரகசியத்தை யாரே அறிவர்? விதியாகிய சித்திரக்காரன் வானத்தை அண்ணாந்து பார்த்து, பூமியைப் பிளந்து தாறுமாறாக வரைந்துவிட்ட காதலோவியத்தை குறிஞ்சியும் அறிய மாட்டாளே! பூமியில் போட வேண்டிய கோலத்தை வானம் நோக்கி நிமிர்த்திய விதியின் விசித்திரம் இது!

வாஷிங்டன் பிரபு, குறிஞ்சியை வஞ்சனையின்றிப் புகழ்ந் தார். தான் கொடுத்தால் மறுப்பாளோ என்று எண்ணிய சரபோஜி, வாஷிங்டன் மூலம் ஒரு தங்கத் தாம்பாளத்தை அன்பளிப்பாகத் தர, குறிஞ்சி மறுத்தாளில்லை.

அப்போது வாஷிங்டன் பிரபு இட்ட ஆணை – பிரத்தி யேகப் பிரகடனம் – அண்டசராசரங்களையும் அதிரச் செய்தது.



"குறிஞ்சி ஓர் அபூர்வப் பிறவி! அவளது கலை, பிரபஞ் சத்தின் பிரசாதம்! இவளைக் காப்பது தமிழ் மண்ணின் கடமை மட்டுமல்ல; இந்திய மண்ணின் கடமை! நான் இங்கிலாந்து ராணியார்க்கு இது குறித்து எழுதுவேன்!"

சரபோஜியின் நெஞ்சில் அதுவரை இருந்த கொஞ்ச நஞ்ச சபலம்கூட அத்துடன் அழிந்து போயிற்று. இனி நினைத்து பார்க்கலாமா?

நெல்சன் கலெக்டர் குறிஞ்சியின் நிழலைத் தொட்டு வணங்கினான்.

மறுநாள்...

தஞ்சையரண்மனையில் தடபுடலான விருந்து. குறிஞ்சி யின் பொருட்டு வாஷிங்டன் துரையும் சைவ உணவை மேற்கொண்டார். மதுவைத் தொடவில்லை. மனமகிழ் வுடன் உடனிருந்து குறிஞ்சியை வழிகூட்டி அனுப்பி வைத்தார்.

புறப்படுகையில்...

ராணி அகல்யாதேவி தனது கழுத்திலிருந்த நவரத்தின கண்டியை எடுத்து குறிஞ்சியின் கழுத்தில் போட, மறுத் தாளில்லை.

தொலைவில் இளவரசன் சிவாஜி, குறிஞ்சி ராகமாய்ச் சிரிக்கக் கண்டு, அவனருகே சென்ற குறிஞ்சி, "நீங்கள் ஏதேனும் தர விரும்புகிறீர்களா?" என்று கேலிப் புன்னகை யுடன் வேண்டுமென்றே குறும்பாகக் கேட்க, சிவாஜி சொன்னான்:

"நான் கொடுக்க விரும்பவில்லை; பெற விரும்புகிறேன்!"

"என்ன?"

"நீ குற்றாலக் குறிஞ்சி ராகம் பாட நான் கேட்க வேண்டும்! அதற்கு நீ கேட்பது நூறு சக்கரம்; நான் தர விரும்புவது ஆயிரம் சக்கரம்!"

குறிஞ்சிக்கு அவனது நோக்கம் என்ன என்பது கொஞ்சம் புரியத்தான் செய்கிறது. அவள் சொன்னாள்: "இந்த ராகத்தை நான் விரும்பினால் மட்டுமே பாடுவேன்.

ஆகவே, அடுத்த மாதப் பௌர்ணமியில் மாயவரத்தில் கச்சேரி. அங்கு இதனைப் பாடுவேன். எனது அன்புக்குரிய ரசிகரான உடையார்பாளைய ஜமீன்தார் செய்த ஏற்பாடு! முடிந்தால் அங்கு வந்து கேட்கலாம். உங்கள் ஆயிரம் சக்கரத்தை ஏற்க நான் விரும்பவில்லை. ரசிகனாக வாருங்கள்; ரசனையோடு திரும்புங்கள்!"

அங்கே கூடியிருந்த மகாவித்துவான்கள் குமைச்சல் கண்டனர். இவளைத் தொலைத்து விட்டால் தாழ்விலை என்கிற கலைக்காய்ச்சல் கண்டனர்.

குறிஞ்சி, அனைவரிடத்திலும் விடை பெற்றுக் கொண்டு அவளது ஊரான ஒருத்தி நாடு நோக்கிப் பயணமானாள்.

ஒருத்தி நாட்டில் குறிஞ்சியை ஓகோவென்று வரவேற்கிறார்கள்.

இதற்குள் அனைத்துச் செய்திகளையும் அவர்கள் செவி மடுத்து இருந்தார்களே! ஓங்கு புகழ் வரவேற்பு என்றுதான் சொல்ல வேண்டும்.

வரவேற்பை ஏற்று, எல்லாரையும் வணங்கித் தனது மாளிகையை அடைந்தாள்.

ஒருத்தி நாட்டுச் சரித்திரமே ஒரு காலத்திய சரபோஜியின் காதலி முக்தாம்பாளின் வீங்கு புகழ் சரித்திரம். இப்போது குறிஞ்சியால் அது ஓங்கி புகழ்ச் சரித்திரமாக விளங்கத் தொடங்கிவிட்டது.

இரு தினங்கள் வரை அமைதியாகப் பூரண ஓய்வு கண்டாள் குறிஞ்சி.

ஞானசுந்தரம் மட்டும் தனது காதலும் கனவும் கைகூடாமல் போய்விடுமோ என்று கண்ணீர் மல்கவும் செய்தான். நாளுக்கு நாள் குறிஞ்சியின் செல்வாக்கு ஓங்குவதைக் கவனிக்க, நாம் லாயக்கற்றுப் போய்விடுவோமோ என்கிற வேதனை நெற்றிப் பொட்டில் விண் விண்ணென்று தெறிக்கத்தான் செய்தது.

குறிஞ்சி, ஒரு நடை கும்பகோணம் சென்று ஸ்ரீ ஆசார்யாள் பெருமானைத் தரிசித்துவிட்டு வரலாமா என்றும் நினைத்தாள். ஏற்பட்ட இடர்பாடு அப்படி. ஆனால், சுவாமிகள் காஞ்சியிலிருப்பதாக அறிந்து ஓலையனுப்பி வைத்தாள். ஏற்பட்ட இடர்களை அதில் எழுதியனுப்பி இருந்தாள்.



ஒருவாரத்தில் காஞ்சிமா முனிவர் நாராயண ஸ்மிருதி ஆசீர்வாதத்துடன் பிரசாதங்களை அனுப்பி இருந்தார்.

ஒரு புலைச்சிக்கு இப்பேர்ப்பட்ட பெருமைகள் என்பன அக்காலத்தே அத்திப்பூ அதிசயம். அவளால் தாழ்த்தப்பட்ட மக்களுக்கே ஒருதலை நிமிர்ந்த பெருமை! நந்தனுக்கு அடுத்து இந்த நாயகி! அவர் பக்தி வயல்! இவள் இசைப் பண்ணை. இரண்டுமே இறைவனிடம் இரண்டறக் கலக்கிற அத்வைத மார்க்கங்கள்தாமே?

குறிஞ்சி எனும் அபூர்வப் பூவைப் பறிக்க முடியாமல் போய்விடுமோ என்று ஞானசுந்தரம் நாளுக்கு நாள் மனம் குன்றிப் போனான். இதனை குறிஞ்சியும் குறிப்பாலுணர்ந்துதான் வந்தாள்.

அன்றிரவு உண்டு முடித்து இருவரும் மேன்மாடத்தில் அமர்ந்து *இசை சர்ச்சையில் மூழ்கினர். இன்னும் சில ஆண்டுகளில் இந்த அரிய பெரிய கலை அழிந்து விடப் போகிறது என்பது மட்டும் குறிஞ்சியின் அசைக்க முடியாத தீர்க்கதரிசனமாக இருந்தது. எழுதி வைத்திருக்கும்

* இன்றைக்கு நோய்வாய்ப்பட்டிருக்கிறது நமது அரிய பெரிய இசைக்கலை. அதிலிருந்து விடுபடும் மார்க்கமென்ன? மருந்தென்ன? என்பதன் கண்டுபிடிப்பு குறிஞ்சி எனும் பாத்திரம். இவள் மூலம் நமது இசைக் கலையின் அருமை பெருமைகளைச் சுருக்கமாகவாவது வாசகர்கள் அறிந்து கொள்ள வேண்டாமா? தமிழை முன்னெடுத்துச் செல்லாதவரை, தென்னிசையாம் தமிழிசை - சங்கீதம் - கச்சேரிகளில் களைகட்டாது. ஏதோ சில தலையாட்டிகளுக்கு அல்ல சங்கீதம். அது மக்களை ஈர்க்க வேண்டும். ஈர்ப்பு சக்தி இல்லாத கச்சேரி உப்பு சப்பில்லாதது. எனவேதான் குறிஞ்சியைப் படைத்து அவள் மூலம் மார்க்கம் சொன்னேன். ஏற்றால் சங்கீதம் பிழைக்கும். மறுத்தால் மிச்சமாகப் போவது குத்து (திரை)ப் பாட்டுகள்தாம். இதனையும் மீறி நாய்க்கூச்சல் போன்ற மேலைச் சங்கீதம் மேடைச் சங்கீதமாகும். வசனக் கவிதைகளும், திரைப்பாடல்களும் கடவுளையொத்த தமிழ்க் கவிதைகளை அழித்து வருவனபோல்!

நூல்களெல்லாம் ஏட்டுப் பூசணிக்காய்கள் என்பது அவளது முடிவு. சங்கீதம் என்பது எழுதிப் புரிய வைக்கிற இலக்கியமா? அது ஓர் ஒலிக்கலை; ஒப்புயர்வற்ற ஞானக் கலை; நெற்றியில் எழுதி வைக்கக்கூடிய தெய்வீகக் கலை!

தியாகராஜ சுவாமிகள் எழுதிய பாடல் நினைவுக்கு வருகிறது...

'சீதா வரா! சங்கீதக் ஞானமு, தாத்த ராயவால...'

'சீதையின் புருஷனே! ஸ்ரீ ராமா! சங்கீதக் கலையானது நெற்றியில் எழுதி வைத்தால்தான் வரும்...'

அவள் மதிக்கும் இசையின் ஞானபானுவாயிற்றே தியாக பிரும்மம்! இந்தப் பாடலைத் தேவகாந்தாரியில்– தெய்வகாந்தாரியில் பாடினார் என்றால் என்னே அவரது தீர்க்க தரிசனம்!

ஞானசுந்தரம் தம்பூரைத் துடைத்துக் கொண்டிருக்கிறான்.

"ஞானி! இந்தப் பல்லவி, அனுபல்லவி, சரணம் என்ற முறையைக் கண்டுபிடித்தவர் ஒரு ஞானிதான்! எப்போது இது உதயம் கண்டது?"

"ஒரு முன்னூறு ஆண்டுகளுக்கு முன்பு தாளப்பாக்க வாக்கேயர் கண்டுபிடித்ததாகச் சொல்லுகிறார்கள். சிலர் புரந்தரதாசர் என்கிறார்கள். முன்னவர் ஆந்திரர்; பின்னவர் கன்னடர். எனது கருத்து தமிழில் பாடிய முத்துத்தாண்டவர்."

"நான் கொஞ்சம் சங்கீத விவரத்தை ஞாபகப்படுத்திப் பார்த்துக் கொள்ளலாமா என்றுதான்!" என்றாள் குறிஞ்சி.

ஞானசுந்தரமோ, 'எனக்கு பல்லவியை (முத்தம்) மட்டுமே ஞாபகப்படுத்தி இருக்கிறாய்; அனுபல்லவி, சரணத்தை நீ ஞாபகப்படுத்த மறுக்கிறாயே!' என்று மனத்துள் பொருமிக் கொள்கிறான். இந்த நிலையில் சங்கீத விசாரமா?

"இசை எப்போது ஏற்பட்டது?"

"உலகம் தோன்றிய போதே ஏற்பட்ட முதல் மொழி சங்கீதம்! நாரதர், மதிவாணர், அநுமன் போன்றோர் இசை நூல்கள் எழுதியதாகச் செய்திதான். அபிநவகுப்தர் என்பவர் வெறும் ராகம் பாடுதலே இசை என்றார். பாடலும் தாளமும் ஞானமார்க்கமாகாது என்றார். ஆமாத்யர், சோமநாதர், அகோபலர் போன்றவர்கள் சங்கீதக் கலையை வளர்த்தனர். ஆனால், தமிழில் *இளங்கோவடிகளின் சிலப்பதிகாரமே ஆதி இசைநூல். சங்கீதமே முதலில் தமிழ் நாட்டில்தான் உதயம் கண்டது. பின்னால் அது படிப்படியாகப் பல்வேறு தேசத் தாக்குதலில் வளர்ந்தது. இளங்கோவடிகளுக்கு அடுத்து சங்கீதத்தை மேன்மைபடுத்தியவர்கள் †சங்கீத ரத்தினாகரம் எழுதிய சாரங்கதேவர். 72 மேளகர்த்தா கண்ட வேங்கிடமகி. இந்தத் தமிழர் எழுதிய நூல் சதுர்தண்டிப் பிரகாசிகா எனும் சமஸ்கிருத நூல்! இது இசை கலைக்கு மட்டுமே நான் கூறியது. நாட்டியக் கலை சாஸ்திரம் வேறு மாதிரியாகச் சொல்லும்!"



"நாட்டியம் காஷ்மீரத்திலிருந்து வந்ததாமே!"

"அறியாமை! நமது நெய்தல் நிலக் கலை இது! பரதவர்களாகிய மீனவர்கள் கடற்கரையில் ஆடி மகிழ்ந்த கூத்தே பரதக்கலை. பரதவர் ஆடிய கலை!"

"ஆமாம்; இந்தச் சரிகமபதநி என்ற ஏழு சுரங்கள் உற்பத்தி விநோதம்தான் வியப்பானது! ஏழே எழுத்தில் ஒரு மொழி இருக்குமானால் அது இசைமொழி! இந்த எழுத்துகள் எப்படி வந்தன?"

"எவராலும் அறுதியிட்டுச் சொல்ல முடியாது. சாஸ்திரம் சொல்வது இது. ச–ப, அசைவற்றதால் சக்தி தோற்றுவித்தாள் என்பன. ரிகமதநி என்பன சிவனின் சத்தியோசாதம், வாமதேவம், அகோரம், தற்புருடம், ஈசானம் என்கிற ஐந்து முகங்களிலிருந்து உதித்தனவாம்! நான் பிராமணனேயானாலும் இதனை ஏற்க மாட்டேன். 'சரிகமபதநி என்றேழெழுத்தாற்றனம்' என்று சிகண்டி எனும் தமிழிப் புலவர்

* சங்கீத மேதை வீணை டாக்டர் எஸ். இராமநாதன் எழுதியிருக்கும் 'சிலப்பதிகார இசை நுணுக்கம்' என்கிற நூல், பிரமிக்கத்தக்க பிரகாசமான ஆராய்ச்சி நூலாகும். இதனைத் தமிழர்கள் காப்பார்களாக.

† கி.பி. 1210–1247.

ஒரு வெண்பா செய்திருக்கிறார். அவ்வாறெனில் வெண்பா உதயம் கண்ட காலத்துக்கு முன்பே இந்த ஏழு சுரங்கள் தமிழகத்தில் இருந்திருக்க வேண்டும்! ஆனால் சிலப்பதி காரத்தில் இவை இல்லை. இளங்கோவடிகள், இந்த ஏழு சுரங்களை குரல் (ச), துத்தம் (ரி), கைக்கிளை (க), உழை (ம), இளி (ப), விளரி (த), தாரம் (நி) என்றதால், இந்த ஏழுசுர உற்பத்தி, பிற்காலத்தவை. என்னைக் கேட்டால், பொதுவாக நாம் ஆலாபனை செய்கிறபோது 'ஆ' என்று ஆரம்பிப்பது 'சா' வாக மாறியது. 'தனனா' – 'தென்னா, தென்னா, என்று பாடுவாரேல்' என்கிற அடியார்க்கு நல்லார் உரைப்படி, தனனாவிலிருந்து 'த' உண்டாகி இருக்க வேண்டும். ரீங்கார ஓசையால் 'ரரரா, ரிரிரீ' என்று ஆலாபிப்பதால் 'ரி' ஏற்பட்டது. காம்பீரியம் என்பது இசை! 'க' எனகிற காந்தாரம் கண்டது போலும்! தமிழ் இலக்கணத்தில் க,ச,த,ப முக்கிய இடம்பெறும் சொற்கள். இவற்றிலிருந்தும் வந்திருக்கலாம். அம்மா, அப்பா ஆதாரம், 'ம'வும் 'ப'வும் இதனால் வந்த ஆதார எழுத்துகளாகவும் இருக்கலாம். நிஷாதம் தான் கேள்விக் குறி. இந்த ஆய்வைப் பின்னாளில் ஆய்ந்து சொல்வேன். இவற்றுக்கு சட்சம் முதல் நிஷாதம் வரை பெயர்களைச் சமஸ்கிருதத்தில் இருந்து வந்தவை என்று வாதாடுவர். இதை என்னால் ஏற்க முடியாது. யோசிக்கிறேன். நமது குருநாதர் தீட்சிதர் பெருமான் வணங்கும் திருத்தணி முருகன்தான் திருத்தமாகச் சொல்ல வேண்டும். இசையை வேள்வியாக நடத்தியவர்கள் சாமகான வேதியர்கள் என்பர். இதனைக் குறை சொல்வதும் அறியாமையே! 'சரிகமபதநி' என்ற ஏழு எழுத்துகள் உதித்த நாடு தமிழ் நாடு. மறுக்க முடியாது. இவை யாவும் எனது ஆராய்ச்சியில் கண்ட கருத்து. வெளியில் சொன்னால் உதைப்பார்கள்! அதனால் நான் சொல்வதில்லை. பின்னாலில் இதனை ஒப்புக் கொண்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை."

ஞானசுந்தரத்து ஞானம், குறிஞ்சி அறியாததா? அவன் தந்த ஞானம்தானே குறிஞ்சி! அவள் தன்னை மறந்து அவனைச் சேர்த்து அணைத்து இசையமுது இனிக்க முத்தங்களை சப்த சுரங்களாக வழங்குகிறாள். அதில்



சரிகமபதநி ஒலித்தது. ஏழு சுரங்கள் மட்டுமே சப்த மாக ஒலிப்பது போதாதென்று மேல் சட்சமத்தையும் இணைத்து முத்தத்தின் உச்சியில் நின்று அட்டகாசமாக 'இச்' சொல்லி எழுப்பினாள்.

"குறிஞ்சி! இந்தப் பல்லவியுடனேயே எத்தனை நாட்களுக்குக் காலம் தள்ளுவது?"

"முத்தத்தைப் பல்லவி என்கிறீர்களா?"

அவன் தலையசைக்கிறான்.

"அப்படியானால் அனுபல்லவி!"

அவளது கும்பாபிஷேகம் பாராத கோபுர கலசங்களான மார்பகத்தை நோக்கிச் சொல்லாமல் சொல்லுகிறான். பிறகு மெல்லத் தொட்டு அபிஷேகிக்கவும் செய்கிறான்.

அவள், அப்படித் தொட்டத்தில் சிலிர்ப்புக் காணவில்லை. தாய் முலை தழுவிய குழவி போலச் சிரிக்கிறாள். மாமலை தழுவும் மேகம் போல மோகம் கொள்ளவில்லை.

சங்குகள் போல விம்மிய பொற்கலசத்து நித்தில முனைகள் நிதானமாய் மௌனிக்கின்றன.

பொற்பூண் சுமந்த புணர்மென் கலசங்கள்தாம் அனுபல்லவி என்றால்...

"ஞானி! அனுபல்லவிக்கு அனுமதித்துவிட்ட பிறகு சரணம் தயங்குமா? அது நம்மை எளிதில் சரணடையச் செய்துவிடாதா? இல்லை, உங்களுக்கு அவசியம்தான் என்றால் அவசரம்தான் என்றால் இதோ நான் தயார்!"

ஒரு மூர்க்காவேசத்துடன் எழுந்துகொண்ட குறிஞ்சி உடைகளைக் களைய முற்பட...

"வேண்டாம், வேண்டாம் குறிஞ்சி, வேண்டாம்! தைப் பாவையாம் தமிழ்ப் பாவை மாதம் வரட்டும்! காத்திருப்பேன். போகலீலா ராகம் என்பது போற்றுதலுக்குரியது. அதனைக் கசந்து பாடக்கூடாது."

ஞான ஒளியாய் ஞானசுந்தரத்தை நோக்குகிறாள் குறிஞ்சி. அந்த இசை ஞானப்பூ சொன்னது: "அதுவரை நாம் போகலீலா ராகம் பாடியே நமது போகத்தை

அடக்கிக் கொள்ளலாம் அல்லவா?"

"ஆகா!"

அவன் தம்பூரை மீட்டுகிறான்.

சரசத்துக்குரிய சரசாங்கியின் குழந்தையல்லவா போக லீலா?

"ஞானி! நீ தானே ஆரோகணம்! நீயே தொடங்கு!"

"சகமபநிச்சா..."

அவள் அவரோகணம்! இறக்கம்! கீழ்படிபவள்! உத்தம ஜாதிப் பெண்ணுக்குரிய சுருதி லட்சணம் இதுதானே?

"ச்நிதபகரிச..."

இருவரும் இணைந்து இழைந்து போகலீலா ராகத்தில் மட்டும் போகத்தை அனுபவிக்கிறபோது....

இருவர் இதயங்களிலும் காமம் கனிரசமாகப் பிழிந்தாலும், அது தனிரசமாய்த் தனித்தே நின்று, நிலைத்து நிதானிக்கிறது...

இருவர் நெஞ்சிலும் சில நினைவுகள்... ஒரு காலத்தில் இசை மேதை முத்துசாமி தீட்சிதரிடம் எப்படி எல்லாம் இசை பயின்றார்கள்; என்ன விதமாகவெல்லாம் காதலித்தார்கள்; எவ்வாறெல்லாம் தொல்லைகளை அனுபவித்தார்கள்...

போகலீலா ராக ஆலாபனையுடன் அந்த இனிய கனவுகளும், பிர்க்காக்களாய் உதிர்கின்றன...

ஆ! அவை சுகமான நிகழ்ச்சிகள் மட்டுமல்ல; சோகமான நிகழ்ச்சிகளும் கூட!

அவளோ புலைச்சி...

அவனோ பிராமணன்...

'தஸ்ய கார்ய நவித்யதே' என்று கீதையில் பகவான் சொன்னது உண்மையானால் – தேகம் செய்கிற தவறுகளுக்கும் ஆன்மா பொறுப்பாக முடியுமா? சட்டை

# இராகம் – 13



# நாட்டைக் குறிஞ்சி

போகலீலா ராகத்தில் மூழ்கிய போது...

புரண்டு வருகிற கற்பனைகளில் குருமகான் முத்துசாமி தீட்சிதரின் குருகுலவாசம் அகிற்புகையாக மணக்கிறது.

அந்தத் திருவாரூர் மண்ணில் மிதியாத இடமேது? மதியாத மனிதர் ஏது?

தமிழ்மொழி ஒன்றுதான் தீண்டாமையாக இருந்ததே யொழிய, இசை, நாட்டியக் கலைகளைப் பொறுத்தமட்டில் பிறமொழியில் தரமிக்கனவாய்த் தழைத்தோங்கின.

குறிஞ்சி, தீட்சிதர் வீட்டுக்கு வேலைக்காரியாக வருகிற போது, இப்படிப் போகலீலா ராகம் பாடுவோம் என்று ஞானசுந்தரம் எதிர்பார்த்தானா?

தீட்சிதர் பெருமான் தமது சீடப்பிள்ளைகளுக்கு இசையைப் போதிக்கிறபோது, தொலைவில் வாசற்படி ஓரமாக நின்று பயில்வாள் குறிஞ்சி.

பல சமயங்களில் குறிஞ்சி, பாத்திரங்களுக்குப் பத்துத் தேய்க்கிறபோது, தன்னுள் சுருதி சுத்தமாக ராகத்தை முனகுவாள்...

ஒருநாள்...

ஞானசுந்தரத்திடம் விருபாட்சக் கவிராயர் வெளிச்சமாகவே விலாசத்தைக் கூறிவிட்டார்.

"ஞானசுந்தரம்! நீ அவளை விரும்புவதாக நானறிந்தேன். அவள் புலைச்சி வயிற்றில் பிறந்தாலும், மிருதங்க சக்கரவர்த்தி மீனாட்சிசுந்தரம் பிள்ளை ரத்தத்துக்குப் பிறந்தவள். இங்கே சாப்பாடு இல்லையென்று அவளை வேலைக்காரியாக அனுப்பவில்லை. சங்கீதம், அதுவும் தீட்சிதரிடம் புலைச்சி பயிலலாமா என்கிற மனச்சாட்சி பொய்யுரைத்து, வேலைக்காரியாக்கியது. நீதான் அவளுக்கு தீட்சிதரின் நிழலாக இருந்து சங்கீத சிட்சையளிக்க வேண்டும்!"

குறிஞ்சியைப் பார்க்கிறபோது புலைச்சி குலத்தில் பிறந்தவளா? புரியவில்லையே! தேவகுலத்து அக்கினி குஞ்சுப் பிரகாசமாய் இருக்கிறாளே!

அன்று முதல் ஞானசுந்தரம் அவளானான்; அவள் ஞானசுந்தரமானாள்; இசையைப் பொறுத்தவரையில்! இடைவெளிவிட்ட காதலைப் பொறுத்தவரையில்!

குறிஞ்சியின் எழில், ஏழிசை எழில்!

அவர்கள் காதலை எழுத்தாணி கொண்டு ஆசை ஓலைகளில் கவிதையாக எழுதினர். ஆனால் வாசிக்க மறுத்து விட்டனர் என்று சொல்ல முடியாது; பின்னால் வாசித்துக் கொள்ளலாம் என்று பாதுகாத்து வைத்துக் கொண்டனர்; இன்னமும் பாதுகாத்து வருகின்றனர்.

அவர்கள் ஆரோகண அவரோகணங்களாகக் காதலித்தனர்; சம்பூரணமாகத் காதலித்தார்களேயொழிய வர்ஜ (குறைபட்ட சுரங்கள்) வாக்கிரமாக (தடுமாறிய சுரங்கள்) காதலிக்கவில்லை.

முத்துசாமி தீட்சிதரின் குருகுலத்தில், அவள் செல்வத்துள் செல்வம் செவிச் செல்வம்! ஆனால் ஞானசுந்தரம் அதனையே பயற்சியளிக்கிறபோது செல்வத்துக்கெல்லாம் தலையாக விளங்க முற்பட்டாள்.

ஆ! அந்த 'ஸ்ரீ சுப்பிரமண்யாய நமஸ்தே' என்கிற காம்போதி ராகப் பாடலைப் பயிற்றுவிக்கிறபோது...



அவள் படாத பாடுபட்டு விட்டாள்!

ராகத்தின் அழுத்தம்மட்டுமல்ல; தீட்சிதர் கிருதிகள் என்றாலே விளம்பகால நிதான அழுத்தம்...

நாரிகேள பாகம் போன்றது. அதாவது நாரிகேளமாம் தேங்காயைப் பறித்து, நாரை உறித்து, உடைத்து, ஓட்டி விருந்து தேங்காய்ப் பத்தையை நீக்கி, நன்கு மென்று பிறகு அதன் சாற்றைச் சுவைப்பதுபோல்... தேங்காய் பாகம் போல்...

ஏறத்தாழ இந்த நான்கைந்து ஆண்டுகளில் குறிஞ்சி, முத்துசாமி தீட்சிதரின் அழுத்தமான இசை ஞானத்தையும், தஞ்சாவூர் கோயில் அர்ச்சகராக வேலை பார்த்தாலும் அடிக்கடி திருவாரூர் வருகிறபோதெல்லாம் சியாமா சாஸ்திரிகளின் கதலீபாகமெனப்படும் வாழைப்பழ பாகச் சங்கீதத்தையும் கனிவோடும் தெளிவோடும் செவிச் செல்வமாய்ச் சேகரிப்பாள்.

இருவருமே – தீட்சிதரும், சாஸ்திரிகளும் இந்துஸ்தானி சங்கீதத்தில் பல அப்பியாசங்களைச் சாதித்து சாகித்தியமும் செய்தவர்கள். அந்த நிழலும் அவள் மீது படிந்திருக்கத்தான் செய்தது. அவள் சந்திக்காத மகான்கள் தியாகய்யரும், கோபாலகிருஷ்ண பாரதியாரும்தான். ஆனாலும் அவர்களது உருப்படிகள் சில அவளுக்குஞ் சரி; ஞானசுந்தரத்துக்கும் சரி, பாடமாகி இருந்தன.

குறிஞ்சி இத்துணைக்குச் சங்கீதத்தில் தேர்ச்சி பெற்றிருக்கிறாள் என்கிற செய்தி எள்ளளவேனும் தீட்சிதருக்குத் தெரிய வேண்டுமே! இதுதான் மானசீக அல்லது கண் கண்ட ஏகலைவ உபாசனையோ?

அன்றைக்கு முத்துசாமி தீட்சிதர் ஓர் புதிய கிருதியை நாட்டைக் குறிஞ்சியில் சிருஷ்டிக்க, ஞானசுந்தரம் தம்பூரை மீட்டுகிறான்.

எதிரே திருவாரூர் கமலாவும் கூரை நாடு ராமசாமியும் மட்டுமே அமர்ந்திருக்கிறார்கள். ஜயாசாமி நட்டுவனார் ஒரு நட்டுவாங்கக் கச்சேரியை முன்னிட்டுச் சென்றிருந்ததால் வரவில்லை.

இருப்பவர்களில் ஓரளவு நன்றாகச் சமஸ்கிருதம் தெரிந்தவன் ஞானசுந்தரம். தம்பூரை அவன் மீட்டி இருக்கக் கூடாது; கமலத்திடமோ, ராமசாமியிடமோ கொடுத்து இருக்கலாம். அவன் என்ன கண்டான், புதிய உருப்படி உதயமாகப் போகிறது என்பதை?

அப்போதுதான் தீட்சிதர் சொன்னார்: "ஞான சுந்தரம்! தம்பூரை மீட்டிக்கொண்டே சாகித்யத்தையும் குறித்துக் கொள்!"

தருமசங்கடம்தான்; தம்பூரை அப்போதாவது கமலத்திடம் கொடுத்து இருக்கலாம். குருபக்தியும் பயமும் அவ்வாறு செய்யத் தயங்கி விட்டன.

மனைவிகள் இருவரும் இதனைச் செய்யலாம். அவர்களுக்குள் போட்டா போட்டி. அந்தக் கதையே விசித்திரமானது.

மூத்த மனையாள் கறுப்பழகி. தீட்சிதர் எப்போதுமே திருத்தணி முருகன் மீதும், சர்வேஸ்வரி மீதும் பக்தி கொண்டுவிட்டதால், புதியதாக மணம்புரிந்த – சற்று வயது கூடிய கறுப்பு மனையாள் இன்பத்தில் நாட்டம் கொள்ளவில்லை. தேவி உபாசகருக்கும் மனைவி கறுப்பானால் என்ன? சிவப்பானால் என்ன? போகத்தில் நாட்டமில்லை. இதைப் பெற்றோர்களான ராமசாமி தீட்சிதரும், சுப்பு லட்சுமியம்மாளும் தவறாக எண்ணி விட்டனர். 'ஓகோ! கறுப்பாக மனைவி வாய்க்கவே இன்பத்தில் நாட்டமில்லை போலும்!' என்றுணர்ந்து சிவப்பான, இளமையான ஓர் அழகியை மணமுடித்தனர். அப்போதும் இதே அவதியானாலும் இளைய மனைவி அந்த உமாமகேஸ்வரி போலிருக்கவே சற்று அன்பு கொண்டார் தீட்சிதர் பெருமான். சக்களத்திப் போட்டா போட்டிக்கு இதுவே மூலகாரணம்.

குறிஞ்சி, ஆரம்பத்தில் சேர்ந்தபோது இளையாள் ஆதரவு தெரிவித்ததும் இதன் காரணம்தானே? "மகளே!" என்று தீட்சிதர் அழைக்கவில்லையா?

தொலைவில் அச்சமயம் அங்கே, தந்தையாகிய ராமசாமி தீட்சிதரும் அமர்ந்து கொண்டிருந்தார்.



ராமசாமி தீட்சிதர் மகாவித்துவான். மகனுக்குத் தந்தை மட்டுமல்ல; குரு! ஹம்சத்வனியில் முதல் சாகித்யம் கண்டவர் மட்டுமல்ல; நூற்றியெட்டு ராக தாளமாலிகா இயற்றிய சங்கீத ராட்சஸன். இவரது மகன் சின்னசாமி தீட்சிதர் தனது கண்களை இழந்துவிட்டபோது, இறைவனை வேண்டி நாற்பத்தெட்டு ராகங்களில் ராக மாலிகை பாட, கண்கள் திரும்ப வந்தனவாம்!*

சுரக்காய் தம்பூரான அந்த விலையுயர்ந்த அபூர்வ தம்பூர், அபாரமான நாதமெழுப்புகிறது.

முத்துசாமி தீட்சிதர், நாட்டைக் குறிஞ்சியின் ஆரோகண அவரோகணத்தை ராகமாய் பாடி, ஆலாபித்து, திருத்தணி முருகனைத் தியானிக்கிறார்.

**"பார்வதி குமாரம் பாவையே ஸததம்**
**சரவணபவ †குருகுஹம்..."**

தமது 'குருகுஹ' முத்திரையைப் பல்லவியிலேயே வைக்கிறார், ரூபகதாளம்.

பாடலை அற்புதமாக இயற்றிப் பாடி முடித்துவிட்டு, சுப்பிரமணியக் கடவுளை வேண்டி எழுந்து கொள்கிறார்.

ஆ! நாட்டைக் குறிஞ்சியைப் பிழிந்து வைத்த மகனைப் பாராட்டிக் கொள்கிறார் சங்கீத ராட்சஸரான ராமசாமி தீட்சிதர்.

ஆனாலும் விளம்பமான அழுத்தம் தொல்காப்பியரின் சொல்லதிகாரம் போல என்று எண்ணிக் கொள்கிறாள் குறிஞ்சி. புலவர் வளர்ப்பாயிற்றே!

மறுநாள் மாலை அந்தக் காதல் ஜோடி விருபாட்சக் கவிராயர் வீட்டில் சந்திக்கிறது.

---

* சங்கீத அற்புதங்களை எந்தக் கண்கொண்டும் யாரும் அற்பமாக எடைபோட்டு விடக்கூடாது. இது மூன்றாவது கண். உடல் அதிர்வுகளில் எந்த நோக்கில் எது நிகழும் என்று யாராலும் சொல்ல முடியாது. இது விஞ்ஞானத்துக்கு அப்பாற்பட்ட விஷயம்.

† குகனாகிய முருகப் பெருமானைக் குருவாக ஏற்றவர். எனவே தம் பாடல்களில் 'குருகுகம்' என்ற முத்திரையை வைப்பார். குருகுகம் என்று ஒரு கீர்த்தனை கேட்பின் அது முத்துசாமி தீட்சிதர் பெருமானுடையது.

இருவரும் உள்ளே நுழைந்தால், கவிராயர் காட்டுமேடு நோக்கிப் புறப்பட்டு விடுவார். சங்கீதப் பயிற்சி மட்டுமல்ல; அவர்கள் காதல் சங்கதிகளையும் பயில்கிறார்கள். ஆயினும் குறிஞ்சி, கற்பில் குறிஞ்சி. அவள் குறிஞ்சித் திணை போல் மலைபோலுயர்ந்திருப்பவள் என்பதும் கவிராயர் கண்ட உண்மை.

சங்கீதப் பயிற்சிக்குப் பிறகு அவர்களுடைய தனிப்பட்ட சங்கதிப் பயிற்சியில் பேச்சைத் தொடங்கினர். சில சமயங்களில் சங்கீத சாதகத்தையும் அங்கே வைத்துக் கொள்வதுண்டு.

"குறிஞ்சி! நாமோ தீட்சிதர் குருகுலம். நீயோ பலருடைய பாடல்களை அப்பியசிக்க முயல்கிறாய். ஏன்? தஞ்சை சமஸ்தான இந்துஸ்தானி வித்துவான் ராமதாசரையும் நேசிக்கிறாய்! எதை மனத்தில் வைத்து இப்படி உருவாகிறாய்?"

குறிஞ்சி, குறிஞ்சிப் பூவாய் குமிழ்நகை புரிகிறாள்.

"ஞானி! என் பெரியப்பா விருபாட்சக் கவிராயர் சொல்வார்: "குறிஞ்சி! சிலப்பதிகாரம், கம்பராமாயண நயம் தமிழுக்கு இனிமை தருகின்றன. தொல்காப்பியமோ, நன்னூலோ அல்ல! தீட்சிதரிடம் தொல்காப்பியம் கற்றுக் கொள்; சியாமசாஸ்திரிகளிடம் சிலப்பதிகாரம் கற்றுக் கொள்; தியாகய்யரிடம் கம்பராமாயணம் தெரிந்து கொள்! இலக்கணம் முக்கியமல்ல; இலக்கிய நயம் முக்கியம்! அதை விட எளிமையாக மக்களிடம் சேரவல்ல கலை முக்கியம்; தாய்மொழி முக்கியம்!" – என்றார். எனவே நான் மக்கள் பாடகியாக எளிமையைச் சிந்திக்கிறேன்!"

ஞானசுந்தரம் யோசிக்கிறான். அவனும் சில மாதங்களுக்குமுன் காலமான, சியாமா சாஸ்திரிகளிடம் குருவுக்குத் தெரியாமல் சில விஷயங்களைப் பயின்றவனல்லவா? அவர் கோயில் அர்ச்சகர்; இவன் அவருக்கு அர்ச்சகராக இருந்து லயப்பிரம்மமான சாஸ்திரிகளிடம் பல்லவி பயின்றவனல்லவா? ஒரு காலத்தில், சியாமா சாஸ்திரி, தஞ்சை சமஸ்தானத்தில் மார்தட்டி வந்த ஆந்திர மகாவித்துவானான பொப்பிலி கேசவய்யாவைத் தலைகுனியப் பல்லவி பாடி வென்றவரல்லவா?



"மும்மூர்த்திகளான தீட்சிதர், சியாமா சாஸ்திரிகள், தியாகய்யர் இவர்களை மீறி ஒரு புதிய முறையில் பாடி மக்களை வயப்படுத்த முடியும் என்றா நினைக்கிறாய் குறிஞ்சி?"

"ஏன் முடியாது ஞானி? இந்த மும்மூர்த்திகள் என்கிற பிரசாரமே எனக்குப் பிடிக்காத ஒன்று! இவர்களுக்கு முன்பிருந்த முத்துத்தாண்டவரும், அருணாசலக் கவிராயரும் சங்கீதம் பாடாமல் வெங்கீதமா பாடினார்கள்? இல்லை. நமது சமகாலத்தில் இருக்கும் சுவாதித் திருநாள் மகாராஜாவும் கோபால கிருஷ்ணபாரதி என்கிற தமிழிசைப் பிரமாணரும் சிங்கீதமா பாடுகிறார்கள்? இதில் யார் பிரம்மா, விஷ்ணு, சிவன்? முத்துத்தாண்டவரும் அருணாசலக் கவிராயரும், கோபாலகிருஷ்ண பாரதியாரும் தமிழில் பாடியதால் பின் தள்ளப்பட்டு விட்டனர். தமிழ் மொழிக்கு மரியாதை தராத வரையில் இந்தச் சங்கீதம் உருப்படாது; கொஞ்ச காலத்தில் அழிந்து போகும்!"

"சுவாதித்திருநாளை யாரும் சங்கீத வித்துவான் என்று ஒப்புக்கொள்ளவில்லையே!"

"ஏன்? சுவாதியின் சங்கீதத்தைப் பலாப் பழமாக்கி விட்டார்கள்? வடிவேல், சின்னையாபிள்ளை சொர சொரப்பால், உள்ளிருக்கும் இனிமை தெரியாமல் போய் விட்டது! சுவாதி சமஸ்கிருதத்திலும் இசையிலும் மேதை! வேண்டுமானால் நமது குருகுலத்தைச் சார்ந்த வடிவேலு, சின்னையாபிள்ளை அந்த இனிமைக்கு மேலும் மெருகூட்டியிருக்கலாம்! அவ்வளவே!"

"எப்படி இவ்வளவு உறுதியாகச் சொல்லுகிறாய்?"

"நான் புலைச்சியேயொழிய ஓரளவு சமஸ்கிருதத்தைப் பார்த்தவள்; நன்னூலால் தமிழுக்கு நலங்கிட்டவள். தஞ்சை சகோதரர்கள் அற்புதமான இசைமேதைகள்; நட்டுவாங்க நாயகர்கள்! வர்ணங்களையும் கீர்த்தனைகளையும் வான் புகழ இயற்றியவர்கள்! நமது குருநாதர் சமஸ்கிருதமோ, சுவாதியின் சமஸ்கிருதமோ பாணினி

யின் சுத்தமான பரிமாணங்கள்! இந்தப் பரிமாணங்கள், இந்த நால்வரிடம் இருப்பதாக எனக்குப் படவில்லை. சுவாதியின் கீர்த்தனைகளில் சாமகான பரிமாணங்களி ருக்கின்றன. புருஷ ஸூக்தமான அனுதாத்தம், உதாத்தம், ஸ்வாதம், ப்ரசயம் போன்ற மந்திர சுரங்கள் நமது குரு நாதர் கிருதிகளில் இருப்பன போலிருக்கின்றன. இவை ரிக்வேதத்து பத்தாவது மண்டலத்து தொண்ணூறாவது ஸூக்தம்! பதினாறு மந்திரங்கள்! பின்னால் சுக்லயஜு ராகவும், கிருஷ்ணயஜுராகவும், சாமகானமாகவும், அதர் வணமாகவும் மாறுதல் கண்டன!"

"புருஷ ஸூக்தம் என்றால்?"

"பெரிய விஷயம்! அது புருஷோத்தமத் தத்துவம்! அதற்குப் புரோகிதனும் ஒன்றுதான்; புலையனும் ஒன்று தான்! போதும்; விளக்கினால் பொழுது விடியும்!"

ஞானசுந்தரம் அறிந்த சமஸ்கிருதம் எழுத – படிக்க; குறிஞ்சியறிவு கண்டு அவனது ஞானம் வெட்கியது.

**சி**ல நாட்களுக்குப் பிறகு...

அன்றைக்குக் கிருத்திகை...

சீடர்கள் அருகே அமர்ந்திருக்கிறார்கள். எங்கும் தீபமங்கள ஜோதிப் பிரகாசம்.

அன்றைக்குப் பார்த்து குற்றாலத்திலிருந்து, முத்துசாமி தீட்சிதரின் பாட்டியாரான பாகீரதியம்மாள் உறவு வழி கொண்ட உறவினர் வந்திருந்தனர்.

குறிஞ்சியின் விதி, அவர்களுடைய புண்ணியக் கரங் களால் எழுத இருந்தது போலும்!

அன்றைக்கு கமலம் தம்பூரை மீட்டுகிறாள்...

சரிகம நிதநி பதநிச்...

சநிதம கமப கரிச...

இருபத்து எட்டாவது மேளகர்த்தா ராகமான அரிகாம் போதியின் குழந்தை, அழகாகக் குரல் கொடுக்கிறது...

வீட்டில் அனைவருமே அமர்ந்து மகானின் தேனிசை



யில் மயங்கிக் காணப்படுகிறார்கள். குற்றாலத்து உறவினர் களும் குந்தி ரசிக்கக் காத்திருக்கிறார்கள்.

காலையில் குறிஞ்சி வீட்டு வேலைகளை முடித்துச் சென் றவள் இன்னமும் காணவில்லை. பெரியப்பா விருபாட்சக் கவிராயர் உடல்நிலை வேறு சரியில்லை. அந்தக் குற்றால உறவினர்கள் மாலைதான் வருகை தந்திருந்தனர்.

முத்துசாமி தீட்சிதர் அன்றைக்கு நாட்டைக் குறிஞ்சி யின் ஆரோகணம் அவரோகணம் பாடி, திருத்தணிகை முருகப்பெருமானைத் தியானித்து ஆலாபிக்கிறார்.

ஆ! அது ஆலாபனையா?

நாட்டைக் குறிஞ்சியின் நளினங்களெல்லாம் சுரத் துக்குச் சுரம் சுந்தர நடம் புரிகிறது. அன்றொரு நாள் இயற்றிய புதிய பாடலான 'பார்வதி குமரம்' என்ற பாடலைப் பாடுகிறார். இந்தப் புதிய பாடலை இயற்றிய நாளன்றுதான் ஞானசுந்தரம் தம்பூர் மீட்ட, பாடலை எழுத ஆளில்லாமல் போக, ஞானசுந்தரம் தலையில் விழ, அவன் தருமசங்கடமாகத் தம்பூரையும் மீட்டிக் கொண்டு தீட்சிதர் பாடும் பாடலையும் எழுத்திறக்கம் செய்ய நேர்ந்தது. எங்கேனும் விடுபட்டால் அவன்தான் பதில் சொல்ல வேண்டும். அப்போது பார்த்து அங்கு வந்து நின்றாள் சுந்தரப் பேரழகி குறிஞ்சி.

குறிஞ்சியைக் கண்டதும் குற்றாலத்து உறவினர்களுக்கு நினைவுகள் சிறகு விரிக்கின்றன.

ஓ... இவள் புலைச்சியான புவனாவின் புத்திரியல்லவா? இவள் ஏன் இங்கு வந்தாள்?

தீட்சிதரின் மூத்த மனைவியை ஒருத்தி கேட்டாள்: "இவள் ஏன் இங்கே வந்திருக்கிறாள்?"

இளைய மனைவி சொன்னாள்: "ஏன்? நம் வீட்டு வேலைக்காரி!"

"என்ன! அனுஷ்டானங்கள் நிறைந்த தீட்சிதர் வீட்டில் பறைச்சியை வேலைக்காரியாக வைத்திருப்பதா?"

"பறைச்சியா? சே சே! நமது விருபாட்சக் கவிராயர் நண்பர் மகள். அவர்தான் கொண்டு வந்து சேர்த்தார்."

"சேர்த்திருக்கலாம்! இவள் குற்றாலத்தில், நம் வீதியில் குடியிருந்தவள்" என்று தொடங்கியவள், அந்த விருத் தாந்தங்களைப் பிட்டுப் பிட்டு மெல்லிய குரலில் பிலாக் கணித்தாள்.

மூத்தாளுக்கு எரிச்சலோ எரிச்சல்!

ஆயினும் தீட்சிதர் பாடிக்கொண்டிருக்கிறாரே! நாட்டைக் குறிஞ்சிக்கு இடையே குற்றாலக் குறிஞ்சிப் பிலாக்கணமா?

பாடிக் கொண்டே வந்த தீட்சிதர், 'மார்க்க சஹாய ப்ரியஸுதம்' என்று சாரணம் பாடுகிறாரேயொழிய மேற் கொண்டு இயற்றிய வரிகள் ஞாபகத்துக்கு வரவில்லை...

என்ன அது? என்ன அது?

ஏ... குருகுகா! என்ன சோதனை இது?

"ஞானசுந்தரம்! எழுதி வைத்த குறிப்பு எங்கே?" என் கிறார் தீட்சிதர்.

அவன் அன்றைக்குத் தம்பூர் மீட்டியதில் மயங்கிப் போனதால், சரிவர எழுத மறந்து விட்டேன் என்று கூறிச் சரணடைந்து மன்னிப்புக் கேட்கிறபோது...

குறிஞ்சியின் குரல் கணீரென்று ஒலிக்கிறது...

கமலமும், ராமசாமியும், ஞானசுந்தரமும், குடும்பத்த வர்களும் குற்றால உறவினர்களும் பிரமை பிடித்தவர்க ளாகக் கவனிக்கிறார்கள்...

"மார்க்க சஹாய ப்ரியஸுதம்' என்றுத் தொடங்கி, 'மானித குண வைபவம்' என்று முடித்ததோடல்லாது, தீட்சிதரின் 'குருகுக' முத்திரைப் பல்லவி பாடி, 'குரவே நமஹ குருகுஹ' என்று நிரவல் செய்தவாறு வாசற்படியி லேயே அமருகிறாள் குறிஞ்சி.

'குரவே நமஹ' என்பது அவளாகச் சேர்த்துக் கொண்ட குரு வணக்கம்.



நாட்டைக்குறிஞ்சியின் சுரங்கள் அவளது இனிய நாவில் கோட்டை கட்டி விந்நியாசிக்கின்றன! அந்த 'கமபகரிச' என்ற மூர்ச்சனையில் 'குரவே நமஹ' என்கிறாள்.

தீட்சிதர் திகைத்துக் கவனிக்கிறார். ஆனால் அவரது கண்களில் மட்டும் தீட்சண்யம்! வேலைக்காரப் பெண்ணா? 'மகளே' என்று அழைத்ததை நிரூபித்து விட்டாளே! நிரூபித்து விட்டாளே!

பாடலைப் பாடி முடித்து, குருவிடம் சென்று கழல் பணிய முனைகிற போது...

"நில்!"

மூத்தாளின் மூர்க்காவேசக் குரல்.

"ஏன்?" –தீட்சிதர்.

"இவள் பறைச்சி! கவிராயர் பொய் சொல்லி நமது குலத்துக்குக் களங்கம் ஏற்படுத்தி விட்டார்!"

தீட்சிதர் தீர்க்கதரிசனமாய்ச் சிரிக்கிறார்.

மூத்தாள், உறவினர் சொன்னதை முனகுகிறாள்.

"சங்கீதமாகிய ஞானத்துக்குப் பறைச்சி ஏது? பார்ப் பான் ஏது?"

"முதலில் இவளை வெளியேற்றுங்கள்! நாளை வீட்டைச் சுத்தம் செய்து ஹோமம் நடத்த வேண்டும்."

மூத்தாள் மட்டுமல்ல; ஏனைய ஆத்தாள்களும் எதிர்த் தனர். ஆனால் இளையவள் மட்டும் இரக்கம் கண்டு, "குறிஞ்சி! உன்னை நானறிவேன்! சங்கீதம் சொல்லிக் கொள்ளப் பொய் சொன்னாய்! அது பாவமல்ல! இங்கி ருக்கும் பாவாத்மாக்கள் உன்னை விரட்டுகிற போது... நீ விடைபெறுவதே நலம்!" என்றாள்.

தீட்சிதர் மெல்ல எழுந்து வருகிறார்...

"குறிஞ்சி! என் மகளே! மீண்டும் மகளே என்றழைக் கிறேன்! என் சங்கீதம் பெற்ற மகளல்லவா!' நீ புலைச்சி யானாலும் சமஸ்கிருதத்தை ஸ்பஷ்டமாக உச்சரிக்கத்

தெரிந்த ஸுக்தம்! சில ஜன்ய ராகங்கள் எந்தத் தாய் வயிற்றில் பிறந்தது என்று எப்படிச் சொல்ல முடியாதோ, அப்படித்தான் உன் போன்ற ராகங்களும்! தன்யாசியைத் தோடியில் பிறந்தது என்று சொல்லலாம். சுத்த தன்யாசியைத் தோடியில் பிறந்தது என்பதா? கரகரப்பிரியாவில் பிறந்தது என்பதா? மோகனத்தைக் கல்யாணியில் பிறந்தது என்பதா? சங்கராபரணத்தில் பிறந்தது என்பதா? நீ ஒரு சுத்த தன்யாசி! மோகனமான சங்கீத ஜாதி! இந்தப் பாவிகளை மன்னித்துப் புறப்படு மகளே! என் ஆசீர்வாதம் உனக்கு எப்போதும் இருக்கும்! என்னிடம் மூன்று தம்பூர்கள் மூலைக்கு மூலை கிடக்கின்றன. அதில் ஒன்றை எனது அன்புப் பரிசாகத் தருகிறேன். எல்லாரும் குருவுக்குக் காணிக்கை செலுத்துவார்கள். நான் உனக்குக் காணிக்கையாகத் தம்பூரைத் தருகிறேன்!"

முத்துசாமி தீட்சிதர் தம்பூரை எடுத்து வந்து தர, அதனைத் தாள் பணிந்து பெற்றுக் கொள்கிறாள், குறிஞ்சி.

ராகங்களெல்லாம் அவளது ராசிக்குரிய அனைத்துக் கிரகங்களையும் வாழ்த்துகின்றன.

## இராகம் – 14



# தபஸ்வினி

இசைமிகு முத்துசாமி தீட்சிதர் பெருமானிடம் எப்படியெல்லாம் குருகுலமிருந்து, இந்த போகலீலா ராகம் பாடும் அளவுக்கு ஆளானோம் என்கிற நினைவுடன் இன்னமும் குறிஞ்சியும் ஞானசுந்தரமும் போகலீலாவில் மூழ்கி, மத்திம (ம) பஞ்சமத்தில் (ப) மாறி மாறிச் சுருதியில் இழைகிறார்கள்.

போகலீலா ராகத்து மகிமை யறியாமல் அதனைப் பாட ஆரம்பித்தால் அவர்கள் தேகங்கள் அவர்களையு மறியாது மன்மத பாணங்களால் மறுகி முறுக்கேறி உருகி உரைகின்றன.

சிலிர்ப்பில் சிருங்கார உற்சாகம்; களிப்பில் காம ஊர்வலம்.

ஞானசுந்தரம் தேகமாகிய தம்பூர், நரம்புகளை இழந்து நாழிகைகள் பலவாயின; கையில் மட்டும் தம்பூர் ஒலிக்கிறது.

ஏதோ போகலீலா ராகம் பாடியாவது தை மாதம் வரை பொழுது போக்கலாம் என்று எண்ணியது போக, அன்றையப் பொழுது போகுமா என்பது போன்றா போகக் கிளர்ச்சி போர்க்கொடி தூக்க வேண்டும்?

இருவருக்கும் எதிர்பாராத புதிய அனுபவம் போக லீலா ராகம். ராகங்களின் சக்திகளையும் ரகசியங்களையும் வித்தாரமாக அறிந்த வித்தகர்கள் அவர்கள். அப்படி என்ன தங்களை மீறி நடந்துவிடப் போகிறது என்று தப்புக் கணக்குப் போடலாமா? கற்பனை மயங்கிய கானம்; அபூர்வ ராஜாளியை வயப்படுத்திய ராகம்; தங்களை மட்டும் விட்டு வைத்துத் தாலாட்டும் அல்லது பாராட்டும் என்று குறிஞ்சி நினைக்கலாமா? ஸ்ரீ ஆசார்யாள் பெருமாளின் அனுக்கிரகம் பெற்றவளுக்கு இது புரியாது போனதென்ன?

ஆலாபனை மேல்நிலை உச்சக்கட்டத்து மத்திம பஞ்சமத்தில் சஞ்சரிக்கிற போது...

"ஞானீ!" – குறிஞ்சி தன்னை மறந்து அலறுகிறாள்.

மீண்டும் "ஞானீ! ஞானீ! போதும்! போதும்!"

தம்பூர் நாதம் அமைதி பெறுகிறது.

தேகங்களின் தம்பூரில்தான் போக சுருதி சேர்ந்து, லீலையின் அந்தரகாந்தாரம் கேட்கத் தொடங்கி விட்டதே!

காமம் என்பது பெண்களின் ஆழமான காப்பிய ரகசியம். அவளைப் போலக் கட்டுபடுத்துகிறவர்களும் இல்லை; அவிழ்த்து அலைய விடுபவர்களுமில்லை; இது ஒரு சிதம்பர ரகசியம் போல... தில்லைக்காளிக்கு விலங்கிட்டு அமைதி கொள்ளச் செய்த ரகசியம் போல...

ஆண்காமம் என்பது பெரும்பாலும் ஒரு மிருகக் கனவு. அதற்குத் தூய்மையுமில்லை; வாய்மையும் இல்லை. ஆனால் ஞானசுந்தரம் அந்தச் சேய்மையில் இல்லை. அவன் தாய்மை ராகங்களான எழுபத்து இரண்டு மேள கர்த்தாக்களையும் தரமாகப் பாடவல்லவன்; உரமாக உபதேசிக்க வல்லவனாயிற்றே! மீறிப் பேசினால் காகலி நிஷாதத்தையே தைவதமாக வைத்துப் பாடிப் பார்த்தால் என்ன என்று முரண்படுகிறவனாயிற்றே! இலக்கண மரபு இடம் தராது என்றால், 'ஷட்சுருதியே இலக்கண மரபா?' என்று மகான் சியாமா சாஸ்திரிகளிடமே வாதாடியவனாயிற்றே!



இருவருமே போகலீலா ராகம் பாடியதில் போக போதையில் தள்ளாடுகிறார்கள்...

"ஞானீ! போதும் என் சபதம்? போதும் என் வைராக்கியம்! உங்களுக்கு நான்; எனக்கு நீங்கள் என்று நாமிருவருமே திருவாரூர் தியாகேசப் பெருமான் முன் சத்தியம் செய்து கொண்டவர்கள். தை மாதம் வரை ஏன் காக்க வேண்டும்? வாருங்கள் ஞானீ! எழுந்திருங்கள் ஞானீ!"

ஞானசுந்தரமும் போகலீலா ராகத்துப் பஞ்சம சுருதியில் நயந்து இருக்கிறானே!...

எழுந்து கொள்கிறான்...

போகலீலா ராகம்! அவர்களை மூர்ச்சனையுடன் நிற்க வைப்பதற்கு மாறாக மூர்க்கத்துக்கே அழைத்து விட்டது. பாடுபவர் பாடினால் அந்தந்த ராகத்து மந்திரம் மணக்கும்; இந்திரம் குணக்குமே!

குறிஞ்சி அவரோகணமாகி விட்டாள். மத்திம (ம) சுரம் லலாடத்தை இடிக்கிறது.

சுரங்களில் மத்திமம் பெண்; அம்மா!... பஞ்சமம் ஆண்; அப்பா... இது ஞானசுந்தர ஆராய்ச்சி!

போகலீலா ராகத்து அவரோகணத்தில் மத்திமமில்லாக் குறை குறிஞ்சியையே போக வறிஞ்சியாக்கி விட்டது போலும்! இருந்திருந்தால் சற்றே சமாளித்து இருப்பாளே?

அதே நேரத்தில் ஆரோகணத்தில் பஞ்சமம் மட்டுமல்லாது மத்திமமும் இருந்ததால் ஞானசுந்தரமும் துப்புரவாக ஞானமிழந்து விட்டான் என்று சொல்ல முடியாத நிலையிலிருக்கிறான்...

போகலீலாவைப் பாடுபவர் பாடினால் குல மகளையும் விலை மகளாக்கிவிடும் என்கிற 'தாது' புரியாததால் வந்த தவிப்பு நிலை இது! ராகலட்சணங்கள் என்பவை அனுபவத்தால் உணரக்கூடிய அனுபந்தங்கள்! அநுவாதத்தால் ஐயப்பதாகை நிறுவும் அனுரூபமானவை! அநித்தியமானவையல்ல; நித்தியமானவை. இளம் பருவங்கள் இவற்றை எவ்விதம் அறியும்? அறிவுக்கும் அனுபவத்துக்கும் இடையே வயதல்லவா பாலம் கட்டி நடக்க விடுகிறது?

இலக்கணம் என்பது அறிவு; இயல்தான அனுபவம்! எனவே போகலீலை அனுபவமின்மையால் மன்மதனையும் ரதியையும் உருப்படியாக அவர்களது மஞ்சத்தில் உறங்க விடாமல் எழுப்பிக் கொண்டு வந்துவிட்டார்கள்!

"என்ன ஞானி தயக்கம்?"

அவள் அவனைச் சேர்த்து அணைத்து இதழ்களைப் பொருத்துகிறாள். ஞானியின் இதழ்களும் சுந்தரமாய்ச் சுகம் தருகின்றன.

முத்தமாகிய பல்லவி, பல சங்கதிகளுடன் பாடத் தொடங்கிவிட்டது.

அவர்கள் இருவரா? ஒருவரா என்பதைக் கண்டுபிடிக்க முடியாத அளவுக்கு பின்னிப் பிணைந்து நாகபோகப் பிணைப்பு போலக் காணப்படுகிறார்கள். வியர்வையால் இருவருமே தெப்பமாக நனைந்து கிடக்கிறார்கள்...

இப்போது நரம்புகள் போகலீலா ராகத்தை ஆலாபிக்கின்றன...

அவன்: சகமப...

அவள்: பகரிச...

ஞானியின் கரங்களைப் பற்றிய குறிஞ்சி, தன்னை நந்தவனமாக்கி மலர்களைப் பறித்து முகரத் தூண்டுகிறாள்...

பொன்னொளிரும் பூம்பொழில் மேனியின் பூரிப்புமிக்க தேவஜாதி மலர்களான பாரிஜாத மலர்கள் புதிய மணம் பெறுகின்றன!

"ஞானீ!"

"குறிஞ்சீ!"

"ஞானீ!"

"குறிஞ்சீ!"

அவள், மந்தரஸ்தாயின் மத்திமத்தில் குரல் கொடுத்தாலும், அவன் பஞ்சமத்தில் நின்று ஒரு படி கீழே இருக்கும் மத்திமத்துக்கு இறங்கத் தயங்குகிறானா? இல்லை மறுக்கிறானா? புரியவில்லை.



கொம்பும் கொடியுமாகப் பின்னி நின்றவர்கள் தெம்பின் சுழிமுனைக்குச் சென்றபோது...

கொம்பு கொடியைச் சாய்க்கும்; இங்கே கொடியே கொம்பைச் சாய்த்து விட்டது. அப்போதுதான் கொம்பு கொம்பானது; கொடி சாய்ந்த பலவீனம் உணர்ந்தது.

"குறிஞ்சீ!"

அந்தக் கூடமே அதிரும்படிக் கத்தி விட்டான் ஞான சுந்தரம்.

அந்தக் கத்தலில்...

அதுவரை போகலீலா ராக அவரோகணத்திலிருந்த குறிஞ்சி, பயத்தின் அதிர்ச்சி மேலீடு மின்னலாய் இடிக்க, ஒவ்வொரு சுரமாக ஒரே அடியாக இல்லாமல் தயங்கித் தயங்கி உதிருகிறது... ச்-நி-த-ப-க-ரி-ச...

குறிஞ்சி தன்னையுணருகிறாள்... தன்னையுணருகிறாள்...

ஓ... ஒரு ராகம் மன்மதனுக்கு அடிமையாக்குகிற புதிய அனுபவம். புதிய ஞானம், பளிச்! பளிச்! ஆனாலும் குறிஞ்சி இப்போது தன்னை உணர்ந்தே சொன்னாள்:

"ஏன் ஞானி, அதிர்ச்சியால் தாக்குண்டதைப் போல நிற்க வேண்டும்? துணிந்தது துணிந்து விட்டோம்! முழுக் கிணற்றையும் தாண்டி விடுவோமே!"

"வேண்டாம்! இந்த ராகம் இப்படி நம்மைக் காட்டுத் தீயாய், காட்டாற்று வெள்ளமாய் ஆக்கும் என்பது நான் எதிர்பாராதது."

"நான் மட்டும் எதிர்பார்த்தேனா?"

"ராகங்களைத் தெய்வம் என்கிறார்களே... அது இது தான்!"

"திருத்திக்கொள்ளுங்கள் ஞானீ! சுரங்கள் தெய்வங்கள். நாம் அவற்றைக் கொண்டு எந்த ராகத்தைப் பாடுகிறோமோ அந்த ராகத்துக்கேற்ப, தெய்வம் அவதாரமெடுக்கிறது! போகலீலா மன்மத அவதாரமெடுத்தது போல!... இப்போது நானே தயாராகிவிட்டபோது நீங்கள்

ஏன் மறுக்க வேண்டும்? எனக்கு எல்லாமே நீங்களாகி விட்ட பிறகு இது ஒன்று மட்டும் ஏன் தனித்து அவஸ்தா பேதத்துக்கு ஆளாக்க வேண்டும்?"

இப்போது ஞானசுந்தரம் அதிர்ச்சி நிலை நீங்கி ஓர் அவதார புருஷனாய் முறுவலிக்கிறான்:

"வேண்டாம் குறிஞ்சி! உன் வாயால் எப்போது தை என்றாயோ அப்போது நமது மெய் தைக்கட்டும்! இன்று நாளும் நன்றாக இல்லை. கோளும் குறைபாடாக இருக் கிறது. தைமாதம் என்பது மகர ராசி. உனது ஜாதகத்தில் பாக்கியத்தை தரும் பத்தாவது வீடு! அதில் அமர்ந்திருக் கும் கிரகம் மோட்சக்காரன்! நமது வாழ்வின் விமோச னம் தை மாதமாகவே இருக்கட்டும்!"

ஞானசுந்தரத்துக்கு வியர்த்துக் கொட்டுகிற நிலை அடங்கிவிட்டது. ஆனால் குறிஞ்சி...

இன்னமும் தெப்பமாக நனைந்து கொண்டிருக்கிறாள். முழுவதுமாக அவரோகணிக்கவில்லை...

"ஞானீ! என்னால் முடியவில்லை. என்னால் முடிய வில்லை!"

"அமைதி, குறிஞ்சி! அமைதி! கலைக்கு உணர்வு தரக் கூடியது காமம்! ஆனால் மீறிவிடக்கூடாது! போகத்தைத் தரக்கூடிய ராகங்களில் ஒன்றான போகலீலாவைத் தெரிந்தே நான் பாடச் செய்தேன். இவ்வளவுக்கு மோச மாக்கும் என்பது எதிர்பாராதது! காரணம், ஆரோகணத் தில் பஞ்சமம் இருந்ததால், என்னை என்னில் நிறுத்தி எண்ணச் செய்திருக்கிறது. சுரங்களின் மந்திரங்களை எவரும் அனுபவித்து வேதம் எழுதவில்லை."

அவன் குறிஞ்சியை இப்போது காம விகாரங்களுக்கு அப்பாற்பட்ட ஒரு காப்பியம் போல நோக்கித் திருக்குறளின் அறத்துப்பாலின் ஆதாரம் போலவும், பொருட்பாலின் பொக்கிஷம் போலவும் மாறி, காமத்துப் பாலைத் தைத் திங்களில் வாசிக்கலாமே என்று கன்னங் களைத் தடவிக் கண்களால் போதிக்கிறான்...



அப்போதும் குறிஞ்சியால் தன்னையடக்கிக் கொள்ள முடியவில்லை. அவள், அவனை அணைத்துப் பல்லவி பாடவே செய்கிறாள். அனுபல்லவிக்கு ஆயத்தமாக்கவே முனைகிறாள். சரணம் எது? சரணம் எது? என்றும் நாவால் கேட்பதற்கு மாறாக நரம்புகளால் கேட்கிறாள்.

"இதனால் என்ன மூழ்கிவிடப் போகிறது? நான் ஏதோ பைத்தியம் போல தைப்பாவை என்றும் தமிழ்ப்பாவை என்றும், தை மாதத்தில்தான் காமம் 'தை தை' என்று குதிக்கும் என்றும் பேசி இருக்கலாம்! அதன் உக்கிரம் தெரியாத உளறல்கள் என்று எண்ணுகிறேன்! நாம் காத லர்கள். பெண் பார்த்து, நிச்சயித்து, பரியம் போட்டுத் திருமண நாள் நிச்சயித்து, அக்கினி வளர்த்தி, அருந்ததி காட்டி, அந்தத் தாலிக்கயிற்றை எவன் எடுத்துக் கொடுக்கப் போகிறான்? அதுவும் ஒரு புலைச்சிக்கும் பிரமாணனுக் கும்? நமக்குத் தாலியாவது சடங்காவது? நமது தாலி நமது இதயங்கள்; எனக்கு வேலி எனது நெஞ்சு! நமது அக்கினி – ராகங்கள்! நமது அருந்ததி சுருதி! இப்படி இருக்க..."

"உஸ்...!" மேலும் அவளைப் பேசிவிட அனுமதியாத ஞானசுந்தரம், அவளது உதடுகளை விரல்களால் மூடினான்.

"இப்போதைய உனது பேச்சை என்னால் சுயநல மாகவே கருத முடிகிறது! ஒரு சமயம் உன்னிலையில் நானிருந்தபோது இந்த உளறல்கள் எங்குப் போயின?"

சுந்தரத்தின் குரலில் சூடு பறந்தது.

அளவுக்கு மீறிய மோகதாபம், குறிஞ்சியைக் கலங்கவும் செய்து விட்டது. "ஞானீ! நீங்கள் ஞானீ! ஞானீ! நிச்சய மாகவே ஞானீ! சாஸ்திரம் படித்தே சரணடைந்து கெஞ்சு கிறேன்! நான் பெண்! அதனால்தான் காமம் அதிகம் போலும்! புலால் மறுத்தே இந்த நிலையென்றால்... ஞானீ! ... ஆண்களைக் 'காமாதுரன்' என்ற சொல்லால் தவறாகக் கூறுவர். 'காமி' என்ற பொருளைக் கசப்பாக்கி விட்டனர். ஆண்காமம் ஐந்து நிமிடம்! பெண் காமம் புயல்! அது எளிதில் மையம் கொள்ளாது. கொண்டு விட்டால் குடும்ப நாசம்! இதனைப் படித்து இருக்கி

றேன்; என்னால் இப்போது உணர முடிகிறது... தயவு செய்து இப்போதைக்கு என்னை ஏற்றுக் கொள்ளுங்கள். நாளாவது நட்சத்திரமாவது? ஒவ்வொருவருமே நாள் நட்சத்திர ஓரை பார்த்துப் புணருவார்களேயானால், இந்த மண்ணில் எல்லாருமே யோக்கியர்களாய் பிறந்து இருப்பர்! பிறகு நல்லது கெட்டது தெரியாமல் போயிருக்கும். அப்படித் தெரியாமல் போயிருந்தால் கலையாவது? இலக்கியமாவது? பிரபஞ்ச பரிமாணங்களே புரியாமல் போயிருக்கும்! வேத உபநிஷதமாவது? திருக்குறளாவது? கீதையாவது?"

அவள், அவனது தோளைப்பற்றி மீண்டும் மீண்டும் பல்லவி பாடி, அனுபல்லவியையும் அவளாகப் பாடச் செய்து சரணத்துக்காகக் கால்களிலேயே விழுந்து சரணடைந்து கெஞ்சுகிறாள்.

அவளது மென்மையான தோள்களைப் பற்றி எழுப்பிய ஞானசுந்தரம், "குறிஞ்சி! நான்தான் தவறு செய்துவிட்டேன். போகலீலா பாடித் தனித்தனியே மோகம் கண்டு ஆனந்திப்போம் என்று எண்ணியது எப்படிச் சாத்தியம் என்பதைக் கணக்கிட மறந்து போனேன்! ஏற்கெனவே நீ தபஸ்வினியாக இருக்கிறாயே... மேலும் உன்னை தபஸ்வினியாக்கக் கூடாது என்று போகலீலா ஆரம்பித்தேன். பாடி இருக்க வேண்டியது தபஸ்வினி ராகம்!"

குறிஞ்சியின் கண்களில் விழிப்பு!

"அப்படி ஒரு ராகம் இருக்கிறதா!"

ஞானி தம்பூரை எடுத்து மடியில் கிடத்த...

"இது வேண்டாமே! இதற்குப் பதில் என்னை மடியில் கிடத்தி மீட்டுங்கள்... ஞானீ! ஞானீ!... போகலீலா தென் துருவம் என்றால்; தபஸ்வினி வட துருவமாகி விடக் கூடாது."

தம்பூரின் நாதம்...

ஞானசுந்தரத்து இமைகள் மூடுகின்றன. அவனுக்கு மட்டும் அந்த விரகதாபமில்லையா? ஏனோ அன்றைய மரணயோகம் அவனை மறுக்கச் செய்து, ஏதேதோ



வாதாடிப் பார்த்து முடியாமல் போகவே இப்போது அவனே தவசியாகிறான்...

ப ச ச ப...

தம்பூர் நாதம் கூடத்தை நிரப்புகிறது...

அவன் மேல் சட்சமத்தில் நிற்கிறான்...

காமத்தின் அருமை தெரிகிறது...

சூரியனாகவும் சந்திரனாகவும் காமத்தை ஜோதியாகப் பார்க்கும் கலைஞனின் எந்தப் படைப்பும் காப்பிய ஒளி பெறுகிறது! மறுக்க முடியாது. காப்பியங்களுக்கெல்லாம் சிறந்த காப்பியமான மன்மத காப்பியத்தை இலக்கணச் சுத்தமாகப் படித்தவனால் மட்டுமே மன்மதச் சாந்து மணக்கும் கலைஞனாக முடிகிறது. மன்மதனையே கொச்சைப் படுத்துபவன் கலைஞனல்லன்!

ஒரு கம்பனைப் போல... இயல்!

ஒரு *சுந்தரரைப் போல... இசை!

ஒரு காளிதாசனைப் போல... நாடகம்!

இங்கே ஞானசுந்தரத்து போகலீலா பெற்ற மெய்ம் மறப்பு. தபஸ்வினி பெறத் தொடங்குகிறது... வேறுபாடுகளில்தாம் வாசனை வித்தியாசம்...

குறிஞ்சியிடமிருந்து முன்பு விழுந்தனவே போகலீலா அவரோகண சுரங்கள்... அது பொய்மை; மாயை!... தயங்கித் தயங்கி 'விழலாமா வேண்டாமா' என்று விழத் தொடங்கின.

இப்போது மெய்ம்மை... சாயை...

தபஸ்வினி ராகத்து ஆரோகணமான சகமபநிச்ா... என்று ஞானசுந்தரத்து இனிய குரல் மேல்நோக்கிப் பர்ண சாலையை வேய, வேய...

குறிஞ்சியின் போகலீலாவின் அவரோகணம் வேள்வித் தீயில் எரிபட்டு 'ச்-நி-த-ப-க-ரி-ச' என்று ஒவ்வொரு சுரமாகப் பொறிபட்டுச் சாம்பலாகி உதிர்கின்றன...

* சுந்தரமூர்த்தி நாயனார் பாடல்களின் – பண்களின் பரிணாமங்கள் வியக்கத்தக்கவை.

ஓ! இப்படி ஒரு ராகமா? தபஸ்வினி ராகமா? பிரதி மத்திம ராகம்... இராமப்பிரியா ஜன்யம் என்பது புரி கிறது...

இது புரிவதற்குள் அவள் இப்போது தன்னையே, தனது நிலையையே மெல்ல மெல்லப் புரிந்து வருகிறாள்...

வியர்த்து கொட்டும் விரகதாபத்தின் விறகெரிப்பு அடங்குகிறது...

ஓடுகிறாள்... ஓடுகிறாள் எங்கே ஓடுகிறாள்?

ஞானசுந்தரம்தான் கண்களை மூடிக்கொண்டு இசைக் கிறானே!

குறிஞ்சியின் ஞாபகமே இப்போதைக்கு வேண்டாம் என்று இமைகளைத் திறவாமல் இசைக்கிறானே...

ஓடிச்சென்ற குறிஞ்சி, கிணற்றடிக்குச் சென்று, வாளி யால் நீர் மொண்டு தலையில் கொட்டிக் கொள்கிறாள். அதே ஈரத்துடன் திரும்பி வந்து ஒரு தபஸ்வினியைப் போல ஞானசுந்தரத்துக்கு முன்னே அமருகிறாள். தரை முழுவதும் ஈரம்... ஈரம்...

உடன் அவளும் தவசியாகிப் பாட ஆசைப்படு கிறாள்... ஆனால் அதன் ஆரோகணம் அவரோகணம்? இலட்சணம்? – அவளுக்குத் தெரியாதே!

தரையில் ஈரம் பரவித் தன்னை நனைத்துச் சில்லிடுகிற போதுதான், கண்களைத் திறக்கிறான் ஞானசுந்தரம்.

"குறிஞ்சி!"

நிஜமாகவே தபஸ்வினியைப் பார்க்கிறான்...

"நான் தபஸ்வினியாய் விட்டேன்" என்கிறாள் குறிஞ்சி. அவளது இமைகள் அரையும் குறையுமாகத் திறந்தும் மூடியும்...

ஞானி ஞானமாய்ச் சிரிக்கிறான்...

"ஞானி! அடுத்து மாயவரம் கச்சேரியில் நாம் பாடப் போகிற முதல் ராகம் தபஸ்வினி!"



"ஐய்யயோ! ரசிகர்கள் சாமியாராய் விட்டால், பிறகு கச்சேரியை ரசிப்பதை விட்டு வாழ்வாவது மாயம்; மண்ணாவது திண்ணம் என்று அவர்கள் பாடத் தொடங்கி விடுவார்கள்..."

குறிஞ்சி கலகலவென்று நகைக்கிறாள்...

அம்மம்மா... குறிஞ்சி தன்னிலைக்கு வந்துவிட்டாள்.

"ஞானி! தபஸ்வினியின் ஆரோகண அவரோகணம்? இராமப்பிரிய ஜன்யம் என்பது புரிகிறது..."

சகமபநிச்

ச்நிதபமகச...

ஞானசுந்தரத்திடம் பயில வேண்டியவை இன்னும் எவ்வளவோ? எவ்வளவோ?...

குறிஞ்சியின் கரங்கள் கூப்புகின்றன.

'எந்தரோ மகானுபாவுலு'....

– தியாக பிரும்மம் பாடினார்.

மகான்கள் எங்கோ இருக்கிறார்கள்; அவர்களில் ஒருவர் எனது காதலர்; அவரை நான் வணங்குகிறேன்!

'அந்தரிக்கி வந்தனமு...'

# இராகம் - 15



# நீலி

குறிஞ்சியின் கோபுரமனைய புகழும் பொற்கலச மனைய சன்மானங்களும், தஞ்சை சமஸ்தானத்தில் மாதம் ஐம்பது சக்கரமே சம்பளம் வாங்கும் சங்கீத சாம்ராட்களின் நெற்றிகளில் திருகுவலிகளை நிமிட்டத் தொடங்கி விட்டன.

ஒழிப்பது எப்படி? ஒழித்துக் கட்டுவது எப்படி? இந்தக் கொடுவாளைப் போன்ற கேள்விக்குறிகள், சரபோஜியின் அரண்மனையாம் ஐந்தங்கண மாடக்கூடத்தில் இசை மகாலில் குறிஞ்சி பாடிய ராஜாளி ராட்சஸம் வெளிப் பட்டதும் சாணை பிடிப்பவளைத் தேடி மேலும் கூர் தீட்டத் தொடங்கிவிட்டன.

ஒரு பிரதான மகாவித்துவான் மாளிகையில் அன்றிரவு சதியாலோசனை.

குறிஞ்சியின் ரத்தத்தை உறிஞ்சியாக வேண்டும். இவளால் தங்கள் மரியாதைகள் மந்தப்படுகின்றன; தொழில் தொய்வு...

இரண்டொருவர் எதிர்த்தாலும் அனைவரும் ஒருமுக முடிவுக்கு வரவே, கொலை செய்யும் கூலிப்பட்டாளத் துக்கு வலைபின்னவும் தொடங்கினர்.



"சங்கீதத்தைக் கொலை செய்வது சிசுகத்திப் பாவம்!"

"சங்கீதத்தை மரபுக்கு மாறாகப் பாடுபவளைக் கொலை செய்கிறோம்! தமிழில்தான் பாட வேண்டும் என்கிற அடத்தைக் கொலை செய்கிறோம்! ஒரு புலைச்சி பாடு வதாவது?"

வெகுநேர அமைதிக்குப் பிறகு தீர்மானம் முழுமனதாக மீசையை முறுக்கியது.

குறிஞ்சி யார்? அவளது குன்றனைய கும்பாபிஷேகக் கீர்த்தி என்ன? சென்னை கவர்னர் உத்தரவு என்ன? ராஜகாந்தி எனும் ராட்சஸ பயங்கரம் என்ன?

இவையாவையும் சமாளிக்க முடியும் என்கிற நெஞ் சுரம் இவர்களிடை இருந்ததென்றால் அரண்மனையில் அத்துணை செல்வாக்கு அவர்களுக்கிருந்தது.

மன்னர் சரபோஜி அனுப்பிய பொற்குவியலைத் திருப்பியனுப்பிய தியாகபிரும்மமே குறிஞ்சியின் இசை யைக் கேட்டு மகிழ்கிற பாக்கியமில்லையே என்று வருந்தி னாராமே! இப்பேர்ப்பட்ட நாரத வீணையை, நயந்தெரி கீதத்தை, தேரிய மடந்தையின் வாரம் பாடலை வஞ்சக மாய் வீழ்த்த சதி நடக்கலாமா? நடந்து விட்டது. புலமைக் காய்ச்சல்! தொழில் பாதிப்பு!

மயிலாடுதுறைக்கு அண்மையில் இருக்கும் திருக் கடவூர் அபிராமி சந்நிதியில் கச்சேரி.

எட்டு வீரத்தலங்களில் ஒன்றல்லவா திருக்கடவூர் அட்டானம்!

மேடையை அலங்கரிப்பதில் மூழ்கினான் ஜான்.

மாலை இறங்க, இறங்க மயிலாடுதுறைச் சுற்றுப்புரத்து மக்களனைவருமே கூட தொடங்கினார்கள். எங்கு நோக் கினும் தீப்பந்தங்கள்.

திருச்சியைச் சார்ந்த உடையார்பாளைய ஜமீந்தார், ஒரு பிரார்த்தனையை முன்னிட்டு காலை அபிஷேகங்களும், ஆராதனைகளும்..

திருவிழா போலத்தான். ஆராதனையின் போது குறிஞ்சியை உள்ளே அனுமதிக்கச் சற்றுத் தயங்கினாலும், அருமைமிகு தமிழ் மடமாம் தருமமிகு தருமபுர ஆதீனத்துப் பயத்தால் தீண்டாமை நாக்குகள், அக்கினிப் பிரவேசம் செய்து கொண்டன. அந்தக் காலம் அப்படியானது.

திருக்கடவூர் தமிழ்ப் பேராசிரியர் சிங்காரவேலனார் வீட்டில்தான் குறிஞ்சிக் குழுவினர் தங்கியிருந்தனர். ஜமீந்தார், அவருக்கென்றிருந்த இடத்தில் தங்கிக் கொண்டார்.

குறிஞ்சி தங்கிய வீட்டு வாசற்படியில் திடுமென்று பெருத்த ஆரவாரம்.

சிவகங்கையைச் சேர்ந்த ஜமீந்தார் வல்லப உடையத் தேவரின் மகன் இளைய வல்லபத் தேவ உடையார் குறிஞ்சியின் இசையரங்கு பற்றிக் கேள்விப்பட்டு வருகை புரிந்து இருந்ததுதான். தனிமையில் வந்திருந்தாலும் பரவாயில்லை. உடன் ஆற்காட்டு நவாப் *ஆஜம்ஜாவும் வந்திருந்தான்.

குறிஞ்சியைக் காணவேண்டும் என்றும், சிறிது நேரம் பேசவேண்டும் என்றும் தனது திவான்களில் ஒருவரை வீட்டுக்குத் தூது அனுப்பி வைத்திருந்தான் சிவகங்கை இளவரசன்.

ஞானசுந்தரம்தான் வழிமறித்து விசாரிக்கலானான்: "யார் நீங்கள்! என்ன விஷயம்?"

"சிவகங்கை ஜமீந்தார் வந்திருக்கிறார். குறிஞ்சியைப் பார்க்க வேண்டும்; பேச வேண்டும்."

திவானின் குரல் திமிராகவே இருந்தது.

ஞானசுந்தரம் சொன்னான்: "இங்கே நாங்கள் யாரையும் பார்க்கவோ, பேசவோ வரவில்லை. பாட வந்திருக்கிறோம். பாட்டைக் கேட்க வந்திருந்தால் அரங்கம் நோக்கிச் செல்லலாம்."

"யாரடா நீ? திமிராகப் பதில் சொல்வது?"

* "Historical Inscriptions of South India" By Robert Swall.



"நீ தேடி வந்தவளுடைய இணை; துணை; கணை! போதுமாடா?"

"நான் திவான்! என்னையா 'டா' போட்டுப் பேசுகிறாய்?"

"மரியாதை என்பது எதிர்பார்ப்பது மட்டுமல்ல; கொடுப்பதும். நீ கொடுக்க மறந்தாய்! நான் மறுத்து விட்டேன்!"

"வந்திருப்பவர் சிவகங்கை இளவரசர்!"

"தஞ்சை இளவரசரானாலும் கவலைப்படப் போவதில்லை. கேவலம் சிவகங்கை! திவான்! சிவகங்கையின் சிறப்பு சுதந்திர முழக்கம் செய்த வீராங்கனை வேலு நாச்சியாருடனும், அவருக்குப் பின் மானங் காத்த மறவர் குல மாணிக்கங்களான மருது சகோதரர்கள் தூக்கில் தொங்கினார்களே, அவர்களுடனும் முடிந்து விட்ட மரியாதைக்குரிய கதை அது! மருதுவின் பிள்ளையை வெள்ளைக் கும்பினியின் கப்பலில் கடத்திச் சென்றானே, அந்தக் கதை அந்தப் பிள்ளையுடன் கப்பலேறிப் போன கதை! நீ புதிய கதைக்குத் தூது வந்ததுமல்லாமல், புரட்டிப் பார்க்க வேறு ஆசைப்பட்டிருக்கிறாய்! போகலாம்!"

செவிட்டில் அறைந்ததுபோலப் பதில் சொன்ன ஞானசுந்தரம், சட்டை செய்யாமல் உள்ளே சென்று விட்டான்.

ரத்தநாளங்கள் சித்தத்தைத் தடுமாறச் செய்ய ராட்சஸ வெறியோடு வெளியேறினான் புதிய திவான் தீர்த்தகிரி.

குறிஞ்சி இச்செய்தியறிந்து பெரிதுபடுத்திக் கொள்ளவில்லை. ஜமீன்களின் ஜாலங்கள் பற்றி அவள் நிறையவே கேள்விப்பட்டிருக்கிறாள். அக்காலம் பெண்களில் பாடுபவர், ஆடுபவர் என்றால் பரத்தையர் என்று எண்ணிய காலம்!

சற்றைக்கெல்லாம் மயூரி வாத்தியம் வாசிப்பவன் அறையினுள் ஓடிவந்தான்.

"அம்மா யாரோ ரொம்பவும் வயதான ஞானப்பழமாக இருக்கிறார். பெயர் அபிராமிபட்டர் என்றார். பார்க்க வரலாமா என்று அனுமதி கேட்கிறார்."

சொல்லி முடிக்குமுன் எழுந்து ஓடோடி வெளியே வருகிறாள் குறிஞ்சி.

"சுவாமி! நீங்கள் உள்ளே வர அனுமதி கேட்பதா? அபிராமியின் அவதாரமல்லவா தாங்கள்!"

காலில் விழுந்து கண்ணீரால் கழுவி எழுகிறபோது, அவளது கூந்தலிலிருந்து ஒரு மலர் இயல்பாகவே பெயர்ந்து பட்டர் காலில் விழுகிறது.

இந்தக் காட்சியைக் கண்ட பட்டர் கண்களில் நீர்த்திரை... ஏன்? ஏன்?

"மகளே! தமிழிசையைப் பரப்பும் உனது பெருமையைக் கேள்விப்பட்டு மகிழ்வேன்! உன்னைப் பார்ப்பேனா? உனது இசையைக் கேட்பேனா என ஏங்குவேன்! ஒரு நாள் நானே அந்த அபிராமவல்லியைக் கேட்டேன். இந்த உயர்மகளைப் பார்க்க இன்று அருள் பாலித்து இருக்கிறாள்!"

"ஐயோ! சுவாமி! நான் உயர் குலமகளல்ல. புலைச்சி! புலைச்சி சுவாமி. புலைச்சி!"

"அறிவேன்!" பட்டர் பகபகவென்று சிரிக்கிறார். "அப்படிப் பார்த்தால் அந்த அபிராமியும் ஒரு புலைச்சிதான்! குறிஞ்சி! புலையன் யார்? புரோகிதன் யார்? நான் அத்வைதி! தில்லைவெட்டியான், பெற்றான் சாம்பன், நந்தன் போன்ற சைவப்புலையர்களுக்கும், திருப்பாணாழ்வார் என்கிற வைணவப் புலையருக்கும் மிஞ்சியவனல்லவே நான்? இப்போது பிராமணர்கள் எங்கே இருக்கிறார்கள் மகளே! சோட கர்மங்களையும், ஷட்கர்மங்களையும் அனுஷ்டிப்பவனே பிரம்மத்துக்கு உரியவன்! நீயும் அனுஷ்டிக்கலாம்; நானும் அனுஷ்டிக்கலாம். ஆனால் இப்போது யாருமே அனுஷ்டிப்பதில்லை!"



தொலைவில் கை கட்டியவாறு நின்றிருந்த ஞானசுந்தரத்தை நோக்குகிறார் அபிராமிபட்டர். "யார் இந்தப் பிள்ளை?"

"நாங்களிருவரும் தீட்சிதர் பெருமானிடம் இசை பயின்ற..."

"ஓ! அந்தப் பிள்ளையா? ஞானசுந்தரம்! புரட்சிப் பிராமணனா?"

ஞானசுந்தரம் மட்டுமல்லாமல், குறிஞ்சியும் தலை குனிந்து கொண்டனர்.

"குறிஞ்சி! உன்னைப் பற்றி நீ எப்போதுமே தாழ்வாக நினைக்காதே! விழிக்கே வேதம் சொன்ன அபிராமவல்லியின் விழிகளை உனது முகத்தில் பார்க்கிறேன்! காஞ்சி ஸ்ரீ ஆச்சார்யாள் பெருமானைக் கண்ட விழிகளல்லவா இந்த விழிகள்! பத்திரகாளி பிரத்தியங்கிரா தேவியின் அதர்வண வேதம் கண்ட விழிகளல்லவா உன் விழிகள்?"

குலை நடுங்கிப் போனாள் குறிஞ்சி.

ஆ! யாருக்குமே தெரியாத ரகசியம்! ஞானசுந்தரம் மலைத்துப் போனான்.

மகா சித்து புருஷரல்லவா? அபிராமி அந்தாதி பாடி, அமாவாசையைப் பௌர்ணமியாக்கி *சரபோஜி மன்னருக்குக் காட்டிய இந்தத் தமிழ்மகான் சித்தியில் தெரியாதது எது?

"குறிஞ்சி! உன் விழிக்கே அருளுண்டு. நான் மேடைக்குச் செல்கிறேனம்மா!"

"நானும் உங்களுடன் வருகிறேன் சுவாமி!"

"நீ ஏதோ ஒரு புது ராகம் பாடுகிறாயாமே... குற்றாலக் குறிஞ்சி... அதனைப் பாடுவாயல்லவா?"

"யாருக்காக இல்லாவிட்டாலும் உங்களுக்காகப் பாடுவேன் சுவாமி!"

* முதலாம் சரபோஜி என்பாருண்டு. ஆய்ந்து பார்த்ததில் தெளிவு பிறக்கவில்லை. இது எனது ஆய்வின் முடிவு.

"எனக்காகப் பாட வேண்டாம். அபிராமி அம்மை கேட்கிறாள்; பாடு!"

அனைவரும் அரங்கம் நோக்கி நடந்தனர்.

கூட்டத்தில் ஒரே கரகோஷம். இதில் நிரம்பவும் விசித்திரமான வேடிக்கை என்னவென்றால், தஞ்சையிலிருந்து இளவரசன் சிவாஜி வருகைதந்து மிக்கவும் அமைதியாக அமர்ந்திருந்ததுதான்.

கேள்விப்பட்ட குறிஞ்சி, மெய்விதிர்த்துப் போனாள்.

சொன்னது சொன்னபடி வந்தது ஒருபுறமிருக்கட்டும்; சிவகங்கை போலச் செருக்கில்லாமல், அக்னியால் வரிக்கப் பட்ட சிவவீரியத்தைச் சரவணத்தில் வைத்த கங்கைபோல வந்தமர்ந்து இருக்கிறாரே! வந்திருப்பதாக ஒரு செய்தியும் வரவில்லையே?

இருபுறமும் போடப்பட்ட நாற்காலிகளில் ஒருபுறம் அரச குடும்பத்தினருடன் உடையார்பாளைய ஜமீந்தாரும் அமர்ந்திருந்தார்.

குறிஞ்சி எவர் குறித்தும் கவலை கொள்ளாது மேடையில் அமருகிறாள்.

தஞ்சை இளவரசன் சிவாஜிக்கு மட்டும் சின்ன வருத்தம். 'எப்போது வந்தீர்கள்' என்று விசாரித்து இருக்கலாமே! அவ்வாறு விசாரித்தால் சிவகங்கையான் என்ன நினைப்பான்? இது சிவாஜிக்குத் தெரியாதே!

அபிராமவல்லியைத் தியானிக்கிறார்கள்! குறிஞ்சியும், ஞானசுந்தரமும்.

தம்பூர், தீட்சிதரைப் போலத் தீட்சண்யமாய் ஒலிக்கிறது.

குறிஞ்சி ஞானசுந்தரத்தைப் பார்த்து ஏதோ சமிக்ஞை செய்கிறாள். ஆரம்பிக்கிறேன் என்கிற சமிக்ஞை அது...

'ஓம்' என்று அவளது குயில் குரல், தேனையருந்தி தாக சாந்தி செய்துகொண்டது போலத் தமிழாய் இனிக்கிறது.

எடுத்த எடுப்பில், சுருதியில் நின்றே பேசினாள் குறிஞ்சி:



"இங்கே நான் அடைகிற பெருமகிழ்ச்சி, அபிராம வல்லிக்கே வேதம் சொன்ன அபிராமிபட்டர் என்கிற மகான் வந்திருப்பது! ரசிர்கள் எனக்கு வேலியாக வந்திருக்கலாம்; ஆனால் சிலர் நீலியாக வந்திருக்கிறார்கள்! இது நீலியாகிய, திரிசூலியாகிய அபிராமவல்லி குடியிருக்கிற புண்ணிய பூமி! இங்கே நீலிவேஷமிட்டும், நீலிக் கண்ணீர் வடித்தும் சிலர் வந்திருப்பதால், அவர்களுக்குமாகச் சேர்த்து, பட்டர் பாடிய பாடலையே நீலி ராகத்தில் பாடுகிறேன்! புரிந்தால் புரியட்டும். புரியாவிட்டால் பாவங்களைச் சுமக்கட்டும்!"

நீலி ராகம்...

அப்படி ஒரு ராகமா?

எதிர்வரிசையில் இசை ஞானமுடைய சிலர் தலையைச் சொறிந்து கொள்கிறார்கள்.

சில வெற்றிலைப் பெட்டிகள் திறந்தவை திறந்தபடி...

நீலி ராகம் என்ன என்பதை நிதரிசனமாகப் புரிய தொடக்கமே சுரமாக...

"சகமதநிசா..."

மேல் சட்சமத்தில் நிற்கிறாள் குறிஞ்சி.

சுருதியும் குரலும் சுத்தமாக இழைகின்றன...

ஏதோ அபிராமவல்லி சோதனை நிகழ்த்துகிறாள் என்பது மட்டும் அபிராமிபட்டருக்குச் சுத்தமாகப் புரிகிறது.

"சநிதமகசா..."

ஆதார சுருதியில் குரல் ஆதாரமாக நிற்கிறது...

ஓ! ஐம்பத்து எட்டாவது மேளகர்த்தாவான ஏமவதி ராகக் குழந்தையோ இது?

ஏமவதியும் அந்த அபிராமவல்லிதானே? நீலியாகி உருகுகிறாளா? உக்கிரம் கொள்கிறாளா?

என்ன பாடினாள் குறிஞ்சி?

"விழிக்கே அருளுண்டு அபிராமவல்லிக்கு வேதம் சொன்ன...

'வழிக்கே வழிபட நெஞ்சுண்டு எமக்கு அவ்வழி கிடக்க...

'பழிக்கே சுழன்று வெம்பாவங்களே செய்து பாழ்நரகக்...

'குழிக்கே அழுந்தும் கயவர் தம்மோ டென்ன கூட்டி னியே!"

குறிஞ்சி பட்டர் இயற்றிய பாடலையும் தொட்டாள்...

அத்துடன், வழிபட நெஞ்சிருக்க – அபிரமாவல்லியை வழிபடுவதை விட்டு, என்னை நோக்கி வந்திருக்கிறீர்களே, அடப்பாவிகளே... தஞ்சை இளவரசே! சிவகங்கை இளைய ஜமீனே! ஆற்காட்டு நவாபே!...

பழியில் சுழன்று பாவங்களைச் சுமந்து பாழ் நரகமான குழிக்கே நீங்கள் அழுந்திவிடப் போகிறீர்கள்! கயவர் களாகிய உங்களுடன் நான் கூடுவனோ?

கூட்டினியே என்று பட்டர் பாடினார்! 'அடி, அபிராம வல்லி! இவர்களுடன் என்னையும் கூட்டினியே!' என்ற கருத்துப்படப் பாடுவது சிவாஜிக்குப் புரியவில்லையா? சிவகங்கை இளைய ஜமீனுக்குப் புரியவில்லையா? ஆற்காட்டு நவாப்புக்கு திவான் திருத்தமாக மொழி பெயர்த்து விளக்கம் கூறுகிறான்! நவாப்பின் கண்கள் கவாப்பாகி எண்ணெயில் பொரிகின்றன.

'பழிக்கே சுழன்று பாழ் நரகம்' எனுமிடத்திலும், 'குழிக்கே அழுந்தும் கயவர்' எனுமிடத்திலும் அழுத்தம் திருத்தமாகச் சங்கதிகளை வைத்து அசத்தி விட்டாள்.

ஒரே கரவொலி!

"பலே, மகளே, பலே!" என்று பாராட்டுகிறார் பட்டர்.

சிவகங்கையின் கண்கள் சிவக்கின்றன.

ஆனால் சிவாஜி சினந்தானில்லை; அவனது சிந்தை முழுவதும் குறிஞ்சி நிறைந்தாள்! அந்த அபிராமவல்லியே



வந்து தனக்குக் காதல் வேதம் சொன்னது மாதிரி... இல்லற புத்தி புகட்டியது மாதிரி... 'மணந்தால் இவளை யல்லவோ நீ மணக்க வேண்டும்!' என்று மனத்தில் போதிக்கிற மாதிரி... ஓ... விதிவசமோ?

சிவகங்கை இளைய ஜமீன் உட்கார்ந்த இடத்திலிருந்து கர்ஜிக்கிறான்:

"குற்றாலக் குறிஞ்சி பாடு! இந்த உடையார்பாளைய ஜமீன் என்ன நூறு சக்கரம் இதற்குத் தனியாகத் தருவது? நான் இருநூறு சக்கரம் தருகிறேன்!"

சிவாஜியின் கண்கள் அப்போதுதான் சினந்து சிவகங்கையை நோக்குகின்றன.

அந்த நேரத்தில்...

அழகே உருவான – அம்பிகையே போன்ற ஒரு சுமங்கலிப் பெண் எழுந்து நின்று, "இப்போது அந்த ராகத்துக்கு அவசியமில்லை!" என்றாள்.

யாரிவள்?

ஆசைப்பட்டு எதிர்பார்த்த அபிராமிபட்டரே அலமரல் கண்டார்.

அபிராமவல்லியின் சிலைமுகமும் இந்தப் பெண் முகமும் அப்படியே இருக்கக் கண்டு அயர்ந்து போனார் அபிராமி பட்டர்.

'பக்தியால் யானுனைப் பலகாலும்' என்று அருணகிரி பாடியதுபோல, பக்தியால் பலகாலும் பார்த்துப் பார்த்து...

ஓ... இது பிரமையாகவும் இருக்கலாமோ!

# இராகம் – 16



# மேகராகக் குறிஞ்சி

"அம்மா, நீ யார்?"

பொன்மேனி மின்னி எழுந்து நின்ற அபிராமிபட்டர் கண்கூனிக் கலங்கிக் கேட்கிறார்.

அந்தப் பெண்மணி சொன்னாள்:

"நீங்கள் பாடிய 'அழியாத நீலியல்ல;' குறிஞ்சியம்மா பாடிய நீலி ராகமுமல்ல; என் பெயர் உண்மையிலேயே அபிராமி!"

"அபிராமி?"

"அக்கிரகாரத்தில் என்னை எத்தனை முறை பார்த்து இருக்கிறீர்கள். மறந்துவிட்டீர்களே! சிவசங்கரய்யர் மனைவி!"

புரியவில்லை பட்டருக்கு; ஆயினும் புரிந்ததுபோலச் சொன்னார்: "ஓகோ! 'தவளே இவள் எங்கள் சங்கரனார் மனைமங்கலமா?' ஏன் தாயே குற்றாலக் குறிஞ்சி ராகம் பாட மறுக்கவேண்டும்? சிவகங்கை இளைய ஜமீந்தார் அதிகாரத்தொனியில் ஆணையிட்டார் என்பதாலா? நான் ஆசைப்பட்டு வந்ததே இந்த ராகம் கேட்கத்தானே?"



"நீங்கள் ஆசைப்பட்டீர்களா? 'ஆசைக் கடலில் அகப்பட்டு அருளற்ற அந்தகன் கைப்பாசத்தில் அல்லல்பட இருந்தேனே' என்று பாடியவர் ஆசைப்படலாமா? பட்டர் சுவாமி! நான் உள்ளங்கையில் உலகைப் பார்ப்பவள்; குற்றாலத்தையே பார்க்காதவள்; குற்றாலக் குறிஞ்சியைத் தானா கேட்கப் போகிறேன்? இப்போதைக்கு இது அவசியமில்லை. இந்தப் பாடகி இசை உபாசகி என்று கேள்வி. இந்தப் பகுதியே வறண்டு, தண்ணீர் தண்ணீர் என்று ஏங்குகிறது! நீலி ராகம் பாடி என்னை நிமிர்ந்து எழச்செய்த குறிஞ்சி, மழைக்குரிய ராகம் பாடி வானத்தை நிமிர்த்தட்டுமே! சில தலைகள் குனியட்டுமே! இந்த மக்கள் மகிமை உணர்ந்து மகிழட்டுமே!"

அந்தத் தெய்வீகக் களை பொருந்திய பெண்மணி கூறியதும், சிவகங்கை குறுக்கிட்டது.

"நீ யார் அதிகாரம் செய்ய?"

இந்த ஆணவப் பேச்சைக் கேட்டு சிவாஜியின் கண்கள் இலேசாகச் சினக்கின்றன.

அந்தப் பெண்மணி சொன்னாள்:

"ஒரு ரசிகை! தான் விரும்பியதைக் கேட்கிற உரிமையுடையவள்! இதனை இங்கு கோயில் கொண்டிருக்கும் அபிராமியின் கட்டளையாக எடுத்துக் கூறினேன். மற்றபடி நான் சாதாரணம்; உங்களைப் போல அசாதாரணமல்ல!"

இந்த நேரத்தில்...

எதிரிலிருந்த அபிராமி சந்நிதியில் மணியோசை கேட்கிறது. பூஜை முடிந்து காயத்திரி மந்திரம் கேட்கிறது. கூட்டத்தில் ஒரே பரபரப்பான ஆச்சரியம்.

"தாயே! குறிஞ்சியெனும் அபூர்வ புஷ்பம் உன்னைத் தேடி வந்து சங்கீத வாசனையைத் தருகிறபோது, ஏனடி உனக்கிந்த நீலிக்கோலம்?"

பட்டர் குரல்தான், கூட்டத்தில் அவரைக் காணோம். சந்நிதிக்குச் சென்று சஞ்சலம் தவிர்க்கிறாரோ? குரல் அங்கிருந்தல்லவா கேட்கிறது?

காவிரி, குறிஞ்சியின் கண்களில் பூ விரிக்கிறாள்.

நமது சங்கீதத்துக்கு இது சோதனையா? சாதனையா?

இப்போது...

அக்கினிக் குண்டங்களாய் விழிகள் ஆவிர்ப்பிக்கின்றன...

சந்நதம் கண்டவளைப் போலத் திரும்ப...

தம்பூர் ஓம்கரிக்கிறது...

ஓ... என்னே அமைதி!

பட்டர் 'சந்நிதியில் விம்மியழும்' குரலைத் தவிர, வேறு குரல் கேட்க வேண்டுமே!

நவாப் ஜமீனைக் கவனிக்க, ஜமீன் திவானைக் கவனிக்கிறான்...

இளவரசன் சிவாஜியோ, கண்களில் நீர் அலமரக் கவனிக்கிறான்! அது காதல் நீர்! "ஏ, அபிராமி! என் குறிஞ்சியைக் காப்பாற்று! உனது கழல்களில் என்னால் இயன்ற காணிக்கைகளைச் செலுத்துகிறேன்!"

இது சிவாஜியின் ஆத்ம அர்ச்சனை!

குறிஞ்சி, இமைகளை மூடித் தியானிக்கிறாள். 'ஏ பத்திர காளி! பிரத்தியங்கிரா தேவி! இது என்ன அபிராமி சோதனை? அன்று நாவுக்கரசரும், ஞானசம்பந்தரும் இசை விளையாட்டு விளையாடினார்கள் என்றால், அவர்கள் ஞானதீபங்கள்! பின்னாளில் முத்துத்தாண்டவருக்கு நீயே நீலி வேஷம் போட்டு சந்நிதியில் சோறு கொடுத்தாய்; இசைப் பேறு கொடுத்தாய்! எனது சமகாலத்தில் ஆசான் தீட்சிதரும், சியாமா சாஸ்திரிகளும், தியாகய்யரும் இசைச் சித்து விளையாடுவது கைவரப் பெற்ற கானஞானம்! நான் எந்த ஞானம் கொண்டு இதனைச் சாதிப்பேன்? என்ன ராகம் பாடி இதனைப் போதிப்பேன்?'

'அமிர்தவர்ஷணி பாடுவதா? அமிர்தவாகினி பாடுவதா? மேகராகம் பாடுவதா? மேகரஞ்சனி பாடுவதா?'



'ஆ! நமது பழம்பண்... என் பெயரும் அதில்; நான் கண்டுபிடித்த ராகத்தின் பெயரும் அதில்... மேகராகக் குறிஞ்சி... மேகராகக் குறிஞ்சி...'

'சக்தி! ஓம்! சக்ஷம்!'...

தியானத்தில் மந்திர வேரோட்டமும், ராகப் போராட்டமும் திருப்தி காண...

இமைகளைத் திறக்கிறாள் குறிஞ்சி...

எடுப்பிலேயே *ஷட்சுருதி தைவதத்தில் – சுரமாக இல்லாமல் குரலாக இருந்ததால் சைசிகி நிஷாதம் போல...

நிறுத்திக் குரலில் தேனாறு பாய விடுகிறாள்.

சந்நிதியிலிருந்து வெளியே வந்த அபிராமிபட்டர் சந்நிதியின் வாசலிலேயே அமர்ந்து கொள்கிறார். அடீ, அபிராமீ...

தேன்குரல் காகலிநிஷாதத்தில் உயர்ந்து, சட்மத்தில் நிற்கிறபோதுதான் ஷட்சுருதி தைவதம் என்பதே புரிகிறது.

ராக ஆலாபனை; ஆலாபனையா அது? இசையின் அமுதாபரணம்! சங்கீதத் தேன்மாரி! கானமழை!

ஏ, மேகநாதா! இந்திரா சொரூபி! அன்று இதே இடமாம் காவிரிப்பூம்பட்டினத்தில் சோழர்கள் இந்திர விழா எடுத்தனர்! நான் இங்கே ராகவிழா எடுக்கிறேன்! மேகமாகத் திரண்டு வா!

'ஏ, வருணனே! புனல் வேந்தனே! மேற்றிசைப் பாலனே! உனக்குப் பிரியமான ராகத்தைப் பாடுகிறேன்! என்னை வாழ வைக்கிறாயோ இல்லையோ, இசையை வாழவிடு!'

ஆலாபனையுடன் தியானத்தையும் ஆராதிக்கிறாள் குறிஞ்சி.

வானில் பூர்ணிமையின் ஒளிச்சிலிர்ப்பு அபிராமிபட்டர் மீது பொறாமை கொண்டதல்லவா? சரபோஜி மன்னரிடம்

* ஷட்சுருதியே பிற்காலம் என்று வாதிப்பாரும் உண்டு. அக்கால யாழ் முறையில் இந்த இசைப்பேதம் கண்டிருக்கிறார்கள்.

அமாவாசை தினத்தையே அபிராமியின் குண்டல ஒளியால் பூர்ணிமையாக்கிக் காட்டியவரல்லவா, அபிராமிபட்டர்?

என்ன ராகம் இது?

அந்தாதி பாடுவதில் மட்டுமல்லாது அருந்தமிழிசை யிலும் வல்லவரான அபிராமிபட்டரே கேள்விக்குறியில் மயங்கியபோது...

எதிரே சில சங்கீத வெற்றிலைப் பேழைகள், திறந்தன திறந்தபடி இருந்ததில் திகைப்பதற்கு ஒன்றுமில்லை.

ஓ... இருபத்து நான்காம் மேளகர்த்தவான வருணப் பிரியா போலத் தெரிகிறதே! ஆனாலும் கொஞ்சம் வித்தி யாசப் பிரயோகங்கள்; வித்தியாச விநயங்கள்!

ஆவேசம் கண்ட சந்நதக்காரி போல கர்ஜனையுடன் கூடிய ஆலாபனையா?

இசையில் கர்ஜனையா? இடி முழக்கமா?

இஷ்ட தேவதை சிம்மரூபினி; அபிராமி சிம்மவாகினி; ஏனிருக்காது இந்தக் கர்ஜனை?

ஆலாபனை முடிந்து பாடுகிறாள்.

என்ன பாடினாள்? கீர்த்தனையா? இல்லை சமயோசித மாக இயற்றுவாளே, அப்படியா? இல்லை... பின்?

நீலி ராகத்தில் தொடங்கப் போய், சோதனை, நீலி வேஷமிட, அதே அபிராமிபட்டர் பாடிய பாடலில் 'நீலி' என்கிற சொல் வரும் பாடலையே பாடுகிறாள்...

'சுந்தரி! எந்தை, துணைவி, என்பாசத் தொடரை யெல்லாம்...'

அவள் ஆரம்பிக்க, அபிராமிபட்டர் கண்களில் முதலில் ஆனந்த வருணம் ஆரம்பிக்கிறது...

"வந்தரி, சிந்துர வண்ணத்தினாள் மகிடன் தலைமேல்...!"

விருத்தமாகத்தான் பாடுகிறாள். அந்த 'மகிடன் தலை மேல்' என்கிற சொற்களை உச்சரிக்கிறபோது, ராஜ ஆணவங் களை அவளுடைய காளிக் கண்கள் கவனிக்கின்றன...



'அந்தரி! நீலி!'

ஆ! இங்கே 'நீலி' என்ற சொல்லைத்தான் எத்தனை கோணங்களில், எத்துணை சங்கதிகளில் எவ்வளவு உணர்வுப் பூர்வமாக...

மெய்ச் சிலிர்க்காதார் யார்? மேனி நிமிராதார் யார்?

சிலர் ஆச்சரியத்தால் ஆகாயத்தையும் கவனிக்கிறார்கள்.

பௌர்ணமி நிலவு இன்னமும் சிரிக்கிறது; அதனைக் கண்டு அபிராமிபட்டரும் சிரிக்கிறார்!

'அந்தரி நீலி அழியாத கன்னிகை...'

ஓ... மேலும் உக்கிரம்!

வானம் மெல்ல இருண்டு வருகிறது...

"அந்தரி நீலி, அழியாத கன்னிகை ஆரணத்தோன், சுந்தரி கைத்தலத் தாள்மலர்த் தாள்என் கருத்தனவே!"

ஏ, ஆபிராமி! உனது பாதாம்புயம் என் மனத்தில்... என் மனத்தில்... எங்கிருந்து மின்னியது இந்தச் சக்கர மின்னல்; மின்னலா அது? விஷ்ணுவின் சக்கரமாய்ச் சுழன்று ஈசனின் திரிசூலமாய் நின்று, இந்திரனின் வச்சிராயுதமாய் பூமியில் இறங்குகிறபோது, கேட்ட இடி முழக்கம்...

ஆ! எங்கு விழுந்ததோ? எதனைச் சேதாரப்படுத்தி யதோ? அபிராமிபட்டர், "அபிராமி" என்று அலறுகிறார்...

'சோ'வென்று மாமழை கொட்டத் தொடங்கியது...

மக்கள் அலைமோதி எழ வேண்டுமே! அப்படியே... அப்படியே... சிலைகள் மாதிரி... மழையில் சொட்டச் சொட்ட நனைந்து...

ஆர்க்காட்டு நவாப்பும், சிவகங்கை இளைய ஜமீனும் திவானும் எழுந்தோடி எதிர் வீட்டில் நுழைந்து கொள் கிறார்கள்.

இளவரசன் சிவாஜி?

"குறிஞ்சி! குறிஞ்சி! நீ தேவ மகள்! நீ தேவ மகள்!" என்று முனகியவாறு மழையில் நனைவதில் ஆனந்தப்படு கிறான்; அவனது கண்களிலும் காதல் மழை!

விருத்தம் பாடி நிறுத்தியதோடு முடித்தாளா குறிஞ்சி?

'மாமழை போற்றுதும்! மாமழை போற்றுதும்! – இந்த மகிமை சொன்னவன் சிலம்பின் செல்வன்' என்ற பல்லவி யுடன் கீர்த்தனையை ஆரம்பிக்க...

இப்போதுதான் மக்கள் தங்கள் உணர்வுக்கே வந்து அந்த கொட்டும் மழையிலும் கைகொட்டி ஆர்ப்பரிக் கின்றனர்.

கீர்த்தனையைப் பாடி முடித்துச் சுரங்களை விந்நியாசம் செய்கிறபோது...

பட்டரே பயந்து போனார்! மேலும் மழை கொட்டி விநாசம் வந்துவிடக் கூடாதல்லவா?

சந்நிதி வாசலிலிருந்து எழுந்து, கொட்டும் மழையில் நனைந்தபடி அரங்கம் நோக்கி ஓடி வருகிறார்...

"அபிராமி, போதும்! அபிராமி, போதும்!"

அவர், 'குறிஞ்சி போதும்' என்று கூறுவதாக எண்ணி, இப்படிச் சொல்கிறார்.

குறிஞ்சி, பாடலை முடித்து, தனது சந்நதம் அடங்க பல கணங்கள் கண்மூடி மெய்ம்மறந்து உட்கார்ந்திருக்க, அவளது கரங்களைப்பற்றிக் கண்களில் ஒற்றிக்கொள்கிறார் அபிராமிபட்டர்.

ஜாதியாவது? இனமாவது? பேதமாவது? அபேதமா வது? தீண்டாமை என்பது இந்த தேசத்தில் புகுந்த தீய ஆமை என்பது போலிருந்தது அவரது மேன்மைமிகு செயல்!

"எழுந்திரு மகளே!"

குறிஞ்சியை அவர் கைத்தாங்கலாகப் பற்றி எழுப்பு கிறார்.



கச்சேரி முடிந்துவிட்டது என்று கருதி மக்கள் எழுந்து கலைகிறபோது ஏற்பட்ட கரவொலிகளும் வாழ்த்தொலி களும்...

இன்னமும் கொட்டிக் கொண்டிருக்கும் மழையுடன் இடித்த இடியொலியையே அதிரச் செய்தன.

குறிஞ்சி நேரே அபிராமவல்லியைத் தரிசிக்கச் சொட்டச் சொட்ட நனைந்தவாறு சந்நிதியுள் நுழைகிறாள்.

பட்டர் கர்ப்பூர ஆராதனை காட்ட, வெளியே மக்கள் "தாயே அபிராமி!" என்று எழுப்பிய கோஷம்...

அன்றைய இளவேனில், பௌர்ணமியை வெட்கச் செய்தது; மறுநாள் ஒளிவானில் உதயசூரியனை உற்சாக மாக உதயம் காணச் செய்தது.

பெய்த பெருமழையால், இராமநாதபுரம் வரை ஒரே வெள்ளக்காடுதான்!

அன்றைய காலையுணவு அபிராமிபட்டர் இல்லத்தில்.

பட்டர் வீட்டுப் பெண்மணிகள், குறிஞ்சியை ஒரு தேவதையாகவே உபசரிக்கிறார்கள்.

உடையார்பாளைய ஜமீந்தாருக்குப் பெருமையோ, பெருமை.

இளைய வல்லப உடையத்தேவன், விடியுமுன்னமே ஆர்க்காட்டு நவாப்புடன் சிவகங்கை நோக்கிப் புறப்பட்டு விட்டான்.

காலையுணவு முடிந்தது. குறிஞ்சியும், மயிலாடுதுறை வரை சென்று, அப்படியே ஒருத்தி நாடு நோக்கிப் பயணிக்க இருந்தாள்.

அபிராமிபட்டருக்கு எதையோ அலச வேண்டும் என்கிற ஆசை.

"குறிஞ்சி! நான் உன்னிடம் ஒன்றைத் தெரிந்து கொள்ள லாமா?"

பட்டர் கேள்வியைக் கண்டு பதறிப் போனாள் பனுவலழகி குறிஞ்சி.

"சுவாமி! இது என்ன வார்த்தை? தங்களுக்குத் தெரியாததா?"

"இந்த உலகில் எல்லாம் தெரிந்தவனுமில்லை. ஒன்றுமே தெரியாதவனுமில்லை. குறிஞ்சி! இரவு, மழைக்காகப் பாடிய ராகம் வருணப்பிரியாதானே?"

"இல்லை சுவாமி! மேகராகக் குறிஞ்சி."

"மேகராகக் குறிஞ்சியா? இப்போது தேவாரப் பாசுரங்களை மேகராக குறிஞ்சி என்கிற பெயரால் நீலாம்பரியில் அல்லவா பாடுகிறார்கள்?"

"இது *தவறு சுவாமி! வழக்கில் மேகராகக் குறிஞ்சியை நீலாம்பரியாகப் பாடி வருகிறார்கள். தாலாட்டுக்கும் மேகங்களுக்கும் என்ன தாத்பரியம்? மேகங்கள் தூங்கி விட்டால் மழை பொழிவதாவது? இன்றைய வருணப் பிரியாவே அன்றைய மேகராகக் குறிஞ்சி!"

"கொஞ்சம் மாறுப்பட்ட வித்தியாசம் தெரிந்ததே!"

"ஷட்சுருதியைச் சொல்லுகிறீர்களா?"

"அதில்லை; சப்த சுருதியைக்கூட அக்காலத்தில் யாழ் முறையில் கண்டு விட்டார்கள். வர்ஜவக்கிர மாதிரி... பாடியது."

"இது நாங்கள் கண்டுபிடித்த புதிய முறை. தாய்-தந்தையராகிய சம்பூரண மேளகர்த்தாவைப் பாடுகிற போது, வர்ஜமான நல்ல குழந்தைகளையும், வக்கிரமான போக்கிரிக் குழந்தைகளையும் ஞாபகப்படுத்துவது போலப் பாடுவது எங்களுக்குத் தவறாகப்படவில்லை. அவசாரியான பாஷாங்கக் குழந்தையைத்தான் விலக்கிட வேண்டும்! வர்ஜ, வக்கிரப் பிரயோகங்கள் ஆலாபனைக்கு மட்டும்தான்! சுவாமி! நான் உங்களை ஒன்று கேட்கலாமா?"

* இது முரண்பாடுகளை எழுப்புகிற செய்தி. இது எனது சொந்த ஆராய்ச்சி என்கிற மட்டில் சொல்லி, வாதப் பிரதிவாதங்களுக்கு முற்றுப்புள்ளியை வணக்கமாக வைக்கிறேன்.



"ஒன்றென்ன? ஒன்பது கேள். தெரிந்தால் சொல்லுகிறேன்; தெரியாவிட்டால் சிரிக்கிறேன்!"

"இரவு நானா மழையை வரவழைத்தேன்?"

அவர் சிரிக்கிறார்... ஞானமாகச் சிரிக்கிறார்...

அப்போது...

வெளியிலிருந்து யாரோ, "குறிஞ்சி!" என்று கூப்பிடும் குரல்.

யார் என்று போய்ப் பார்த்ததில், தஞ்சை இளவரசன்-சரபோஜி பெற்ற ஒரே புதல்வன்-சிவாஜி காதல் பிச்சைக்காரனைப் போல் வாசலில் நின்றிருந்தான்.

## இராகம் – 17



# மலைய மாருதம்

"தஞ்சை இளவரசரா? இந்த ஏழைப் பிராமணன் வீடு தேடி வருவதாவது? வாருங்கள் யுவராஜா! உள்ளே வாருங்கள்!"

அபிராமிபட்டர் ஆனந்தப் பரவசத்துடன் அழைக்க, இளவரசன் சிவாஜி இருகரம் கூப்பி, "மன்னிக்க வேண்டும் சுவாமி! நேற்றிரவு, பௌர்ணமி கவனிக்காததை, காலை சூரியோதயம் கவனிப்பதை நான் விரும்பவில்லை."

"இரவுதான் மழை..."

"புரிகிறது... உங்களால் பௌர்ணமியைக் காட்டவும் முடியும்; மறைக்கவும் முடியும்! தந்தையின் அனுமதியின்றி நான் எவர் வீட்டுக்கும் போவதில்லை. குறிஞ்சியிடம் சொல்லிக் கொண்டு புறப்படவே வாசலில் இசைப் பித்தனாய் நிற்கிறேன்."

"இதற்கு மட்டும்..."

"தந்தையின் அனுமதியுடன் தான் வந்தேன்; ரசித்தேன்; 'காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி' என்று ஒரு நாயனார்



பாடினாராமே அந்த மெய்ம்மை நிலையை யுணர்ந்தேன்; எங்கே குறிஞ்சி?"

சற்றைக்கெல்லாம்...

கொலுசு மந்தரஸ்தாயி சுரம் பேச, குழைகள் தாரஸ்தாயி சுரம் பேச, குரல் மட்டுமே மத்திம ஸ்தாயி சுரம் போல, "வணக்கம் இளவரசே! சொன்னது போல வந்திருந்து, கௌரவித்து ரசித்தமைக்கு நன்றி" என்றாள் குறிஞ்சி.

"ஆனால், நான் கேட்டதைப் பெற முடியவில்லை; குற்றாலக் குறிஞ்சி ராகத்தைச் சொல்கிறேன்!"

சிவாஜியின் மௌனமான அந்த முகத்தில் ஏதோ மறைவான அபூர்வ ராகம் கேட்பது குறிஞ்சிக்குப் புரிகிறது. மராட்டியர்களுக்கே உரிய அழகு என்பதைவிட, இருபது வயது மன்மதனாகவே அவனது வாலிபம் மலர்ந்து மணத்துக் கொண்டிருந்தது. குறிஞ்சியின் பிரகாசப் பேரழகையே அது சந்தித்துச் சலனமிக்கிறது என்றால்...

குறிஞ்சி மட்டும் ஞானசுந்தரச் சுழிமுனையுடன் பேசுகிறாள்: "அந்த வாய்ப்பு வேறெங்காவது கிடைக்காமலா போகப் போகிறது?"

"எங்கே கிடைக்கும்?"

"எனக்கே அந்த முகவரி தெரியாது. தேட வேண்டியது உங்கள் பொறுப்பு. அப்போது அந்த ராகத்தை ரசிக்கலாம்!"

அவன் முறுவலிக்கிறான். அதன் முகவரி அவளுக்குப் புரிக்கிறது.

ஆனால் அது அவசியமில்லை.

"ஒரு கொள்ளைக்காரனை மயக்கிய ராகம் அது; எனவே செவிமடுக்க நேசிக்கிறேன்."

"கொள்ளையன் நல்லவனானான்! நீங்கள் கொள்ளையனாக அது மாற்றிவிட்டால்?"

அவன் இப்போதுதான் கலகலவென்று மெல்லச் சிரிக்கிறான். அந்தச் சிரிப்பில் 'நான் எப்போதோ உன்னைக்

கொள்ளை கொண்ட கள்வனாகி விட்டேன்' என்பது கேட்கிறது.

"என்ன சிரிக்கிறீர்கள் இளவரசே?"

"ஒருவேளை மாறிவிடுவேனோ எனச் சிரிக்கிறேன். நான் விடைபெறுகிறேன்!"

குறிஞ்சி கரம் கூப்புகிறாள்.

அனைவரிடமும் விடைபெற்றுக்கொண்டு தனக்கென்று தொலைவில் நின்றிருந்த அரச பரிவாரங்களுடன் எட்டுப் புரவிகள் பூட்டிய சாரட்டில் புறப்பட்டுச் சென்றான் சிவாஜி. அவன்தான் சென்றானேயொழிய அவனது இதயத்தைக் குறிஞ்சியின் காலடியில் இறக்கி வைத்து விட்டுச் சென்றதை, அந்த அபூர்வ பாடகி அறிய நியாய மில்லை.

இரு நாழிகைப் போதில் குறிஞ்சியும் அபிராமிபட்டர் குடும்பத்திடம் விடைபெற்றுப் புறப்பட்டாள்.

அபிராமிபட்டர் சொன்ன சொற்கள் - வாழ்த்துரை யாகச் சொன்ன சொற்கள்: "புழுடம்பைப் பெறுவாய்!"

அதன் அர்த்தம் யாருக்குத் தெரியும்? விதியாகிய அந்த விநோத தேவனுக்கே வெளிச்சம்!

குறிஞ்சி புறப்படுகிற போது அந்தத் திருக்கடவூரே திரண்டு வழிகூட்டியதே, புகழுடம்பின் பூரிப்பை பிரகடனப்படுத்துவது போலிருந்தது.

**உ**ச்சிப்போது சூரியனுக்கு உலாப் பாடுகிறபோது, மயிலாடுதுறையை அடைந்தனர். அவள் மயிலாடுதுறை யாம் மாயவரத்துக்கு வந்ததே, மாபெரும் தமிழிசைச் செல் வரான கோபாலகிருஷ்ண பாரதியாரைப் பார்க்கவும், பார்த்துப் பரவசிக்கவும், பரவசித்துப் பாதாம்புயத்தைப் பணியவும்தான். அந்தப் பாக்கியம் கிடைக்கவில்லை.

சிதம்பரத்தில் தியாகபிரும்மம் வந்திருப்பதாகவும், அவரைச் சந்திக்க கோபாலகிருஷ்ண பாரதியார் சென் றிருப்பதாகவும் செய்தி தெரிந்தது. அது செய்தியாக குறிஞ்சிக்குத் தெரியவில்லை. செந்தேன் விலாசமாகத் தெரிய வரவே, இருவரையும் ஒரு சேர தரிசிக்கும் பாக்கி



யத்தை அடையலாமே என்று ஞானசுந்தரத்தைக் கேட்க, அவனும் மறுக்காமல் மகிழ்ந்து போனான்.

அவர்கள், 'பூலோக கைலாசம் சிதம்பரமல்லாமல் புவனத்தில் வேறு உண்டோ' - என்று, கொஞ்சகா லத்துக்கு முன் வாழ்ந்த இசைத் தமிழரசர் முத்துத்தாண்ட வரால் புகழப்பட்ட சிதம்பரம் நோக்கிப் பயணித்தனர்.

அன்றிரவு, வைத்தீஸ்வரன் கோயில் ரசிகர் – காரைக்குடி அருணாசலம் செட்டியார் வீட்டில் தங்கி, இறைவனைச் சேவித்துப் புறப்படத் திட்டமிட்டனர்.

இருளும் ஓர் அழகு; அதனைச் சூரியன் மாலையிட்டு வரவேற்கிறான் என்பதால்தான் அந்தப் போதை 'மாலை' என்கிறார்கள் போலும் என்று அடிக்கடி குறிஞ்சி சொல்லு வாள். அந்த இனிய மாலைப் போதை ரசித்தவாறு ஞான சுந்தரம் கோச்சு வண்டியில் அமர்ந்தவண்ணம் பயண மாகிக் கொண்டிருந்தான்.

குறிஞ்சி, அபிராமிபட்டர் வீட்டில் ராகவிளக்கம் சொல்கிறபோது பாஷாங்கம் குறித்து அவள் சொன்னது இன்னமும் அவன் நெஞ்சை நெருடிக் கொண்டிருந்தது. அவனது கருத்துப்படி பாஷாங்கம் என்பது தாம்பத்தியம். ராகங்கள் சம்பூர்ணமாக இருக்கிற வரை பிரம்மசாரிகள். பாஷாங்கப்படுகிறபோதுதான் இனிமை பெற்ற தாம்பத் தியத்தை அனுபவிக்கின்றன. அது குறித்துக் கேட்கவும் செய்தான்.

குறிஞ்சி மாலைப் போதின் மலையமாருத ராகமாய்ச் சிரிக்கிறாள். "ஞானி! இந்தக் கருத்து குறித்து முன்பே நாம் பேசி இருக்கிறோம். அப்போது அப்படியும் இருக்கலாமோ என்று ஆலோசித்தே சிரித்தேன். பட்டர் வீட்டில்தான் ஞானோதயம் பட்டவர்த்தனமாக ஏற்பட்டது. சம்பூரண ராகங்கள் பிரம்மசாரிகள் என்றால் சுந்தமத்திமம் ஆணாகவும், பிரதிமத்திமம் பெண் ணாகவும் வைத்தாலும் இரண்டும் புணர்ந்து பெற்ற ஜன்ய ராகங்களாகத் தெரியவில்லை. மாறுபடுகின்றன. இதனை என்னால் ஒப்புக் கொள்ளவும் முடியாது.

சம்பூரணத்தின் ஆரோகணம் ஆண், அவரோகணம் பெண் என்கிற கருத்தையுடையவள் நான். அது பட்டர் வீட்டில் பரிபூரணம் கண்டேன். இந்த ஆரோகணம் அவரோகணம் புணர்ந்து பெறுகிற பிள்ளைகள்தாம் ஜன்ய, வக்கிர ராகங்கள்! பாஷாங்கம் என்பது அவிசாரித்தனம்: உங்கள் பாஷையில் வேண்டுமானால் அபசாரத்தனம்! பைரவி போன்ற ஒரு சுர பாஷாங்க ராகம் ஒருத்தியோ, ஒருவனையோ வைப்பாகக் கொண்டு மகிழ்வது. பெஹாக் ராகம் போன்ற ஒன்றுக்கு மேற்பட்ட பாஷாங்கங்களைக் கொள்வது விபசாரத்தனம். இசையும் ஒரு குடும்பம் தானே?"

"அப்போது நான் ஆரோகணம்; நீ அவரோகணம்."

"இதில் சந்தேகமென்ன? ஆனால் நமக்கு வர்ஜ ராகங்கள் பிறக்கட்டும்; வக்கிரமோ..."

"குறிஞ்சி! மேற்கொண்டு முடிக்க வேண்டாம்!"

ஞானசுந்தரம் இப்படிக் கூறி, குறிஞ்சியின் வாயைப் பொத்துகிறபோது கோச்சுவண்டி திடுமென்று நிற்கிறது. குதிரைகள் கனைக்கின்றன.

எட்டிப் பார்த்தவர்கள் இமைகள் மருண்டு போயினர்.

வழியை மறித்துப் பத்து கொலைஞர்கள் கைகளில் நீண்ட கத்தியுடன் புரவிகளில் வரிசை கட்டி நின்று கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொருவரும் எமகிங்கரர்கள் மாதிரி...

இவர்கள் வேறு யாருமல்லர். தஞ்சை சங்கீத மகாவித்து வான்கள் கூடிச் சதியாலோசனை நடத்தி, தொழிற் காய்ச்சலால் குறிஞ்சியைத் தீர்த்துவிடுவது என்று தீர்மானித்து ஏற்பாடு செய்த கொலைஞர்கள் – கைக் கூலிக் கயவர்கள்.

ஞானசுந்தரம்தான் செய்தியறிய இறங்கி வந்தான்.

"எதற்காக எங்களை வழிமறிக்க வேண்டும்? கொள்ளை யடிக்க வேண்டுமா? கொலை செய்ய வேண்டுமா? ராஜ



காந்தி என்கிற பெயர் நினைவில் இருக்கிறதா? சென்னை கவர்னர் பிரகடனம் என்ன என்பதை அறியா..."

ஞானசுந்தரம் சொல்லி முடிக்கவில்லை. பத்து கொலைஞர்களில் தலையானவன் ஓங்கி எட்டி உதைக்க, ஞானசுந்தரம் கரணமடிப்பது போல உருண்டு புரள, "ஞானி!" என்று கதறலுடன் இறங்கி ஓடோடி வந்தாள் குறிஞ்சி. கோபக் கனலில் எரிமலைகளையே எரித்து விடுபவள் போலக் கவனிக்கிறாள்.

"நீதான் குறிஞ்சியாடீ?" என்றான் ஒருவன்.

"ஆமாண்டா மடையனே!"

ஓ! என்ன துணிவாக இவளும் பேசி விட்டாள்?

அக்கினித் துண்டங்களாய்க் கண்கள் எரிய, அவர்களை அவள் எதிர்நோக்கி வர, பத்து பெயர்களும், புரவிகளி லிருந்து இறங்கிக் கத்தியைச் சோதித்துப் பார்த்துக் கொள் கிறார்கள்...

அந்தக் கத்தியிலும் கூர்மையான குறிஞ்சியின் கண் களைக் கண்ட கொலைஞர்களில் சிலர், ஏதோ ஒருவித சிலிர்ப்பால் மருளவும் செய்தனர்.

"மலையை எதிர்க்க மானா?" என்றான் கொலைஞர் களுக்குத் தலைமை தாங்கி வந்தவன்!

குறிஞ்சி கோபாக்கினியுடன் கூறினாள்: "இல்லை; மலை களையே உருக்கிவிடும் மலையமாருத ராகம் நான்!"

"மலைகளை உருக்கிவிடலாம்; இப்போது நாங்கள் உன்னை மட்டுமே உருட்டிச் செய்யப்போகிற கொலையைத் தடுத்து விட முடியாது" என்று கூறியவன், கொடுவாளை எடுத்து அவளது தலையைக் கொய்ய வீசுகிறபோது...

"டுமீல்!" என்கிற துப்பாக்கிச் சத்தம்; தொடர்ந்து அது போன்றே எட்டுச் சத்தங்கள். ஏன் ஒன்று மட்டும் கேட்க வில்லை? ஒருவனை மட்டும் மீதப்படுத்த வேண்டும்?

எங்கிருந்தோ ராஜகாந்தியின் சிம்ம கர்ஜனை...

தொடர்ந்து புரவிகளின் குளம்படி ஓசை...

நாற்பதுக்கு மேற்பட்டவர்களுடன் நடுநாயகமாகப் புரவியில் வந்த ராஜகாந்தி, அப்படியே தாவிக் குதித்தோடி வந்து குறிஞ்சியின் முன் நிற்கிறான்.

பிரமித்து போனாள் பிரம்மனின் பெண்ணழகுப் படைப்பின் தலையான படைப்பான குறிஞ்சி எனும் குங்குமப் பேரழகி.

"ஏன் மகளே பிரமிக்கிறாய்? எப்படி வந்தான் இந்த ராஜகாந்தி என்றா? நேற்றிரவு நீ திருக்கடவூரில் பாடி மழையையே வரவழைத்த மகிமை காற்றில் கலந்து என் காதுகளில் ஒதியது. ஓடோடி வந்தேன் கடவூருக்கு! நீ புறப் பட்டு விட்டதாகக் கேள்விப்பட்டேன். எனது கண்ணீர் மழைத்துளிகளிரண்டை உனது கால்களில் சிந்த புயலாகப் பின் தொடர்ந்தேன். கண்ணீர்த் துளிகளைச் சிந்துவதற்குப் பதிலாக ரத்தத்துளிகளைச் சிந்த நேரிட்டிருக்கிறது."

ராஜகாந்தியின் கண்கள் கலங்கிவிட்டன. "என் மகளே! நீ வணங்கும் தெய்வம் என்னை விரட்டி இருக்கிறது... இல்லையென்றால்..."

பொங்கி வந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டு, மீதமாக விட்டு வைத்தவனை நெற்றிக் கண்ணால் எரிப்பது போன்று நோக்குகிறான் ராஜகாந்தி.

ஒன்பது பெயர்கள் குண்டு பாய்ந்து குலைந்து போய், ஓரியாய் தான் மட்டும் ஏன் விடப்பட்டிருக்கிறோம் என்பது புரியாமல் நடுங்கிப் போனவன், "தலைவா! என்னை ஒன்றும் செய்ய வேண்டாம்! நான் பிள்ளைக் குட்டிக் காரன்!" என்று கதறியவாறு கால்களில் விழுந்தான்.

"தெரிந்துதான் விட்டு வைத்தேன்; எழுந்திரு."

அவன் உடல் வியர்த்து நடுங்க, எழுந்து குனிந்து கும்பிட்டவண்ணம் நிற்கிறான்.

"ஏனிந்த தெய்வீக மலரைக் கசக்கி எறிய வந்தீர்கள்? உண்மையைச் சொல்!"

அவன் நடந்த விவகாரங்களைச் சொன்னான். தஞ்சை அரண்மனையின் ஆஸ்தான வித்துவான்கள் சிலருடைய பெயரைச் சொல்லி, அவர்கள் குறிஞ்சியைக் கொலை செய்து விட்டால் ஆளுக்கு இருபது புலிவராகன் பணம் தருவதாகக் கூறிப் பத்துப் புலிவராகனை முன் பணமாகத் தந்ததையும் எடுத்துரைத்தான்.



"தூ! கேவலம் இருபது புலிவராகன் பணத்துக்கு ஒரு கலைப் பொக்கிஷத்தையே கொல்லத் துணிந்தீர்களே! உங்களுக்கு இதயமே இல்லை?"

"இல்லை தலைவா! இருந்தால் நாங்கள் ஏன் பணத் துக்கு ஆசைபட்டு இந்தப் பாதகத்தைச் செய்யப் போகிறோம்!"

"சபாஷ்! நீ கொலைகாரனாக இருந்தாலும் உண்மை யைச் சொன்னாய்! நீ என்னுடன் இரு! நடக்க வேண்டி யதைப் பின்னர் விளக்குகிறேன்!" என்று கூறிய ராஜ காந்தி, குறிஞ்சியை நோக்கி வந்தான்.

"மகளே! பயணம் எதுவரை?"

"சிதம்பரம்; இரவு வைத்தீஸ்வரன் கோயிலில் தங்கு கிறேன்!"

"சிதம்பரத்தில் கச்சேரியா?"

"இல்லை, ராஜகாந்தி! கோபாலகிருஷ்ண பாரதியாரை யும் தியாகய்யர் பெருமானையும் ஒருசேரக் கண்டு தரிசிக்க வேண்டும் என்கிற ஆசை!"

"அப்படியா? பயணம் நேரே சிதம்பரத்துக்கே செல்ல லாம். நாங்கள் துணையாக வந்து சிதம்பரத்தில் விட்டுச் சொல்கிறோம்."

"ஏனிந்த சிரமம்?"

"என் கடமை! உனக்குத் தொண்டு செய்வதன் மூலம் நான் செய்கிற பாவங்கள் தொலையும்."

"தவறு ராஜகாந்தி! நாம் செய்கிற பாவத்தை வேறு ஒரு புண்ணியத்தால் சரிகட்ட முடியாது! ஒரு பெண்ணைக் கற்பழித்து அவளது சாபம் பெற்று, பிறகு ஒரு கோயிலையே கட்டிக் கும்பாபிஷேகம் செய்தாலும்

சாபம் சாபம்தான்! அனுபவிப்பதை அனுபவித்துத்தான் ஆக வேண்டும்! செய்த புண்ணியத்துக்காக ஓர் ஆயிரம் காணி புஞ்சை நிலத்துக்குச் சொந்தக்காரனாக மாறலாம். செய்த பாவத்துக்கு அந்த நிலத்தில் விளையும் சோற்றை உண்ண இயலாமல் வயிற்றுவலியால் துடித்துக் கொண்டிருப்பான். இந்தச் சரிகட்டு ஜாலங்கள் பாவ புண்ணியத்திடம் செல்லுபடியாகாதவை!"

ஏதோ ஞானக்கண் திறக்கப்பட்டவனைப் போல அயர்ந்து போனான் ராஜகாந்தி.

"மகளே! அற்புதமான கருத்து! விரைவில் நான் என் கொள்ளைத் தொழிலை விடுவேன்! ஓர் இலட்சியத்துக்காக இதனைச் செய்து வருகிறேன்! சில மாதங்களில் அது நிறைவேறிவிடும்! அநேகமாக தை மாதத்துக்குள் ஐந்து பெயர்களைத் தீர்த்து கட்டி விடுவேன்!"

"இது மகாபாவம்."

"இதைவிட மகாபாவம் அவர்கள் செய்து வருவது! உயிருடனிருப்பது! அந்நியர்களுக்கு நமது நாட்டையும் மொழியையும் அடகு வைக்கத் துணிந்திருக்கும் ரகசிய ராட்சஸப் பண முதலைகள் அவர்கள்! அவை நீரில் இருக்கின்றன. எனவே பலம் பொருத்தி இருக்கின்றன! நிலத்துக்கு வருமா என்று இந்த யானை எதிர்பார்க்கிறது! தை மாதத்துக்குள் முடித்து விடுவேன்."

தைமாதம், தைமாதம் என்று ராஜகாந்தி சொல்லி வருகிறபோதெல்லாம், ஞானசுந்தரத்தை ஓரக்கண்களால் நோக்குகிறாள் குறிஞ்சி.

"புறப்பட வேண்டியதுதானே ராஜகாந்தி?"

"கொஞ்சம் பொறு மகளே! ஒன்பது பெயர்களைச் சுட்டுத் தள்ளியவன் இவனை மட்டும் ஏன் மீதமாக விட்டிருக்கிறேன்? பிள்ளைக்குட்டிக்காரன் என்பதாலா? சத்தியமாக இல்லை. இறந்தவர்கள் மட்டுமென்ன மனைவி மக்களற்றவர்களா? இவன் மூலம் தஞ்சை சமஸ்தானத்து மகாவித்துவான்களுக்கு மட்டுமல்ல; சரபோஜிக்குமே ஒரு



பாடம் கற்பிக்கப் போகிறேன்! இது விஷயத்தில் மட்டும் குறுக்கிடாதே!" என்று கூறிய ராஜகாந்தி, கூனிக் குறுகிப் பயந்து நடுங்கி நின்றவனை நோக்கி ஓர் அரிமாவைப் போல் நடந்தான்.

மாலை, மலைய மாருதம் பாடியது.

ஆனால் ராஜகாந்தி?

குலைய மாருத ராகத்துக்கான கோபச் சுரங்களை உதிர்க்கத் தொடங்கினான்.

# இராகம் – 18



## ஆரபி

"அடேய்! கொலைகாரப் பயலே! நீயும் உன் குடும்பமும் உயிரோடு பிழைக்க வேண்டுமானால் நான் சொல்வது போலச் செய்கிறாய்!"

"சத்தியமாகச் செய்கிறேன் தலைவா!"

"எடுத்த எடுப்பில் எவன் சத்தியம் வைக்கிறானோ அவன் சத்தியத்தைக் காப்பாற்றாதவன். உனது சத்தியத் தைப் பற்றி நான் கவலைப்படவில்லை. நீ கவலைப் பட வேண்டியது இந்த ராஜகாந்தியைப் பற்றி! இந்த ஒன்பது பிணங்களை ஒரு பெட்டியில் போட்டு எனது ஆட்கள் உன் வீட்டில் சேர்ப்பர். இந்தப் பெட்டி உன் வீட்டுக்கு வந்ததும் அழுகல் நாற்றம் என்றும் பாராது அரண்மனையில் சேர்க்க வேண்டும். நடந்ததை நடந்தவாறு மன்னன் சரபோஜியிடம் சொல்ல வேண்டும். இதற்குக் காரணமான சங்கீத வித்துவான்களை அழைத்து விசாரித்து ஒரு நாளேனும் சிறைத் தண்டனை அனுபவித்துப் பதவி நீக்கம் செய்ய வேண்டும். சரபோஜி செய்யத் தவறினால், இந்த ராஜகாந்தியின் தண்டனை அவனுக்கு ராட்சஸ தண்டனையாக இருக்கும் என்று சொல்! நான் சொன்னதை சொன்னபடி நீ சொல்லவில்லையென்றால் நீயும் உனது மனைவி மக்களும் பிணமாகி விடுவீர்கள்!"



"ஐயய்யோ! தலைவா! சத்தியமாகச் சொன்னது சொன்னபடிச் செய்வேன்!"

"மீண்டும் சத்தியம்?"

"கூடப் பிறந்துவிட்டது. நிச்சயமாகச் செய்வேன்! உங்கள் மேல் சத்தியம்!"

ராஜகாந்தி கடகடவென்று நகைக்கிறான்.

தனது ஆட்களில் இருவரை, அந்தப் பிணங்களை ஒரு பெரிய மரப்பெட்டியில் போட்டுக் கொண்டு வரும்படி ஆணை பிறப்பிக்கிறான்.

அதுவரை மௌனச் சிலையாய் ராஜகாந்தியின் ராட்சஸம் என்னவென்பதைக் கவனித்து வந்த இசை ஞான அழகி குறிஞ்சி, "ராஜகாந்தி! நான் தலையிட வில்லை; ராஜகாந்தியின் ராட்சஸம் என்ன என்பதை நானறியாதவளா? ஒரே ஒரு திருத்தம்... சொல்லச் சொன்னால் சொல்லுகிறேன்..."

"சொல் மகளே! நல்லதாக இருப்பின் ஏற்பேன்; எனக்குச் சரிபட்டு வரவில்லையானால் மறுப்பேன்."

"உன் விருப்பம். சொல்வது என் கடமை. எல்லாம் சரிதான். சங்கீத மகாவித்துவான்கள் ஏதோ பொறாமைக் காய்ச்சலில் இப்படிச் சதி செய்து விட்டார்கள். அவர்கள் பெயர்களை அம்பலப்படுத்த வேண்டுமா? அவர்கள் ஒரு நாள் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டுமா?"

"உன் உயிரே போயிருக்குமானால்?"

"என் காளிதான் உன் ரூபத்தில் இருக்கிறாளே! உன்னையன்றி என் உயிர் பிரியுமா?"

"மகளே! மகளே! என் மீது எவ்வளவு நம்பிக்கை வைத்திருக்கிறாய்!"

ராஜகாந்தி பொங்கி வந்த கண்ணீரைத் துடைத்துக் கொள்கிறான்.

"ராஜகாந்தி! நான் கவலைப்படுவது சங்கீதம் அசிங்கப் பட்டுப் போக வேண்டாமே என்றுதான்! வேண்டுமானால் இந்த மகாவித்துவான்களுக்கு எச்சரித்து வைக்கச்

சொல்! இனியொருமுறை இப்படிச் சதியில் இறங்கினால், ராஜகாந்தியின் துப்பாக்கி ஒவ்வொருவர் வீட்டிலும் தம்பூர் மீட்டும் என்று சொல்லச் சொல்! சிறை, பதவி நீக்கம் போன்ற வயிற்றில் அடிக்கும் வியாபாரங்கள் நமக்குத் தேவையில்லையே!"

குறிஞ்சியைத்தான் ராஜகாந்தி குலதெய்வமாகக் கொண்டு விட்டானே! மறுப்பானா? அதன்படியே, அந்தக் கொலைக்காரச் 'சத்திய' புருஷனுக்குக் கடுமையாக உத்தரவிட்டான்.

ராஜகாந்தியின் தலைமையில் பயணம் சிதம்பரம் நோக்கி இரவைப் பயமுறுத்தியது.

**த**ஞ்சை அரண்மனைச் சங்கீத மகாலில் நாட்டிய விருந்து நடந்து கொண்டிருந்தது. அன்றைய ஆஸ்தான அதிரூப அமராவதியான *சுந்தரி என்பவள் அபிநயம் நடை பெற, சுவைப்போர் நரம்புகளில் சுகம் ருசி தட்டியது.

எந்த ஒரு பண்டிகைக்கும் அல்லது மன்னர் சரபோஜிக்கு மனம் உபதேசிக்கிற போதும் சுந்தரி நாட்டியமே சுந்தரச் சுகந்த சுதந்திரம்.

சிவானந்தம் பிள்ளை நட்டுவாங்கம் சொல்ல, காமாட்சி என்பவன் மிருதங்கம் வாசிக்க, மற்றபடி சாரங்கி உட்பட எல்லா வாத்தியங்களும் சுந்தரியுடன் அபிநயிக்கின்றன.

இதில் வேடிக்கை என்னவென்றால் ஓர் ஆண், பெண் வேஷமிட்டுப் பாடியதுதான். பெண்களும் பாடுவதற்கென்று ஒரு தனிப்பிரிவினராக இருப்பினும் அன்று இப்படி ஒரு புதுமை நிகழ்த்திப் பார்க்கிறார் சரபோஜி.

சங்கீத வித்தியாதிகப் பிரிவில் உமார்கான், மீராகான், உசேன்கான் என்பவர்களும் இடம் பெற்றிருந்தனர். இந்துஸ்தானச் சங்கீதத்தில் வல்லவர்களான இவர்கள், தட்சிண

* இவள் சரபோஜியைக் கவர்ந்த தேவதாசி. இவளுக்குச் சம்பளமும், சன்மானமும் சில சலுகைகளும் அதிகமாக வழங்கப்பட்டன. இப்பகுதியில் கூறப்படும் செய்திகள் யாவும் உண்மை. தமிழ்ப் பல்கலைக் கழகம் வெளியிட்ட 'தஞ்சை மராட்டிய மன்னர் கால அரசியலும், சமுதாய வாழ்க்கையும்' என்ற நூலைக் காண்க.



சங்கீதத்தை முறையே தாசிகளிடம் பயின்றவர்கள். இவர்களில் உசேன்கான் என்பவன் மட்டும் பெண்ணைப் போல அலங்காரம் செய்துகொண்டு வந்து உட்கார்ந்து பாடுவான். அன்றைக்கு அவன் ஆரபி ராகத்தில் இந்துஸ்தான் ரேகை படரப் பாடுகிறான். இப்படிப் பாடுவதில் ஒரு நிபந்தனை. தெய்வங்களை மட்டுமே நாட்டியங்களில் பாட வேண்டும்; மகாராஜாவின் மீதும் பாடலாம்; பிற 'நரஸ்துதி' கூடாது.

நாட்டியமாடும் பெண்கள் இந்த இந்த நகைகள்தாம் மன்னர் முன் அணிந்து வரவேண்டும். சுந்தரிக்கு இது விஷயத்திலும் சுதந்திரம். இவள்தான் மன்னருக்கே ஆரத்தி எடுக்க வேண்டுமென்றால், மன்னர் இவளுக்கு எடுக்கும் ஆரத்திகளைப் பற்றி நீட்டி முழக்க வேண்டியதில்லையே!

எதிரே அமர்ந்திருந்த ஏனைய தேவதாசிகளில் – குறிப்பாக காவேரிக்கும், உண்ணாமுலைக்கும் கடுப்போ கடுப்பு...

அந்தச் சபையில் சில மானமுள்ள தமிழர்களும் பல மானங்கெட்ட தமிழர்களும் பதவிகளில் இருந்தனர்.

ஓர் அந்நியனான சரபோஜியின் ஆட்சியில் நாம் பதவி வகிக்கின்றோமே என்கிற ஆவேசம் மானமுள்ள தமிழர்களுக்கு! ஒரு ராஜகாந்தி பற்றாது; வீட்டுக்கு வீடு ராஜகாந்தி உதயமாக வேண்டும் என்று எதிர்பார்ப்பவர்கள் அவர்கள். ஏனையவர்கள் பதவிப் பிரியர்கள். படுக்கையிலிருந்து உடுக்கை வரை அது சகாயச் சமக்காளமாயிற்றே! இந்த மானமிழந்து மதிகெட்டுப் போன திசை தெரியாத போக்கு, நாயக்கர் காலத்திலேயே நாற்று நட்டுவிட்ட செய்தி. 'அந்நியனுக்கு இடம் கொடேல்' என்கிற மூதுரை ஏட்டளவில் அழுகல் நாற்றம் கண்டுவிட்டது.

சுந்தரி பம்பரமாகச் சுழன்று ஆடுகிறாள். அவள்தான் மன்னரின் பம்பரமாயிற்றே!

**ஆரபிமானம் கொண்டார்? – மன்னர்**
**ஆஸ்தான சபையில் தெய்வீக நடமாட...**

என்கிற பல்லவியில் அமைந்த ஆரபி ராகத் கிருதிக்கு சுந்தரி அபிநயிக்கிறபோது, அவளது இடவலமாக அசைந்த

கருவிழிகள், எதிரே இருந்த காவேரி, உண்ணாமுலைக்கு எரிச்சலைத் தூண்டியது.

ஆரபி ராகத்துக்கே உயிர்மூச்சு போல ஒலிக்கும் காகலி நிஷாதமாயிற்றே சுந்தரியின் போக புஷ்பங்களின் அசைவுகள்...!

இந்தப் புஷ்பங்களுக்குத்தானே ஐந்து சக்கரம் அதிக சம்பளம்? மற்றபடி மகாவித்துவான்களுக்கே ஐம்பது சக்க ரங்களும் அதற்குக் கீழும்தானே? சுந்தரிக்குச் சம்பளத்தில் ஐந்து சக்கரம் உயர்வு! கிம்பளத்தில் பத்து சக்கரங்கள் உருளுமே!

ஒரு மோசமான இந்தக் காலத்தில், சங்கீதம் முத்திரை பதித்ததுதான் வரலாற்றுச் சிறப்பு மிக்க பெருஞ்சிறப்பு!

சரபோஜிக்கு முன்பு, திருவிடைமருதூரிலிருந்தவாறு ஆண்ட அவரது சிற்றப்பன் அமர்சிங்குடன், வீரம் என்கிற சொல்லை தஞ்சை பூமியைப் பொறுத்தமட்டில் கும்பினிக் காரன் தத்துக்கு எடுத்துக் கொண்டு விட்டான். வைப் பாட்டிக்குப் பிறந்த தம்பி, எங்கே தஞ்சை அரியணையில் அமர்ந்து விடுவானோ என்று அஞ்சித்தானே இரண்டாம் துளஜா மன்னர், அவரது மகள் இறந்துபடவே, எங்கோ இருக்கும் மராட்டிய மாநிலத்து சத்தாராப் பிரதேசத்தி லிருந்து மரபுவழிச் சிறுவாக ஒருவனை தத்துக்கு எடுத்து வந்து, ஸ்வார்ட்ஜ் எனும் பாதிரியாரால் அறிவு புகட் டப்பட்டு, சரபோஜி ராஜா சாகேப் என்ற பெயருடன் அரியணையில் அமர்த்தியது?

தஞ்சையின் அதிகாரம் தவிர, ஏனைய சுற்றுவட்ட மனைத்தையுமே வெள்ளைக் கும்பினியனுக்கு விற்று விட்டார் சரபோஜி. அதிகாரம்தான் கையிலிருக்குதே யொழிய அந்தக்கை வாங்குவது என்னவோ சம்பளம்; ஒரு லட்ச வராகன்! அத்துடன் நாட்டின் நிகர வசூலில் ஐந்தில் ஒரு பங்கு சரபோஜிக்குத் தந்து விட வேண்டும். என்ன நிகரவசூலோ? கணக்காவது? கத்திரிக்காயாவது? காட்டியதுதான் கணக்கு என்கிற அரச நீதி அன்று தொடங்கிய தொடர்கதைதானே?

'தமிழ்ச் சமுதாயம் மராட்டியர் காலத்தில் தரங்கெட்டது போல வேறு எவர் காலத்திலும் ஏற்படவில்லை' –



சுந்தரியின் காற்சலங்கையிலிருந்து இப்படி ஒரு கருத்துக் கேட்கிறது.

'ரேவதி நட்சத்திரத்தில் பிறந்த பெரும்பான்மையினர் கலைஞராவர். ஏ, சரபோஜி! உன்னையும் ரேவதி நட்சத் திரத்தில் *சுவீகாரம் எடுத்ததால் கலைஞனாகத் திகழ நேரிட்டது!' என்கிறது மறுகால் சதங்கை.

ஆனால் சுந்தரியின் முகபாவங்களிலோ, †ஒரு பணத் துக்கு மூன்று படி அரிசி கிடைத்தும், மக்கள் சோற்றுக்கு ஆலாய்ப் பறந்து தங்கள் அழகிய பெண்களை விற்றுத் தாசிகளாக்குகிறார்கள்! ‡'கற்பு' என்பது சொல்லளவில் தான். இதன் பாதிப்பால் வலங்கை என்றும் இடங்கை என்றும் உற்பத்தியான ஜாதிகளின் கொடுமை, 'ஐயகோ!' என்று இரு காற்சலங்கைகளும் அலறுவன போலப் பிரதி பலிக்கின்றன.

தனி முற்றத்தில் அமர்ந்து கொண்டு ராணியர் இருவரும் பெண்களும் மருமகளும் நாட்டியத்தை ரசிக்கிறார்கள்.

ராணியர் என்னமோ இருவர்தாம். ஆனால் கோணிய ரான காமக்கிழத்திகள்... அம்மம்மா... இவர்களை அடைத்து வைத்திருக்கும் இடத்துக்குப் பெயர் கல்யாண குணங்களுக்குரியப் பெயரோ?

இவர்கள் யாவரும் கத்திக் கல்யாணிகள். ஓர் அழகிய கன்னிப் பெண்ணைக் கண்டு அரசன் உடைவாளை உருவி நடுத்தெருவில் நட்டுவிட்டால், அவள் மாலையிட்டே தீர வேண்டும். இதற்குப் பெயர் கத்திக் கல்யாணம்! இக் கொடுமை மராட்டியர் காலத்தில் இருந்தது.

மன்னரின் பக்கத்தில் உட்கார்ந்து நாட்டியத்தை ரசித்த – ரசிக்கிறானா? குறிஞ்சி ஆடுவதாகவல்லவோ

* 23-1-1787.

† ஒரு சக்கரத்தில் (ஏறத்தாழ ஒரு ரூபாய் மதிப்பில்) பத்தில் ஒரு பாகம் 2½ சக்கரம்; ஒரு புலிவராகன். இடத்துக்கு இடம் கொஞ்சம் மாறுபாடு உண்டு.

‡ Vico Viciously that chastity was virtue more admired than practised by the Indians. 'History of Tamil Nadu' - by N. Subramanian, Page-283.

கற்பனை செய்யும் இளவரசன் "சிவாஜிக்கு இந்தக் கத்திக் கல்யாணமோ, காமக்கிழத்திகள் வியாபாரமோ துப்புர வாகப் பிடிக்கவில்லை. நமது காலத்தில் குறிஞ்சிப்பூவாக இந்த நாடு மணக்க வேண்டும் என்று கற்பனை செய்து பார்க்கிறான்...

குறிஞ்சியின் வளர்ப்புத் தந்தையான விருபாட்சக் கவி ராயர் மட்டும் குறிஞ்சியிடம் அடிக்கடிச் சொல்லுவார்: "இந்த நாடு மராட்டிய மன்னர்களால் சுடுகாடானாலும், மன்னன் சரபோஜியால் கலைக்காடாகியது. பொதுவில் தமிழ் வளரவில்லையானாலும், சங்கீதம் பிறமொழி களில் ஜயப்பதாகை நிறுவுகிறது. சரபோஜி ஒரு கலைத் தேனீ! பல்வேறு கலைகளுக்குரிய ஓலைச் சுவடிகளையும் மேலைநாட்டு நூல்களையும் [†]சரஸ்வதி மகால் என்கிற நூலகத்தில் கூடு கட்டிய கலைத்தேனீ!"

கவிராயர் சொன்னது களங்கமற்ற உண்மை என்பது குறிஞ்சிக்கும் நாளடைவில் புரிய வந்தது. அதற்காக சரபோஜி ஆஸ்தானத்தில் பல்வேறுபட்ட கலைஞர்கள் சரணடைந்தது போலச் சரணடைந்துவிட முடியாது. தமிழிசைக்கு அங்கு இடமில்லை என்பதால்தானே அவள் தமிழிசை வெறி கொண்டு ஆஸ்தானம் வேண்டாம்; இந்த அகிலத் தமிழகமே எனது ஆஸ்தானம் என்று ஆர்ப் பரித்து வருகிறாள்?

சுந்தரியின் நாட்டியம் உச்ச கதியில் சூடுபிடித்து வேகம் கொள்கிற போதுதான் ராஜகாந்தியிடமிருந்து ஆள் வந்திருப்பதாக அந்த அவசரச் செய்தி உள்ளே நுழைகிறது. உத்தரவைக்கூட எதிர்பாராமல் அந்தப் பிணப்பெட்டியும் பின்தொடருகிறது.

உச்ச கதி நாட்டியம் மிச்ச மீதியைப் பின்னால் பார்த்துக் கொள்ளலாம் என்பது போலத் தடைப்பட்டு நிற்கிறது.

---

* இவன் பிற்காலத்தில் தஞ்சையை ஆண்ட மராட்டிய மன்னர்களை யெல்லாம் தாழ்விலை என்று சொல்லுகிற அளவுக்குப் பெண் வெறியனாகத் திரிந்து, பெண்களை அலறடித்து, ஒரே நாளில் பல பெண்களைக் கொள்ளையடித்தான்.

† இன்றும் தஞ்சையில் பெருமையோடு திகழ்கிறது.



பெட்டியை திறக்கிறார்கள்.

ஒன்பது அழுகியப் பிணங்கள்; துர்நாற்றமுடன் பயங்கர மாகக் காணப்படுகின்றன.

"யார் நீ? என்ன இது?" – சரபோஜி அரியணையை விட்டெழுந்து வந்து கவனித்து அக்கினியில் நின்று அலறுகிறார்.

பெட்டியை எடுத்து வந்தவன் நடந்த செய்திகளையும், ராஜகாந்தி சொல்லியனுப்பிய நெருப்புச் சொற்களையும் பிட்டுப் பிட்டு வைக்கிறான்.

அக்கினியில் நின்ற சரபோஜி, இப்போது மேலும் அக்கினியானார்.

என்ன! அந்த அற்புத குறிஞ்சி மலரைப் பிய்த்து எறிய இப்படி ஒரு சதியா?

"உங்களுக்குப் பத்துப் புலிவராகன் முன் பணமாகத் தந்த அந்த மகாவித்வக் கழுதைகள் யார்? யார்?"

கொலைஞன் மௌனம் சாதிக்கிறான்.

"யார்? மரியாதையாகச் சொல்!"– இப்போது சினச் சூறாவளியாக இளவரசன் சிவாஜி எழுந்து சிங்கம் போலக் கர்ஜித்ததும், அங்கிருந்த பல சங்கீத வித்துவான் களில் சதித்திட்டத்தில் மட்டுமே கலந்து கொண்டவர் கள் கதி கலங்கிப் போயினர். எங்கே, எப்படித் தெரியப் போகிறது என்று தாளத்தைத் தவறாகப் போட்டு விட்டதை எண்ணித் தடுமாறிப் போயினர். அவர்கள் சங்கீதத்தை மட்டுமே படித்தவர்கள். சாணக்கியத்தையோ, சுக்கிர நீதியையோ படித்தவர்களல்லவே? திருக்குறளைப் படிக்க நியாயமில்லை. காரணம் அவர்களைப் பொறுத்த மட்டில் தமிழ் தீண்டாத மொழி!

தலை போயிற்றோ? தங்கள் நிலை போயிற்றோ? என்று அவர்கள் தடுமாறினாலும் வெளியில் காட்டிக் கொள்ள வில்லை. காம்போதி ராகத்தில் மறைந்து ஒலிக்கும் காகலி நிஷாதம் போலத் தங்களை மறைத்துக் கொண்டி ருந்தனர்.

"யார் அந்த மடையர்கள்? நீயாகச் சொல்லப் போகிறாயா? இல்லை நானாகச் சொல்ல வைக்கட்டுமா?"

சிவாஜி சீறுகிறான்.

அவனது சீற்றம் சரபோஜிக்கு ஆச்சரியத்தைத் தர வில்லை. அவரிடம்தான் திருக்கடவூரில் நடந்த மழை நிகழ்ச்சியைக் கூறிக் கூறிப் பெருமைப்பட்டுக் கொண்டவ னாயிற்றே சிவாஜி! தந்தையிடம் மட்டுமா? தாய் அகல்யா பாயிடமும் கூறித் தலைமேல் தூக்கி வைத்துப் புகழ்ந்திருந் தானே! அப்பேர்ப்பட்ட குறிஞ்சியை, தனது மானசீகக் காதலியைக் கொல்லச் சதித்திட்டமா?

அந்தக் கொலைஞன் இன்னமும் 'தெரியாது' என்றே கூறுகிறான். அவனுக்கு ராஜகாந்தி என்கிற ராட்சஸ பயம்.

மகன் ஒன்று கிடக்க ஒன்றைச் செய்து விடுவானோ என்று பயந்து, முற்றத்திலிருந்து ஓடி வருகிறாள் அன்னை அகல்யாபாய் சாகேப்!

"சிவாஜி! அமைதி! இவனைப் பொறுமையாக விசாரித்துக் கொள்ளலாம். யாரோ சில சங்கீத வித்து வான்கள் பொறாமையால் இப்படிச் சூழ்ச்சி செய்தது என் மனமும் நோகத்தான் செய்கிறது. அந்த தேவதையைக் கொலை செய்வதா? தண்டிக்கப்பட வேண்டியவர்களே! ஆனாலும் இப்போதைக்கு வேண்டாம். பொறு மகனே!"

"அம்மா! தயவு செய்து இது விஷயத்தில் தலையிடா தீர்கள். நான் குறிஞ்சியை இதயமாக நேசிக்கிறேன் என்று இந்த நேரத்தில் இந்தச் சபையறியக் கூறுகிறேன். அப்பேர்ப் பட்ட எனது நேசத்துக்குரியவளைக் கொலை செய்யத் தூண்டிய கொடியவர்கள் யார் யார் என்பது இப்போதே புரிந்தாக வேண்டும்!" என்று உறுமிய சிவாஜி, நேரே அரண்மனையுள் செல்கிறான்.

சபை நடுங்குகிறது...

பெட்டியைக் கொண்டு வந்த கொலைஞன் குலை நடுங்கிப் போனாலும், 'குறிஞ்சியை நேசிக்கிறேன்' என்று சிவாஜி கூறியதிலிருந்து ஒரு சிந்தனை அவனுக்கு உதயம் கண்டது.



கரத்தில் சவுக்குடன் சபையில் பிரவேசிக்கிறான் சிவாஜி.

வந்ததும் வராததுமாக 'சுளீர்' என்று ஒரு சொடுக்கு. துடித்துப் போனான் பெட்டியைக் கொண்டு வந்த கொலைஞன்.

"யார் அவர்கள்?"

"இளவரசே! கொஞ்சம் பொறுங்கள்! சொல்லி விடுகிறேன். சங்கீதத்துக்கு அவமானம் வரக்கூடாது என்று குறிஞ்சியம்மாள், சதி செய்தவர்கள் பெயர் மன்னர் காதுகளுக்குத் தெரியக்கூடாது என்று ராஜகாந்தியிடம் சத்தியம் கோரினார்கள். ராஜகாந்தியும் எனக்குச் சத்திய ஆணையிட்டு அனுப்பி இருக்கிறார். குறிஞ்சியம்மாளின் சத்தியத்தை நான் மீறத்தான் வேண்டும் என்றால், அந்தம்மாளை நீங்கள் நேசிப்பத்தில் அர்த்தமில்லை."

கொலைஞன் கூறிய நியாயத்தைக் கேட்டு கோபாக் கினியிலிருந்த சிவாஜி சிலையாகிப் போனான்.

# இராகம் – 19



## ஆபோகி

சிதம்பரம் பிடில் வித்துவான் துரைசாமிப் பிள்ளை வீட்டில் குறிஞ்சிக் குழுவினர் தங்கினர். அந்த மேலை வீதியே திரண்டு விட்டது. குறிஞ்சியின் புகழ் அந்த அளவுக்குத் தமிழகத்தில் பிரசித்தி பெற்றுவிட்டது. இசையை எளிமையாக்கி மக்களைப்பாடும் மக்கள் பாடகியாயிற்றே! தமிழ்ப் பாடகியாயிற்றே!

துரைசாமிப் பிள்ளைக்குப் பெருமையோ பெருமை! நாதோபாசகியான குறிஞ்சி, தம் வீடு தேடி வந்திருக்கிறாளே! தமிழ் வாணி வந்திருக்கிறாளே!

தமிழ் இசைக் குலக்கொடியான குறிஞ்சி விரும்பியபடி, கோபாலகிருஷ்ண பாரதியார் தங்கி இருக்கும் கீழவீதி நண்பர், பொன்னு தீட்சிதர் வீடு நாடி அழைத்துச் செல்கிறார் துரைசாமிப் பிள்ளை. சற்றுமுன்தான், நடராஜப் பெருமான் சந்நிதிக்குச் சென்றிருப்பதாகவும், அங்கே தியாக பிரும்மமும் இருப்பதாகவும் செய்தி தெரியவரவே, அவர்கள் கோயில் நாடிச் சென்றனர்.

இருவரையும் தனித்தனியே பார்த்துத் தரிசிப்போம் என்று எண்ணியது போக, ஒருசேர தரிசிக்கும் பாக்கியம்



கிடைக்கப் போவதை நினைத்துப் புளகித்துப் போனாள் பூக்களின் அபூர்வ அரசியான குறிஞ்சி. ஞானசுந்தரமும் அதைப் பாக்கியமாகவே கருதினான்.

ஆமாம்; கோயிலுக்குள் தன்னை அனுமதிப்பார்களா?

குறிஞ்சி தன்னுள் கேட்டுக் கொள்கிறாள்.

ஏனைய கோயில்களின் கொள்கையும் தன்மையும் தன்னை அனுமதிக்கச் செய்தன என்றால் அது சங்கீத சமத்துவம். இது சிதம்பர ரகசியமாயிற்றே! தனித்த கொள்கைகொண்ட கோயிலாயிற்றே! மூவாயிரம், தீட்சிதப் பெருமக்கள் கட்டிக் காக்கும் தூய்மையுடைய கோயிலாயிற்றே!

நந்தனாருக்கு ஏற்பட்ட அனுபவம் இந்த 'நந்தினி'க்கும் ஏற்படுமானால்?

"ஞானீ! என்னைக் கோயிலுக்குள் அனுமதிப்பார்களா? நந்தனுக்கு ஏற்பட்ட அனுபவம் மாதிரி..."

குறிஞ்சி, ஞானசுந்தரத்தை நோக்கிக் கேட்க, துரைசாமிப் பிள்ளையே பதில் சொன்னார்: "உங்கள் விஷயத்தில் அவ்வாறு நடக்க நியாயமில்லை."

துரைசாமிப் பிள்ளை புகையிலை குதப்பிய வாயுடன் பதில் சொன்னார்.

கீழக் கோபுர வாசலையடைகிறபோதே கூட்டமோ கூட்டம்.

'இவள்தான் குறிஞ்சியா? இவள்தான் குறிஞ்சியா?' கேள்விக்குறிகள் ஒவ்வொருவர் நெற்றிச்சுழி முனையிலும் வேள்விக்குறியாய் வியர்க்கின்றன. கொள்ளையனை அடிமையாக்கிய செய்திதான் தமிழகத்தையே கொள்ளை கொண்டு விட்டதே!

"ஆ! அழகா இது? கையெடுத்துக் கும்பிடும்படியான தெய்வீக அழகு!" என்று வாலிபர்களே வந்தித்தனர்.

அனுமதியின்றி உள்ளே நுழைந்து அவமானப்படக் கூடாது என்று துரைசாமிப் பிள்ளையையே உள்ளே அனுப்பி வைக்கிறாள் குறிஞ்சி – ஒரு தூது மாதிரி.

உள்ளே...

அனுமதி மறுக்கப்பட்டது.

சந்நிதானத்துக்கு முன்னே தியாகராஜ சுவாமிகள் நடராஜ பெருமான் ஆராதனையைக் கண்டுகளித்துக் கண்ணீர் மல்கியவண்ணம் காணப்படுகிறார்.

பக்கத்தில் கோபாலகிருஷ்ண பாரதியார். அவரது இதய தெய்வமல்லவா கூத்தபெருமான்? கரம் கூப்பி ஆனந்திக்கிறார். தலையிலும் கரங்களிலும் பூச்சரங்களைச் சுற்றி உச்சிக்குடுமி அவிழ்ந்து புரள, மார்பில் சிவலிங்க மாலை அசைய, பெருத்த வயிறும் சூம்பிய கை, கால்களுமாக அங்க அழகு அற்ற அவர் கூத்தாடிக் கூத்தாடி ஆனந்திக்கிறார்.

ஆராதனைகள் அமர்க்களமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறபோது அவற்றையும் மீறி வெளியிலிருந்து கூச்சல் உள்ளே நுழைகிறது.

"சற்றே விலகி இரும் பிள்ளாய்; எனது சந்நிதானம் மறையுதாம்!" என்று நந்தனுக்காக சிவபெருமான் நந்தியை நோக்கிக் கூறியதாக நந்தன் சரிதம் பாடிய கோபால கிருஷ்ண பாரதியார் கூச்சலைச் செவி சாய்க்கிறார்.

அது...

'சற்றே செவி சாயுங்கள் சங்கீதங்களே! உங்கள் சந்நிதானம் தேவையாம்!' என்று அதே சிவபெருமான் கூறாமல் கூறுவது கோபாலகிருஷ்ண பாரதியாருக்குப் புரியவில்லை. ஆடுவதை நிறுத்திக் கவனிக்கிறார். என்ன கூச்சல்? பக்கத்தில் வந்து நின்ற துரைசாமிப் பிள்ளையிடம் வெளியே என்ன கூச்சல் என்று கேட்கிறார்.

"பாரதியாரே! குறிஞ்சி என்ற பாடகி வந்திருக்கிறார்கள். உங்களைப் பார்க்க, நீங்கள் தங்கி இருந்த இடம் சென்றோம். இங்கே இருப்பதாகச் சொன்னார்கள். இங்கு தியாக பிரும்மமும் இருப்பதால் இருவரையும் ஒருசேரக் கண்டு ஆசீர்வாதம் பெற கீழக் கோபுர வாசலில் காத்துக் கொண்டிருக்கிறார்கள். மக்கள் செல்வாக்குப் பெற்ற பாடகியாதலால் கூட்டம். அதனால் கேட்கிற கூச்சல்!"



"ஏன்? உள்ளே வருவதற்கென்ன? நடராஜ பெருமானையும் சேர்த்துத் தரிசிக்கலாமே!"

"அந்தப் பாக்கியம் அந்தப் பெண்ணுக்கு ஏற்படவில்லை."

கோபாலகிருஷ்ண பாரதி பூணூலைத் தடவிப் பார்த்துக் கொள்கிறார்.

அதுவரை தியானத்திலிருந்த தியாக பிரும்மம் தியானம் கலைந்து, "ஏன்?" என்று வினவுகிறார்!

"நந்தன் குலத்து நாயகி! அனுமதி மறுக்கப்பட்டு விட்டது."

"ஓ..."

ஆராதனை இனிது நிறைகிறது.

"அவள்தானே இங்கு வர அனுமதி தேவை? நாம் அங்கே செல்வதற்கு மறுப்பு இருக்க முடியாதே!" என்கிறார் தியாக பிரும்மம், பழுத்த பழத்தின் இனிப்பே போல!

ஓ... என்ன பேதா அபேதம்?

ஆனால் கோபாலகிருஷ்ண பாரதியார்? தமிழகம் கண்ட முதல் புரட்சிக் கவிஞனாயிற்றே!

"இங்கே எவன்டா சதுர்வேதங்களையும் தசோபநிஷத்துகளையும் உருப்படியாகப் படித்துப் பிரம்மத்தை உணர்ந்தவன்? குறிஞ்சி ஒரு பிரம்மம்! ஒரு நந்தனால் இந்த நடராஜனுக்கு ஏற்பட்ட அவமானத்தைத் துடைக்கத்தான் நந்தன் சரிதம் பாடினேன்! குறிஞ்சி சரிதம் பாட வைத்து விடாதீர்கள்!"

பயங்கரமாகச் சத்தம் போட்டு விட்டார்.

தீட்சிதர் தலைவர் சொன்னார்:

"பாரதி! நீங்கள் பிராமணர்களில் புரட்சிக்காரர்; இது கோயில்! இங்கு சில சட்ட திட்டங்கள் உண்டு. நந்தன் ஒரு ஏகாக்கிருதன்; ஜீவன் முக்தன்!"

"எப்படித் தெரிந்தது? ஈசன் கனவில் வந்து சொன்ன பிறகுதானே?"

"குறிஞ்சி பற்றியும் கனவில் சொல்லட்டும்!"

தியாக பிரும்மம் இந்த வாதத்துக்கு முடிவில்லை என்றுணர்ந்து தலையிட்டார்:

"பாரதி! இப்போது என்ன மூழ்கிவிட்டது? குறிஞ்சி தரிசிக்க வந்தது இந்தக் கூத்த பெருமானையல்ல; நம் இரு இசைக் கூத்தாடிகளை. வாரும்! நாமே போய் அவளை தரிசிப்போம். இதற்கு எவர் அனுமதியும் தேவை யில்லை."

தரிசிப்போம்! ஓ! எவ்வளவு பெரிய சொற்கள்! குறிஞ்சியை இவர்கள் தரிசிப்பதாவது?

கோபக்கினியை வேதாக்கினி அடக்கி அழைத்துச் செல்கிறது.

இருவரும் கிழவாசல் கோபுரத்தையடைந்ததும், கோபுரத்துக்கு வெளியே கூட்டம் சகிதமாக குறிஞ்சி, "ஆ! தெலுங்கிசையின் பழத்தையும், பழுத்துக் கொண்டு வரும் தமிழிசைப் பழத்தையும் ஒரு சேர தரிசித்ததில் பெருமையடைகிறேன்!" என்று கூறிப் பாதங்களில் விழுந்து வணங்குகிறாள்!

"இசை மகளே! என்னரும் தங்கையே! எழுந்திரு!" என்றார் கோபாலகிருஷ்ண பாரதியார். ஆனால் தியாக பிரும்மம்?

கண்கள் குளமாகக் கவனிக்கிறார்; பிரமித்துப்போய் கவனிக்கிறார்; இந்தச் சிறுவயதில் இப்படி ஒரு ஞானப் பழமா என்று கவனிக்கிறார்; ஸ்ரீ ஆசார்ய சுவாமிகளைக் கவர்ந்த அத்வைதப் பழமா? கொள்ளைக்காரனை அடிமையாக்கிய இசைப் பழமா? மழையை வரவழைத்த ராகப் பழமா? வானத்தைப் பிளந்து பூமியில் அவதரித்த வாணிப்பழமா?

"சுவாமீ! அடியாள் வணங்குகிறேன்!" பிரும்மம் பிரமிப் பிலிருந்து மீளுகிறார். கோபுர வாசலை விட்டு வெளியே வருகிறார். தமது கண்களில் அரும்பிய ஞான அருவியைத் துடைத்து, குறிஞ்சியின் தலையுச்சியில் கை வைத்து "ஸ்ரீராம ஜெயம்!" என்கிறார்.



"ஓ... போதும் சுவாமி! இந்த ஆசீர்வாதம் போதும்! அந்த நடராஜப் பெருமான் தலைமுடியில் இருக்கும் கங்கை நீரே என்னைக் குளிப்பாட்டிய பெருமைக்கு ஆளாகி விட்டேன்! கோயிலென்ன கோயில்? திருமூலன் சொல்லாத கோயிலா?"

"நான் ஒரு மூலனையும் கண்டவனில்லையம்மா! ஸ்ரீராம மூலமே எனது நாம மூலம்! குறிஞ்சி! நீ பாடி நான் கேட்க வேண்டுமே!"

"ஐயோ! நீங்கள் பாடி நான் கேட்க வேண்டும்; ஆனந்திக்க வேண்டும் என்றுதானே ஓடோடி வந்தேன்! நான் மாயவரம் சென்று பாரதியாரைப் பார்த்து விட்டுத் திருவையாற்றுக்கே வருவதாக இருந்தேன். நீங்கள் இருவருமே சேக்கிழார் பெருமான் சொன்ன தேனடைந்த மலர்ப்பொழில் தில்லையில் இருப்பதாகக் கேள்விப் பட்டேன். எங்கள் தமிழின் தெய்வமாக்கதை (பெரிய புராணம்) எழுதிய மண்ணல்லவா இந்த மண்! இதை மிதித்தாலே புண்ணியம்! மாநடம் செய் கூத்தபெருமானை உள்ளே சென்றுதான் தரிசிக்க வேண்டுமா? அவசியமே இல்லை!"

"ஆ! என் தமிழ்த் தங்கையே! உனது நாவிலல்லவா நடராஜர் மாநடம் புரிகிறார்? நீ பாடி நாங்கள் கேட்க வேண்டுமம்மா! இதோ பார்! இத்தனை கூட்டமும் எங்களுக்காகவா? இல்லையே! நாங்கள் தெய்வத்திடம் சென்று கொண்டிருக்கிறோம்! தெய்வமோ உன்னை மக்களிடம் அனுப்பி இருக்கிறது!"

"பாரதி சொன்ன பதில்தான் பவித்திரம்! நீ பாடு குறிஞ்சி! எங்கள் சங்கீதத்தில் பரமாத்மா மட்டுமே கலந்தி ருக்கிறது. உன் சங்கீதத்தில் ஜீவாத்மாவும் கலந்திருப்பதை இந்தக் கூட்டமே சாட்சியாக நிற்கிறது. நீ பாடு! நாங்கள் எல்லாரும் கேட்கிறோம்!"

"இந்தக் கூட்டம் எனக்காக நிற்கலாம்! ஆனால், நான் தேடி வந்தது உங்களுக்காக! ஆசார்யாள் ஆசீர்வாதம் பெற்றேன்! அபிராமபட்டரின் அன்பினைப் பெற்றேன்! பாரதியின் அரவணைப்பைப் பெற வேண்டுமே! நீங்கள்

தேவ உபாசிகள்! நான் மக்கள் சேவகி! நீங்களிருவரும் பாடுங்கள்! நான் உங்கள் தாள் பணிந்து பின்னர் பாடுவேன்!"

தியாக பிரும்மம் கண்களை மூடி ஸ்ரீராமனைத் தியானிக் கிறார்.

கோபுரவாசல் வெளியில் போடப்பட்டிருந்த பந்தலுக் கும் கீழே சமக்காளம் விரிக்கப்படுகிறது.

தியாகய்யர் அமர, அவர் பின்னே சீடர்கள் அமர, முன்னே குறிஞ்சியும் ஞானசுந்தரமும் அமர, குறிஞ்சிக்கு இடதுபுறமாக கோபாலகிருஷ்ண பாரதியார் அமர, அவர் களுக்குப் பின்னே குறிஞ்சியின் இசைக் குழுவினர் அமர, கூட்டமே அமருகிறது.

தம்பூர் சுருதியில் ஒரு சரித்திரமே கேட்கிறது.

சகமதச்ா... ச்ாதா மா கா சா...

சன்னமாக சாரீரத்தில் தியாகபிரும்மம் ஆபோகி ராகமென்பதே இதுதான் என்பதுபோல ஆரோகணம், அவரோகணம் சொல்லி, பாடலை ஆரம்பிக்கிறார்.

"*ஸ்ரீராமசீதா அலங்கார ஸ்வரூபா..."

ராமச்சந்திர மூர்த்தியும் ஜானகி தேவியும் கண்முன்

*இந்த நிகழ்ச்சி குறித்துச் செவி வழியாகப் பல்வேறு விதமாகப் பேசப்படுகிறது. தமிழின் இமயமான டாக்டர் உ.வே.சாமிநாதய்யர், தமது 'கோபாலகிருஷ்ண பாரதியார்' என்ற நூலில், இந்த ஆபோகி ராகச் சம்பவம் திருவையாற்றில் நிகழ்ந்ததாகவும், பாடிய பாடல் 'ஸ்ரீ ராம சீதா அலங்கார சொரூபா' என்றும் குறிப்பிடுகிறார். ஆனால், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் நான் இசை பயின்றபோது, பேராசிரியர்கள் எனக்குப் போதித்தது, இச்சம்பவம் சிதம்பரத்தில் நடந்ததாகவும், தியாகய்யர் பாடிய ஆபோகி ராகப் பாடல் 'மனசு நில்ப சக்தி' என்பதாகும். ஆக, பொதுவான கருத்து கோபாலகிருஷ்ண பாரதியார் ஆபோகியில், உடனேயோ, மறுநாளோ 'சபாபதிக்கு' என்ற பாடலை தியாகய்யர் முன் பாடிக்காட்டி இருக்கிறார். நான் இரு வேறு கருத்துகளையும் ஏற்று, டாக்டர் உ.வே.சா. அவர்கள் குறிப்பிட்ட பாடலையும், சம்பவத்தை சிதம்பரத்தில் ஏற்று எனது கற்பனையில், எனது கற்பனா பாத்திரமான குறிஞ்சிக்கெனச் சற்றே அழகு படுத்தி இருக்கிறேன். இது ஆராய்ந்து பார்க்க வேண்டியதும் கூட! குறிஞ்சியை இணைத்தது எனது கற்பனை. குறிஞ்சி, ராஜகாந்தி, ஞானசுந்தரம் என் கற்பனை வடிவங்கள்.



காட்சியளிப்பது போல...

ஆ! குறிஞ்சி, இசை வேள்வியில் பிரம்மதரிசனம் காண் கிறாள்.

பாரதியோ பரவசத்தில் மூழ்கிப் போனார்.

பிரம்ம சங்கீதத்தை மக்கள் கேட்டு மகிழ்கிறார்கள்...

தியாக பிரும்மம் பாடி முடித்து, குறிஞ்சியை நோக்கு கிறார்.

"குறிஞ்சி! என் பாடல் எப்படி?"

"சுவாமீ!" அலறிப் போனாள் குறிஞ்சி. "சுவாமி அபிப் பிராயம் சொல்ல அடியாளுக்கு என்ன தகுதி இருக் கிறது?"

"நிறைய இருக்கிறது. நீ வயதில் பெண் ஞானசம்பந்தன்! உனது பலம் உனக்கே தெரியும். எனக்காகப் பலவீனப் படாதே! ஸ்ரீ ஆசார்ய சுவாமிகளின் உபதேசம் பெற் றவள். நீ வைத்திருக்கும் தம்பூர் தீட்சிதர் பெருமான் அளித்த திட்சண்யம் நிறைந்த சாட்சி! சியாமா சாஸ்தி ரிகளே உன்னைப் பற்றிச் சொல்லியிருக்கிறார். அவர் ஒருவார காலமாகப் பயிற்சி செய்த பல்லவியை நீ ஒரே நாளில் கொள்ளையடித்துக் கொண்டாயாமே! இப்போது என் பாட்டையும் கேட்டாய் விட்டது. நான் உன்னை விமரிசனம் கேட்கவில்லை; அபிப்பிராயம்தான் கேட்டேன்."

"இரண்டுக்கும் அதிக வித்தியாசம் இருப்பதாக எனக் குத் தெரியவில்லை சுவாமி! அந்தச் சக்தியை நான் வணங்கும் சக்தி எனக்கு அளித்திருக்கிறாள். ஆனால் அது அதிகப் பிரசங்கமாகிவிடுமே என்று அஞ்சுகிறேன்!"

"பிரசங்கத்தில் அதிகமென்ன? குறைச்சலென்ன? சரபோஜி அரண்மனையில் நம்மைப் பிரசங்கிக்காத பிரசங்கத்தையொன்றும் நீ பிரசங்கித்து விடப் போவ தில்லையே! நீ கண்ட எங்கள் இருவரைப் பற்றியுமே பிரசங்கம் செய்யலாம். ஆனால் ஒன்று. எனக்குத் தமிழ் தெரியாது; தமிழில் பேசத் தெரியும். தெலுங்கைப் படித்து விட்டவன்! இல்லையென்றால் அந்த ஸ்ரீராமமூர்த்தியைத் தமிழிலேயே கம்பனைப்போல அலங்கரித்து இருப்பேன்!"

ஐயர்வாள் சொன்னது கண்டு கலங்கிப் போனாள் கானப்பேரழகி குறிஞ்சி.

"ஏனம்மா கண் கலங்குகிறாய்?"

"என் கம்பனை அழைத்தீர்களே என்று!"

"நம் கம்பன் என்று சொல்!"

மேலும் கலங்கினாள் குறிஞ்சி.

பாரதியாரோ...

"நம் கம்பன் அல்ல சுவாமி! அவன் உலகத்துக்கே உரியவன்! நீங்கள் சொன்ன தெலுங்கு விமரிசனம் தங்கையைக் கலங்க வைத்திருக்கிறது என்று நினைக்கிறேன். அப்படித்தானேம்மா குறிஞ்சி?"

"ஆமாம் அண்ணா! இந்த அவையடக்கப் பழத்தின் முன், நான் அபிப்பிராயம் சொல்வதா என்று ஆலோசிக்கிறேன்!"

"நீ சொல்லத்தான் வேண்டும்! நான் அந்த ஜானகியைக் கண்டறியேன். வான்மீகி வருணித்ததைப் படித்து இருக்கிறேன். காளிதாசன் கற்பனையில் பார்த்திருக்கிறேன்! நீ அந்த ஜானகியின் அவதாரம்!"

"சுவாமீ!"

"ஏனம்மா! நல்லதைத்தானே சொன்னேன்? நீ அலறுகிற மாதிரி ஏதும் சொல்லிவிடவில்லையே?"

"அந்த ஜானகி ஏற்ற துன்பங்களையும் அக்கினிப் பிரவேசத்தையும் நான் ஏற்க வேண்டுமா? தேவைதானா? வேண்டாமே சுவாமீ!"

அபிப்பிராயத்தை எதிர்நோக்கிய தியாக பிரும்மமே அரண்டு போனார். இந்த அபிப்பிராயமே இப்படி இருந்தால்?

ஆபோகி ராகப் பாடலைக் குறித்த அபிப்பிராயம்?

# இராகம் – 20



## நந்தினி

"ஏ ராமா! இவளுக்கு ஜானகி கண்ட அந்தச் சோதனையை வைக்காதே!"

பிரும்மம் பிரமிப்பிலும் இப்படி ஒரு பிரார்த்தனையை மனத்தே நிகழ்த்திக் கொள்கிறார்...

"குறிஞ்சி! உனது அழகைத்தானே ஜானகியின் அவதாரம் என்றேன்! அந்த ராமச்சந்திரன் உனக்கு ஒரு குறைவும் வைக்க மாட்டான். அவன் கருணை நிரம்பியவன்; கருணாமூர்த்தி! கலக்கம் வேண்டாம்!"

குறிஞ்சியின் முகத்தில் குமிழ் நகை.

"நல்லதம்மா குறிஞ்சி! நீ எனது பாடலைப் பற்றிய உனது அபிப்பிராயத்தைச் சொல்லியே தீர வேண்டும்."

"சொல்லுகிறேன் சுவாமி! நான் நக்கீரன் பரம்பரையில் வந்தவள். நான் சொல்கிற கருத்து கசப்பானாலும் நான் அறிந்தவை, தெரிந்தவை, புரிந்தவை! இனிப்பான பாகங்கள் மூன்று. நாரிகேள பாகம்; கதலீபாகம்; திராட்சா பாகம்! எனது குருநாதர் தீட்சிதர் பெருமான் சங்கீதம் அழுத்தம் நிறைந்த விளம்பகால சங்கீதம். நாரிகேள பாகம்;

அதாவது தேங்காய் பாகம்! அதனை உரித்து, உடைத்து, பருப்பை நிமிண்டி எடுத்து, கடினமாக மென்ற பிறகே சாற்றின் இனிமை புரியும்! பாலப்பழ பாகம் என்றும் சொல்லலாம்! சியாமா சாஸ்திரிகளின் சங்கீதம் கதலீ பாகம்! வாழைப்பழப் பாகம்! தோலை உரிக்கிற மென்மையான சிரமம் மட்டுமே! தங்களுடையதோ திராட்சா பாகம்! காய்ந்த திராட்சையை அப்படியே வாயில் போட்டு எந்த விதச் சிரமுமின்றி சுவைப்பது! இது இன்று உங்கள் ஆபோகி ராகம் கேட்டதால் வந்த ஞானமல்ல; ஏற்கெனவே நான் புரிந்து கொண்ட ஞானம்! இல்லை என்றால் சாமா ராகத்தையே பாடுவதில்லை என்று சத்தியமேற்று இருப்பேனா?"

"அந்த ராகம் என்ன பாவம் செய்ததம்மா?"

"ஒரு பாவமும் செய்யாததால்தான்! தங்களின் 'மானஸ சஞ்சரரே' என்கிற பாடல் மூலம் மோட்சம் கண்டிருக்கிறது. இனி யாராலும் அந்த ராகத்தை திராட்சா பாகமாகப் பிழிந்து அந்தப் பாடலுக்கு மீறி ஒரு பாடலை இயற்றிவிட முடியாது. எனவேதான் சாமா, பிரும்மத்தின் சாமாவாகவே இருக்கட்டும் என்று நான் பாடுவதில்லை."

'ஓகோகோ' என்று கூச்சலிட்டு விட்டார் கோபாலகிருஷ்ண பாரதியார். "குறிஞ்சி! இது விமரிசனமல்ல; வியத்தகு காப்பியம்!"

பிரும்மம் பிரகாசமாய்ச் சிரிக்கிறார். "பாரதி. அருமையாகக் கருத்தைச் சொல்லி விட்டார்! இனி நீ பாடலாமே குறிஞ்சி!"

"நான் பாரதியார் பாடக் கேட்டு, பிறகு பாடுகிறேனே சுவாமி! நான் வந்தது, 'இதோ நான் பாடுகிறேன்; நீங்களே கேளுங்கள்' என்பதற்காகவா?"

"உண்மைதான்; பாரதி! நீயும் இதே ஆபோகியில் ஒரு பாடலைப் பாடேன். நீ எப்படி ஆபோகியை ஆராதித்து இருக்கிறாய் என்பதை நானும் அறியலாமல்லவா?"

ஆபோகியில்...



"ஏ, நடராஜ பெருமானே! இது என்ன சோதனை? தியாகய்யர் வெறுமனே ஒரு பாட்டைப் பாடேன் என்று சொல்லி இருந்தால் நான் எதையாவது பாடி இருப்பேன்! நான் சிந்தனையே செய்யாத ஆபோகியிலேயே பாடேன் என்கிறாரே! எத்தனையோ ராகங்களில் பாடிய நான் ஆபோகியை ஆராதிக்க மறந்து போனேனே!"

பாரதியின் விழிப்பையறிந்து தியாகய்யர், "ஏன்? ஆபோகியில் எதுவும் பாடல் செய்யவில்லையா, பாரதி?" என்றார்.

"நான் சிறுவன் சுவாமீ! சாதிக்க வேண்டியவை எத்தனையோ?"

"ஏன், குறிஞ்சியும் சிறுமிதானே? நினைத்த இடத்தில் நினைத்தைச் சாதித்து வருகிறாளே! அந்தப் பிரமிப்பை உன்னாலும் ஏற்படுத்த முடியும்! பாடு!"

கோபாலகிருஷ்ண பாரதியார் அறத்துன்பமாய் அம்பலவாணனை இறைஞ்சுகிறார்.

"பாடுங்கள் அண்ணா! இந்த சபாபதியைப் பாட உங்களுக்கு எவ்வளவு நேரம் பிடிக்கும்? பஞ்சாட்சரத்தை ஓதிப் பாடுங்கள் அண்ணா!"

சபாபதி... நமசிவாயம்...

தம்பூர் நாதம்...

**"சபாபதிக்கு வேறு தெய்வம்**
**சமானமாகுமா? - தில்லை**
**சபாபதிக்கு..."**

ஆ! இதுவல்லவோ ஆபோகி?

பிரம்மமே பிரமித்து பிரம்ம சூத்திரமாய் ரசிக்கிறார்.

'ஆ! இவருக்குச் சமானமாகுமா?' என்று வியக்கிறாள் குறிஞ்சி.

கான அழகு, ஞான அழகு இருக்கிற அளவுக்கு தேக அழகை ஏன்தான் இந்த சபாபதி இவருக்கு வழங்க மறுத்து

விட்டானோ?* சூம்பிய கால்கள்; தடிமனான இடுப்பு; கூன்; கோணலான மண்டை; பூனைக் கண்கள்...

மண்ணில் செய்த பானையும் விண்ணை மயக்கும் †கடம் ஆனது போலவா?

**"கிருபாநிதி, இவரைப் போலக்
கிடைக்குமோ இந்தத் தாரணி தன்னிலே...
சபாபதிக்கு..."**

இப்படி ஒரு தமிழிசைச் செல்வரைப் போல் கிடைக்குமா இந்தத் தரணியில் என்று நெக்குருகிப் போகிறான் ஞான சுந்தரம்...

அப்போதே பாட்டியற்றி அதற்கு அவரே மெட்டமைப் பது என்பது தெய்வ பலத்துக்குரிய நிவேதம்...

சரணம் பாடுகிறார் பாரதியார்.

**"ஒரு தரம் சிவ ‡சிதம்பரமென்றே
உரைத்தால் போதுமே!
பரகதிக்கு வேறு புண்ணியம்
பண்ண வேண்டுமா?"**

தியாகய்யரின் கண்களில் ஆனந்தக் கண்ணீர்...

கோபாலகிருஷ்ண பாரதியாரின் பாடல் ஏனோ தடை படுகிறது.

"பண்ண வேண்டுமா? பண்ண வேண்டுமா" என்று எத்தனை முறைதான் பாடிப் பாடி, மேலே போக முடியாமல் திணறுவார்? பரகதிக்குப் புண்ணியம் பண்ணிக் கொண்டிருப்பார்?

பரகதி குறித்து பரமேஸ்வரன் சோதிக்கிறான்... சோதிக் கிறான்...

* 'கோபாலகிருஷ்ண பாரதியார்' - டாக்டர் உ.வே.சா. இவர் பாரதியை நேரில் கண்டவர்.

† அக்காலத்தில், போலகம் சிதம்பரய்யர் கடம் வாசிப்பதில் பெயர் போனவர்.

‡ இதனை வைத்துத்தான் இந்நிகழ்ச்சி சிதம்பரத்தில் நிகழ்ந்தது என்பது.



குறிஞ்சிக்கு இது புரிகிறது...

கணீரென்று குரல் கொடுத்தாள்; தமிழ் நிரல் கொடுத் தாள்; தன்னினத்துப் பரல் கொடுத்தாள்; பரிந்தும் கொடுத்தாள்:

**"அரிய புலையர் மூவர்பதம்
அடைந்தாரென்றே புராணம்..."**

கோபாலகிருஷ்ண பாரதியார் கண்களை அகல விரித்துக் கவனிக்கிறார்.

ஆ! தான் ஒரு புலைச்சி...

தில்லைக்கோயில் திறக்க வேண்டுமா? புராணமே திறந்து விட்டது என்கிறாளா?

*அரிய புலையர் மூவர்...

தொடர்ந்தார் பாரதி...

**"'பரிந்து'† சொல்லக் கேட்டோம் - கோ
பாலகிருஷ்ணன் பாடு தில்லை...
சபாபதிக்கு..."**

ஓ... குறிஞ்சி 'பரிந்து' சொல்லக் கேட்டு, கோபால கிருஷ்ணன் பாடுகிறார்...

என்னே பெருந்தன்மையான வரிகள்... வைரங்கள்... முத்துகள்...

பாரதியார் பாடி முடித்ததும், "தங்கையே! எனக்காகப் பரிந்து சொன்னாயா? உனக்காகப் பரிந்து சொன்னாயா?" என்று கேட்கிறார்.

குறிஞ்சியும் குமிழ் நகையுடன், "இந்தத் தில்லையைப் புரிந்து சொன்னேன் அண்ணா! புராணமறிந்து சொன் னேன் அண்ணா! புலையர்கள் யார் என்பதைத் தெரியச் சொன்னேன், அண்ணா!" என்று கூறுகிறபோது அவளது கண்கள் கலங்கிப் போயின. தொண்டை அடைப்பட்டது.

* தில்லை வெட்டியான்; பெற்றான் சாம்பன்; நந்தனார்.

† இந்தப் 'பரிந்து' என்கிற சொல்லை வைத்துத்தான் குறிஞ்சியை இணைத்துக் கற்பனை செய்தேன்.

தியாகய்யர் கலகலவென்று சிரித்து, "சபாஷ் மகளே!" என்று கூறியபோது, அவரது முகத்தைப் பார்க்கவேண்டுமே! அவர் வரிந்து கட்டிய வரிகள்: "பொதுவில் ஜாதிக்கு நல்ல சவுக்கடிக் கொடுத்து விட்டாய்! நானும் இதே ஆபாகி ராக இன்னொரு கீர்த்தனையில், 'மனசு நில்ப சக்திலேக போதே' எனும் கீர்த்தனையில், மனசையடக்கச் சக்தியற் றவன் மணியோசையுடன் பூஜை பண்ணி பயனென்ன' என்று கேட்டிருக்கிறேன். ஆணவம் நிறைந்தவன் கங்கை யில் குளித்தென்ன? காவிரியில் மூழ்கி என்ன? காமக் குரோதங்கள் நீங்காமல் கடவுளிடம் தவமென்ன கேடு? - கேட்டிருக்கிறேன் குறிஞ்சி!"

"அறிவேன் சுவாமி! நான் என்னைக் கோயிலுள் அனுமதிக்கவில்லை என்பதால் குறை சொல்லவில்லை. 'தில்லைவாழ் அந்தணர்களுக்கு அடியேன்' என்று எங்கள் சேக்கிழார் வணங்கியவாறே நானும் வணங்குகிறேன்! தீட்சிதர்களின் இந்தத் தீட்சண்யமான திட்டம் கோயிலைப் புனிதப்படுத்தக்கூடியது. ஆனால் பன்றிக் கறியுண்ணும் கவர்னர் வாஷிங்டன் துரை, உள்ளே நுழைய முயன்றால் இவர்களால் மறுத்துவிட முடியுமா?"

"சபாஷ் தங்காய்!"

பாரதியின் பாராட்டு. மேலும் அவர் தொடர்ந்தார்: "பிராமணன் எங்கே இருக்கிறான்? நான்கு வேதங்களையும் தசோபநிஷத்துக்களையும் படித்துப் பிரம்மத்தை அனுஷ்டிக் கிற பிராமணன் எங்கே இருக்கிறான்? உஞ்சவிருத்தி செய் பவனே அசல் பிராமணன்! உங்களைப்போல சுவாமி! எங்களைப் போலப் பொன்னுக்கும் பொருளுக்கும் ஆசைப்பட்டவர்களா?"

அங்கே நின்றிருந்தவர்களுள் தீட்சை நிறைந்த ஒரு தீட்சிதர் பாரதியாரைத் தீட்சண்யமாய் நோக்கிக் கேட்டார்:

"பாரதி! கோபத்தால் சேற்றை எடுத்து நம்மீது பூசிக் கொள்வது நலம் பயக்காது!"

"இங்கே செந்தாமரையையே ஒதுக்கிய பிறகு சேறாவது? கங்கை ஆறாவது? இறைவன் பேராவது?"



"இது அம்பரம்! அம்பர ரகசியமறியாமல் பேசிப் பயனில்லை! குறிஞ்சி, சிறந்த சங்கீத சிரோன்மணி! ஈசன் கட்டளையிடட்டும். கவர்னர், வருகை வேறு; இந்த கானப் பேரழகி வருகை வேறு. கட்டளை கிடைக்கட்டும் இப் போதே மேள தாளத்துடன் அழைத்துச் செல்கிறோம்!"

"உள்ளே வருபவர்களெல்லாம் கட்டடையிட்டுத்தான் வருகிறார்களா? குறிஞ்சியின் புகழ், இவளை குறிஞ்சி என்று இனம் காட்டி, புலைச்சி என்று தெரியவருகிற போதுதானே தடை? இவளே வெறும் பெண்ணாக இருந்து உள்ளே சென்றிருந்தால் புலைச்சி என்று எவருக்குப் புரியும்? தேஜோமயமான அந்த சிவகாமசுந்தரி போலல்லவா இவ ளிருக்கிறாள்? கவர்னர் துரை வருகை வேறு என்றால் என்ன அர்த்தம்?"

இந்த வாதத்தைக் குறிஞ்சி கொஞ்சமும் விரும்பவில்லை. குறுக்கிட்டாள்: "அண்ணா! ஏனிந்த வீண்வாதம்? நான் சத்தியமாக இந்தக் கோயிலுக்கு வரவில்லை. போதுமா? உங்களிருவரையும் ஒருசேரக் காணவே வந்தேன்! புலையர் களுக்கு வேதம் தெரியாது என்பது புன்மை என்பதை எடுத்துக்காட்டவே மூன்று சைவப் புலையர்களைப் பரிந் துரைத்தேன்! வேதோப நிஷத்துக்களை நன்கு பயின்றவர் புலையர் என்றும் புரோகிதர் என்றும் பாரார்! 'எவரே யாயினும் யாரே யாயினும் உண்மையை உள்ளபடி உணர்ந்தால் அவரே அழியாப் பதவியடைகிறார்கள்.' இதைத் தானே உபநிஷதங்கள் பன்னிப் பன்னி - நமது பாஷையில் சொல்ல வேண்டுமானால், பல்லவி மாதிரி அடிக்கடி 'ய ஏவம் வேத' என்று சொல்லுகிறது? பிரா மணம் என்பது ஒரு வஸ்து! பிரம்ம வஸ்து! அது த்வைதமாக, அத்வைதமாக, விசிஷ்டாத்வைதமாகப் பரிணாமித்து இருக்கிறது! அல்லது பிளவுப்பட்டிருக்கிறது! இந்த வஸ்துவைப் புலையன் புரிந்து கொண்டாலும் பிரம்மம்தான்! ஆத்மா இறைவனோடு இரண்டறக் கலக்கிற போது ஜாதியையா பார்க்கிறது? அத்வைதம் இதைத்தானே சொல்கிறது? 'தஸ்ய கார்ய நவித்யதே' என் கிறான் பகவான் கீதையில்! இந்த உடம்பால் ஒரு பய னுமில்லை. இந்த உடம்பு வெறும் சட்டை என்றால்

நான் புலையர் சட்டையை மாட்டிக் கொண்டிருக்கிறேன்; நீங்கள் பிராமணச் சட்டையை மாட்டிக் கொண்டிருக்கிறீர்கள்! இரண்டு ஆத்மாக்களும் தூய்மை பெறுகிறபோது தான் பிரம்மமாகிறது; பிராமணமாகிறது!"

குறிஞ்சி இவ்விதம் சொல் மழை பொழிந்த பிறகு 'தாயே!" என்று கரம் கூப்பிவிட்டார் தியாகய்யர்.

"தங்கையே" என்று தலைவணங்கினார் பாரதி.

"குறிஞ்சி! போகட்டும் அம்மா! ஆயிரம் மகான்கள் தோன்றி அறிவுரைகள் சொன்னாலும் இது ஒரு தீராத பிரச்சினை! தணியாத தாகம்! இப்போதைய எங்கள் தாகம் நீ பாடிக் கேட்பது! நீயும் இதே ஆபோகியில் பாடேன்!"

"மன்னிக்க வேண்டும் சுவாமி! இனி ஆபோகியிலும் பாடுவதில்லை என்று சத்தியம் மேற்கொண்டு விட்டேன்– சாமா ராகம் போல! பாரதியார் பாடிய 'சபாபதிக்கு' மிஞ்சி இனியொருவர் ஆபோகி பாடிச் சமானமாக முடியாது!"

"சபாஷ் தாயே! பாரதிக்கு நீ தந்த விமரிசனம் அந்த துர்க்கையான பாரதி சொன்னதுபோல! நானும் நினைத்தேன்! நமசிவாயனே நாவில் குந்தி விட்டானா என்று! நீ நன்றாகப் புரிந்து கொண்டாய்? உன்னைத்தான் இங்குள்ளவர்களுக்கு புரியவில்லை! என்ன ராகம் பாடப் போகிறாயம்மா! குற்றாலக் குறிஞ்சி என்கிற அபூர்வராகம் ஒன்றைப் படைத்து இருக்கிறாயாமே! அதனைப் பாடேன்! நீ தான் அபூர்வ ராகங்களின் அரசியாயிற்றே! எங்கே அந்த உன் பேர் கொண்ட ராகத்தைப் பாடு! இந்தக் கிழவன் கேட்டு ஆனந்திக்கிறேன்!"

"மீண்டும் மன்னிக்க வேண்டும் சுவாமி! அதனை திருவையாற்றில் தங்கள் வீட்டிலேயே பாடுவேன்!"

"இங்கு பாடுவதற்கு என்ன தடை இருக்கிறது? தங்கையே, உன் பெயர் என்பதாலா?"

"அற்புதங்கள் நிகழ்ந்து விடலாம்!" குறிஞ்சியின் நெஞ்சு நிமிர்கிறது. அதே நெஞ்சை நிமிர்த்திக் கேட்கிறார் கோபால கிருஷ்ண பாரதியார்.



"என்ன அற்புதங்கள்?"

"நடராஜர் சிலையே பெயர்ந்து வந்து என் முன் நடம் புரிந்தாலும் வியப்பதற்கில்லை!"

குரலில் அகங்கார மமகாரம் தெரியாவிட்டாலும் தேகச் சிலிர்ப்பில் ஓர் ஆவேசம் பீறிடுவது தெரிந்தது.

"அந்த அற்புதம் நிகழட்டுமே! எனக்கு *ஸ்ரீராம பிரான் காட்டிய அற்புதத்தைப் போல!" என்று உசுப்பினார் தியாகய்யர். அது ஞான உசுப்பல். அக்காலத்தில் இதை விட அற்புதங்களெல்லாம் நிகழ்ந்து இருக்கின்றன. ஆத்மாக்கள் சாதித்து இருக்கின்றன. அது ஓர் ஆத்ம விஞ்ஞான ரசவாதம்!

தியாகய்யரை கரம் கூப்பிய குறிஞ்சி சொன்னாள்: "மறுப்பதாக நினைக்க வேண்டாம் சுவாமி! இந்தக் கூட்டத்தில் எனது தலைசிறந்த ரசிகன் ராஜகாந்தி இருக்கிறார். அந்த நாகம் இந்த மகுடி கேட்டால் அருகில் வந்து விடும். கும்பினித் தடிகள் அந்த நாகத்தைக் கொல்ல மூலைக்கு மூலை காத்துக் கொண்டிருக்கின்றன. அந்த ராஜ நாகத்தின் வேண்டுகோள் இந்த ராகம் இங்குப் பாட வேண்டாம் என்பது."

"பயங்கரக் கொள்ளைக்காரன் ராஜகாந்தி இந்தக் கூட்டத்தில் இருக்கிறானா?" பாரதியார் பதறிப் போகிறார்.

"பயப்படவே வேண்டாம். நான் நாகம் என்று குறிப்பிட்டதே, அது சத்தியத்துக்குக் கட்டுப்பட்டது. விதி முடியாமல் தீண்டாதே! இரவு வைத்தீஸ்வரன் கோயிலில் தங்க இருந்தவளுக்குத் துணையாக இருந்து, சிதம்பரத்துக்கு அவசரமாக அழைத்து வந்ததே ராஜகாந்திதான்! இல்லையென்றால் உங்களை ஒருசேரக் காணும் அற்புதம் நிகழ்ந்தி

*ஒரு முறை தியாகய்யர் வணங்கும் ராமர் சிலை காணாமல் போய், பாடி வரவழைத்த பிறகு, 'கண்டுகொண்டேன் உன் பெருமையை' என்று பூரித்துப் பாடியவர் ஐயர்வாள், நம்ப மறுப்பவர்களுக்கு ஒரு மூலம் சொல்வேன்; உலகியலுக்குத் திருக்குறள் எப்படியோ அப்படி உளவியலுக்குத் திருமூலம்; அதற்கு மிஞ்சி ஒரு மூலமும் இல்லை.

ருக்காது! நான் அந்த நாகத்துக்குக் கட்டுபட்டவள். அது இல்லாதபோது இந்த ராகம் பாடுவேன்!"

ஐயர்வாள் ஆச்சரியப்பட்டுப் போனார். "குறிஞ்சி! நான் ராமனை ரசிகனாக்கியது சுலபம்! நீ ராஜகாந்தியை ரசிகனாக்கியது, ஓ... பெரிய விஷயம்! நல்லது என்ன ராகம் பாடப் போகிறாய், தாயே?"

"நந்தினி!"

"நந்தினி?"

"ஆமாம்; 'நந்தன்' பெண்ணுருவில் இங்கே வந்திருக் கிறேனே! எனவே நந்தனுக்குப் பெண்பால் நந்தினி. பெயர் அழகாக இல்லையா சுவாமி?"

"ராகமும் அழகான ராகம்தான்! ஆனால் மந்திரசக்தி நிறைந்த ராகம்! நீ..."

– 'வேண்டுமென்றே ஏதோ குழப்பம் செய்ய நினைக் கிறாய்' என்று சொல்ல வந்தவர் சொல்வதை நிறுத்திக் கொண்டு, "பாடு! அந்த ஸ்ரீராமன் என்ன நிகழ்த்த இருக் கிறானோ?" என்று தியாகய்யர் ஆசீர்வதிக்கிறார்.

இப்போது அந்தத் தீம்பிழித் தம்பூர், தீட்சிதரின் சிஷ்யைக்குக் குரலோவியம் தீட்டியது.

நந்தினியை நந்தினியாகவே இந்த நந்தினி பாட முடியுமா?

பாரதியார் பதற்றம் கொண்டு பார்க்கிறார்.

# இராகம் – 21



## பாரதி

முகங்களுக்கு முகம், முகவரிகளைத் தேடிக் கொள் கின்றன.

எந்த முகத்தில் ராஜகாந்தியின் ரகசிய விலாசமிருக்கும்?

சந்தேகம்; குழப்பம்...

ராஜகாந்தி என்கிற ராட்சஸக் கொள்ளையன் அந்தக் கூட்டத்துள் ஒருவனாக மறைந்திருக்கிறான் என்கிற வியர்க்கும் செய்தியே இப்பேர்ப்பட்ட விசித்திரத்தை உண்டுபண்ணியது.

ஆனாலும் அவன் வீணர்களைத்தான் நொறுக்குவான்; வீணைகளை நேசிப்பான்; அவனது இந்த அகவற்பா எல்லாரும் அறிந்தது. மேலும் குறிஞ்சி எனும் அவனது ஞானாசிரியை இங்கிருக்க ஏதும் நிகழ்ந்துவிட முடியாது. ஒரு தைரியம்.

குறிஞ்சியின் தம்பூர்த்தவம் இன்னமும் நீங்கவில்லை.

ஏற்கெனவே ஆபோகியில் அறிமுகமாகிவிட்ட குரல் தான். புலையர் புராணம் விரித்த அந்தக் குரல் நந்தினி யின் நயம் பேச நந்தனை எண்ணிப் பார்க்கிறதோ?

மக்களிடையே அமைதியின் இறுக்கம் திணறுகிறது.

ஆதார சுருதியில் 'ஓம்' குரலொலிப்பு; அவள் குரலுக் கேற்ப அவளே ஓர் ஒலிய நாதம்..

நந்தினியின் நயமோ என்று சிந்திக்கிற மாதிரி...

ஆதார சட்சத்தில் சுருதியில் நின்றவள், ஒரே தாவாக மேல் சட்சத்துக்குச் சென்று நின்று, உடனே பஞ்சம சுர மிருந்தும் மத்திமத்தில் இறங்கிக் குரலை நிறுத்தி இழையச் செய்வது கண்டு தியாகய்யர் திகைத்துப் போனார்.

இசையை எளிய அருவியாக்கினாலும் இந்தக் குற்றால இனிய அருவி, தீட்சிதர் என்கிற மலைபோன்ற பாறையான அழுத்தப் புலமையிலிருந்து வெடித்து வந்ததல்லவா? ராகப் பிழிவுக்குத் தீட்சிதர்; லயச்சேர்ப்புக்கு சியாமா சாஸ்திரிகள்; திராட்சாபாக இனிமையை உண்டாக்கியவர் தியாகய்யர், தமிழாகி மேலும் இனிமை காட்டியவர் கோபாலகிருஷ்ண பாரதியார்! ஆனால் குறிஞ்சி?

நந்தினி ராகத்தை நயம்படப் பாடுகிறாள். அவளது நாவில் அந்த ஷாடவராகம் – 'சரவணபவ' என்கிற சடாட்சரத்தை எதிரொலிக்கிறது.

காற்றும் நெருப்பும் சேர்ந்தது நாதம்.

மூலாதாரப் பிரமந்திரச் சுழற்சியில் உந்தி, இதயம், கழுத்து, தலை, வாயால் வெளிப்படுகிற புவன மொழி! இதன் எழுத்து சரிகமபதநி; இதன் இலக்கணம் சுருதியும், லயமும், கமகங்களும்...

இதன் பரிசுத்த குழந்தைகள் – 72 தம்பதிகளுக்குப் பிறந்த குழந்தைகள் – 34848.

பாஷாங்கமாகி விட்ட குழந்தைகளும், வக்கிர புத்தி படைத்துவிட்ட குழந்தைகளும் பட்டியலில் அடங்கா! பல்வேறுபட்ட வாரிசுகள்.

மனிதர்களில் வக்கிரப்பட்டால் ஊதாரிகள்! ராகங்களில் வக்கிரப்பட்டால் ஊனத்தின் உயர் சிருஷ்டிகள்; சகானா வைப் போல! கானடாவைப் போல!



மனிதர்களில் பாஷாங்கமானால் பெண் பொறுக்கிகள்; அல்லது விபசாரிகள்! ராகங்களில் பாஷாங்கப்பட்டால் ரகசிய இனிமைகள்; பெஹாக் ராகம் போல!

காலத்துக்கேற்ப ராகங்கள்; சுவைக்கேற்ப ராகங்கள் என்பதில் குறிஞ்சிக்கு அறவே நம்பிக்கை கிடையாது. அழுகை ராகமான முகாரியையும் – அந்த வக்கிரத்தை மேலும் கொஞ்சம் வக்கிரப்படுத்தினால் மகிழ்ச்சியாகவே பாட முடியும் என்கிற நம்பிக்கையுடையவள். ஆனால் ரேவதி போன்ற சோக ராகங்களை இனிமையாக வேண்டு மானால் பாடலாம்; மகிழ்ச்சியாகப் பாட முடியாது என்கிற அனுபவமும் அறிந்தவள். பாடுவோரின் அசிங்க மான இருபத்தோர் குணக் குற்றங்களைச் சுத்தமாக மதிப் பவள் – அதாவது மாவரைப்பதுபோல ராக ஆலாபனை செய்கிறார்களே... அம்மாதிரியான குற்றங்கள்! கையைத் தூக்கி, முகத்தை அசிங்கமாக்கிப் பாடுவதுபோல...

குறிஞ்சி, நந்தினி ராகத்தை ஓர் உயர்குலத்து ராக மாகவே வித்தாரம் செய்கிற போது...

தியாகய்யர் மனம் அந்த ராகத்து ஆரோசை, அமரோசையை முணுமுணுத்து கொள்கிறது...

சரிகமபநிச்சா... ச்நிபமகரிச...

இதன் பிறப்பிடம் அரிகாம்போதியா? வகுளா பரணமா?

பாரதி சிரிக்கிறார்? தனது பிறப்பிடம் எது என்று சுட்டிக்காட்டுகிறாளோ குறிஞ்சி?

அரியாகிய விஷ்ணு என்ன ஜாதி?

வகுளாபரணமாகிய மகிழம்பூ மாலையை யாருக்கு அணிவித்தால் என்ன? காம்போதி என்றாலே காமுறும் மாலை! 'மானுட தேகத்தில் காமம் மலைபோல் குவிந்தி ருக்கிறவரை, அவன் என்ன சுய ஜாதி சுப்ரபாதத் தையேவா தேடுகிறான்? சமயம் கிடைத்தால் சண்டாளச்சி என்றா மனம் பார்க்கிறது?' என்று அரிகாம்போதி தாய் ராகத்தைச் சுட்டிக் காட்டுகிறாளா?

நந்தினியாக மாறியவள், நந்தினி ராக ஆலாபனை மூலம், கூட்டத்துக் கண்களில் நந்தினி நீரையே - இந்திர பிரஸ்தத்துப் புண்ணிய நதி நீரையே வழிந்தோடச் செய்கிறாள்...

ஆ! இது கானமா? தேவ ஞானமா?

தியாகய்யர் ராம ஜோதியிலும், பாரதியார் அலகில் ஜோதியிலும் மூழ்கிவிட்டனர்.

பல்லவி தொடங்குகிறாள்...

'ய ஏவம் வேத' என்கிற உபநிஷதப் பல்லவியையே தமிழ் ஞானசம்பந்தனாகிப் பாடுகிறாள்...

**எதுஉண்மை? எதுதான் பொய்? -அதாவது**
**எண்ணிடில் அது அது, அது அது!**

வேத வித்துவான பிரம்மம் 'ஓகோ' என்றார்; உபநிஷத சாரமான பாரதி 'ஆகா' என்றார்!

ஓ... இவள் தத்துவங்களைத் தமிழில் முத்தாகச் சேர்த்து சத்துவமாக, சத்தியமாக, சத்தியவதியாக மக்களுக்குப் புரியப் பாடுகிறாள்; எனவே மக்கள் செல்வாக்கைப் பெற்று விட்டாள்! மக்களுக்குப் புரியாமல் எது செய்து என்ன பயன்?

பாரதியார் யோசிக்கிறார். மிகப்பெரிய ஞானோதயம். ஆயினும் மக்களுள் பலவிதமுண்டு. முண்டச்சீவிகள் ஒருவிதம்; அறிவு ஜீவிகள் மறுவிதம்! இவள் அறிவு ஜீவி ராகம்! தெருக்கூத்து இலக்கியமல்ல; காளிதாசன் நாடகம்! புழுதி கிளப்பும் ஆட்டமல்ல; செவிகள் புண்ணாகும் பாட்டுமல்ல! சிவகாம சுந்தரி நாட்டியம்! நாரத கானம்; இல்லை.... வாணியின் வாய்ப்பாட்டு!

பாடல் முடித்து...

சரண இறுதியில், தமிழுக்கே தகைமை சேர்த்த சேக்கிழார் வரிகளான 'அலகில் ஜோதி என் அம்பலத் தாடுவான், அவன் சிலம்படி, என் இனமடி-டீ!' என்று தனக்கே உரிய முறையில், தனது நிலைக்கு ஏற்ப 'அடி-யாகவும் 'அடீ தோழீ!' என்பதாகவும் பாடி, சுரம் பாடிய விந்நியாசங்கள்...



விநோத விசித்திரங்கள்...

தீட்சிதர்களுடைய விழிகளிலும் தீர்த்தத் துளிகள்; மனத்திலும் அந்த அம்பலவன் ஆணையிட்டது போன்ற தீர்க்கமான முடிவுகள்...

பாடலைப் பாடி நிறுத்தி வழக்கம்போலச் சற்றே கண்களை மூடித் தியானிக்கிறாள்...

"குறிஞ்சி! மீண்டும் சொல்லுகிறேன். நீ அந்தச் சிதையின் அவதாரம்!" என்றார் தியாக பிரும்மம். ஆனால் கோபால கிருஷ்ண பாரதியாரோ, "அந்தச் சிவகாமசுந்தரியின் கமல மனோகரி ராகம்!" என்றார்.

தலைமை தீட்சிதர், குறிஞ்சியின் அருகே வந்து கரம் கூப்புகிறார்: "இசைமகளே! நீ சந்நிதிக்கு வருகை தரலாம்! நீ அந்த சரஸ்வதி! அவளை எந்தப் பிறப்பில் இணைத்துப் பேச முடியும்? எந்த ஜாதி என்று எடுத்துக் கூற முடியும்? பிரமனுக்கும் ஜாதியில்லை; அவனது கல சத்து நீரில் பிறந்த கலைவாணிக்கும் ஜாதியில்லை! இந்த இருவரையும் மான்களாக்கி மாயம் புரிந்த ஈசனுக்குப் பெற்றவர்களே கிடையாது; பிறவாயாக்கைப் பெரியோன் என்றால் மற்றதைப் பற்றிப் பேசுவானேன்?"

கூட்டத்தே புவனமே மலைத்துவிட்டது போன்ற அமைதி. செடி, கொடி, மரம் அனைத்துமே மந்திரத்துக்குக் கட்டுப்பட்டு மீண்டும் செயல்படப் போகிறதைக் கவனிக்கிற மாதிரி ஒரு சலனமற்ற நிலை...

"குறிஞ்சி! இசைக்குலக் குறிஞ்சி! நீ சந்நிதிக்கு வந்து செல்ல வேண்டும்!" - மூவாயிரவரில் மூத்தவரின் முக மலர்ந்த முகமன்.

அகமலர்ந்து சிரிக்கிறாள் அழகி குறிஞ்சி.

"வருகிறேன் தீட்சிதர் பெருமானே! ஆனால் ஒரு நிபந்தனை."

"என்னம்மா?"

"சந்நிதிக்குள் என்னைத் தமிழில் பாட அனுமதிக்க வேண்டும்!"

"அது முடியாதம்மா! சந்நிதிக்கு வெளியே எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் தமிழில் பாடலாம்! இந்தச் சட்ட விதிமுறை உனக்காக மட்டுமல்ல; கோபாலகிருஷ்ண பாரதியாருக்கும் உண்டு. இது வழிவழியாக..."

"போதும்! நான் குறிஞ்சி! எந்தை முருகன் தந்த தமிழுக்குச் சந்நிதியுள் இடமில்லை எனில் அதுவே தீண்டப்படாத மொழியாகி விட்டது! குறிஞ்சி இந்தக் கோபுர வாசலையும் தாண்ட நாணப்படுகிறாள்! இந்த நடராஜப் பெருமானை எனது குற்றாலக் குறிஞ்சி ராகத்தில் வசப்படுத்த முடியும்; என் முன்னே ஆடவைக்க முடியும்; ஆடத்தான் போகிறார்! திருச்சிற்றம்பலம்! நான் புறப்படுகிறேன்."

குறிஞ்சி இவ்விதம் கூறியதும் எங்கிருந்தோ, "சபாஷ் மகளே!" என்கிற குரல் கேட்கிறது.

எங்கிருந்து கேட்கிறது! எவருக்குமே அது புரியவில்லை. ஏதோ நடராஜமூர்த்தியே குரல் கொடுத்தது போன்ற பிரமை ஏனையவர்களுக்கு...

அது ராஜகாந்தியின் குரல் என்கிற ரகசியம் குறிஞ்சி அறிவாள்; அவளது குழுவினர் அறிவர்.

தியாக பிரம்மத்தின் தாள் பணிந்து எழுந்து நிற்கிறாள்.

"சுவாமி! எனக்கென்று சில கொள்கைகள்; இது எனது முடிவு; மன்னிக்க வேண்டும்!"

"சீதே! நான் உன்னை மன்னிப்பதா? 'எந்தரோ மகானு பாவுலு' என்று அன்று பாடினேன். அதனை இன்று பாடியிருக்க வேண்டும். நீ எல்லாரையும் விமரிசித்தாய்; நான் உன்னை விமரிசித்து ஆசீர்வதித்து அனுப்புகிறேன். இனிப்பான பாகங்கள் மூன்றல்ல; நான்காவதும் ஒன்றுண்டு. அது தேன் பாகம்! என்னைத் திராட்சா பாகமென்றாய்! அதுகூட பற்களுக்குக் கொஞ்சம் சிரமம் தர வேண்டும்! நீ தேன்! சிரமமில்லாமல் இனிப்பாகத் தொண்டையுள் இறங்குவது."



'ஓகோ, கோ' வென்று வழக்கமான குரல் கொடுத்துப் பாராட்டைத் தெரிவித்தார் கோபாலகிருஷ்ண பாரதியார்.

அனைவரிடமும் விடைபெற்றுக்கொண்டு, துரைசாமிப் பிள்ளையுடன் புறப்பட்டாள் குறிஞ்சி.

**வி**த்துக்குள் விருட்சமாய், சத்துக்குள் சராசரமாய் ஆட்டிப்படைக்கும் அம்பலவாணனான அலகில் ஜோதியானின் உலகின் திருவிளையாட்டை அறிந்தார் யார்? புரிந்தார் யார்?

'கண்டாரும் கிடையாது; விண்டாரும் சொன்னதில்லை. அண்டாண்ட கோடியெல்லாம் ஒன்றையாய்ச் சமைந்திருக்கும்' என்று நந்தன் சரிதத்தில் மகா அத்வைதியான கோபாலகிருஷ்ண பாரதியாரே பாடிவிட்ட பிறகு?...

அன்றைய இரவு, சிதம்பரம் சைவத் திரு. பிடில் வித்துவான் துரைசாமிப் பிள்ளையின் இல்லத்தில் ஓய்வெடுத்துவிட்டு புலரிச்சூரியன் உதயமாகிற போது குறிஞ்சியின் குழுவினர் புறப்படுகிறார்கள்.

அப்போதுதான் விதி இரட்டை முகமாய் விகசித்துக் குறுக்கிட்டது. இது காலத்தின் ஒப்பந்தமோ?

தன்னை வளர்த்து ஆளாக்கிய வளர்ப்பு தந்தையாகிய விருபாட்சக் கவிராயர் அவசர அவசரமாகப் புறப்பட்டு வந்திருந்தார். அவருடன் சிதம்பரம் சுந்தரலிங்க ஐயரும் அவரது சுந்தரத் திருமேனி கொண்ட மகள் பாரதியும் வருகை தந்திருந்தார்கள்.

"பெரியப்பா! இது என்ன திடீர் வருகை? நான் ஒருத்தி நாடு நோக்கித்தானே புறப்பட்டுக் கொண்டிருக்கிறேன்?" என்றாள் குறிஞ்சி. அப்போது ஞானசுந்தரம் வெளியில் சென்றிருந்தான்.

"ஞானசுந்தரம் எங்கே? அவன் நலமா?"

அவர் கேட்க வேண்டிய கேள்வியைக் கேட்டார். குறிஞ்சியும் அணிய வேண்டிய புன்னகையை அணிந்து தலையசைத்தாள்.

"குறிஞ்சி! நான் வந்த விவகாரம் பின்னால் சொல்லு கிறேன். இவர் சொந்த ஊர் சிதம்பரம். இவரது மகளான இந்தப் பாரதி, நல்ல தமிழ்ப்பற்றுடையவள். இதே சிதம்பரத்தில் மகாவித்துவான் பல்லவி கோபாலய்யா வந்திருந்த போது, உன்னை மக்கள் பாடகி என்று சொல் வற்குப் பதிலாகத் தெருக்கூத்துப் பாடகி என்று சொல்லி விட்டாராம்! பாரதியோ உனது பரம ரசிகை! தலையை வெட்டி இக்கணமே காலில் போட்டுவிடு என்றால் செய்யக் கூடியவள்! எனவே இவள் அந்தப் பல்லவி கோபாலய் யரிடம் ஒரு சத்திய சபதத்தை மேற்கொண்டு விட்டா ளாம். "கோபாலய்யாவே! உமது கொட்டத்தை எனது குறிஞ்சியை விட்டே அடக்கச் சொல்லவில்லையென் றால், நான் சுந்தரலிங்கம் ஐயருக்குப் பிறந்தவளில்லை" என்பது அந்தப் பயங்கரச் சபதம். இப்போது தஞ்சையில் சரபோஜி அரண்மனையில் அவரது மகன் சிவாஜியின் திருமணநாள் விழாவாகக் கலைவிழா நடக்கிறது. உனக் கும் இன்னும் கொஞ்ச நேரத்திலோ போகிற வழியி லேயோ அழைப்பு வரும்; கலந்து கொள்கிறாய்; இந்த உனது ரசிகை பாரதியின் பயங்கரச் சபதத்தை நிறை வேற்றுகிறாய்!"

"சபதம் என்னமோ பயங்கரம்! என் மீது கொண்ட ரசனை இவளை இவ்வாறு சபதம் செய்துவிடச் செய்து விட்டது. மாபெரும் வித்துவான் பல்லவி கோபாலய்யா! அவரை நான் எதிர்ப்பதா?"

"அப்படி எதிர்க்கவில்லையானால் இன்றே தற்கொலை செய்து கொள்வேன். காரணம் நான் என் தந்தைக்குப் பிறக்கவில்லையே?!"

பாரதி, நெட்டங்கமாகக் குறிஞ்சியின் கால்களில் விழுந்து கதறவே செய்தாள். "நான் உங்களை அந்தப் பாரதியாகிய – பராசக்தியாகவே மதித்துப் போற்றி வரு கிறேன். என் சபதம் நிறைவேறியே தீர வேண்டும்."

"நல்லது, பாரதி! எனக்குப் பிடித்த ஓர் இனிய ராகத்துப் பெயரைக் கொண்ட ரசிகை நீ! ஆனால் அந்த மகா வித்துவானோடு நானாக எவ்விதம் வம்புக்கு இழுப் பேன்!"



"நானே வருகிறேன்! வம்புக்கு இழுக்கிறேன்?" அந்த மகாகாளி பாரதி போலக் கண்கள் கனன்று நோக்கு கிறாள் பாரதி.

வளர்ப்புத் தந்தை விருபாட்சக் கவிராயரோ, "எனது நண்பர் சுந்தரலிங்கம் ஐயர். எனது வறுமை காலத்தில் கை கொடுத்தவர். அவரது மகள் பாரதி. அந்தப் பாரதியே வந்து கட்டளையிடுவது போலக் கூறுகிறாள். நீ ஒப்புக் கொண்டே தீர வேண்டும். உன்னை யார் என்று காட்டு! சங்கீத சாஸ்திர மகிமையுள்ளவள் என்பதைக் காட்டியே ஆகவேண்டும். நீ மக்கள் பாடகியல்ல; மகாவித்வப் பாடகி என்பதை அரண்மனையே உணர வேண்டும்" என்றார்.

இதுகூட விதியின் கண்டிப்பு என்று சொல்லிவிட முடியாது..

அடுத்து விதி காட்டிய இன்னொரு முகம்தான் அந்தப் பாரதியையே அதன் சாரதியாக்கிவிட்டதோ? அல்லது...

அந்தக் கால ரதத்துச் சக்கர ஓசையில்...

பாரதி ராகத்தின் ஆரோணகமான சரிமபதநிச்ா; ச்நித பமரிசா... கேட்கிறதோ?...

ஓ... இந்தச் சோக ராக மேளகர்த்தாவான பவப் பிரியாவை குறிஞ்சியறியாதவளா? பவமாகிய அழிவு என்கிற அர்த்தத்தைத் தரத்தக்க பிரிய ராகத்தில் பிறந்த தல்லவா பாரதி ராகம்?

விதிரூபமாக வந்த பாரதியின் வேண்டுதல் கூட ஒரு கலைச்சவால்! இப்போது விருபாட்சக் கவிராயரின் நாவில் அமர்ந்து வெளிப்பட்ட சொற்கள்தாம் அழிவைத் தரக் கூடிய பாரதியோ?

"குறிஞ்சி! உன்னைக் கேட்காமலேயே ஒரு கச்சேரிக்கு ஒப்புக் கொண்டேன். அவரும் எனது வறுமைக் காலத்தில் ஆதரித்த வள்ளல்! அவர் காளையார் கோயிலில் அடுத்த வாரம் விழா எடுக்கிறார். 'கானப் பேருரை காளை' என்று சுந்தரர் பெருமான் பாடிய கானப் பேருரையில் என்கிற சரித்திரப் பிரசித்திப் பெற்ற காளையார் கோயிலில் பாடு

கிறாய்! ஆனால் பணத்துக்கல்ல; இலவசம்! என்னை வறுமையிலிருந்து காத்த இந்த இருவருக்கும் நீ செய்கிற கைமாறு, எனக்குச் செய்வதுபோல!"

ஓ... என்ன அறத்துன்பமான சொற்கள்?...

குறிஞ்சி இன்னமும் யோசிக்கிறாள். விதியின் ரதத்தைச் செலுத்துகிறவள் பாரதியா? இல்லை பாரதியின் ரதத்தைச் செலுத்துவது விதியா?

அவள் யோசித்ததெல்லாம் பல்லவி கோபாலய்யாவை வம்புக்கு இழுப்பதா என்பது! ஆனால் விதியின் ஒப்பந்தம் காளையார் கோயிலில் காத்துக் கொண்டிருக்கிறதே... அதனை அவள் எவ்விதம் உணருவாள்?

அந்த நேரத்தில்–

அந்த வீட்டுக்குள் சரபோஜி மன்னரின் அழைப்பும் நுழைந்து கொண்டிருந்தது.

# இராகம் – 22



## தர்பாரி

தஞ்சையரண்மனையின் ஜயவாசல் திமிலோகப் படுகிறது.

போன்சலே வமிசத்துப் போற்றத்தக்க கோமகனாரல்லவா ராஜா சரபோஜி? அந்த மாமகனார் பெற்றெடுத்த மணிமுடிக்குரிய ஓரே செல்வன் சிவாஜியின் திருமணம் நடந்து *பத்தாண்டு பூர்த்தியாகிறதாமே! அதற்கா இப்படி ஒரு பகட்டு விழா?

இதனை சிவாஜியே விரும்பவில்லை.

மாண்பு என்ற சொல் மனைவிக்கே உரியது என்று குமரகுருபரன் சொன்னானே... 'மனைத்தக்காள் மாண்பிலன் ஆயின்'... அந்தச் சொல்லுக்கே பொருத்தமற்ற ரோஜாச் செடியை மணந்ததற்கு, இப்படி ஒரு பத்தாமாண்டு பைத்தியக்காரத்தன விழாவா? பத்தாம் வயதில் திருமணம் செய்ததே பைத்தியச் செயல்! இந்தப் பத்து ஆண்டில் எந்த ரோஜாவை இனிது கொய்து முகர்ந்து ரசித்து இருக்கிறோம்? முட்கள் குத்தி முத்துப் போல ரத்தத் துளிகள் அரும்பியதுதானே மிச்சம்?

*1818-இல் ஜூன் அல்லது ஜூலையில்.

இந்த மகத்தான வேதனையைத் தீர்த்து வைத்தது, குறிஞ்சியும் கலைவிழா அழைப்பை ஏற்று வருகை புரிந்து இருக்கிறாள் என்பதுதான்! ஓ... தென்றலின் வருகை!

சரபோஜி மன்னரே ஆணிப் பொன் அம்பலத்து ஆடல் மகிழ்ச்சி கண்டுவிட்டார் என்றால்?

குறிஞ்சியெனும் அந்தத் தேவதா வாசனை வந்திருக் கிறதா?

சிவாஜி இயற்கையிலேயே மௌனம் நிறைந்த சிந்தனா வாதி. மராட்டிய வமிசத்தில் சற்றே மாறுபட்டும் வேறு பட்டும் *பிறந்து விட்டவன். மங்கள விலாசம் என்கிற அசிங்கமான பெண்களை அடைக்கும் மாளிகையை வெறுப்பவன். அழகிய பெண்களைக் கத்திநட்டுக் கல்யாணம் செய்து வந்து, ஒரு நாள் அனுபவித்துவிட்டு, அந்த மாதர்களின் கண்ணீரில் புத்தி கெட்ட புலம்பல் கீதங்களைக் கேட்கும் செவிகளை அறுத்து எறிய வேண்டும் என்று தந்தைக்கே உபதேசம் செய்த சாமிநாதன்! இல்லை யென்றால் சித்தத்தைத் தடுமாறச் செய்கிற சித்தினியை மனைவியாகக் கொண்டு இரண்டாம் திருமணத்துக்குச் சித்தமாய் இருக்கிற எசவந்தராவ் ராமசந்திர சூர்வே யின் ரம்மியமான மகள் காமாட்சிபாயி காத்திருந்தும் மறுப்பானா? அப்போதைய அவனது மனத்தில் காமம் கரும்புப்பந்தலிட்டுத் தேன்கூடு கட்டித் துளித்துளியாய்ச் சிந்திய காலம்.

ஆ! இந்தத் தேவசுந்தரி குறிஞ்சி மட்டும் மனைவியாகக் கிடைப்பாளேயானால்? அது தேன்கூடல்ல; வான் கூடு!

தஞ்சை என்ன? இந்தத் தரணியை துறக்கத் தயார்! அரசாவது? அதன் முரசாவது?

இது ஓர் அரச போக வாழ்க்கையா? வெள்ளைக் கும்பினியனுக்கு அடிமைச் சாசனமிட்டு அப்பா, தஞ்சாவூர் பொம்மையாக வாழ்கிற வாழ்க்கை ஒரு சுகபோக வாழ்க்கையா? இப்படிக் கும்பினியனுக்குத்

* பின்னாளின் சிவாஜியின் கதை என்பது வேறு. அது விதிவசம். இங்குத் தேவையில்லாதது. சத்ரபதி சிவாஜிதான் அந்தப் பெயருக்குக் கௌரவமளித்தவர்!



தலையாட்டும் சரபோஜியைக் கண்டல்லவா, தமிழுக்கு ரியவர்கள் தஞ்சாவூர் பொம்மை என்கிற ஒன்றைக் கண்டு பிடித்துத் தலையாட்டிக் கேலி செய்து வருகிறார்கள்?

அரண்மனை சங்கீத மகாலில் கலைவிழா ஆரம்பமாகி விட்டது.

மன்னர் சரபோஜியும், மந்திரி சர்க்கேல் ராஜேஸ்ரீ ராமோஜி போன்ற ஏனைய மந்திரிகளும், சேனாபதி பிரவகர ராஜேஸ்ரீ கிருஷ்ணாஜி போன்றவர்களும் பெரிய அண்ணா முத்தோஜி கோவிந்தராவ், சின்ன அண்ணா வேங்கட்டராவ் போன்ற உயர் அதிகாரிகளும், கலெக்டர் நெல்சன் துரையும் பிரதிநிதி (ரெஸிடென்ட்) ஜான் ஃபைஃப் போன்ற அதிகாரக் கும்பினி வர்க்கங்களும் கலை விழாவை ரசிக்கின்றனவோ இல்லையோ, கௌரவித்துக் கொண்டிருக்கின்றனர்.

மேன் மாடத்தே, சரபோஜி மன்னரின் முதல் ராணி யமுனாபாய் சாகேப், இரண்டாம் ராணி அகல்யாபாய் சாகேப், இளவரசன் சிவாஜியின் இளையராணி – ரோஜாச் செடி சைதாம்பாயி சாகேப். ஏன்? இரண்டாம் ராணியாகக் காத்திருக்கும் காமாட்சிபாயி முதலானோர் அமர்ந்து காணப்பட்டனர்.

வேற்று இடத்தில் காமக்கிழத்தியின் கூட்டங்கள், இதில் சரபோஜியின் சிறிய தந்தை, ஆனால் பெரிய வீரர் திருவிடை மருதூர் அரசர் காலஞ்சென்ற அமர்சிங்கின் குடும்பங்களும், காமக்கிழத்திகளும் அடங்குவர்.

இதில் வேடிக்கை...

விழா நாயகன் சிவாஜி, இன்னமும் வரவில்லை. அவன் குறிஞ்சியோடு வருவதில் குதூகலிக்கிறான் என்பது சரபோஜிக்குத் தெரிய வருகிறது. அவனது காதல் நெஞ்சம் அவர் அறிந்ததே! இப்போது அது அவத்தைக் கும் உள்ளானது. அவரது இதய வனத்திலிருந்து குறிஞ்சி மலரை எப்போதோ பறித்து எறிந்துதான் பல நாள்களாய் விட்டனவே! மகன் காதலிக்கிற போது?...

குறிஞ்சி, தஞ்சைப் பெருவுடையார் கோயிலுக்குச் சென்று அபிஷேகங்களை முடித்துத் திரும்புகிறவரை சிவாஜி காத்திருந்தான். அவனுடைய உற்ற துணைவர்களும் மிகப்பெரும் அறிவாளிகளும், மகாவித்துவான்களுமான பண்டிதர் ராமசாமியய்யா தீட்சிதரும் அவருடைய செல்வக் குமாரன் பண்டிதன் வரகப்ப தீட்சிதனும் உடனிருந்தாலும் வரகப்ப தீட்சிதனே சிவாஜியின் புத்தி மதிக்குரிய புண்ணிய நண்பன்.

அரங்கில் நாட்டியமும் இசையும் அமர்க்களப்பட்டாலும், கண்களுக்கும் செவிகளுக்கும் அவை குறித்து அக்கறை என்ன? எங்கே குறிஞ்சி? எங்கே குறிஞ்சி? எப்போது வருவாள் குறிஞ்சி? எதிர்பார்ப்போ, எதிர்பார்ப்பு!

அதோ குறிஞ்சியும் வந்துவிட்டாள்.

ஆ! அவள் குறிஞ்சியாகவா வருகிறாள்? தஞ்சை கோபுரத்துப் பொற்கலசமாய் வருகிறாள்! கட்ட முடியாத–எட்ட முடியாத பெருவுடையாளின் லிங்கமாய் வருகிறாள். கம்பனின் இராம காதையின் அலங்காரச் சொல்லினிப்பும் அற்புத கற்பனைக் கட்டுக்கோப்புமாக வருகிறாள்...

காளிதாசனின் நாடக நயம் அவளது நடையில், சாகுந்தலமாகச் சங்கீதமிசைக்கிறது! வாணியின் வீணை அவளது தேகத்தில் நாதம் சொட்டுகிறது...

மக்களிடையே ஒரே ஆரவாரம்.

"ராஜாளிப் பறவையை வரவழைத்த சங்கீத ராட்சஸியல்லவா?" என்கின்றனர் சிலர்.

இத்தனைக்கும் அப்போது மேடையில் பாடிக் கொண்டிருந்தவர் மகாவித்துவான் சுப்பராய சாஸ்திரிகள். தியாக பிரம்மத்தின் சீடர். என்ன பாடிக்கொண்டிருக்கிறார்?

'ஜனனி நின்னு வினா' என்கிற ரீதி கௌளையில் அவராக இயற்றிய அற்புத சாகித்தியம்.

மக்களின் ஆரவாரம் – பல மகாவித்துவான்கள் வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொண்டன. அவர்களில்



கொலைகாரர்களும் இருக்கிறார்கள்! ராஜகாந்தியால் அடக்கப்பட்ட கொலைஞர்கள் சிலர்!

சபையில் முத்துசாமி தீட்சிதரின் இளைய சகோதரர் பாலுசாமி தீட்சிதர், அண்ணாசாமி சாஸ்திரி, வீணை குப்பய்யர், ஞானம் கிருஷ்ணய்யர், ஆலைவய்யா, தஞ்சை சகோதரர்கள், வைத்தீஸ்வரன் கோயில் சுப்பராம சாஸ்திரி இவர்களுக்குத் தலைமையாகப் பல்லவி கோபாலய்யா...

புலமைக் காய்ச்சல் என்பது வேறு! புலமை என்பது வேறு! கோபாலய்யா பல்லவியின் மகாசக்கரவர்த்தி; இதில் மறுப்பதற்கு இருவித கருத்து எவருக்கும் கிடையாது.

ஒருபுறம் தமிழ்ப் புலவர் கோட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர். அவரது 'சரபேந்திரப் பூபாலக் குறவஞ்சி' நாடகம் இரவு நடக்க இருந்தது. அதில் சுந்தரி கதாநாயகியாக நடிக்க இருந்தும் இந்தக் குறிஞ்சிக்கு இப்படி ஒரு வரவேற்பா?

அது ஒரு சங்கீதப் பொற்காலம். ஆனால் தமிழின் கற்காலம்! தமிழுக்குத் தரித்திரம் பிடித்த தலையெழுத்துக் காலம்!

இளவரசன் சிவாஜியே எழுந்து சென்று குறிஞ்சியை வரவேற்று, கோபாலய்யா அமர்ந்திருந்த ஆசனத்துக்குப் பக்கத்தில் அமரச் செய்ததுதான் விதியின் விளையாட்டோ? அல்லது ரதியின் விளையாட்டோ?

இன்னமும் மக்கள் ஆரவாரம் அடங்கவில்லை. "குறிஞ்சியைப் பாடச் சொல்லுங்கள்" என்கிற எழுச்சிக் குரல் எழுப்பியதுதான், பல்லவி கோபாலய்யாவுக்கு எரிச்சலை மூட்டிப் பொறாமையைப் பொங்கச் செய்து விட்டது. அதுவே குறிஞ்சியே வம்புக்கு இழுக்காமல், காலமே வரிந்து கட்டிக் கொண்டு வம்புக்கு இழுத்துவிட்டது. இப்படி ஓர் இயல்பான சம்பவம் நேர வேண்டும்; தன் மீது பழியோ, ஆணவமோ ஏற்படக் கூடாது என்று குறிஞ்சி, தான் வணங்கும் தெய்வமான பத்திரகாளி பிரத்தியங்கிரா தேவியை வழிபட்டுக் கொண்டே வருகை தந்து அமர்ந்தாள்.

சினத்தின் சிண்டைப் பிடித்து உலுக்கிய பல்லவி கோபாலய்யா, தமது குடுமியைத் தட்டிவிட்டுக் கொண்டே அர்த்த சாஸ்திர சாணக்கியனைப் போல ஆவேசப்பட்டு எழுந்தார். அவரது கண்களில் பொறாமையின் நெருப்புத் துண்டங்கள் பொசுக்குவன போலப் பொறிகளைக் கிளப்பின.

"இது என்ன வித்வ சபையா? வேடிக்கை சபையா? விஷமச் சபையா? ஐயர்வாளின் மரபு அருள் சங்கீதம் நடைபெறுகிறது. அவர் ஜனனி பாட நீங்கள் அனலியாக வும் கனலியாகவும் கூச்சல் போட்டால்? ரீதி கௌளைக்கு மதிப்பு தராத சபைரீதியை நான் கண்டிக்கிறேன்!"

"எங்களுக்கு ஜனனியின் ரீதி கௌளை தேவையில்லை; குறிஞ்சியின் சங்கீத நீதி கௌளை தேவை!" என்றாள் பாரதி. அங்கேதான் அவளது விசுவரூபம் தலை தூக்கியது. அவளுக்குக் கிடைத்த பரம சந்தர்ப்பமல்லவா அது?

பல்லவி கோபாலய்யா பார்க்கிறார்.

"ஓ... இவள் நம்மிடம் சபதமிட்டவளல்லவா? சச்சரவு செய்ய சமயம் பார்த்துச் சந்தர்ப்பத்தை உண்டு பண்ணுகிறாள். இந்தக் கிடைத்தற்குரிய சந்தர்ப்பத்தில் குறிஞ்சியைச் சங்கீத வறிஞ்சியாக்கிவிட வேண்டியது தான்."

"நீ பாரதி இல்லை..."

"இல்லை குறிஞ்சியின் சாரதி!"

"நீ வந்த நோக்கம் அந்த நோக்கம்தானா?"

"அதே நோக்கமே தான்! இந்தச் சபை எங்கள் குறிஞ்சியை எதிர்பார்க்கிறது. ஆனால் எரிச்சலுடன் எரிந்து விழுந்து இருக்கிறீர்கள். எரிந்து விழுந்து பயனில்லை; வரிந்து கட்டிக் கொண்டு சபையில் அமர்ந்து உங்கள் சபதத்தை நிறை வேற்றுங்கள். அறுபது வயது அனுபவமிருப்பதாலேயே இருபது வயது அனுபவத்தை இளக்காரமாகிப் பேசி விட்டதை இன்னும் மறக்கவில்லை. கதைப்பவனெல்லாம் கதாசிரியனல்ல; கனகாங்கி ராகத்தைப் பாடத் தெரிந்த



தாலேயே கானகலாதரனாகி விடவும் முடியாது. குறிஞ்சி ஒரு வரப்பிரசாதம்! ஞானசம்பந்தன் வாயில் ஒழுகிய முலைப்பால்! முனைந்துதான் பாருங்களேன்!"

ஏது, ஏது, விழா என்று வருகிறபோது வீண் அபவாதம் ஏற்பட்டு விடுமோ என்று அஞ்சி சரபோஜி எழுந்து தலையிட, சிவாஜி குறுக்கிட்டான்: "அப்பா! இந்த வித்வப் போட்டியில் நீங்கள் தலையிட வேண்டாம். பலமுறை இந்தச் சபை குறிஞ்சியைப் பலவீனமாக விமரிசித்து இருக்கிறது. அவள் குரலினிமையில் ஜனங்களை மயக்கு கிறாள்; குன்றனைய சங்கீதத்தின் கல்லைக்கூடப் பொறுக் காதவள் என்று இந்தப் பல்லவி கோபாலய்யா பலமுறை சொல்லி நானே கேட்டிருக்கிறேன்! இப்போது பேசிய வள் குறிஞ்சியின் பரம ரசிகை! நான் குறிஞ்சியின் ரசிகர் களுக்கெல்லாம் தலைவன்! ஏன்? ராஜகாந்தியினும் ஒருபடி மீறியவன்! குறிஞ்சி கொட்டம் கொண்டவளல்ல; வேண்டுமானால் கோபாலய்யர் கொட்டத்தை அவள் அடக்க நான் ஆசைப்படுகிறேன் என்று சொல்வதைவிட ஆணையிடுகிறேன்! காரணம் குறிஞ்சியையே இங்குள்ள வர்கள் கொலை செய்யவும் துணிந்திருக்கிறார்கள்."

"நான் தயார்" என்று கம்பீரமாகக் குரல் கொடுக்கிறார் பல்லவி கோபாலய்யா.

அவையில் அமைதி, சித்திரையின் கத்தரி வெயில் போலப் புழுக்கம் கண்டு தடுமாறுகிறது.

காலில் கொலுசு சத்தம் குறிஞ்சிராகம் இசைக்க எழுந்து நடந்து வருகிறாள். அமராவதிப் பட்டினத்து அழகிகளுக்கெல்லாம் அழகியான, அபூர்வ ராக அழகி யான – ஆனால் அப்பழுக்குச் சொல்ல முடியாத அழகி யான குறிஞ்சி.

போட்டிக்கென ஒரு பெண் சிங்கம் போல நடந்து வந்தாலும், முத்துசாமி தீட்சிதரிடம் பயின்ற போற்றுத லுக்குரிய மரியாதைக்குப் பங்கம் வந்துவிடக் கூடாது என்பதால் வயதான–சங்கீத வாக்கேய சிங்கமான பல்லவி கோபாலய்யாவின் பாதங்களைத் தொட்டு அவள் வணங்கியதுதான் பலருடைய கண்களை வியக்கச்

செய்து, தோல்வியை ஏற்று வீழ்ந்துபட்டாளோ என்று மயக்கவும் செய்தது. "குறிஞ்சி! என் சபதம் என்ன?" பாரதி பதறுகிறாள்.

"குறிஞ்சி! காலில் விழு! அது மரியாதை! கானத்தில் வீழ்ந்து விடாதே! அது இந்த இளவரசனையும், உனக்காகப் பரிந்து பேசிய ரசிகையையும் இழிவாக்கும் ஏளனம்!" என்று கர்ஜிக்கிறான் சிவாஜி.

அப்போதுதான், குறிஞ்சி, சிவாஜியைப் பார்த்த பார்வையில் ஜீவகன் தெரிந்தான்; காந்தருவதத்தை தெரிந்தாள்; சீவகசிந்தாமணியின் செல்வத் தமிழே தெரிந்தது!

குறிஞ்சியின் இமைகள், குமார ராஜனான சிவாஜியை நோக்கிச் சிரித்தன. அந்தச் சிரிப்பில், எதிலும் பொறுமை வேண்டும்; சிந்தனை வேண்டும் என்பன தெரிந்தன.

பல்லவி கோபாலய்யாவை வணங்கிய குறிஞ்சி, "பல்லவி சக்கரவர்த்தியை இந்தச் சிறுமி முதலில் பதவிசாக வேண்டிக் கொள்கிறாள். நீங்கள் *பச்சிமீரியம் ஆதியப்பய்யாவின் அருமந்த சீடர். உங்களுடைய அடதாள வர்ணங்களான தோடி ராக கனகாங்கியும், கல்யாணி ராக வர்ணமான வனஜாக்ஷியும் பயின்று சங்கீதக் காரியானவள் நான். நீங்கள் என்னிடம் போட்டியிட வேண்டுமா? யோசித்துப் பாருங்கள்!"

"இது போட்டியல்ல; உனக்கு மிஞ்சிய சங்கீதமில்லை என்று இந்த உலகம் பேசுவதை நான் விரும்புவதில்லை. அபிராமிபட்டன் ஆனந்தப்பட்டிருக்கலாம்; தியாகபிரம்மம் ஏதோ சிறுமியாயிற்றே என்று புகழ்ந்திருக்கலாம். அரைப் பைத்தியமான கோபாலகிருஷ்ண பாரதி, தலைமேல் லிங்கத்தை வைத்துக் கூத்தாடுவது போல உன்னை வைத்துக் கூத்தாடியிருக்கலாம்! ஏதோ ஒரு சில மந்திர சக்திகளை வைத்துக் கொண்டு நீ ராஜாளிப் பறவையை வரவழைக்கலாம்; ராட்சஸனான ராஜகாந்திஸைய மயக்கலாம். என்னிடம் அந்த ஏமாற்று செல்லாது. நானும்

* இன்றைய புகழ்பெற்ற பைரவி ராக விரிபோணி வர்ணம் இயற்றியவர். இவர்கள் தெலுங்கு மரபிலிருந்து வந்தவர்கள்.



அதர்வணம் தெரிந்தவன். பல்லவி பாடியே உன் பாட்டைக் கல்லறைக்கு அனுப்பிவிட முடியும்!"

இப்படிச் சொன்ன அடுத்த கணமே இசை மாமேதையான ஆனைய்யாவுக்கு ஆத்திரம் பொங்கிவிட எழுந்து கொண்டார்.

"கோபாலய்யா! கோபம் வரலாம்; ஆனால் கல்லால் அடிப்பதுப்போலச் சொல்லால் அடிக்கக் கூடாது. குறிஞ்சி மானுட ஞானியல்ல; தேவஞானி! தீட்சிதர் பெற்ற இசை ஞானி! அவளை வம்புக்கு இழுக்க வேண்டாமே!"

"நீங்கள் தமிழில் பாடுகிறவரல்லவா? அதனால் தமிழுக்குப் பரிந்துரையோ? இவளை மீறவிட்டால் எங்கள் இசைப்புலமை நாறி விடும்!"

ஆனைய்யா ஆவேசம் கொண்டு சிலிர்த்து எழுச்சி கண்டார். "என் தமிழை இழிவு செய்த நீ, அதே தமிழுக்குத் தலைவணங்கவில்லை என்றால் நான் வணங்கும் அகஸ்தீஸ்வரன் அகஸ்தீஸ்வரனல்ல! மங்களாம்பிகை, அமங்களாம்பிகையாய் விடுவாள்!"

குறிஞ்சியின் நிலை இப்போது மிக்கவும் அறத்துன்பம். ஒருபுறம் ரசிகை பாரதியின் சபதம். இப்போது...

ஓ... ஆனைய்யா என்கிற இசை அரிமாவின் சபதமா? குறிஞ்சி இன்னமும் பல்லவி கோபாலய்யா என்கிற மாமேதைக்கு மரியாதையளித்துச் சொன்னாள்: "பல்லவி சக்கரவர்த்தி! நான் ஏற்கிறேன்!"

இப்படிக் கூறியதும் அவையில் ஒரே எழுச்சிக் குரல்கள்...

குறிஞ்சி மேலும் சொன்னாள்:

"நீங்கள் பெரியவர், நீங்கள் முன்னே பாடி, நான் பின்னே பாடக் கூடாது. இப்போது சொல்லுகிறேன். உங்களை அவமானப்படுத்த வேண்டும் என்கிற எண்ணம் சத்தியமாக எனக்கு இல்லை. என் வணக்கத்துக்குரியவர்

நீங்கள். நான் முதலில் பாடுகிறேன். செவி சாயுங்கள். என் வித்வாம்சத்தில் குறை இருப்பின் நீங்கள் *ராகம், தானம், பல்லவி பாடலாம். அது திருவிதாங்கூர் கோவிந்த மாராரை மீறி இருப்பின் உங்கள் தாள் பணிந்து எனது தோல்வியை ஒப்புக் கொள்வேன். ஆனால் ஒன்றை மீண்டும் சொல்வேன். 'எந்தரோ மகானுபாவுலு' என்று தியாக பிரம்மமே பாடி விட்டார்! எவரிடம் எந்தப் புலமை எப்படி இருக்குமோ?"

"எவரிடமும் அது இருக்கலாம்; உன்னிடம் அது இல்லை. உன்னிடமிருப்பது மக்களை மயக்கும் தமிழில் பாடும் சக்தி மட்டுமே! நீயே முதலில் உன்னிஷ்டம் போலப் பாடலாம்!"

குறிஞ்சியும் ஞானசுந்தரமும் அரங்கேறிக் குந்துகிறார்கள்.

அமர்க்களமான கைதட்டல்கள்.

தம்பூர் சுருதி கூட்ட....

கோபாலய்யர் ஒரு தடையை எழுப்பினார்.

"பக்க மேளங்கள் எங்களுடையனவாக இருக்க வேண்டும்."

ஒரு கணம் யோசிக்கிறாள் குறிஞ்சி.

"ஆட்சேபணையில்லை."

அந்த நாளைய அரசுக் கலைஞர்கள் அரங்கம் நிறைந்து வாத்தியங்களுடன் அமருகிறார்கள். மிருதங்கத்தில் நந்தி

* ராகம், தானம், பல்லவி என்பது இசை இலக்கணத்துச் சிகரப் பயிற்சி. இதில் ஒருவர் முற்றுமாகத் தேர்ந்து விட்டால் அவர் இசை மாமேதை. என் குருநாதர் சித்தூர்ப் பிள்ளை 8-களைச் சவுக்கத்தில் பல்லவி பாடி நானும் மதுரை சோமுவும் கண்டு சிலிர்த்து வியந்திருக்கிறோம். எங்கள் குருவுக்குக் குருவான லயப்பிரும்மம் காஞ்சி நைனாப்பிள்ளை 16-களைச் சவுக்கத்தில் பாடுவாராம். அதுமட்டுமல்லாது சிம்மநந்தனத் தாளம் தெரிந்த ஒரே இசைமகான் அவர் என்றும் சொல்லுவர். திருப்புகழுக்குத் தாளங்கள் கண்ட திருமகன்.



எனப் புகழ்ப்பெற்ற தஞ்சை நரேந்திரன்; கடம் போலகம் சிதம்பரய்யர்; *கிஞ்சிரா ராதாகிருஷ்ணய்யர்; பிடில் வெங்கடாசலமய்யா; முகர்சிங் மோகனதாசர்.

குறிஞ்சி, குறிஞ்சியாகச் சிரிக்கிறாள். "ராகமும் நீங்கள் குறிப்பிட்டதைத்தான் பாட வேண்டுமா? இல்லை, இந்தப் பெரிய தர்பாரில் தர்பார் ராகமே பாடட்டுமா?"

"தர்பாரே தர்பார் நடத்தட்டும்."

பல்லவி கோபாலய்யர், தமது தர்பாரைக் காட்டினார்.

அமைதியைக் கிழித்துக் கொண்டு தம்பூர் தர்பாராய் ஒலிக்கிறது.

* கஞ்சிராவை கிஞ்சிரா என்றுதான் வரலாறு பேசுகிறது.

# இராகம் – 23



# இராகம் தானம் பல்லவி

ரீ... ரீ.. ரிமபதநிச்ரா; மபதநிச்ரீ... ரீ... கக்காரிச்...ரீ...

எடுத்த எடுப்பில் ஞானசுந்தரமே தொடங்கியச் சுரப் பிரயோகம்...

தொடர்ந்து குறிஞ்சியின் குயில் நாதம்...

க்க்காரிச்; க்க்காரிச்; க்க்காரிச்சா...

மும்முறை தர்பாரின் கன்னத்திலேயே அடிப்பது போன்ற தர்பார் ராக மூர்ச்சனை...

இதே மூர்ச்சனையை ஞானசுந்தரம் தொடர்ந்தும் இணைந்தும் மத்தியஸ்தாயியில்...

இருவருமே மாறி மாறி...

பல்லவி பாடுவதன் ஆரம்பமா இது?

*இதுதானே அவர்கள் தமிழ்ப்பாணி?

மபதநிச்பா... ரிமபதநி... ககரிச ககரிசா... க்காக்காரிச்...

நிச்ரிக்க்கா... ரிச்;

*இந்தப் பாணி இன்றைய தக்கணச் சங்கீதத்தில் அரும்பி தமிழில் தலைதூக்குமேயானால் எதிர்கால சங்கீத உலகம் பொற்காலமாய்த் திகழும் என்கிற ஆவசயினால் அறையலுற்று இப்புதினத்தை எழுதுகிறேன். நிறைவேறுமா?



ரிச்ரிகக்காரிச...

என்று சுருதியில் நிற்கிறபோது–

சரபோஜியின் தர்பாரே அதிர்ந்து கைதட்டல்கள்....

அமைதி நிலவியதும் ஞானசுந்தரம் 'சரிமபதநிசா...' என்று ஆரோகணிக்க...

குறிஞ்சி, 'ச்நிசதபமரி ககரிசா' என்று அவரோகணித்ததும், தர்பார் ராகத்தை வக்கரித்தும் தணித்தும் பாடத் தொடங்குகிறாள் அழகின் தர்பாரான குறிஞ்சி.

இது என்ன புதியமுறைத் தொடக்கம்?

குறிஞ்சி தர்பாரா பாடினாள்? தர்பாரல்லவா குறிஞ்சியிடம் தஞ்சம் புகுந்து, 'கக்கரிக்'கிறது; கொக்கரிக்கிறது!

அடிக்கடி எழும்புகிற கரவொலியைக் கேட்டு, களிப்பொலியா? கற்கண்டொலியா? என்று கண் பிதுங்குகிறார்கள் கானகலா பூஷணங்கள்!

அட்சரங்கள் மட்டுமா பாராட்டின? நிரட்சரங்களும் பாராட்டின!

ஓ... இதுதான் இசைக்கலையோ என்கிற ஞானோதயம் சரபோஜிக்கு மேலும் பளிச்சிடுகிறது.

'ஆ! இவள் என் காதலி! என் மனைவி!'– இளவரசன் சிவாஜிக்குப் பித்தம் தலைக்கு ஏறுகிறது!

அந்தத் தர்பாரை – சரபோஜியின் தர்பாரைக் கிடுகிடுக்க வைக்கிற அளவுக்கு ராகம் பாடுகிறாள்; தர்பாரையே பிழிந்து அமர்த்துகிறாள்.

பல்லவிக்கு உரியன, ராகம், தானம், பல்லவி!

ராகம் என்பது இலக்கணத்து எழுத்ததிகாரம் போல!

தர்பார் ராகமா அது?

சரபோஜி தர்பாரைக் காக்க ஆலாபனை செய்கிறாளா? கவிழ்க்க ராகம் பாடுகிறாளா? இப்படி ஒரு தர்பார் ஆவேசமா?

கரகரப்பிரியா ராகம் பெற்றெடுத்த துக்கிரியான வக்கிர புத்தி படைத்த பிள்ளைகளுள், அழகிய ஆண்மை படைத்த கம்பீரக் குழந்தையல்லவா தர்பார் ராகம்! இல்லையென்றால் தர்பார் செலுத்த முடியுமா? பொதுவில் தர்பாரிலிருப்பவர்களுக்கே வக்கிரபுத்தியுண்டு என்பதன் உதாரணக் கொக்கரிப்பு இந்த 'கக்கா'ரிப்பு!

வக்கரிப்பிலும் குறிஞ்சியின் சுருதிசேர்ந்த கொக்கரிப்பில் மேலும் வக்கரிப்பு கண்டு பாட...

மரபின் அழகும், அலங்காரமும் குறையாமல், அதுவரை சொல்லி வந்த சுகத்துக்கு மீறிய, 'புதியன புகுதல்' என்ற சுந்தர வரிக்கு மீறிய, சொர்க்கப் புதுமை என்பது இதுதானா?

நாம் தமிழில் தான் எழுதுகிறோம். சிலப்பதிகாரம் முதல் இந்தக்காலம் வரை சில விழுக்காடு சமஸ்கிருதத்தைச் சேர்க்கவில்லையா? அந்தச் சொர்க்கச் சுகப் புதுமை இது! சுந்தரத் தமிழ்ப் புதுமை இது!

'தனித்தமிழ் எழுச்சி மரபு என்பது புலவர்க் குழாமுக் குரியது. மாறுபடுகிறபோது மக்கள் குழாமிடம் போய் சேருகிறது. குறிஞ்சி மக்கள் குழாமின் மணித்தமிழ் படைத்த மாமகள்! எனவே மரபலங்காரத்திலிருந்து சின்ன திசை திருப்பம்! திசைகள் அவளது திருநாமத்தைத் தெரிந்தது; புரிந்தது; போற்றியது போலும்!' – என்று அன்றைய ஆஸ்தான தமிழ்ப் புலவரான கோட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர் எண்ணிப் பார்த்தார்.

ராகம், தானம், *பல்லவியில் ராகம் பாடுவது † தனனா என்று பாடுவது – ஆதி தமிழிசை மரபு.

'தானம்' பாடுவதும் ஓர் இனிய முறை. சொர்க்க சுகம்.

* முகநிலை, கொச்சம், முரிபென மூன்று பிரிவுகளைப் பற்றி பண்டைத் தமிழ் இலக்கணம் பேசுகிறது.

† 'தென்னா தெனா என்று'... ஆளத்தி '(ஆலாபனை) வகை' – என்பது அடியார்க்கு நல்லார் மேற்கோள்.



*பதினைந்து விதமான கமகங்களைச் சுரப்பூக்கோலமிடும் இசை வண்ணச் சித்திரம். ராகம் என்பது எழுத்ததிகார மானால் தானம் என்பது சொல்லதிகாரம்!

'தா. அ. நம்' என்று பிரித்து, 'தனம்' என்கிற தெய்வீக நிலை அது!

குறிஞ்சி, தானம்தான் பாடுகிறாளா? அல்லது இசையைத் தானமாக வழங்குகிறாளா? உங்கள் தனம் என் இசைக்கு ஈடாகுமா என்று கேட்கிறாளா? தனமிலாப் பெண்கள் அழகின் தரித்திரிகள் என்று மார்பகத்தை நிமிர்த்திப் பாடுகிறாளா?

ஆ! குரலின் சுநாதமா? இல்லை வீணையின் நாதமா? கண்டுபிடிக்க முடியவில்லையே!

தானம் பாடி நிறுத்தி, ஸ்ரீ ஆச்சார்யாள் பெருமானைத் தியானிக்கிறாள்: "சுவாமி! என் வெற்றிக்கு 'ததாஸ்து' கூறுங்கள்!... ஏ, பிரத்தியங்கிரா தேவீ!"...

'பல்லவி' என்பது பொருளதிகாரம் போன்றது.

எடுப்பு, அறுதி, முடிப்பு என்பன போன்ற பல இலக்கணங்கள்.

இதிலும் அவளுடைய மரபு வழுவா அலங்கார மீறல் கள்...

பல்லவி பாடுதல் என்பதே செவி சாய்ப்பவருக்கு அலுப்பு தரக்கூடிய †தொல்காப்பியக் கடினம் போன்றது.

தியானத்தை முடித்து...

பல்லவியின் வரிகளை ஆரம்பிக்கிறாள்...

* திருபம், கம்பிதம், ஸ்புரிதம், லீனம், ஆந்தோளிதம், வலி, திருபின்னம், குருளம், ஆகதம், உல்லாசிதம், பிலாவிதம், கும்பிதம், முத்திருதம், நாமிதம், மிகருதம் ஆகிய 15 கமகங்கள் இல்லையேல் அது சர்க்கரையில்லாத சங்கீதம். மேலை நாட்டு மொட்டைச் சுரங்களாக நமது சங்கீதம் பரிணமித்து இருக்கும். இந்த இலக்கணங்கள் தோன்றிதே தமிழ்நாடு (தேவாரப்பாடல்கள்) என்கிறார் 'ரத்தினாகரம்' எழுதிய சாரங்கதேவர்.

† இன்றைய 'தொல்காப்பியம்'– பழைய (கி.மு.5000) தொல்காப்பியமே! ஆயினும் அதன் தமிழ் நடை சங்ககாலத் தமிழாகத் தெரியவில்லை. 'இந்திர'த்துக்கு இதில் அவசியமில்லை. ஆய்ந்து வருகிறேன்.

என்ன வரிகள்?

**"தமிழ், முருகன் தந்த தமிழ்! இனிய தமிழ்; இசைத்தமிழ்; குற்றாலக் குறிஞ்சித் தமிழ்!"**

தமிழ் எடுப்பு...

குற்றாலக் குறிஞ்சித் 'தமிழ்'– அறுதி!

முடிப்பு என்ன?

**'வற்றாமல் வாழி! வளமோடு வாழி! வானோங்க வாழி!'**

வலிமைமிக்க, அசாதாரண அல்லது அசாத்திய பல்லவி.

பல்லவி கோபாலய்யா பதறிப் போனார்; மனம் சிதறிப் போனார்; உடல் உதறிப் போனார். எல்லோருமே, எல்லாமே தெலுங்கு, கன்னட தேசத்து ஆஸ்தான இறக்கு மதிகள்! தமிழைக் கண்டு தடுமாறின.

ஆனைய்யாவும் தஞ்சை சகோதரர்களும் கண்ட அக மகிழ்ச்சிக்கு எல்லை எது?

என்ன தாளம்?

சிம்ம நந்தனம் என்கிற ஆண்மைமிக்க சிங்கத்தைப் பய முறுத்தவல்லதல்லவா சரபநந்தன தாளம்! பாடுவது சரப நந்தன தாளம்!

சிங்கத்தையே மருட்ட தக்கதல்லவா சரபம்? எட்டு கால்களுடைய பறவையாயிற்றே! நந்தனமாகி இந்திரன் பூந்தோட்டம் போன்ற விசாலமான தாளமாயிற்றே!

சரப நந்தன தாளம் 19¾ மாத்திரை கொண்டது. ஓர் ஆவர்த்தனத்துக்கு 79 அட்சர காலம் கொண்டது. இதில் சோடசாங்கத்தையும் உபயோகப்படுத்துவதென்றால்?

மூன்று காலம் பாடுவதென்றால்?

திஸ்ரம் செய்வதென்றால்?

அனுலோமம் பிரதிலோம சாதனைப் புரிவதென்றால்?...

செய்தாள்; செய்து முடித்தாள்; செம்மை சேர் தமிழுக்குச் சிறப்பளித்தாள்! சரபோஜி அரண்மனையின் 'ஓகோ' வென்ற பாராட்டுக்களைச் சீதனங்களாகவும் பெற்று விட்டாள்.



ஆனால் பக்கவாத்தியக்காரர்கள்?

மூச்சுத் திணறிப்போயினர்! விக்கி விதிர்த்துப்போயினர்! பல இடங்களில் பதவிசாக அமர்ந்தும் விட்டனர். சரப நந்தனமா? சண்டமாருத பந்தனமா?

உருப்படியாக குறிஞ்சிக் குழுவை உபயோகித்து இருக்கலாமே! பழக்கப்பட்டவர்கள்; பல்லவியும் இன்னும் வல்லபமாய் முழக்கப்பட்டிருக்குமே!

அத்துடன் விட்டாளா? விடுவாளா? விடத்தான் முடியுமா?

இராகமாலிகையில் பாடி தமிழுக்கு ராகங்களை மாலைகளாக அணிவிக்கிறாள்.

தர்பார் ராகம் அரசனுக்குரியது. அதிகாரிகளை கௌரவித்து மாலையணிவிக்க வேண்டாமா?

இராகமாலிகையை ஞானசுந்தரமும் குறிஞ்சியும் ஒவ்வோர் ராகமாகத் தேர்ந்தெடுத்து, 'தமிழ் முருகன் தந்த தமிழ்!' என்று பல்லவியை ஆரம்பிக்கிற போதெல்லாம், தமிழே கற்காலமாகிவிட்ட அந்தக் காலத்தில், தமிழ்த் தாயே எதிரே நின்று வாழ்த்துகிறாள்.

இந்த இடத்தில் அவர்கள் அபூர்வ ராகங்களைப் பாட வில்லை. வழக்கிலிருந்த ராகங்களைப் பாடினர்.

அத்துடன்...

தான் யார் என்பதைக் காட்ட சங்கீத சேட்டையும் செய்கிறாள்.

சங்கரனுக்கே ஆபரணமான சங்கராபரணத்தைப் பாடி, சுருதிபேதம் செய்து பல்லவியை அதே சுருதியிலிருந்து ஆரம்பிப்பாளோ? என்ன துணிவு? சின்ன வயதுக்குரிய ஞானமா இது? செயல்படக்கூடிய செயலா இது?

சங்கராபரணத்து சம்பூரண சுரங்களில், 'ரி' என்கிற ரிஷபத்தை சட்சமமாகக் கொண்டும், காந்தாரத்தை சட்சமமாகக் கொண்டும் மத்திமம் வரை சட்சமமாகக் கொண்டு வந்த மூன்று புதிய ராகங்களில் தமிழை ஆராதிக்கிறாளே! ஓ... குறிஞ்சி... குறிஞ்சி...

இதுவரை வழக்கிலுள்ள ராகங்களை மாலிகையாகத் தொடுத்தவள், குற்றாலக் குறிஞ்சி என்கிற அபூர்வ ராகத்தை – அவளது கண்டுபிடிப்பு ராகத்தை ஆலாபித்த போது...

பத்திரக்காளி பிரத்தியங்கிரா தேவி மந்திரத்தை – ஸ்ரீ ஆசார்யாள் உபதேசித்த மந்திரத்தை உச்சாடனம் செய்து ஆலாபித்த போது...

இது என்ன ராகம் என்று கேள்விக் குறியை எழுப்பிக் கொள்ளாதார் யார்?

இந்தக் கேள்விக் குறிகளுக்கு அவளே பதில் சொல்ல அந்த ராகத்துச் சுரம்பாடி, அதுவரை 'முருகன் தந்த தமிழ்' என்று சொல்லி வந்தவள், 'குற்றாலக் குறிஞ்சித் தமிழ்' என்று கூறவே மலைத்தனர். ஆனால் பாராட்டுக் குரல் களை எழுப்பவில்லை. காரணம் மயங்கியே போயினர். எங்கே கரவொலி எழுப்ப முடியும்?

குற்றாலக் குறிஞ்சி பாடினால் கொள்ளை இதயமே மயங்கியபோது, வெள்ளை இதயங்கள் மயங்கியதற்குச் சொல்ல வேண்டுமா?

'அல்லல் போம்; வல்வினை போம்; அரசியல் வயிற்றில் பிறந்த தொல்லை போம்' என்று அரசியலையே மறந்து அந்தக் கலையரசியின் நிழல் பற்றித் தொடர்ந்த நெஞ்சங் கள் நினைவிழந்து கிடந்தன.

கொடுமை வாய்ந்த கும்பினியர்களோ, கும்பிடத்தக்க 'வீனஸ்' தெய்வம் இவள் என்று விழி மறந்து, ஆங்கில மொழி மறந்து, தமிழ்மொழிச் சிறப்பின் தவத்தில் மூழ்கிப் போயினர்.

சங்கீத மகாவித்துவான்களோ, மூச்சுவிடத் திணறி மயங்கினர்.

பல்லவி கோபாலய்யாவோ, மெய்மறந்து, மேனி சிலிர்த்துப் போனார். பொய்யற்ற சங்கீதம் கண்டு பொங்கிப் புளகித்துப் பூரித்தார்; அந்த நேரத்தில் வாரித்த பொறாமையை எண்ணி அந்த மயக்கத்திலும் வருந்தினார்.



குறிஞ்சி பல்லவி பாடி முடித்துக் கையெடுத்துக் கும்பிட்டு வணங்க...

கரகோஷமா? குரல்கோஷமா? மயக்கத்தில் மலைத்துப் போன பிறகு கோஷமாவது? போலி ரசனையான வேஷமாவது?

ஒரே நிசப்தம்...

ஆனைய்யா மட்டும் தம்மை மறந்து எழுந்து அரங்கம் நாடிச் சென்று குறிஞ்சியைச் சேர்த்துக் கட்டிக்கொண்டு, "நீ புலைச்சியல்ல; மகளே! கலைச்சி! வியாக்கியானத்துக்கு எட்டாத அந்த வேத ரூபிணி! ஏ, மங்களாதேவி! உன்னை அமங்களா என்று ஆத்திரத்தில் கூறி விட்டேன். என் கோபத்தைத் தீர்த்துச் சங்கீத சாபத்தைத் தீர்த்தாய்! சபதத்தை நீத்தாய்! வணங்குகிறேன் தாயே! நீயே மங்கள நாயகி! இந்தக் குறிஞ்சி ரூபத்தில் பிறந்து இருக்கிறாய்!" என்று கூறி ஆற்றியாற்றி மகிழ்ந்து பெருமை கொள் கிறார்.

தொலைவிலிருந்த விருபாட்சக் கவிராயர் மகிழ்ந்து போனார்.

பல்லவி கோபாலய்யா எழுந்து வந்து, "மகளே! குறிஞ்சி! நீ எனக்கு மகளாகப் பிறந்து இருக்கக் கூடாதா? நான் கொண்ட ஆணவத்துக்கும் பொறாமைக்கும் பொறுக்க முடியாத ஆற்றாமைக்கும் அடுத்த பிறவியில் உனக்கு நான் மகனாகப் பிறந்து பிராயச்சித்தம் தேடுவேன்!" என்று கூறிக் கண்ணீர் மல்கிக் கரம் கூப்ப...

"ஐயோ! சங்கீத சக்கரவர்த்தி! நீங்கள் எனக்குக் கரம் கூப்புவதா? இப்போது மட்டுமென்ன? இன்று முதல் நான் உங்கள் மகளே!"

"அருமை மகளே! ஏற்கிறேன்! கலைகளுக்கு ஜாதி யாவது? இனமாவது? ஆனால் கலைகளுக்கு ஒழுக்கம் கிடையாது. இந்த விஷயத்தில் நீ சம்பூரணமாகவே இருக்க வேண்டும்!"

என்ன வார்த்தை சொல்லி விட்டார் கோபாலய்யா? ஸ்ரீ ஆசார்யாள் சொன்ன பாஷாங்கம் நினைவுக்கு வருகிறது...

ஞானசுந்தரத்தை நோக்குகிறாள். இதற்கு அர்த்தம் சொல்ல வேண்டியவன் அவன்தான்! ஓ... என்னே சோதனை?...

அந்த நேரத்தில்...

அவளது காலடியில் ஏதோ சில்லிடுவது போன்ற உணர்வு...

குனிந்து பார்த்ததில் ரசிகை பாரதி.

கண்ணீரால் காலைக் கழுவுகிறாள்.

அவளை எழுப்பி நிற்கச் செய்த குறிஞ்சி, "அடி பெண்ணே! நீ சபதமிடவில்லையென்றால் என்னை இவர்கள் புரிந்து கொண்டிருக்க முடியுமா?" என்று கூறி அணைத்துக் கொள்கிறாள்.

பல்லவி கோபாலய்யா, பாரதியின் தோள்களைத் தடவி, "நீ பாரதியல்ல! என் கண்களைத் திறக்க அந்தப் பராசக்தி பாரதி அனுப்பிய பாரதி!" என்றார்.

அரண்மனையில் அன்றைய விழாவும் விருந்தும், மல்லிகைப் பந்தலிட்டு, மகிழம்பூத் தோரணம் கட்டி, துல்லிய குறிஞ்சிக்குத் தோத்திரங்கள் பல பாடி, ராஜோபசாரத்தில் ரோஜா நகை புரிந்து விடைதந்தன.

குறிஞ்சிக் குழுவினர், காளையார் கோயில் நோக்கிச் செல்லுமுன், ஒருநாள் ஒருத்திநாட்டில் ஓய்வு கொள்ளலாமே என்று எண்ணினர்

அந்த ஒரு நாள் என்பது விதியின் ஒப்பந்தம்...

ஆனால் இளவரசன் சிவாஜி?

காதலோடு செய்து கொண்ட ஒப்பந்தத்தால் கண்ணீர் மல்கத் தொடங்கி விட்டான்.

# இராகம் – 24



# சல்லாபம்

இரவிராசனை வணங்கி வழியனுப்பு விழா நடத்திய இராக்கன்னி, நட்சத்திர விருந்து நடத்திக்கொண்டிருக்கிறாள்.

ஒருத்தி நாட்டையடைந்த குறிஞ்சிக் குழுவினர், குறிஞ்சி மாளிகையடைந்ததும், வழக்கம் போல மக்கள் சூழ்ந்து வணக்கம் செலுத்துகிறார்கள்.

ஒரு காலத்தில் சரபோஜி மன்னரின் அருமைக் காதலி முத்தாம்பாளால் புகழ் பெற்ற அந்த நாடு, இப்போது குறிஞ்சியால் குன்றின் மேல் ஏற்றிய தீபமாய் பிரகாசம் கண்டிருக்கிறதல்லவா?

வாத்தியக்காரர்கள் அவரவர் இல்லங்களுக்கு விடை பெறுகிறார்கள். தேவை என்கிறபோது அழைத்துச் செல்ல வேண்டியிருப்பதால், எல்லா வாத்தியக்காரர்களுக்கும் வீடுகளை வாங்கிக் கொடுத்து அங்கேயே வசிக்குமாறு செய்த ஏற்பாடு, ஞானசுந்தரத்தைக் கையெடுத்துக் கும்பிட வைத்தது. காரணம், அவர்களது ஒருகண் கூட, துளிநீரைச் சிந்தக் கூடாது என்பதற்கிணங்க பல வசதிகளைச் செய்து கொடுத்திருந்தான்.

ஏழைமை சொல்லி தந்த பல்வேறு இலக்கணங்களைக் குருகுல வாசத்தில் கண்டவனல்லவா? வறுமையெனும் இலக்கியம், கொடுமையெனும் அதிகாரங்களைக் கொண்டு கண்ணீரால் எழுதப்பட்டது என்பதை அவன்தான் அறியாதவனா? இல்லை குறிஞ்சிதான் அறிய மாட்டாளா?

குறிஞ்சி மாளிகையின் பூட்டை விருபாட்சக் கவிராயர் திறக்கிறார்.

ஞானசுந்தரத்து இதழ்களில் கோணல் சிரிப்பு.

"இது என்ன புது சிரிப்பு?"

மெல்லிய குரலில் குறிஞ்சி ஓசைபடாது கேட்க, ஞானசுந்தரம், "நமது கனவுப் பூட்டையும் திறந்துவிட்டால் என்ன என்று தோன்றியது; சிரித்தேன்!" என்றான்.

"சீ.சீ!"

விருபாட்சக் கவிராயர் உள்ளே சென்றார்.

இருவரும் தொலைவில் நின்ற மக்களை வணங்கி விடைகொடுத்து மாளிகையினுள் நுழைந்தனர்.

அன்றைக்கு முழுவதும் அவர்கள் ஓய்வில் உறக்கம் கண்டனர். மௌனமாய் எழுதப்படும் கவிதையல்லவா ஓய்வு?

இலட்சியங்களை விதி சோதிக்கும் என்பது போல அவர்கள் இலட்சியக் காதலர்கள். அந்த இசைப் பறவைகளுக்கென பல இலட்சியங்களிருப்பினும், சிலவற்றை உறுதியாகக் கடைப்பிடித்தனர். இந்த உறுதி ஒவ்வொரு நல்ல கலைஞனுக்கும் இருக்க வேண்டியது.

மேம்படுத்திப் பேசுகிற போது மெய்ச்சிலிர்த்துப் போய் விடக்கூடாது. அதுபோலக் கீழ்படுத்திப் பேசுகிற சீழ் பிடித்த பொறாமைகளுக்கு உணர்ச்சி வயப்பட்டுவிடக் கூடாது. புகழ்ச்சியும் இகழ்ச்சியும் புவனத்துப் பாதி பாதி சித்தாந்தங்களைப் போல! இரவு–பகல்; இன்பம்–துன்பம்; அறிஞன்–அறிவிலி போல!

இந்த உறுதியை அவர்கள் திருவாரூரில் முத்துசாமி தீட்சிதர் வீட்டில் குருகுலம் இருக்கிறபோதே ஏற்றுக்



கொண்டு விட்டவர்கள். ஆனால் அவர்களது நல்வினைப் பயன், இதுவரை அவர்களை யாரும் இகழ்ந்து பார்க்கவில்லை. இதுவே விதிக்கு ஏற்பட்ட வேதனையோ?

இரண்டாம் நாள்...

இரவிப்பிரகாசன் புனிதாய் உதயம் கண்டு, நனிதாய் உச்சியடைந்து, இனிதாய் இரவு அத்தியாயம் எழுதிவிட்டு விடைபெற்றான்.

மேலே தொங்கும் கண்ணாடிப் பேழை விளக்குகளில் மெழுகுவத்திகள், தியாக (உருகி) ராகம் பாடி ஒளி நர்த்தனமிடுகின்றன.

மாளிகையின் கீழ் அறையில் உண்டு முடித்த விருபாட்சக் கவிராயர், தமக்கே பிடித்த கம்பராமாயணத்தில் மூழ்கி இருந்தார். கம்பராமாயணம் என்பது கற்கண்டு மலைக் காப்பியமாயிற்றே!

மேன் மாடத்துச் சயன அறையில் ஞானசுந்தரமும், குறிஞ்சியும் மன்மதாயணத்து முதற்காண்டத்து முதற் படலத்தைப் படிக்க முயன்று கொண்டிருந்தனர். அந்தச் சுந்தரமான ஒப்பந்தத்தில் குறிஞ்சி மலர்ந்தே ஆக வேண்டும் என்பதுபோல ஞானம் துடித்துக் கொண்டிருந்தான்.

எந்தப் பசியையும் அடக்கலாம்; இளமைப் பசி என்பது அடங்கா அகோரப் பசியாயிற்றே! அந்தக் காம விருந்தினை இவர்களல்லவோ காலத்தை எதிர்பார்த்துப் புறக்கணித்து வருகிறார்கள்! 'அநியாயமாகப் போடும் பட்டினி இது' என முடிவு செய்துவிட்டான் ஞானசுந்தரம். இந்த இறுக்கமான புழுக்கத்தை எத்தனை நாட்களுக்குத்தான் கட்டுப்படுத்துவது? இது என்ன விரதமா?

குறிஞ்சியின் இதயத்தில் மட்டும் இந்தத் துடிப்பு இல்லையா என்ன? துடிப்பில் என்ன ஏற்றத்தாழ்வு...

கீழே விருபாட்சக் கவிராயருடன் கம்பன் பேசிக் கொண்டிருந்தாலும், அவனது ஆணவத் தமிழ்க்குரல் மேலே ஒலிக்கச் செய்தது.

பொற்பில் நின்றது பொலிவு...

பொய்யிலா நிற்பில் நிற்கிறது நீதி...

ஓ... மாதுவே அற்பில் நிற்கலாமோ அறங்கள்? கற்பில் நிற்க வேண்டியதல்லவா?

காலமறிந்து பெய்ய வேண்டிய மழையைப் போன்ற தல்லவா கற்பு?

"வேண்டாம் சுந்தரம்? இந்த மழை, காலத்தோடு பெய்யட்டுமே!"

வாதாடுகிறாள் குறிஞ்சி.

"இனியும் நான் காலத்தை நம்பி எதிர்பார்த்தால் வரப் போவது காலமல்ல; காலன்!"

"ஞானி!"

அதிர்ந்து போனாள் அமுதத் தமிழழகி குறிஞ்சியெனும் கோதை நல்லாள்.

முந்திய குறிஞ்சி வேறு; இப்போதைய குறிஞ்சி சற்று மேலே...

எனினும் ஞானசுந்தரத்தின் பாதம் நாம் என்பதை என்றுமே அவள் மறந்தாளில்லை.

அபிராமிபட்டர்...

தியாகய்யர்...

கோபாலகிருஷ்ண பாரதி...

ஆனையா...

பல்லவி கோபாலய்யா...

இவர்கள் உதிர்த்த சொல் மலர்கள்...

எல்லாவற்றையும் எரிப்பன போல குறிஞ்சி சொன்ன சொற்கள்...

"இதோ நான் சம்பூரணமாக நிற்கிறேன் ஞானீ! இப்போது சொன்ன சொல்லை இனியொருமுறை சொல்ல



வேண்டாம்! உங்களிஷ்டம் போல என்னை ஆராதிக்க லாம்; ஆலாபிக்கலாம்; சுருதி பேதம் செய்யலாம்! நாமிரு வரும் பிறந்த மேனியர்களாகப் படுத்துத் தூங்க வேண்டும் என்று ஆசைப்பட்டீர்கள். ஏன், மறுத்தேன்? நிச்சயமாக அப்படியே பொழுது விடிந்து விடாது. நீங்களும் விடிய வைக்க மாட்டீர்கள். நானும் விடிகிற வரை காத்திருக்க முடியாது! இதோ நானே முன் வருகிறேன்!"

இட்டடி நோக, எடுத்தடி கொப்புளிக்க, கட்டில் மருங் கசைய அவன்முன்போய் நின்றாள்; அவன் நினைத்தது போல் அணைத்தாள்; மார்போடு மார்பொன்றி மகிழ்ந் தாள்; மகிழ்ச்சியைத் தந்து கொண்டிருந்தாள்.

குறிஞ்சிக் கண்களும் ஞானக் கண்களும் கூர்ந்து கவனிக்கின்றன; கூரிய மூக்குகள் ஒன்றோடு ஒன்றாய் உரசுகின்றன. அடுத்து...

நான்கு அதரங்கள் ஓரதரமாகிறது.

எவ்வாயோ செவ்வாய் என்று இனம் காண முடிய வில்லை...

முத்த மழையில் காமவர்த்தினி ராகத்தின் ஐம்பத் தோராவது மேளம் அதிகார இடி முழக்கம் செய்தாலும், அதனையே திருப்பிப் போட்டால், பதினைந்தாவது மேள கர்த்தாவான மாயாமாளவ கௌளை ராகத்து மின்னல் தெறிக்கிறது.

இசைப் பயிற்சியின் ஆரம்ப ராகமல்லவா மாயாமாளவ கௌளை? வாழ்க்கைப் பயிற்சியும் அதில் ஆரம்பமா கட்டுமே என்று மின்னுகிறதோ?

அவன் அவளது மேலாடையைத் தொடுமுன், கௌளை ராகத்துக் கௌரவம் போல அது தானாகச் சரிந்துவிட்டது.

இப்போது அங்கே தலையை நன்றாகவே நிமிர்த்தியது சல்லாப ராகம்! அது அவர்களுடைய தேகங்களைச் சல்லடையாகத் துளைக்கவும் செய்தது; சலிக்கவும் செய்தது.

மேலே தொங்கும் கண்ணாடிப் பேழை விளக்கில் இரட்டை மெழுகுவத்திகள். ஏனோ அவர்கள் அறையில்

மட்டும் இரட்டை மெழுகுவத்திகள். அப்படி ஒரு மனநிலையில் ஆரம்பித்திலிருந்தே கடைபிடித்தார்கள். இரண்டும் ஒன்றாக உருகி ஒளி தருவன போல! இருவருமே ஒன்றாக உருகி இசை தர இந்த ஏற்பாடோ?

மெழுகுவத்திகள் இரண்டும் அலைமோதுகின்றன; உருகி ஒளி தருகின்றன.

தைப்பாவையாம் தமிழ்ப்பாவைத் திங்களை எதிர் பார்த்த மெய்ப்பாவைகள், இன்று... அதோ... ஒலித்துக் கொண்டிருக்கும் சல்லாப ராக மகிமையால் காமப் பொய்ப் பாவையாகி விடுவார்களோ என மெழுகுவத்திகள் அலை மோதி உருகுகின்றனவோ? ஒளி தருகின்றனவோ?

அவன் அவளையுமாக, அவள் அவனையுமாக...

தேகம் செய்கிற தவறுகளுக்கு ஆன்மா காரணமாகாது என்று பகவான் கீதையில் சொன்னது போல... இந்தத் தேகமே ஓர் ஆடை என்று சொன்னது போல...

ஆடைகள் ஒவ்வொன்றாக நழுவித் தரையில் தவழத் தொடங்குகின்றன...

மெழுகுவத்திகள் முடிவு செய்துவிட்டன.

ஆண் மெழுகுவத்தி என்று நிச்சயித்தது சல்லாப ராகத்து ஆரோகணத்தைச் சொல்கிறது.

சகமதநிச்...

பெண் மெழுகுவத்தி அவரோகணம் சொல்கிறது...

ச்நிதமகச...

மெழுகுவத்திகள் சொன்னதால் அங்கே கமகங்களில்லை. பாட வேண்டியவர்கள் இன்னமும் முத்த மழையில் மௌனமாக நனைந்து கொண்டிருக்கிறார்கள்...

சல்லாப ராகத்தை ஈன்ற தாய் ராகமான வகுளாபரணம் உத்தரவு தரவில்லையோ? வகுளாபரணம் என்றாலே மகிழம்பூ மாலை. அது மன்மதன் மார்பை அலங்கரிக்க வேண்டியதுதானே?



மகிழ்ச்சியைத் தூண்டவல்ல அந்த மாலை, இப்போது தான் காதலர்கள் இருவர் கழுத்துக்களையும் அலங்கரிக்கத் தொடங்குகிறது... பிறகு...

நிசி இரவு, ருசி பார்க்கும் பசி இரவாகிறது...

சல்லாப ராகத்து மூர்ச்சனை கேட்கிறது.

இந்தோளம், சாதாரண காந்தாரத்தால் இனிமை பயந்து பெண்ணைப் போல் இனிப்பது. அதுவே அந்தர காந்தாரமானால் சல்லாபம்! ஆண்மையின் கம்பீரமல்லவா அந்தர காந்தாரம்?

இந்தோளமாக இருந்த குறிஞ்சி, அந்தர காந்தாரத்துக்கு அடிமையாகி சல்லாப ராகத்துடன் சங்கமமாகிவிட மஞ்சத்தை நெருங்கி அழைத்துச் செல்கிறான்.

"குறிஞ்சி!"

"ம்ம்!"

"என் குறிஞ்சி!"

"ம்ம்!"

மஞ்சம் அவர்களை மகிழம்பூ மணத்துடன் வரவேற்ற போது...

"குறிஞ்சி! குறிஞ்சி!" என்று பயங்கரக் குரல் கீழிருந்து ஒலிக்கிறது.

அப்பாவின் குரல். ஏன் இப்படி அலறி அழைக்கிறார்? என்ன நடந்து விட்டது?

ஓ... சல்லாப ராகத்து அந்தரகாந்தாரம் சுந்தரமாக ஒலித்துச் சொர்க்கத்தைக் காட்ட முனைந்த இந்த நேரத்தில் அப்பாவின் அலறல்...

மீண்டும் விருபாட்சக் கவிராயரின் அலறல் சத்தம்.

சுருதி கலைந்து விட்டது.

அவசர அவசரமாக இருவரும் ஆடைகளையணிந்து கொண்டு படியிறங்கி ஓடி வருகிறார்கள்.

அறையினுள் இடது மார்பில் கையை வைத்துக் கொண்டு சுவரில் சாய்ந்து காணப்பட்டார் விருபாட்சக் கவிராயர். வலது கரத்தில் கம்பராமாயண ஓலைச் சுவடிகள்...

"என்னப்பா?... என்ன?"

"நெஞ்சு அடைக்குது. மூச்சுவிட முடியவில்லை. போய் வைத்தியரைக் கூப்பிட்டு வர ஏற்பாடு செய்!"

ஞானசுந்தரம் அக்கணமே பறந்தான். சல்லாப ராகம் அவர்களைப் பொறுத்தமட்டில் பொல்லாத ராகமோ? நிலைத்து, நில்லாத ராகமோ?

சற்றைக்கெல்லாம் வைத்தியர் வந்தார்; நெஞ்சடைப்பு; மருத்துவம் பார்க்கத் தொடங்கினார்.

கீழே பிரிந்து கிடந்த கம்பராமாயண ஓலையில் வாலி வதைபடலம் விமர்சகர்களை வம்புக்கு இழுத்துக் கொண்டிருந்தது.

**பொ**ல்லென்று விடிந்தது பொழுது.

கொல்லென்று சிரித்தன பறவைகள்.

சில்லென்று வீசியது இளங்காலைக் காற்று.

காளையார் கோயிலுக்குப் புறப்பட்டாக வேண்டுமே! அருமை நண்பர் கச்சேரிக்காக அற்புதமாக ஏற்பாடு செய்து வைத்திருப்பாரே! இந்த நிலையில் காளையார் கோயிலாவது? கானப்பேரெயிலாவது?

"அப்பா! கச்சேரியை ரத்து செய்ய ஆளையனுப்பி விடுகிறேன்!" என்றாள் குறிஞ்சி.

விருபாட்சக் கவிராயர் உடலில் இன்னமும் முன்னேற்றம் தெரியவில்லை. எப்படி விட்டுச் செல்வது?

"வேண்டாம்; போய் கச்சேரி முடித்துத் திரும்புங்கள்" என்றார் கவிராயர்.

"உங்களை இந்த நிலையில் விட்டு விட்டு என்னால் சத்தியமாகப் போக முடியாது."



சத்தியமாக...

"ஒரு காரியம் செய் குறிஞ்சி! ஞானசுந்தரம் இங்கிருந்து என்னைக் கவனித்துக் கொள்வான். நீ போய் பாடி விட்டுத் திரும்பு!"

"என்னால்தான் போக முடியாது என்று சொல்லுகிறேன்!"

"அப்படியென்றால் ஞானசுந்தரம் போய் பாடிவிட்டுத் திரும்பட்டும்."

இப்போது ஞானசுந்தரம் குறுக்கிட்டான்: "குறிஞ்சி தனியாகச் சென்றாலாவது ஜனங்கள் ஏற்பார்கள். நான் சென்றால் ஏற்பார்களா?"

"ஏற்றால் பாடி விட்டு வா! மறுத்தால் நிலைமையைச் சொல்லி, பிரிதொரு சமயம் ஏற்பாடு செய்து கொள்ளச் சொல்!" என்றார் விருபாட்சக் கவிராயர்.

ஞானசுந்தரமும் இந்தக் கட்டளை மனத்திற்கு உகந்ததென ஏற்று, அன்றே புறப்பாட்டுக்கான ஆயத்தங்களைக் கவனித்தான்.

இதுவரை இப்படித் தனியாகச் செல்கிற வேதனைக்குரிய அனுபவத்தைக் காணாத குறிஞ்சி, கண்கலங்கிப் போனாள். வேறு எந்தக் கச்சேரியாக இருந்தாலும் அலட்சியமாக உதறியிருப்பாள். தன்னை வளர்த்து ஆளாக்கிய பெரியப்பாவின் வறுமைக் காலங்களில் உதவியவர் ஏற்பாடாமே! கம்பன் கண்ட சடையப்ப வள்ளல் மாதிரியாமே! அப்பேர்பட்டவர் மனம் நோகக்கூடாது என்கிறாரே!...

பொதுவில் குறிஞ்சி இல்லாத கச்சேரியை மக்கள் ஏற்பரா? ரசிப்பரா?

முத்துச் சிப்பி போன்ற குறிஞ்சியின் மூடாத விழிகளில் முத்து முத்தாய் நீர்த்துளிகள் உதிர்ந்தாலும், சில முத்துக்கள் சில யோசனைகளை முன்மொழிந்து பார்த்தன.

என்னதான் ஞானசுந்தரமும் குறிஞ்சியும் காதலர்களாக இருந்தாலும், இசை பற்றியதில் ஞானசுந்தரமில்லையேல்

குறிஞ்சி இல்லை. இது குறிஞ்சியே அறிந்த குறிஞ்சிப்பூ உண்மை! ஞானசுந்தரமும் குறிஞ்சியை மீறிய ஞானம் படைத்தவன்; குரலினிமையில் ஆணுக்கே உரிய தோகை மயில் ரசனையுண்டு; சிங்கப் பிடரியின் சிலிர்ப்புண்டு. கிளை கிளையாய் கொம்புகளையுடைய கலைமானின் அழகு உண்டு! இப்படியான ஆண் சிருஷ்டியின் பேரழகு அவனது குரலில் மட்டுமல்லாது உருவத்திலும் இருந்தது; ஞானத்திலும் இருந்தது; அவன் பெயருக்கு ஏற்ப ஞான சுந்தரம்தான்!

அப்பேர்பட்டவன் இதயத்தே சிறு பொறாமை உண்டு; சிறு... மிகச் சிறு பொறாமை! 'குறிஞ்சிக்குக் கிடைக்கிற கௌரவம் தனக்கு மட்டும் ஏன் அந்த அளவுக்குக் கிடைக்கவில்லை?'

நியாயமான பொறாமைதான்; இதனைக் குறிஞ்சியும் அறிவாள். ஆனால் எக்காலத்திலும் எச்சந்தர்ப்பத்திலும் இதனைக் கண்டு கொண்டாளில்லை. அவளுக்கே அது நியாயமாகப்பட்டது போலும்!

'சென்றுதான் பார்க்கட்டும்; நேரில் அறிந்து கொள்ளட்டுமே!' என்பதுதான், முத்துத் துளிகள் முன் மொழிந்த யோசனை.

அவள் கண்ணீருடன் விடை தருகிறாள்...

அவனும் கண்ணீருடன் புறப்படுகிறான்.

ஆனால் விதி?

'பன்னீரில் குளித்து மகிழ்ந்து வாழ்க்கை நடத்த வேண்டிய குறிஞ்சி, இப்படிக் கண்ணீர்க் காப்பியம் போலக் காணப்படுகிறாளே' என்று கருணைகூராமல் 'முன்னம் பழை வினையால் மூண்டது இத் தீ' என்ற பல்லவியை முகாரியிலா பாடும்?

# இராகம் – 25



# போகவதி

குறிஞ்சியின் இசையரங்கம் என்றால் கூட்டம் தேனீக்களைப் போல எந்தத் திசையிலிருந்து எப்படி வருகிறது என்பதனை யாராலும் சொல்ல முடியாது. அப்படி ஒரு ரசனைத் தீ தமிழகத்தில் மட்டுமல்லாது ஆந்திராவைப் பிரித்துப் பிரித்து ஆண்டு கொண்டிருந்த ரெட்டிராஜாக்களிடமிருந்தது; மைசூர் அரசர் கிருஷ்ணராஜ உடையாரிடமிருந்தது; கேரளாவின் இளையராஜாவான சுவாதித் திருநாளிடமும் இருந்தது. இவர்கள் அனைவருமே குறிஞ்சியின் இசைப்பந்தலில் களைப்பாற தூது அனுப்பவே நாள்களை எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர்.

இதில் கேரளவர்மனான சுவாதித்திருநாள் *கருவில் திருவுடையான் என்பார்களே, அவ்விதம் இளம் வயதில் சங்கீதத்தில் அபார ஞானம் பெற்றுக்கொண்டு வந்தவன். தஞ்சை சகோதரர்களில் ஒருவரான வடிவேலுவிடம் மட்டுமல்லாது கோவிந்தமாரார் போன்ற மாமேதைகளிடம் இசை பயின்றவன்.

இந்தப் பிள்ளைக்கும் குறிஞ்சியின் மீது காதலா?

* இன்றைய புகழ் பெற்ற சுவாதித் திருநாள் கீர்த்தனைகளுக்குச் சொந்தக்காரர்.

பார்த்ததில்லை; பாட்டைக் கேட்டதில்லை. குறிஞ்சிப் பூவின் புகழ் மணம் அவனது மூக்கு வழியே காதலைச் சுவாசிக்கச் செய்துவிட்டது

"சுவாதி மகாராஜா! குறிஞ்சி உங்களைவிட இரண்டு மூன்று வயது கூடியவள்?" என்று வடிவேலு பிள்ளை எடுத்துரைத்த போது, "அதனால் என்ன? கலைஞர்கள் வயதைப் பார்த்துக் காதலிப்பதில்லை" என்று போட்ட போடு...

இலக்கிய மேதையல்லவா சுவாதித் திருநாள்? அந்த வடிவேலு பிள்ளையையே தூது அனுப்ப நாள் பார்த்துக் கொண்டிருந்தான் இளவரசன் சுவாதித் திருநாள்.

ஒரு பக்கம் தஞ்சையரண்மனையில் இளவரசன் சிவாஜி சித்தப்பிரமையே கண்டு எந்நேரமும், "குறிஞ்சி! குறிஞ்சி" என்று முனகிக் கொண்டிருக்கிறான்.

இங்கேயோ சிவகங்கை இளவரசன் சிலந்திவலை பின்னிக் கொண்டிருக்கிறான்.

குறிஞ்சியின் புகழ் கொடிகட்டிப் பறக்கிறது என்பதைக் கட்டுச்சோறு கட்டிக்கொண்டு வந்து காத்திருந்த கூட்டம் மெய்ப்பித்ததைக் கண்டு மருண்டு போகாதார் யார்?

சொல்லப் போனால் இந்தக் கச்சேரியே, காளையார் கோயில் பண்ணையார் துரைவேலு முதலியார் ஏற்பாடு செய்திருந்தாலும், பின்புறமாக நின்றவன் திவான் தீர்த்தகிரி.

சிவகங்கை அழைக்கிறது என்றால் குறிஞ்சி வருவாளா?

விருபாட்சக் கவிராயர் நிரம்பவும் துரைவேலு முதலியார்க்குக் கடமைபட்டவர் என்பதை எப்படியோ மோப்பம் பிடித்துச் செய்த ஏற்பாடல்லவா? பாவம் முதலியார்? அவர் விதியைக் கண்டாரா? சதியைக் கண்டாரா? ஈசனின் துதியைக் கண்டு ஏற்பாடு செய் திருந்தார்.

இந்த நிலையில்தான் குறிஞ்சி வரவில்லை; முதலியாரின் மானம் மரியாதையைக் காக்க ஞானசுந்தரத்தை மட்டுமே



கவிராயர் அனுப்பி இருக்கிறார் என்கிற செய்தி கேட்டுக் காளையார் கோயிலே கலகலத்துப்போனது.

இளைய ஜமீன் இளைய வல்லபத் தேவ உடையான் இடிவிழுந்து போனான்.

பண்ணையாரான துரைவேலு முதலியார் இச்செய்தியைக் கூறிப் பதிலை எதிர்பார்த்து நிற்கிறார்.

இளைய ஜமீன், திவான் தீர்த்தகிரியை நோக்குகிறான்.

பக்கத்திலிருந்த ஆர்க்காட்டு நாவப் ஆஜம்ஜா குறுந் தாடியை உருவிக் கொள்கிறான்.

இவர்களது திட்டமே குறிஞ்சியை இரவோடு இரவாக ஆர்க்காட்டுக்குக் கடத்திச் சென்றுவிட்டால் யாருக்குத் தெரியப்போகிறது? எவர்மீது பழி விழப்போகிறது என்பது.

தீர்த்தகிரி ஒரு குட்டி சாணக்கியன்.

அதற்குள் ஏதோ மூளையைப் போட்டுக் குடைந்து ஒரு முடிவுக்கு வந்து சொன்னான்:

"அதனாலென்ன, முதலியார்! கச்சேரியை நிறுத்தி விட முடியுமா என்ன? சேர்ந்திருக்கும் கூட்டம் கல்லால் அடிக்கும்!" என்று கூறியவன், சற்றே மீண்டும் தான் யோசித்ததை மறுபரிசீலனை செய்து கொண்டு திட்டத்தை விளக்கினான்.

ஒரு நல்ல திட்டமாகவும், மக்களைக் கவரக்கூடிய திட்டமாகவும் இருக்கக் கண்டு முகமலர்ந்து கேட்டார் முதலியார்: "போகவதி ஒப்புக்கொள்ள வேண்டுமே!"

"நிச்சயம் ஒப்புக்கொள்வாள்! அவள் ஒரு குறிஞ்சி விசுவாசி! வந்தவர்களை அதே அரண்மனை விருந்தினர் மாளிகையிலேயே தங்கவையுங்கள். எல்லா ஏற்பாட்டையும் முடித்துக்கொண்டு வாருங்கள். போகவதியை எப்படி ஒப்புக் கொள்ளச் செய்வது என்பது குறித்து விளக்குகிறேன்."

பண்ணை முதலியார் பதவிசாக விடைபெற்றதும், திவான் தீர்த்தகிரி தனது தீர்க்கமான ஆலோசனையை

இளையஜமீனிடம் திராட்சைப் பழத்தைப் பிட்டு வைப்பது போலப் பிட்டு வைக்க, வியந்து போனான் இளைய உடையத்தேவன்.

இவ்வளவும் சிவகங்கை பெரிய ஜமீந்தாரான பெரிய வல்லபத் தேவ உடையாருக்குத் தெரியாது. ஏதோ மகன் கலைப் பித்து கொண்டு இப்படி ஒரு சங்கீத ராஜ்யம் காண்கிறான் என்றே கவனியாமல் விட்டுவிட்டார்.

போகவதி ஒப்புக்கொண்டாள் என்கிற செய்தி இரட்டிப்பு மகிழ்ச்சியாக இருந்தது. ஆனால் ஞானசுந்தரம் ஒப்புக்கொள்ள வேண்டுமே!

அரண்மனை மாளிகையில் ஞானசுந்தரமும், அவனது குழுவினரும் ஓய்வு கொண்டிருந்தனர். ஒரு காலத்தில் மருதுபாண்டியன் கட்டிய அரண்மனை அது.

எதிரொலி விஞ்ஞானி ஜான்தான் அந்தத் தனியறையுள் நுழைந்தான்.

"மிஸ்டர் ஞானசுந்தரம்! தமிழகத்தில் புகழ்பெற்ற நாட்டியக்காரி போகவதியும், கச்சேரி ஏற்பாடு செய்த முதலியாரும் வந்திருக்கிறார்கள். உங்களைப் பார்க்க வேண்டுமாம்!"

என்னது? போகவதியா? அவள் ஏன் என்னைப் பார்க்க வரவேண்டும்? ஓ!... அவளது ஊர் காளையார் கோயிலல்லவா? காளையார் கோயில் தாசி என்றும் சொல்வார்களே!...

நினைவுக்கு வரவே, அனுமதிக்கும்படி உத்தரவிட்டான் ஞானசுந்தரம்.

முதன்முதலாகத் தனியாகப் பாடப்போகிறோம்... மக்களின் எதிர்பார்ப்பு எப்படி இருக்குமோ? என்னென்ன பாடுவது என்கிற யோசனையில்தான் அதுவரையிலும் மூழ்கி இருந்தான். அதற்கு ஒரு தடங்கலே போல போகவதி வருவாள் என்பது அவன் எதிர்பாராதது.

விதி பின்னும் சிலந்திவலைக்குள் எதிர்பார்ப்பு என்பது புதிர்போடும் புள்ளிக்கோலங்களல்லவா? புள்ளி மாறினால் கோலம் கோணல்!



**அ**ந்நாளைய புகழ்பெற்ற நாட்டிய மகளிருள் நாயகியாக விளங்கியவள் போகவதி.

சரபோஜி மன்னர் அரண்மனையிலிருக்கும் சுந்தரி, போகவதியின் சலங்கையின் முன் சூன்யம். ராஜா சரபோஜி மாதம் நூறு சக்கரம் சம்பளம் தருவதாகச் கூறியும், அலட்சியத்தை அம்பாரியில் ஏற்றி அனுப்பிய வளாயிற்றே!

அவளது பெயரை, பெற்றவர்கள் தெரிந்துதான் வைத்தார்களோ, தெரியாமல் வைத்தார்களோ?

தமிழகத்துப் பல செல்வந்தர்களும் ஜமீந்தார்களும், 'போகம்' என்ற சொல்லின் புண்ணியமும் பூலோக மோட்சமும் இவளிடமே புதைந்து கிடப்பனவாக எண்ணி ஏங்கினர்.

தேவதாசிதான்; ஆனால் தாசியில் அவள் தேவதை. ஆயிரம் சக்கரம் கொட்டிக் கொடுத்தாலும் அவள் சம்மதியாமல் எவரையும் அனுமதித்ததில்லை. அவளது விருப்பம்தான் பிரதான நிபந்தனை.

ராஜா சரபோஜி, சரணடைந்தபோதும் இடது காலைத் தரையில் உதைத்துச் சலங்கையொலிக் குரலில் விரட்டியவள்.

காளையார்கோயில் என்பது சிவகங்கையின் கோநகரம். அந்த நகரில் வாழ்ந்து கொண்டே தன்னிடம் ஓரிரவு போகவதி ராகம் பாடப் புறக்கணித்தவளல்லவா?

"நான் ஜமீன்!" என்று செருக்காகக் கூறிய இளைய உடையத்தேவனை நோக்கி முறுக்காகப் பதில் சொன்னாள் போகவதி: "அதனால்? வீட்டுக்கு வீடு இருக்கிற இளம் பெண்களை இரவுக்கு இரவு அனுப்பவேண்டும் என்று கட்டளைபோட முடியுமா என்ன?"

"நீ போகவதிகள் குலத்தில் பிறந்த போகவதி! ஓராயிரம் என்ன? ஈராயிரம் சக்கரம் தருகிறேன்!"

போகவதி, வேகவதியாய்ச் சீறிச் சினந்து சொன்னாள்: "நான் போகவதிதான்! மறுக்கவில்லை. ஆனால் கூப்பிடு

கிறவன் பின்னால் போகிறவதியல்ல! நான் போகவதி என்பது கால் சதவிகிதம்! ஏனைய சதவிகிதங்கள் எனது கால் சதவிகிதங்கள்! புரியவில்லையா ஜமீன்? கால் சதம் போகவதி; முக்கால் சதம் கலாவதி! என் கலைக்கு ஊதியம் கொடுத்தால் மறுக்க மாட்டேன். என் நிலைக்கு ஊதியம் நான் விரும்பினால்! அது இலவசமாகவும் இருக் கலாம்!"

"பொட்டுக் கட்டியவள் பேசுகிற பேச்சா இது?"

"ஆனால் தட்டுக் கெட்டவளல்ல; நீங்களும் தட்டுக் கெட்டுத் தடுமாறிப் பேசுவதை நான் விரும்பவில்லை. போகலாம்!"

இந்த நிகழ்ச்சி சென்ற ஆண்டு நிகழ்ந்தது.

இப்போது, குறிஞ்சியை வலையில் வீழ்த்த, இந்தக் குமரிக்கு அம்பு தொடுத்திருந்தான் திவான் தீர்த்தகிரி. ஆனால் அவன் எதிர்பார்ப்பது போல நடக்க வேண்டும். அங்கேதான் ஊழ் சிரித்தது. இல்லையென்றால் முதல் கட்டமாக போகவதி இரவு நாட்டியமாட ஒப்புக் கொண் டிருப்பாளா?

ஓ... இந்த ஊழ்வினை எப்படியெல்லாம் மனிதர்களைக் கூழ் காய்ச்சிக் கும்பம் போட்டு விடுகிறது?...

**போ**கவதியும் முதலியாரும் அறையினுள் நுழை கிறார்கள்.

"வணக்கம்! வாருங்கள்! உங்களைப் பற்றி நிறைய கேள்விப்பட்டிருக்கிறேன்!"

ஞானசுந்தரம் மிக்கவும் பண்புடன் வரவேற்று அமரச் செய்தான். முதன்முறையாக போகவதியை அவன் காண் கிறான்.

விலைமகளிருள் இவள் ஒரு விசித்திரப் பூக்கோள மல்லவா? குறிஞ்சியெனும் தேவகாப்பிய அளவுக்குப் புகழுக்குரியவளில்லையானாலும், முல்லைப்பூவுக்குரிய மானுடக் காப்பியப் புகழ் போகவதிக்குமிருந்தது.



"கவனிப்பில் எந்தக் குறையும் இல்லையே?" என்றார் முதலியார்.

"ராஜோபசாரம்!"

"ராத்திரி கச்சேரியில் ஒரு சின்ன மாற்றம்."

"என்ன?"

"இங்கே ஜனங்களெல்லாம் குறிஞ்சியைக் காணத்தான் கட்டுச் சோறு மூட்டையுடன் குவிந்து இருக்கிறார்கள். குறிஞ்சி வரவில்லை என்றதும் அடிக்க வரவில்லை; அவ்வளவுதான். ஒருவன் பந்தலையே கொளுத்தப் போய் விட்டான்!"

முகம் சுருங்கிப் போனான் ஞானசுந்தரம். குறிஞ்சிக் குள்ள சிறப்பை அவனால் அப்போதுதான் பூரணமாக உணர முடிந்தது.

இப்போது போகவதி குறுக்கிட்டாள்: "முதலியார்! நீங்கள் போங்கள். நான் பேசிக்கொள்கிறேன்."

முதலியாரும், இரவு நல்லபடியாக நடக்க வேண்டுமே என்று காளையார் கோயில் ஈசனைப் பிரார்த்தனை செய்தவாறு புறப்பட்டார்.

"ஞானசுந்தரம்! நான் ஒரு குறிஞ்சி ரசிகை!"

"மகிழ்ச்சி!"

"இரவு கச்சேரி தடைபடுகிறது என்று முதலியார் என்னிடம் அழுதார். அவரென்ன அழுவது? நானே அழுதேன்! அந்தச் சகோதரியின் பாட்டைக் கேட்கவே இன்று எட்டயாபுரத்து நிகழ்ச்சியை ஒத்தி வைத்து விட்டேன் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்."

"இந்த நிகழ்ச்சியையும் ஒத்தி வைக்கலாமே!"

"அது எப்படி முடியும்? நான் ஒரு வாரத்துக்கு முன்பே ஒத்தி வைத்து விட்டேன். நீங்கள் ஒருநாள் அவகாசம் கூடத் தராமல் வந்தும் விட்டீர்களே! தயவு செய்து நான் சொல்வதைக் கேளுங்கள். வந்தது வந்தாய் விட்டது. குறிஞ்சி பாடவில்லையென்றால் மக்களிடம் குமுறலைத் தான் எதிர் பார்க்க முடியும். பிறகு குறிஞ்சி கச்சேரி, வேறு எங்கு நடந்தாலும் 'இவள் ஒப்புக் கொள்வாள்; ஆனால் ஏமாற்றி விடுவாள்' என்கிற கெட்டப் பெயர்

பரவும். நான் குறிஞ்சியின் புகழைக் காக்கவே இந்தத் திட்டத்தையே ஏற்றேன்!"

"என்ன திட்டம்?"

"குறிஞ்சிக்குத் திடீரென்று உடல்நிலை சரியில்லை என்றும், அதனால் ஞானசுந்தரம் மட்டும் பாட வந்திருப்பதாகவும், அந்தக் குறிஞ்சி ரசனையை ஈடுகட்ட, போகவதி ஆடப் போகிறாள் என்றும் மக்களுக்கு அறிவிக்கவே அமைதி கண்டு மகிழ்ச்சியோடு அமர்ந்திருக்கிறார்கள். நீங்கள் மறுத்தால் குறிஞ்சியின் புகழ் குன்றும்படியான குமுறல்கள் கிளம்பி நாடு முழுவதும் பரவும்! ஒரு தேவதா சங்கீதத்தைக் களங்கப்படுத்த வேண்டுமா?"

வாதம் ஏற்புடைத்தாயிருக்கவே ஞானசுந்தரம் வாய் மூடிப் போனான்.

"ஞானசுந்தரமாகிய அழகிய தேவ கந்தருவன் பாடி நானும் ஆடியிருக்கிறேன் என்கிற பெருமை எனக்கும் இருக்கட்டுமே!"

அது என்ன அழகிய தேவ கந்தருவன்?

மருட்சியுடன் நோக்குகிறான் மன்மதனின் தம்பி என்று சொல்லத்தக்க ஞானசுந்தரம்.

"நான் உண்மையைச் சொன்னேன்; மருள இதில் என்ன இருக்கிறது?"

"போகவதி ராகம் இருக்கிறது!"

"அப்படி ஒரு ராகம் இருக்கிறதா? நான் கேள்விப்பட்டதில்லையே! இரவு நீங்கள் அதையே பாடுங்கள். நான் ஆடுகிறேன்!"

"உங்களால் ஆட முடியாது. நான் பாடும் விதத்தில் அதைப் பாடினால், நீங்கள் பலர் முன்னிலையில் ஆடுவதை மறந்து என்னை அணைக்கத் தொடங்கி விடுவீர்கள்!"

இப்போதும் அதுதானே தோன்றுகிறது... என்று எண்ணிக் கொள்கிறாள் போகவதி.



"என்ன அப்படிப் பார்க்கிறீர்கள் போகவதி?"

"போகவதியின் ராகத்தின் தாய்?"

"கரகரப்பிரியா!"

"எனக்குப் பிடித்த மேளகர்த்தா! போகவதியின் ஆரோகணம் அவரோகணம்?"

"சரிகமநிச; ச்நிமகரிச!"

"இதற்கு வேறொரு தாயும் சொல்லலாமே!"

"சில குழந்தைகளுக்குத் தாய் தகப்பன் பெயரே சரியாகத் தெரிவதில்லை."

"அதாவது என்னைப் போல!"

ஞானசுந்தரம்கூட அந்த வேதனையில் இந்த நகைச் சுவை கேட்டுச் சிரித்து விட்டான்.

ஆனால் போகவதி?

ஆரோகணம் அவரோகணத்தை அசைக்கிறாள்.

"ஐயய்யோ! உங்கள் பெயர் கொண்ட ராகத்தை நீங்கள் பாடுவதாவது?"

"நீங்கள் என்னை அணைக்க மாட்டீர்களா என்றுதான்!" என்று கூறிய போகவதி வேகமாக எழுந்து கொண்டாள்.

"தயவு செய்து இரவு இந்த ராகம் பாடிவிட வேண்டாம். கொள்ளைக்காரனையே மயக்கியவர்கள் நீங்கள்! நான் வருகிறேன்!"

எந்தப் பதிலையும் எதிர்பாராமல் போகவதி போகும் திசை நோக்கித் திகைத்துக் கவனித்தான் ஞானசுந்தரம்.

# இராகம் – 26



# தாண்டவம்

அரங்கத்தைச் சற்று அகலமாகவே அதற்குள் அமைத்து அழகுபடுத்தி இருந்தனர்.

வந்த கூட்டம் வெளியேறவில்லை.

குறிஞ்சியின் இசைப் புகழுக்கு இணையானது போகவதியின் நாட்டியப் புகழ். வேறுபாடு என்பதே குறிஞ்சி தெய்வீகம்! போகவதி மானுடம்!

கச்சேரி நேரம் நெருங்க நெருங்க மக்களிடையே ஒரு பரபரப்பு நிறைந்த ஆர்வம்.

அரங்கத்துள் பிரவேசிக்கிறான் அழகிய தேவ சொரூபன் போன்ற ஞானசுந்தரம். கரவொலிகள்; ஆனால் கூட்டம் அளவுக்கு அது இல்லை. ஞானசுந்தரம் கவலைப்படவும் இல்லை. வந்திருப்பது குறிஞ்சிக் கூட்டம்.

வாத்தியங்கள் சுருதி சேர்த்துக் கொண்டிருக்கின்றன.

அரங்கத்தில் வந்து நின்ற ஞானசுந்தரம் கரம் கூப்பி வணங்குகிறான். குறிஞ்சி ஏன் வரவில்லை; ஏற்பட்ட தடங்கல் என்ன என்பதை விளக்குகிறான். பின்னர், "நான் என் மன ஆறுதலுக்காகவும், குறிஞ்சியின் சிறப்புக்



காகவும் கொஞ்சநேரம் தனித்துப் பாடுகிறேன். அதன் பிறகு நாட்டிய கலாபூஷணியின் நாட்டியம் தொடங்கலாம். அந்த நாட்டியத்துக்கு திரு. முதலியார் கேட்டுக் கொண்டபடியால் ஒரே ஒரு பாடலைப் பாடி நான் முடித்துக் கொள்வேன். தொடர்ந்து நாட்டியம் அவர்களது குழுவினர் இசை முழங்க நடைபெறும். நான் விடைபெற்றுக் கொள்வேன்!"

கூட்டத்தில் எந்தவிதமான எதிருணர்வுகளும் ஏற்படவில்லை. அமைதி நிறைந்து காணப்பட்டது.

ஞானசுந்தரம் முதன் முறையாகத் தனிமையில் சுருதி சேருகிறான். ஓம்...

யாரைத் தியானிப்பான்? தனது குருவைத் தியானித்தான்; பிறகு குறிஞ்சியையே தியானித்தான். அவளைத் தியானிப்பதன் மூலம் அவளது சக்திகளைப் பெறுவதற்குச் சமமல்லவா?

திருக்குறளின் கடவுள் வாழ்த்துப் பத்துக் குறள்களையும், பத்துவிதமான ராகங்களில் பாடிய விதம், போகவதியை மயக்கியது. இது பத்துவித மலர்களைத் தொகுத்த கதம்ப மாலையா? பத்துவித பழங்களைக் கொண்ட தசாமிருதமா? இறைவனுக்கு நல்ல அபிஷேகம்; கதம்ப மாலை ஆராதனை.

ஆணழகின் கொலுமண்டபம் போல வீற்று, ஞானழகின் இசைப் பிரயோகம் மன்மத பாணங்களாய், போகவதியின் மார்பகத்துப் பூரண கும்பங்களைத் தொட்டன; சமயத்தில் துளைத்தன.

ஆ! இவனையல்லவா நாம் ஆயிரம் சக்கரம் (ரூபாய்), கொடுத்து அனுபவிக்க வேண்டும்! கொடுத்து அனுபவிக்கிற பேரழகா இது? இசையின் சீரழகா இது? படைப்பின் பேரழகல்லவா இது? விற்று அனுபவிப்பது மன்மதனை வேதனையுறச் செய்வதாயிற்றே?

கடவுள் வாழ்த்து முடித்து ரேவதி ராக ஆலாபனை.

வழக்கமாக வித்துவான்கள், ராகத்தை மாவரைத்து, பிறகு வயலினை அறுக்க விடும் மார்க்கத்தைத் தவிர்த்து,

நாகசுர ஆலாபனை போல ஆலாபிப்பதும் இடையில் தவில் குரல் கொடுக்குமே அப்படி இங்கே மிருதங்கக் குரல்; கடம் கரல்; கஞ்சிராக் குரல்! நடுவரைப் போல மயூரியும் பிடிலும்! அந்தத் தந்திவாத்தியங்களும் சொன்னதையே சொல்கிற கிளிப்பிள்ளைகள் மாதிரி அல்ல. அவற்றுக்குத் தனிச் சுதந்திரம்; மக்களைக் கவரும் மாயாஜால வித்தைகளை அவரவர் எடுத்துக் கொண்ட ராகத்தில் காண்பிக்கலாம்!

ரேவதி ராகம் பாடுவோர் பாடினால் பாறையும் உருகும் என்பர். இங்கே பார்வையாளர் உருகிக் கண்ணீர் மல்குகிறார்கள். இரும்பாகவே இருந்தவர்கள் சிவகங்கைச் சிலந்தி வலைகள்.

போகவதியின் கண்களில் நீர் வேகவதி நதியாய் வழிகிறது...

ஆலாபனை முடிந்தது. பிறகு வாத்திய வாய்ப்பு என்பது இவர்களது முறையில் தள்ளப்பட்ட ஒன்று. அவை தாம் ஆலாபிக்கிற போதே இடையே ஆனந்த கூத்தாடி விட்டனவே! இந்தப் புதிய முறைதானே குறிஞ்சியின் வெற்றிக்கே காரணம்?

மரபுவழி உடும்புகள் இதனைப் பின்பற்றத் தயங்கிய தால் சங்கீதம் நாளுக்கு நாள் மங்கிதமாய் விட்டது போலும்!

மிருதங்கம் ஆவேச முறையில் முத்தாய்ப்பை மும்முறை முழங்க, ஞானசுந்தரம் பல்லவியைத் தொடங்க, எழுந்தது கரவொலியா?

யாருக்குத் தெரியும் ரேவதியும் ரேவதி ராகமும் முத் தாய்ப்பு ஜதிகளும்? எல்லாம் ரசனை, ரசனை, ரசனை!

பாடுவோர் பாடினால், ஆண் பாடினால் என்ன? பெண் பாடினால் என்ன? ரசிகர்களை மயக்குகிறபோது புடவையும் வேட்டியும் மறைந்து சங்கீதம் பிரம்மத்தில் நின்றல்லவா பிரமிக்க செய்கிறது? தாய்மொழியல்லவா புரிய வைக்கிறது!



பாடலைப் பாடி, சுரவிந்நியாசம் நிகழ்ந்து முடிந்ததும், "போதும் பாடியது; நாட்டியம் ஆரம்பமாகலாம்!" என்று ஓர் ஆணவக் குரல் கேட்டது.

ஞானசுந்தரம் கவனிக்கிறான்.

ஓ... சிவகங்கையானா? இவனும் வந்திருக்கிறானா? இவனது கோநகரமல்லவா காளையார் கோயில்! வராம லிருப்பானா?

சிவகங்கைக் குரலைத் தொடர்ந்து ஏற்பாடு செய்திருந்த கும்பலும் குரல் கொடுத்தன. இவன் பழி வாங்குகிறான்; புரிகிறது; ஆட்டுமந்தையை அழைத்து வந்திருக்கிறான்.

ஞானசுந்தரம் ஒன்றையும் கண்டு கொள்ளவில்லை. நாட்டியம் ஆரம்பமாகலாம் என்பது போலச் சமிக்ஞை செய்தான்.

ஞானசுந்தரம் இன்னும் பாட மாட்டானா என்று எதிர்பார்த்த போகவதியைக் கோபவதியாக்குகிறது. ஆனாலும் மறுக்க முடியவில்லை. ஊர்வசியைப் போல எழுந்து வந்து நின்று வணங்குகிறாள்.

கரகோஷமா அது? பெண்ணுக்குள்ள ரகசியத்தைப் பிரகடனப்படுத்துவதுபோல இருந்தது. எங்கும் பயங்கர சீழ்க்கை ஒலிகள்...

இந்தக் கீழான சீழ்க்கையொலிகள்தாம் குறிஞ்சியையும் போகவதியையும் பிரித்துக் காட்டுவன என்பதை உணரு கிறான் ஞானசுந்தரம். குறிஞ்சி ஒரு தேவகாப்பியம்; இவள் ஒரு மானுட காப்பியம் என்று எண்ணியதற்கு எடுத்துக் காட்டு. குறிஞ்சி பிரசன்னத்தின்போது எப்போது இந்தச் சீழ்க்கையொலிகள் எழுந்திருக்கின்றன? தெய்வ சந்நிதானத்து முன் எவனாவது சீழ்க்கை அடிப்பானா?

குறிஞ்சியின் அழகும் புகழும் கையெடுத்துக் கும்பிடுவன! போகவதியின் அழகும் புகழும் கைபிடிக்கச் செய்வன!

ஞானசுந்தரத்தை நெருங்கி வந்த போகவதி "போகவதி ராகம் பாட வேண்டாம்" என்றாள். இருவருமே கலகல வென்று சிரித்துக் கொள்கிறார்கள்.

சிவகங்கையின் நெஞ்சு வெடிக்கிறது. நம்மிடம் முறுவலிக்க மறுப்பவள் இங்கே முழக்கமிட்டுச் சிரிக்கிறாளே!

"ஞானசுந்தரம்! போட்டி நிகழ்த்தலாமா? பொறுமையோடு முடிக்கலாமா?" என்றாள் போகவதி மெல்லிய குரலில்.

"நான் எதற்கும் தயார்!"

எதற்கும் தயார்...

தவறாகக் கற்பிதம் செய்து கொள்கிறாள் போகவதி.

ஓ... விதியின் கட்டம் முழுமை பெற்று விட்டது. ஞானசுந்தரம் புலமை சற்றே சிலிர்த்தது.

"போட்டி மனப்பான்மையுடனேயே நிகழ்த்தலாம். நான் பாடப் போவது ஒரே பாட்டு. பிறகு நீங்கள் எப்படி வேண்டுமானாலும் ஆடிக் கொள்ளலாம். நான் என் அறைக்குச் சென்று விடுவேன்."

"ஞானசுந்தரம்! பிறகு நான் ஆடுவதாவது? என்னை வீழ்த்துகிற அளவுக்குப் பாடுங்கள்! நீங்கள் பாடாமல் இந்தக் கச்சேரியை மேலும் நான் நீடிக்க விரும்பவில்லை. என்னை நீங்கள் வீழ்த்துவது குறிஞ்சிக்குத் தேடித் தரும் பெருமை!"

ஆ! இவள் குறிஞ்சியின்பால் என்ன அன்பு கொண்டிருக்கிறாள்...? உண்மையாகத்தான் சொல்கிறாளா?

அவர்கள் பேசியது அவர்களுக்கு மட்டுமே கேட்டது.

சிவகங்கை இளவரசனுக்கு எரிச்சலோ எரிச்சல். 'ஏ போகவதி...'

திவான் தீர்த்தகிரி அமைதிப்படுத்துகிறான். "அணையப் போகிற விளக்கின் குபீர் பிரகாசம் இது" என்றும் காதில் முணுமுணுக்கிறான்.

நாட்டியம் ஆரம்பமாகிறது.

முதல் அலங்கரிப்பு முடிகிறது.



இப்போது ஞானசுந்தரம் பாடப் போகிறான். போகவதி ஆடப்போகிறாள்; அதுவும் ஒரே பாட்டு. நிபந்தனை அது. நிச்சயம் கடுமையான போட்டியில் இருக்கும் என்று மக்கள் எதிர்பார்த்ததும் இயற்கையே!

'போகவதி என்னை வீழ்த்துகிற மனப்பான்மையுடன் பாடுங்கள்' என்று சொன்னதுதான் ஞானசுந்தரத்துக்குச் சவாலாக இருந்தது. புலமைப் பரீட்சைக்காகத்தான் சொன்னாளா? நிலைமை நிரவுதலுக்காகச் சொன்னாளா?

'என் குறிஞ்சி! உனது புகழை நான் காக்க வேண்டும்! உன்னைத் தியானித்தே தொடங்குகிறேன்! நீ வணங்கும் தெய்வங்களைத் தியானித்தே தொடங்குகிறேன்!...'

தொடங்குகிறான்...

நட்டுவாங்கனார் ஜதிகளைச் சொல்லி முடித்ததும் ஏதோ பாடலை ஆரம்பிப்பான் என்று பார்த்தால்...

அடப்பாவி ஞானசுந்தரம்? ஆரம்பத்திலேயே சோதனையா? விஷமமா?

கா...பதா...நிகா...ச்சா...நிபா..தகா...சகா...ச்கா... என்று மேல் காந்தாரத்திலேயே அப்படியே நிறுத்தியதும் அரண்டு போகிறாள் போகவதி.

என்ன ராகம் இது?

ஆயினும் அந்த மேலை நாட்டுப் பாணிக்கேற்ப சலங்கைகள் ஒலிக்கத் தவறவில்லை.

முதலில் மேற்குச் சங்கீதம்போல மொட்டை மொட்டையாகச் சுரங்களைப் பிரயோகிக்க, அந்தத் தாண்டவ ராகம் இடம் கொடுக்கிறது. இல்லையென்றால் இதனை அவன் தேர்ந்தெடுத்து இருப்பானா?

ஆனால் அப்படிப் பாடிய முறைக்கு அவள் அபிநயம் பிடிக்க, ஒரு புதிய பாவனையையே காண்பித்து, அடுத்து...

அதே தாண்டவ ராகத்தைத் தமிழிசைக்கே உரிய கமகங்களைச் சேர்க்கிற போது...

ஓ... பட்டை தீட்டிய வைரங்கள்.

இடையிடையே தத்தகாரத்தையும் சேர்த்து, லயத்துடன் ஆலாபிக்கிறான்.

முதலில் மழை போல் ஆரம்பித்த ராக தத்தகார ஆலாபனை, இடையில் தென்றலாய், முடிவில் பூமழையாகப் பெய்தது...

ஒரே கைதட்டல்கள்...

கலையரசியல்லவா போகவதி? புரிந்து பூரித்துச் செய்த பாவனைகள், மழையாகவும், தென்றலாகவும் பூச்சொரிதலாகவும்...

ஓ... தங்கமும் வைரமும் சேர்ந்தால் அதன் மதிப்பு தனியாவதோ?

என்ன ராகம்? இருக்கட்டும்! என்ன ஆரோகன அவரோகனம்? சங்கராபரணத்துச் சுரங்கள்; புரிகின்றன. அது ஒன்றே மேற்குச் சங்கீதமாக மழையொழியும். ஆரோகணம், அவரோகணம்?...

புரியாத நட்டுவனார்க்குப் புரிய வைக்கிறான் ஞானசுந்தரம்.

சகபதநிச்... ச்நிதபகச...

இந்த ஆரோகண அவரோகணத்தை வைத்துக் கொண்டே தத்தகாரத்துடன் விளையாடுகிறபோது, நட்டுவனார், எதற்கு என்பது போல விழிக்கிறார் நட்டுவாங்க நட்டுவனார். தஞ்சை சகோதரர்களுடன் பாடம் கேட்டவனாயிற்றே ஞானசுந்தரம்!

இந்த அட்டகாசங்களை நிகழ்த்திப் பாட்டின் பல்லவியைத் தொடங்கி, அனுபல்லவியை அலசி, சரணத்தை நாடுகிறபோது...

அமைதிக்கே வியர்த்துக் கொட்டுகிறது.

எங்கும் மன்மத மயக்கங்கள்.

சொற்கொட்டுகளும் சுரக்கட்டுகளும் அடதாளத்தை



அலற வைக்கிறது. கமகங்களும் தாளவித்தைகளும் கரகம் விளையாடுகின்றன.

ஐந்துவித நடை வேறுபாடுகளான சதுஸ்ரம், திஸ்ரம், கண்டம், மிஸ்ரம் ஆகிய நான்கு மட்டுமே பேசி போகவதியின் கால்களை நடுங்க வைக்கின்றன. இன்னும் *சங்கீரண ஜாதி தலை நீட்டவில்லை. ஆயினும் தாள அம்சத்தின் †மூன்று அம்சங்களையும் மீறவில்லை. காலம், செய்கை, அளவு.

சரணத்தில் தாள கதி பேதங்களுடனும் நடைபேதங்களுடனும் இலக்கணச் சுத்தம் நிறைந்த காலம், மார்க்கம், கிரியை, அங்கம், கிரகம், ஜாதி, களை, லயம், யதி, பிரத்தாரம் ஆகிய பத்து முறைகளில் தேவையானதைத் தேவையான இடங்களில் பெய்து, சங்கீரண ஜாதியைப் பிரயோகிக்கிற போது...

போகவதி கால்கள் பின்னித் தடுமாறி விழுந்து புரண்டு போனாள்!...

கூட்டத்தில் ஒரே களேபரம்...

திரை மூடப்பட்டது...

போகவதிக்குக் கால் சுளுக்கு என்று அறிவிக்கப்பட்டு விட்டதால், மக்கள் 'ச்சு' கொட்டிக் கொண்டு கலையத் தொடங்கினர். அதே நேரத்தில் ஞானசுந்தரத்து ராட்சஸப் பாடலைப் புகழ்ந்து செல்லவும் செய்தனர்.

கொஞ்ச நேரம் ரசித்தாலும் கொடிகட்டிய கூத்து என்றே குறைபடாது மக்கள் கலைந்து சென்றனர். அப்போதைய ரசனை அறிவார்ந்த ரசனை! பொழுது போக்கு ரசனையல்ல!

'அடே! ஞானசுந்தரம்!' என்று கறுவிக் கொள்கிறான் சிவகங்கை இளவரசன். நடக்க வேண்டிய கட்டத்தை எதிர்பார்த்து எழுந்தான் திவான் தீர்த்தகிரி.

---

* மகேந்திரவர்மப் பல்லவன் கண்டுபிடித்தது. வழக்கில் இல்லை.

† தமிழ் மரபில் நான்கு அம்சங்கள் சொல்கின்றன. 'கொட்டும், அசையும், தூக்கும், அளவும் ஒட்டப்படுவது பாணி (தாளம்) ஆகும்' –சிலப்பதிகாரத்தில் அடியார்க்கு நல்லார் மேற்கொள்.

அரண்மனை மாளிகையின் தனியறையில், சாப்பாடு வேண்டாம் என்று மறுத்து பழங்களையுண்டு பாலையருந்தி முடித்தான் ஞானசுந்தரம்.

கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தாள் போகத்துப் போற்றுதலுக்குரிய நாட்டியப் பொன்மயிலாள் போகவதி.

ஞானசுந்தரம் இதனை எதிர்பார்க்கவில்லை.

"நான் வருவேன் என்று நீங்கள் எதிர்பார்த்து இருக்க வேண்டுமே! தாண்டவத்துக்கேற்ப தாண்டவ ராகத்தைப் பாடி என்னைத் தடம்புரளச் செய்துவிட்டீர்கள்! இப்போது நீங்கள் தடம்புரள வேண்டும்."

"போகவதி?"

"விழுந்தது நானல்ல; குறிஞ்சியின் புகழ் காக்க விழுந்தேன்; நீங்களும் என்னிடம் விழவேண்டுமே என்று விழுந்தேன்!"

போகவதி மோகவதியாய்ச் சிரிக்கிறாள்.

ஞானசுந்தரம் விக்கித்துப் போனான்.

அவன் அப்படியும் நினைத்தான். அது சரியாக இருந்தது.

"போகவதி! என்னை மன்னித்துவிடு! உனது பெருந்தன்மையைப் பாராட்டுகிறேன். ஆனால் என் இதயத்தில் குறிஞ்சி தெய்வத்தைத் தவிர வேறு எவருக்கும் இடமில்லை."

"நீங்களும் இப்படிச் சொன்னால் நான் உங்களை நிச்சயம் பலாத்காரம் செய்து அடைந்தே தீருவேன். அந்தக் கலை எனக்குக் கைவந்த கலை."

அப்போது...

டுமில் என்ற துப்பாக்கிச் சத்தம்.

மேலே தொங்கிக் கொண்டிருந்த மெழுகுவத்தி கொண்ட கண்ணாடிப்பேழை விளக்குச் சுக்கல் சுக்கலாகிப் போனது.



ஒரே கும்மிருட்டு...

எவனோ ஒருவன் உள்ளே தடதடவென்று நுழைகிற சத்தம்...

அடுத்து...

'ஓ...' என்று போகவதியின் அலறல்; மேலும் அலறல்.

போகவதி கொலைத் தாண்டவக் கொடுமைக்குப் பலியானாள்.

# இராகம் – 21



# அக்கினிக் கோபம்

காதுகளைத் துளைக்கும் செய்தியா அது? சுட்டெரிக்கும் செய்தி; சூரிக் கத்திக் கொண்டு கிழித்தெரியும் செய்தி.

என் காதலர் கொலைக்காரரா?

'என் கணவன் கள்வனோ?' என்று கண்ணகி கேட்டாளே, அதே கேள்வி குறிஞ்சி கேட்டுக் கொள்கிறாள்.

காளையார் கோயிலிலிருந்து திரும்பிய வாத்தியக்காரர்கள் சொன்ன செய்திகள். அக்கினிக் கோபம் ராகம் பாடி எவரை எரிப்பது? எதை எரிப்பது? என்றே புரியவில்லை குறிஞ்சிக்கு!

நகம் வெட்டக்கூட கத்தியைத் தொடப் பயப்படும் எனது ஞானசுந்தரம் கொலைகாரனா?

'முகத்தை மழித்துக் கொள்ளக் கூடாதா' என்று கேட்டால், 'நாவிதன் கொண்டு வரும் கத்தி முகத்தை வடுப்படுத்தி விடுமோ என்று பயமாக இருக்கிறது குறிஞ்சி!' என்று கூறும் என் காதலர் கொலைகாரனா?

போகவதி என்கிற அந்தக் கலை மாதுவைக் கொலை செய்து விட்டாரா?



'ஓ' என்று தலையைப் பிய்த்துக் கொண்டு கதறத் தொடங்கி விட்டாள் குறிஞ்சி.

சிவகங்கைச் சிறையில் அடைபடத்தான் கண்ணீருடன் விடை தந்தேனா? கண்ணீருடன் விடை பெற்றீர்களா?

இதயம் எரிமலையாய் மௌனமாய்க் குமுறுகிறது.

ஆனால் வாத்தியக்காரர்களின் நாவுகள் நசுக்கிய சொற்கள்?

"அவர்கள் ஒருவரையொருவர் விரும்பி நேசித்த மாதிரியே தெரிந்தது."

ஓ... தலையை இரு கரங்களால் பற்றிக் கொண்டு, "நம்ப மாட்டேன்; நம்பவே மாட்டேன்!" என்று நம்பிக்கையுடன் அலறினாள்.

நடந்த சம்பவங்களை மனத் திரைச் சீலையில் வண்ண வண்ணமாக வாத்தியக்காரர்கள் வரைந்த ஓவியங்களில்...

அரண்மனை மாளிகையின் தனிமைச் சந்திப்பு... அரங்கத்துக் கிசுகிசு பேச்சும் கிளிஞ்சல் சிரிப்பும்.. அதே மாளிகையில் இரவில் சந்திக்க வந்ததும்...

நினைவைக் கத்தியாகக் கொண்டு அந்த வார்த்தைச் சித்திரத் திரைச் சீலையைத் தாறுமாறாகக் கிழிக்கிறாள் குறிஞ்சி...

முன்னுக்குப் பின் முரணாக இருக்கிறதே! போகத்துக்கு வந்த போகவதியை, வரைந்து காட்டிய சொல்லோவியப் படிப் பார்த்தால், மோகத்து முத்திரையைப் பதித்து முறுவலித்து அனுப்பிவிட வேண்டியதுதானே? கொலை செய்ய வேண்டியதன் காரணம்?

போகவதி ஓர் இலட்சிய வேசி.

நாடறிந்த உண்மை. இலட்சியம் இரவில் தனித்துச் சந்திக்கச் சென்றதென்றால்?

தந்தையை வைத்தியர்களிடம் ஒப்படைத்துவிட்டுத் தகுந்த காவலுடன் சிவகங்கை நோக்கி விரைந்து பயணமானாள் குறிஞ்சி.

வழி நெடுக இதயம் பிழிந்து ஊற்றெடுத்துப் பெருகிய ரத்தத்தால் குளித்துக் கொண்டு செல்கிறாள். இவள் எந்தச் சிலம்பை ஏந்திச் செல்கிறாள்? சத்திய ராகத்தை ஏந்திச் செல்கிறாள்! சிலம்பு வென்றது! சத்தியம் வெல்லுமா?

அக்கினிக் கோபாவேசத்தில் சிவகங்கை நெருப்பில் குளிக்குமோ? மேக ராகக் குறிஞ்சியால் நீரில் மூழ்குமோ?

இரண்டுக்கும் சூழ்நிலையும், தியானமும் இருக்க வேண்டிய இடத்தில் இருந்தால்தானே?

அலைமோதிக் கலைபட்டு அழுகையாற்றில் அடித்துச் சென்று கொண்டிருக்கிற போது?...

**கா**ற்றுக்கு நெருப்பு வைப்பாருண்டோ?

அதற்குப் பெயர்தான் நாட்டின் எரிமலைச் செய்தி. அது திசைகளைப் பற்ற வைத்துக்கொண்டிருந்தது.

செய்தியறிந்த சரபோஜி மன்னர், மங்கலமான மத்திய மாவதி ராகத்தை, நிரந்தர முகாரியாக்கி விடுவார்களோ என்று சுருண்டு போய் சுருட்டி ராகம் பாடத் தொடங்கி விட்டார்.

ஆ! சிவாஜியின் கதி? சிவாஜியின் கதி?

இரு தினங்கள் கழித்து அவராகவே ஒருத்தி நாடு நோக்கித் தூது செல்ல இருந்தார். இப்போது குறிஞ்சி இருட்டுக்கே தூது போய்க் கொண்டிருக்கிறாளாமே! சித்தப் பிரமை பிடித்திருக்கும் சிவாஜியின் வெளிச்சம் என்னாவது?

எந்த நேரமும், 'குறிஞ்சி, குறிஞ்சி!'...

எப்போது பார்த்தாலும், 'குற்றாலக் குறிஞ்சி ராகம் பாட மாட்டாயா? குறிஞ்சி, நீ பாட மாட்டாயா?' என்கிற தேம்பல்தான்!

இந்தத் தேம்பலால், கணவன் தனக்குத் தேறமாட்டான் என்று ஏற்கெனவே ஓமலுக்கு ஒத்தடம் கொடுத்த இளைய ராணி – சிவாஜி மனைவி சைதம்பாபாயி சாகேப், எப்போதும் போலவே திருவிடை மருதூருக்குப் பெரு விடை பெற்றுச் சென்று விட்டாள். அரச போகத்தில் இவையாவும் இயல்பான ராகங்கள்.



மன்னர் சரபோஜி...

மகன் சிவாஜிக்கான மார்க்கம் என்ன? இரண்டாம் திருமணம் செய்து வைக்கிற நேரத்தில் இப்படி ஒரு குறிஞ்சி குறுக்கிடுவாளா? அதுவும் எந்த ஒருத்தி நாட்டில் தமது சிறு பிராயத்தில் ஒருத்தி எதிர்பட்டாளோ, அப்படியா இவனுக்கும் அந்த ஒருத்தி நாட்டில் வாழும் ஒருத்தி?

நெஞ்சில் இன்னொரு முள் குத்தி அவரைச் சிரிக்க வைக்கிறது. தாம் காதலித்தவளை மகன் காதலிக்க, தியாகம் செய்த வரலாறு இப்போது தாறுமாறாகக் கிழிந்து கொண்டிருக்கிறதே! ஒருதலைக் காதலானாலும் எதிர் பார்த்த ஏக்கம்தானே? இப்போது மகனுக்கு ஏற்பட்ட வீக்கத்துக்கு எங்கு போய் மருத்துவம் பார்ப்பது? என்ன நடவடிக்கை எடுப்பது?

தஞ்சை ரெஸிடென்ட் ஜான் ஃபைப்புக்கும் ராமநாதபுரம் ரெஸிடென்டுக்கும் கட்டளையிட முடியாது. சென்னை கவர்னருக்கு எழுதினாலும், இதில் ஆர்க்காட்டு நவாப் சம்பந்தம் கொண்டிருக்கிறான். கல்கத்தாவிலிருக்கும் கவர்னர் ஜெனரலுக்கு எழுதி, பதில்வருவதற்குள் நிலைமைகள் எங்கெல்லாம் நீச்சல் போட்டு விடுமோ?

எதற்கும் சென்னை கவர்னர் வாஷிங்டனுக்கு முறைப்படி கலெக்டர் நெல்சன் மூலம் செய்தியனுப்ப விரைந்து முனைந்தார் சரபோஜி மன்னர்.

**த**மிழ்நாட்டு உதடுகளில் ஒட்டிக்கொண்டிருக்கும் பாடலியாம் குறிஞ்சியெனும் தேவமகள், சிவகங்கை நோக்கி வந்திருக்கும் செய்தி, அரண்மனை வாயிலுள் நுழைந்து பெரிய ஜமீந்தார் [*]பெரிய வல்லப தேவ உடையாரின் பாதங்களை முத்தமிடுகிறது.

ஓ... நெருப்பு அரண்மனைக்குள் நுழைகிறது. அக்கினிக் கோபம் சிவகங்கையை அடைத்து விட்டது.

"டேய்! சின்னதேவா! என்ன சொல்லுகிறாய்? உனது தாயிருந்தால் அவளது கண்ணீரில் உன்னைக் கரைய வைப்பாள். அதுவும் வயதான காலத்தில் வந்துதித்த

[*] கௌரி வல்லப தேவ உடையார் என்றும் கூறுவர்.

னல்லவா நீ! நீ செய்கிற சேட்டை தாங்காமல் தாயை விழுங்கினாய்! இப்போது தந்தையையும் விழுங்க வேண்டுமா?"

பெரிய ஜமீந்தார் இவ்வாறு கூறியதும், பக்கத்தில் அமர்ந்திருந்த ஆர்க்காட்டு நவாப் ஆஜம்ஜா, மெல்லிதாக ஏப்பம் விட்டான். திவான் தீர்த்தகிரி கால் பெரு விரலால் பதில் எழுதிக் காட்டிக் கொண்டிருக்கிறான்.

"அப்பா இது என் சொந்த விஷயம்!"

"எது? சிவகங்கை எரியப் போவதா?"

"வந்திருப்பவள் கண்ணகியல்ல!"

"அவள் அவதாரம்!"

"வெறும் கட்டுக் கதை!"

"நீயே நேரில் கண்டிருக்கிறாயே!"

"குருவி உட்கார இளநீர் விழுந்த சம்பவம்!"

"மரியாதையாக நீ ஞானசுந்தரம் என்கிற அந்த ஒரு பாவமும் அறியாத பிள்ளையைச் சிறையிலிருந்து விடுவித்து அனுப்பிவிடு!"

"மறுத்தால்!"

"அந்தச் சிறையில் நீ இருப்பாய்!"

"அந்த அதிகாரம் ரெஸிடென்டுக்குத்தான் உண்டு ஜமீந்தார் சாகேப்!" என்றான் ஆர்க்காட்டு நவாப் ஆஜம்ஜா. "நீங்கள் கும்பினிப் பட்டாளத்துக்குக் கும்பிடு போடுகிறவர்கள். ஆர்க்காட்டு நவாப் அளித்த பிச்சை இதுவரை நீங்கள் ஆண்டு வருவது!"

ஓ... ராணி வேலுநாச்சியாரும் மருது சகோதரர்களும் வாழ்ந்த மண்ணிலா இப்படியான சகதிச் சொற்களை வாரி இறைத்துக் கொள்கிறோம்? இந்த அகமுடையவர்கள் வழியில் 'நானும் உடையான்' என்று கூறிக்கொண்டு உதித்து விட்டேனே! என்னே கொடுமை!

பெரிய வல்லப தேவ உடையார் மனம் புழுங்கிக் கண் கலங்கிப் போனார்.



"மகனே! என்னைப் பொம்மையாக்கி வேடிக்கை பார்க்கிறாய்! மகிழ்ச்சி! மிகப்பெரிய சாம்ராஜ்யங்கள் பெண்ணால் அழிந்த கதை உலகம் அறிந்த உண்மை! இது மறவர்கள் வாழ்ந்த-வாழ்கிற மண்! மாசு தேடி விடாதே! எண்ணித் துணிக கருமம்! வள்ளுவன் வாக்கு! துணிந்த பின் எண்ணுகிற இழுக்கு, நாமாகச் சேகரித்துக் கொண்ட அழுக்காக முடிந்துவிடும்! இனி இந்த விஷயத்தில் நான் தலையிட மாட்டேன். உன் தலையெழுத்துப்படி நடக்கட்டும்."

பொருமலின் நெருப்பருவியாய்க் கண்ணீரைச் சிந்தி விட்டு அரண்மனைக்குள் வேகமாகச் சென்று விட்டார் சிவகங்கைப் பெரிய ஜமீந்தார்.

இப்போது தீர்த்தகிரி ஒரு திருப்பமான ஆலோசனையுடன், "குறிஞ்சியை அழைத்து வாருங்கள்!" என்று ஆணை பிறப்பிக்கிறான்.

சற்றைகெல்லாம்...

'வாயிலோயே, வாயிலோயே' என்று கேட்ட பின்னர், 'தேரா மன்னா செப்புவது உடையேன்!' என்று கேட்க வரும் அக்கினிக் கோபக் கண்ணகி போல அரண்மனையுள் நுழைந்து கொண்டிருக்கிறாள் குறிஞ்சி.

மூவர் மட்டுமே அரண்மனைக் கூடத்தில் அமர்ந்து இருக்கிறார்கள்.

காவலர்களுக்கு வெளியே போய்விடுமாறு ஆணை.

எரிமலை மகளென எதிர்வந்து நின்ற குறிஞ்சி எனும் நெருப்புத் தெரியவில்லை. அவளது கோபுரக் கலசங்கள் தெரிகின்றன; கோபுரம் போலுயர்ந்த பேரழகு தெரிகிறது; ஆனால் தாங்கள் மட்டும் கோபுரத்து அடிவாசலில் இருக்கிறோம் என்பதை மறந்து அல்லது உணராது கவனிக்கிறார்கள்.

"உன்னை எதிர்பார்த்தேன் குறிஞ்சி!" –என்றான் இளைய ஜமீந்தார்.

கற்பின் கனலியாய்க் குறிஞ்சி கவனிக்கிறாள். ஆயினும் அவள் கண்ணகியாகிவிட முடியுமா? ஏன் முடியாது?

"என்னை ஏன் எதிர்பார்க்க வேண்டும்?"

"ரதியின் அவதாரம்போல வந்து நிற்கும் நீ எதற்காகக் கண்ணகி அவதாரம் போல வேஷம் போட வேண்டும்!"

"மரியாதை கொடுத்தால் மரியாதையை எதிர்பார்க்க லாம்."

"இல்லையென்றால்?"

"மரியாதை மண்ணைப் பிளக்கும்!"

"நானே உன்னைப் பிளக்கத்தானே எதிர்பார்த்தேன் என்று சொன்னேன்!"

"தூ!"

குறிஞ்சி காறியுமிழ்ந்த மறுகணம், "சபாஷ்! வேலு நாச்சியை மீண்டும் இந்த மண்ணில் பார்க்கிறேன்!" என்று கூறிக் கைதட்டியவண்ணம் அருகே வந்து நின்றாள் சிவ கங்கையின் இளைய நாச்சியார்–சின்ன வல்லப தேவனின் மனைவி.

இளைய ஜமீன் கர்ஜிக்கிறான்:

"நாச்சி! நீ அந்தப்புரத்திலிருக்க வேண்டியவள்!"

"அதாவது... நீங்கள் எந்தப் புரத்திலிருந்தாலும் நான் கண்டுகொள்ளக்கூடாது: இல்லையா?"

"அப்படித்தான்!"

சூட்டுக்கோல் போலப் பதில் சொல்லவே, நாச்சியாரின் நாவு சூடேறியது. உடன் இரு ஆண் ஜன்மங்கள் இருக் கின்றவே! நவாப் வேறு வாய்கூசாமல் சிரிக்கிறானே!

நாச்சியார், நவாப்பை நோக்கினாள்: "நவாப் சாகேப்! உங்கள் அதிகாரத்தை நான் மதிக்கிறேன்! இங்கே புருஷன் மனைவிக்கிடையே போராட்டம் நிகழப் போகிறது. நீங்கள் போகலாம்."

"நாச்சி! அவர் நவாப்!"

"உஸ்! நான் மறுத்தேனா? அதற்காக அவர் என்னைக் கேட்டால் கொடுத்து விடுவீர்களா?"



"என்ன சொன்னாய்?"

சிவகங்கை இளவரசன் சினந்து எழ, "உஸ்!" என்று மீண்டும் கையமர்த்துகிறாள் இளையநாச்சியார்; "எதிர்கால சிவகங்கை ஜமீனாக நடந்து கொள்ளுங்கள்! பிறகு எடு பிடிகளுக்கும் உங்களுக்கும் எந்தவித வேறுபாடும் தெரியா மல் போய்விடும்! நவாப்ஜீ! தயவு செய்து இந்த இடத்தை விட்டுப் போகலாம்! ராஜகாந்தி என்கிற ராட்சஸனுக்கு இந்தச் செய்தி இன்னும் எட்டவில்லை என்று நினைக் கிறேன். அதற்குள் நீங்கள் ஆர்க்காட்டுக்கே போய் விட்டாலும் குலை தப்புமோ? தலை தப்புமோ?"

நவாப் ஆஜம்ஜா, ராஜகாந்தி என்றதும் அரண்டு போனான். ஆனாலும் குறிஞ்சியை அனுபவிக்காமல் போகிறோமே என்கிற வேதனைத் துடிப்புடன் கவனிக் கிறான்.

"ஏன், குறிஞ்சியைப் பார்க்க வேண்டும்? அவளை என் புருஷனாலேயே தொடமுடியாது என்றால் நீங்கள் பாவம்! போய்வாருங்கள்! நானும் இதனை அனுமதியேன்; இல்லை. ராஜகாந்தி வந்தால் ஆர்க்காட்டுக்கே அனுப்பி வைப்பேன்."

நாவப் உள்ளுக்குள் கறுவிக் கொண்டே வெளியேறி னான்.

அடுத்து திவான் தீர்த்தகிரி.

"நீங்கள் மட்டும் ஏன் நிற்கவேண்டும்? எனக்கென்ன பதில் சொல்லப் போகிறீர்கள் என்றா? உங்கள் வேலையை மரியாதையாக ராஜினாமா செய்துவிட்டுப் போய் விடலாம்! இல்லை, நாளை முதல் உங்களைப் பதவி யிலிருந்து நீக்கம் செய்கிறேன்."

"நாச்சி!"

கதறுகிறான் இளைய ஜமீன்.

"உஸ்! போகவதியைக் கொலை செய்தது போல என்னை அவ்வளவு எளிதில் செய்து விட முடியாது.

எனது சேது நாட்டுக்குக் காதுகள் இன்னும் செவிடாகி விடவில்லை!"

திவான் தீர்த்தகிரி திருட்டு விழிகளோடு வெளியேறி னான்.

"இப்போது சொல்லுங்கள். இவளைத் தீண்ட வேண்டுமா?"

"ஆமாம்; ஆமாம்; ஆமாம்!"

"ஏதோ தீண்டுங்கள். அவள் நெருப்பு! ம்ம்! என் எதிரேயே தீண்டுங்கள்."

சிவகங்கை இளவரசன் வெறிகொண்டு எழுகிறான்.

"இளைய ஜமீன்! நில்! இந்த மாதரசிக்காக எனது கோபத்தை அடக்கிக் கொண்டு இருக்கிறேன்! நான் *அக்கினிக் கோபம் ராகம் பாடுவேனேயானால், இந்த அரண்மனையே பற்றி எரியும்!"

"ஏதோ பாடு பார்க்கலாம்!"

"நாய் குரைக்கும் ஓசையைத் தவிர வேறு எந்தச் சங்கீத மும் அறியாதவன் முன் நான் பாடுவதா?"

"அடி நாயே! குறிஞ்சி!"

மீறிவிட்டான் சிவகங்கை இளவரசன்.

குறிஞ்சியும் கொஞ்சமும் கீழே இறங்காமல், "அட, நாயே! சின்ன வல்லப தேவா! ராஜகாந்தி வருவான்!" என்றாள்.

"அவன் வருகிறபோது வரட்டும்? இப்போது என் மனைவியின் முன்பே உன்னைக் கற்பழிக்கிறேன் பார்!"

---

* ஆ:சகமபநிச்; அ: ச்நிபமகரிச.
நடைபைரவியில் பிறந்த நெருப்பு ராகம். 'அக்கினிக் கோபம்' என்ற தலைப்பில் நான் எழுதிய (1954) முதல் வரலாற்று நாவல். அது இசை நாவலல்ல; அக்கினிக்கு இரையான சாம்ராஜ்ய நாவல்.



சிவகங்கை இளவரசன் காமாதுரனைப் போல வெறி கொண்டு எழுந்துவர...

"ஆ..." என்று உச்சஸ்தாயில் ராகக் குரல் கொடுக் கிறாள் குறிஞ்சி.

அக்கினிக் கோபமே பாட ஆரம்பித்துவிட்டாள்.

குறுக்கே புகுந்த இளைய நாச்சியார் கணவனைப் பற்றிக் கொண்டு, "வேண்டாம் அழிவு; வேண்டாம்!" என்று கதறுகிறாள்.

மபநிச்ரீ...ச்சா...ம்க்ரிசா...

"குறிஞ்சி! மகளே குறிஞ்சி!"

யார்? யார்? யார்?

பெரிய வல்லப உடையத் தேவர்தான் ஓடிவந்து குறிஞ்சியின் வாயை தமது வலது கையால் பொத்துகிற போது...

இளைய நாச்சியாரோ, குறிஞ்சியின் கால்களைப் பற்றிக் கொண்டாள். "வேண்டாம்! தாயே! குறிஞ்சியம்மா! ஏதோ அக்கினிக் கோபம் ராகம் என்றாயே! அதைப் பாடி எங்களை அக்கினிக்குள்ளாக்க வேண்டாம்! கோபம் வேண்டாம்!"

வாய் பொத்திவிடவே கோபம் குறிஞ்சிக்குக் கொஞ்சம் கொஞ்சமாகத் தணிந்து வருகிறது. பெருமூச்சு வாங்குகிற போது மார்பகங்கள் ஏறி இறங்கும் அழகை அந்தக் கட்டத் திலும் ரசிக்கிற தனது கணவனை நோக்கிய இளைய நாச்சியார், "உங்களுக்குக் கழுத்தை நீட்டியதற்காக வெட்கப்படுகிறேன்!" என்று கூறி, குறிஞ்சியைச் சமா தானப்படுத்த அந்தப்புரத்துக்கு அழைக்கிறாள்.

"முதலில் எனது காதலனை என்னிடம் ஒப்படை யுங்கள்!"

"அமைதி மகளே! இன்று மாலைக்குள் உனது காதலனை உன்னுடன் அனுப்பி வைப்பேன்!" என்றார் பெரிய ஜமீந்தார் கௌரி வல்லபதேவ உடையார்.

அப்போது ஒரு ராட்சஸனைப் போல கடகட வென்று பெருநகை புரிந்தான் இளைய ஜமீன் சின்ன வல்லப உடையத்தேவன்.

ஏன் இப்படி வெறிக் கொண்டு சிரிக்கிறான் இவன்?

# இராகம் – 28



# முகாரி

அந்தப்புரத்தையடைந்ததும் குறிஞ்சியின் கனத்த இதயத்தில் அமைதி மௌனமாய் முகாரி பாடுகிறது.

*சரிமபநிச்சா... ச்நிதபமகரிசா...*

அக்கினிக் கோபத்தைத் தூண்டும் அதே தாய் ராகம் தான் இந்த அழுகை ராகத்தையும் படைத்து இருக்கிறது என்று எண்ணுகிறபோது...

ராகங்களோடும் விதி ரகசியமாய் விளையாடிக் கொண்டிருக்கிற உண்மை புரிகிறது. அந்த ஆரோகண தைவதம் (த) பாஷாங்கபட்டதால் – களங்கபட்டதால் இந்த அழுகையோ? பைரவியையும்தான் இந்தத் தாய் பெற்றாள்; ஆயினும் இதே தைவதத்தில்தான் களங்க மடைந்தது. மகிழ்ச்சியின் எல்லைக்கே அது கொண்டு செல்லவில்லையா? ஆனால் முகாரி வக்கிரபுத்தி கொண்டதால் வாய்விட்டு அழுகிறது! ஓ... எல்லா வக் கிரங்களும் அழுவதில்லையே! ஆனந்த பைரவியாக, சகானாவாக, நாட்டைக் குறிஞ்சியாக, ஏன்? குற்றாலக் குறிஞ்சியாக இன்பம் தருகிற வக்கிரங்களும் இல்லையா என்ன! பாஷாங்கங்களும் இருக்கின்றனவே!

இதனை நினைக்கிறபோது...

ராகங்களோடும் விதி ரகசியமாய் விளையாடிக் கொண்டிருக்கிறது...

கண்களைத் துடைத்துக் கொள்கிறாள் குறிஞ்சி.

"இளைய நாச்சி! ஒன்றைக் கேட்பேன்; சத்தியமான பதிலைச் சொல்வீர்களா?"

"கேளுங்கள் குறிஞ்சியம்மா!"

"என் காதலர் குற்றவாளிதானா?"

இளைய நாச்சியார் கண்களில் நியாயம் நீர்த்திவலைகளாக உருண்டன.

"அன்றில் பறவை குற்றம் செய்யுமானால், அசுணமாப் பறவை குற்றம் செய்யுமானால், சக்கரவாகப் பறவை குற்றம் செய்யுமானால், சாதகப்பறவை சுவாதி நீரைப் பருகத் தவறுமேயானால், உங்கள் காதலர் குற்றவாளியே! இதைவிட அதிகமாகக் கேட்க வேண்டாமே!"

குறிஞ்சியின் மார்பகத்தே புயலனைய பெருமூச்சு நிறைவாகப் பறிகிறது.

"கொஞ்சம் சாப்பிடலாமே!"

"மன்னிக்கவும்; என் காதலனைப் பக்கத்தில் அமர்த்தி விருந்துபசாரம் செய்யுங்கள்; ஒரு புனிதவதி பரிமாற நான் சாப்பிடுகிறேன்."

"கொஞ்சம் ஓய்வு கொள்ளுங்கள்; முடிவு தெரிந்து கொண்டு இதோ வந்துவிடுகிறேன்!"

இளையநாச்சியார் புயல் வேகத்துடன் புறப்பட்டாள்.

அரண்மனைக் கூடத்தில் இன்னமும் வெறியின் மூக்கணாங்கயிற்றில் அகப்பட்ட காமப் பொலிஎருது போல உலவிக் கொண்டிருக்கிறான் சிவகங்கை இளைய ஜமீன். அவன் ஏதோ ஒரு நாசவேலைக்கு சதிவெண்பா பாடியனுப்பியது பிசிறு தட்டாத இலக்கணமாக அரங்கேற வேண்டுமே என்கிற மர்மமான அவத்தா நிலையில் அவ்விதம் உலவிக் கொண்டிருக்கிறானோ? தான் உண்ண முடியாத உணவைத் தானமாகத் தருவதாவது? குப்பையில் கொட்டும் குள்ளமனப்பான்மை முயற்சியில் குடிலவித்தை நடத்தி, அதன் முடிவை எதிர்நோக்கி உலவிக் கொண்டிருக்கிறானோ?



"இன்னும் வெறியடங்கவில்லையா?"

மனைவியின் குரல் கேட்டு எரிச்சலுற்றுத் திரும்பிப் பார்க்கிறான். "இப்போது எங்கே வந்தாய்?"

"ஞானசுந்தரத்தின் விடுதலை."

"விடுதலை? அதனை எப்போதோ செய்தாய்விட்டது. இப்போதைக்கு குறிஞ்சி, அவள் பாடும் தேவ ராகமாம்... குற்றாலக் குறிஞ்சி... என்னருகில் அமர்ந்து பாடவேண்டும். இல்லை; என்னுடன் ஒருமுறை அனுபவிக்க வேண்டும். விடுதலை நிச்சயம்!"

"சீ! கேவலம் காளையார்கோயில் தாசியை அனுபவிக்க முடியாத நீங்கள் ஒரு கற்பரசியை எதிர்பார்ப்பது வெட்கமாக இல்லை? ஒரு மனைவியிடம் பேசுகிற பேச்சா இது?"

"எனக்கு மனைவி என்பது ஒரு சாசனம். அவ்வளவே! போகவதி என்பவள் குப்பைமேட்டுக் குண்டுமல்லி; அதனை ஏன் கும்பிடுபோட்டு முகரவேண்டும்? இது நீலமலைக் குறிஞ்சிப்பூ! கிடைத்தற்கரிய தேவப் பிரசாதம்! காலில் விழுந்தும் அனுபவிக்கலாம்!"

வெதும்பிப் போகிறாள் இளைய நாச்சியார். "நான் ஒன்றைச் சொல்லலாமா?"

"சொல்!"

"ஞானசுந்தரம் என்பவன் காந்தருவன்! நீங்கள் காட்டுப் பேய்! என்னைக் காந்தருவனை அனுபவிக்க அனுமதி தாருங்கள். குறிஞ்சி விஷயத்தில் நான் தலையிடவில்லை."

"என்னடீ சொன்னாய்?" என்று இளைய ஜமீன் கையோங்கி வர...

சற்றே ஒதுங்கிய இளைய நாச்சியார், "என்மீது கை வைத்தால் நான் பிறந்த சேது பூமிக்குச் செய்தி எட்டும்! பிறகு உங்கள் காதும் மூக்கும் அறுபட்டுக் கழுதைமேல்

ஊர்வலம் வரச் செய்கிற துர்பாக்கிய நிலை ஏற்படும். மரியாதையாக ஞானசுந்தரத்தை - ஏகபத்தினி ஆண் மகனை விடுதலை செய்யுங்கள்!"

ஒருவாறு தன்னைச் சுதாரித்துக் கொள்கிறான் இளைய வல்லபதேவ உடையான். நடப்பது நடக்கப் போகிறது. இப்படி ஏன் முயற்சிக்கக் கூடாது?

"அவள் பாடட்டும்; விடுதலை செய்கிறேன்."

"பேச்சில் மாறுதல் இல்லையே?"

"நிச்சமாய் இல்லை."

கொஞ்சமும் தாமதியாமல் அந்தப்புரம் நாடி ஓடுகிறாள் இளையநாச்சியார். குறிஞ்சியிடம் எடுத்துக் கூறுகிறாள்.

"இந்த இலட்சிய ராகத்தை உங்கள் கணவன் முன் நான் பாடுவதா?"

"என்னை நீங்கள் மதிப்பது உண்மையானால் பாடியே தீரவேண்டும்."

குறிஞ்சி குமுறலையடக்கிக் கொள்கிறாள். "நல்லது; பாடுகிறேன். நான் அந்த ராகத்தைத் தனித்துப் பாடுவதில்லை என்பது வைராக்கியம். என் காதலனுடன் பாடுகிறேன்! விருந்தை ஏற்கிறேன்; விடைபெறுகிறேன்?"

"இந்தப் பேச்சில் மாற்றமில்லையே?"

"நான் குறிஞ்சி!"

மீண்டும் அரண்மனைக் கூடத்துக்கு விரைகிறாள் இளைய நாச்சியார்.

கணவனிடம் குறிஞ்சி கூறியதை ஒரு சத்திய நிவேதமாக எடுத்து வைக்கிறாள்.

"சிறைச் சாவியைக் கொடுங்கள்!"

புண்ணியம் தவறிய புருஷனோ, கண்ணியம் தவறிய கண்களால் நோக்குகிறான்.

"சாவியைத் தருகிறேன்; ஒரு நிபந்தனை."



"என்ன! என்றாவது ஒரு நாளைக்கு உங்களிடம் குறிஞ்சி வந்தாக வேண்டும் என்பதா?"

"நிபந்தனையில் அதுவும் ஒன்று மாதிரிதான்!"

"சீ, சீ! வெட்கமாக இல்லை? ஏன்? போகவதியைக் கொலை செய்ததற்கு மாறாக தூக்கிச் சென்று ஆசையைத் தீர்க்கத் திராணியில்லாமல், கொலை செய்து, ஓர் அப்பாவி மீது குற்றம் சாட்டியிருக்கிற நீங்கள், குறிஞ்சி, குறிஞ்சி, குறிஞ்சி..."

கடகடவென்று நகைக்கிறான் இளைய வல்லபத்தேவ உடையான்.

"அப்படித் தூக்கிச்சென்று அனுபவிக்க வெகு நேரம் பிடிக்காது. என் அரச கௌரவம் என்னாகும்? தாசியைப் பலாத்காரமா?"

"இதில் மட்டும் அரச கௌரவம் உங்களுக்குக் குறிஞ்சி மாலையிடுகிறதோ?"

"நன்றாகச் சொன்னாய்! கேவலம் ஒரு தாசியைக் கற்பழித்தான் என்பது கேவலத்திலும் கேவலம்! குறிஞ்சிக் கேவலம் அப்படியல்ல! இது சீதையைத் தூக்கி வந்த ராவணக் கௌரவம்!"

"போய் வாயைக் கழுவுங்கள்! ராவணன் ராமனைவிட ஒருபடி மீறிய பரிசுத்தவான்! உங்களுக்குக் கம்பன் எழுதிய இராமாவதாரம் எங்கே தெரியப் போகிறது? காமாவதாரப் புருஷனாயிற்றே! சரி, சரி? நிபந்தனையைச் சொல்லலாம்!"

"சாவியைக் கொடுத்து, ஞானசுந்தரத்தை மீட்ட பிறகு, குறிஞ்சி பாட மறுத்து விடலாம்; மறுக்கவும் வாய்ப்புண்டு. எனவே அந்த அபூர்வ ராகத்தை எனக்கு அடகு வைத்து எழுதிக் கொடுக்கட்டும். காதலனை மீட்டுக் கொண்டு, என் முன் பாடி அதனையே பரிசாகப் பெற்றுச் செல்லட்டும்."

"அர்த்தமில்லாத நிபந்தனை."

"எனக்கு இது அவசியமான நிபந்தனை."

"குறிஞ்சி பாட ஆரம்பிக்குமுன் அந்த அடகு ஓலையை என்னிடம் நீங்கள் கொடுத்துவிட வேண்டும்."

"ஆகா! அவளிடமே கொடுத்து விடுகிறேன்."

இளைய நாச்சியார் மீண்டும் அந்தப்புரம் நோக்கி விரைந்தாள். அவளது பெண்மை நிலை பூப்பந்தாய்ப் புலம்பலுற்றது.

செய்தியைக் கேள்விப்பட்ட குறிஞ்சி, சில கணங்கள் யோசித்துக் கேட்டாள்: "இதில் ஏதும் சூது வாது இருக்காதே!"

அப்போது அங்கு வந்தார் பெரிய வல்லபதேவ உடையார்: "நான்தான் இளையநாச்சியை இங்குமங்குமாக ஊஞ்சலாட்டி வைப்பது! தாராளமாக எழுதிக் கொடு! நான் ஜமீந்தாராக மட்டுமல்ல; ஜாமீன்தாராகவும் இருக்கிறேன்! முதலில் உன் காதலன் விடுதலையாக வேண்டும்!"

குறிஞ்சி ஒப்புக்கொண்டாள்.

**அ**னைவருமே கூடத்தில் அமருகிறார்கள்.

ஒரு விசித்திரமான *காகிதக் கூழில் பொன்னின் மிக மெல்லிய தகடு மாதிரி ரேகைகள் ஆங்காங்கே திட்டுத் திட்டாகப் பளிச்சிடுகிற மாதிரியான உறுதி நிறைந்த விசித்திரமான காகிதம், மைக்கூடு, இறகுபேனா மேசை மீது வைக்கப்பட்டிருக்கின்றன. இந்த வசதி அரச குடும்பங்களுக்கு மட்டுமே வெள்ளைக் கும்பினியர் அளித்திருந்தனர்.

"என்ன எழுத வேண்டும்?" என்று கேட்கிறாள் குறிஞ்சி.

இளைய ஜமீன் விளக்குகிறான்:

"நான் வணங்கும் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகள் மேல் சத்தியம் வைத்து, ஸ்ரீ சிவகங்கை இளைய

* இம்மாதிரிக் காகிதத்தையும், சரபோஜி மன்னர் கையால் எழுதிய கையெழுத்தையும் (ஆங்கிலத்தில்) நான் தஞ்சை சரஸ்வதி மகாலில் நேரில் பார்த்தேன்.



ஜமீந்தார் இளைய வல்லபதேவ உடையாருக்கு குறிஞ்சியாகிய புகழ் பெற்ற பாடகி எழுதித் தரும் உறுதி மிக்க அடகு சாசனமாவது – நானும் கொலைக் குற்றத்திலிருந்து விடுதலையாகப் போகிற என் காதலன் ஞானசுந்தரமும், நாங்கள் கண்டு பிடித்த, எங்களுக்கே சொந்தமான, அபூர்வ ராகமான குற்றாலக் குறிஞ்சியை இவர்முன் மனம் குளிரப் பாடுகிறோம். நாங்கள் பாடத் தவறினால், இந்த ராகம் மேற் சொன்ன ஜமீனுக்கு அடிமையாகி விடுகிறது. இந்த ராகத்தை மீட்காமல் நான் வேறு எங்கும் அதை பாட மாட்டேன் என்று சத்தியம் செய்து அடகு வைக்கிறேன். நாங்கள் இருவரும் எப்போது வந்து பாடுகிறோமோ அப்போது வந்து மீட்டுக் கொள்கிறோம்.

இப்படிக்கு,
குறிஞ்சி.

குறிஞ்சி கையொப்பமிடுகிறாள்.

"ஏன்? என் காதலர் கையெழுத்து வேண்டாமா?"

"அவசியமில்லை. நீ பாடினால்தான் இந்த ராகத்துக்கே மந்திர மகிமையாம்!"

"என் காதலனுக்காக இந்தப் பயங்கரமான நிபந்தனையை ஏற்கிறேன்."

"உன் பாட்டைக் கேட்பதற்காகத்தான் இப்படியான நிபந்தனைகளை விதிக்கிறேன்."

"இதற்கு எங்களைக் கச்சேரிக்கே அழைத்திருக்கலாமே! ஏன் இந்த நாடகம்?"

"நீ வர மாட்டாய். நான் எதிர்பார்த்த நாடகம் வேறு! அந்தக் காட்சி கலைந்து, இப்போது நடப்பது வேறு காட்சி! இந்தா சிறைச் சாவி!"

குறிஞ்சி பெறவில்லை; இளைய நாச்சியார் பெற்றாள். அவ்விதம் பெறுகிறபோது இளைய ஜமீன் பார்த்த பார்வை... 'கவனித்துக் கொள்கிறேன்!' என்பதுபோல...

"வாம்மா, குறிஞ்சி! உன் காதலனைச் சிறையிலிருந்து நீ வரவேற்பதைவிட, நானும் உடன் வந்து வரவேற்பதே சிவகங்கைக்குச் சிறப்பு மட்டுமல்ல; பாவப் பிராயச்சித்த மும்கூட."

பெரிய ஜமீந்தாரும் உடன் சென்றார்.

சிறைச்சாலையையடைந்து சிறையறையைத் திறந்து உள்ளே சென்று கவனித்தபோது...

"ஞானீ!" என்று குறிஞ்சி அலறிய அலறல்...

அந்தச் சிறை கூடத்தையே ஒரு கணம் கிடுகிடுக்க வைத்துவிட்டது.

பெரிய ஜமீந்தாரின் கனத்த மீசை துடியாய்த் துடிக் கிறது...

இளைய நாச்சியார் கண்கள் இளைத்துப் போயின.

ஞானசுந்தரம் தரையில் பிணமாகிச் சுருண்டு கிடந்தான். அவனது கையில் ஓர் ஓலை நறுக்கு.

இளைய நாச்சியார் ஓலை நறுக்கை எடுத்து வாசிக் கிறாள்:

> "என் அருமை குறிஞ்சி! எப்போது பழி சுமத்தப் பட்டுச் சிறையில் அடைபட்டேனோ அப்போதே மானம் மரியாதை அனைத்துமே மாண்டு போயின! இனி நான் உயிருடன் இருப்பதா? உன்னோடு வாழ்வதா? இணைந்து பாடுவதா? என்னை மீட்க நீ வந்திருக்கிறாய் என்று கேள்விப்பட்டேன். உன்னை இளைய ஜமீன் இந்நேரம் கற்பழித்து இருப்பான். எனவே நான் என் உயிரை மாய்த்துக் கொண்டேன்.
>
> இப்படிக்கு,
> ஞானசுந்தரம்.

பெரிய ஜமீந்தார் தோளில் சாய்ந்து குமுறிக் கொண் டிருந்த குறிஞ்சியிடம் ஓலை நறுக்கை நீட்டிய இளைய நாச்சியார், "இது உங்கள் காதலர் கையெழுத்துதானா?" என்று கேட்டாள்.

உற்றுக் கவனித்த குறிஞ்சியும் 'ஆம்' என்பது போலத் தலையசைத்து ஓடிச்சென்று ஞானசுந்தரத்துத் தலையை



மடியில் கிடத்தி, "என்னை யாரும் தீண்ட முடியாது என்று தெரிந்துமா ஞானி, இந்த முடிவுக்கு வந்தாய்? ஐயோ! அவசரப்பட்டு விட்டாயே?" என்று கதறிக் கதறி அழுகிறாள்.

அவளைப் பெரிய ஜமீந்தாரும் இளைய நாச்சியாரும் எவ்வளவோ சமாதானம் செய்கிறார்கள்.

கணவனை இழந்தார்க்கு மட்டுந்தான் காட்டுவது இல்லையோ? ஞானி போன்ற காதலனை இழந்தார்க்கும் 'இவனைவிடச் சிறந்த காதலன் இன்னொருவன் இருக் கிறான்' என்று காட்டவும் முடியுமோ?

**அ**ன்று மாலை முறைப்படி தகனக்கிரியை நடந்து நிறைந்தது. மறுநாள் தங்கிப் பாலூற்றவும் செய்தாள் பாலுணர்வே காணாத பால் நிலவழகி குறிஞ்சி.

குறிஞ்சி புறப்படத் தயாரானாள்.

"நான் புறப்படுகிறேன்; எனது அடகு ஓலையை என்னிடம் சேர்த்து விடலாமே!"

"அது முடியாது; நீ பாடவில்லையே என்பதல்ல; நீங்கள் பாடவில்லையே! நிபந்தனை?"

இளைய ஜமீனின் முகத்தில் எரிதழலின் கொப்பளிப்பு.

குறிஞ்சி கண்ணீருடன் நோக்குகிறாள். "இறந்தவரை எழுப்பிக் கொண்டு வந்து நான் பாட முடியுமா?"

நெட்ட நெடிய ஒரு பெருமூச்சு.

குறிஞ்சியின் நெஞ்சு குமுறும் எரிமலையானது.

"எனது உயிரான ஜீவராகத்தையே இழந்துவிட்டேன். இந்தக் குற்றாலக் குறிஞ்சி ராகம் இருந்தென்ன? அடகில் மூழ்கி என்ன? ஏ, இளைய ஜமீன்! நடந்த இத்தனைக் கும் நீதான் காரணம்! ஒரு நாளைக்கு என் ராஜகாந்தி யிடம் நீ பதில் சொல்லியே தீர வேண்டி இருக்கும்! என் நெஞ்சு குமுறுவதுபோல நீ குமுறிப் போவாய்! என் வயிறு எரிவது போல நீ எரிந்து போவாய்! எனது சாபம்

இந்தச் சிவகங்கையைச் சுற்றிக் கொண்டே இருக்கும்! வழியில் ஏதேனும் வம்பு தும்பு செய்வாயேயானால்..."

கண்கள் கனன்றன.

இப்போதுதான் இளையநாச்சி எரிமலையாய் வெடித்தாள்: "என் சகோதரி! அப்படி ஏதேனும் நிகழுமானால்... சத்தியமாக நான் விதவையாவேன்! புரியவில்லை? நானே என் புருஷனைக் கொன்று விடுவேன்!"

குறிஞ்சி சற்றே அமைதி கண்டாள்.

"உங்கள் இதயத்தை வணங்குகிறேன் இளைய நாச்சி!"

குறிஞ்சி தயாராக இருந்த கோச்சு வண்டியில் கண்ணீரும் கம்பலையுமாக ஏறியமருகிறாள். உடன் வந்தவர்களும் அடுத்த வண்டியில் அமருகிறார்கள். துணைக்கு வந்தவர்கள் குதிரைகளில் ஆரோகணிக்கிறார்கள். பயணம் ஒருத்தி நாடு நோக்கி முகாரியைச் சுமந்து விரைகிறது.

இப்போதுதான் பெரிய ஜமீந்தார் பூகம்பமாய் வெடித்தார்.

"இளையநாச்சி! இப்போது மட்டும் நீ சுமங்கலி என்றா நினைக்கிறாய்? விதவைதான்! என்ன காரணமோ ராஜகாந்தியைக் காணவில்லை. ஞானசுந்தரம் இயற்கையாகவா தற்கொலை செய்து கொண்டான்? அவனது விரல் நகங்களைப் பார்த்தாயா? ஊசியால் குத்தி இம்சித்து அவனை விட்டே அடகு ஓலை மாதிரி மரண ஓலை வாங்கிக் கொண்டு முகத்தில் கை புதைத்துச் சாகடித்து இருக்கிறார்கள். ராஜகாந்திக்குத் தெரிகிறபோது உனது கணவனின் உடல் எத்தனை கண்ட துண்டங்களாகுமோ? அவனைப் பெற்றதற்காக நான் வெட்கப்படுகிறேன்! குறிஞ்சியின் சாபத்தால் என்ன நிகழுமோ?"

அவர் கண்களைத் துடைத்துக் கொண்டு அரண்மனையுள் வேகமாக நடந்தார்.

கணவனை உற்றுக் கவனிக்கிறாள் இளைய நாச்சியார். கண்களில் அக்கினிக் குழம்பு. துடித்த அவளுடைய உதடுகள் உதறிய சொற்கள்:



"சிவகங்கைச் சிறப்பையும் சேதுநாட்டுப் பெருமையையும் உணராத ஒரு மிருகத்துக்கு வாழ்க்கைப்பட்டு விட்டவள் விதவையாவது எவ்வளவோ மேல்! இனி என் மஞ்சத்தில் உங்களுக்கு இடமில்லை."

காறியுமிழ்ந்து உள்ளே சென்றாள் நாச்சியார்.

இளைய வல்லபத் தேவன் கண்களில் நெருப்பு ஊர்வலம் வந்தது.

# இராகம் – 29



# கமலம்

ஒருத்தி நாட்டுக்குள் நுழைகிறபோதே அந்த இருட்டுச் செய்தி–இரு செவிகளையும் பொத்திக் கொள்ளக் கூடிய அபசுரங்களின் ஒட்டுமொத்த செய்தி–குறிஞ்சியின் மடியில் வந்து குத்தியது.

விருபாட்சக் கவிராயர் இறைவனடி சேர்ந்து விட்டார்!

ஓ...

'கோ'வென்று கதறிப் போய் விட்டாள் கோகில நிலவான குறிஞ்சி! இப்போது அது கோகில நிலவா? கொந்தளிக்கும் நிலவு! குமுறும் நிலவு! கூனிக் குறுகிப் போன குறை நிலவு!

ஞானசுந்தரத்தை இழந்தாள்; இப்போது தந்தையினும் சாலப் பரிந்து வளர்த்த விருபாட்சக் கவிராயரையும் இழந்து விட்ட பிறகு அந்தக் குறிஞ்சி நிலவுக்கு ஆறுதல் சொல்ல ராகங்களைத் தேடுவதா? இலக்கிய ரசனையுள்ள வார்த்தைகளைத் தேடுவதா?

குறிஞ்சி மாளிகை வாசலில் கோச்சு வண்டி நின்றதும் ஒருத்தி நாடே திரண்டு வந்து நின்று ஓலமிட்ட அந்தக் காட்சி...



நேற்றைய முன் தினம் விருபாட்சக் கவிராயர் இறைவனடி சேர்ந்தார்; ஊரே திரண்டு தகனம் செய்த செய்தியைக் கேள்விப்படவா – ஏற்கெனவே செவிடாகிப் போன செவிகளை மீண்டும் செவிடாக்கச் சுமந்து வந்தேன்? ஏ, பிரத்தியங்கிரா தேவி! என்னடீ சோதனை இது? சோதனைக்கு மேல் சோதனை? நான் என்ன தவறு செய்தேன்? என்ன குற்றம் புரிந்தேன்? தூய்மைக்குச் சோதனைதான் என்றால் அந்தத் தூய்மை தொலைந்து போகட்டும்! துவம்சமாகிப் போகட்டும்? போகட்டும்!

குறிஞ்சியின் இதயக்குமுறல் கண்ணீரில் வெடிக்கிறது.

பலரும் ஆறுதல் கூறுகிறார்கள்.

மாளிகையுள் நுழைந்த குறிஞ்சி, புரண்டு புரண்டு அழுகிறாள்.

ஒருபுறம் ஞானசுந்தரம் இழப்பு.

மறுபுறம் வளர்ப்புத் தந்தையின் மறைவு.

இந்தச் சோதனையும் வேதனையும் கண்ணீரில் பந்த விட்டுக் கவலை விழா நடத்தவா ராக தியானத்தை மேற்கொண்டது? எனக்கா? எனக்கா?

'புகழுக்குக் கிடைத்த திருஷ்டி' என்றே ஊரார் பேசிக் கொண்டனர்.

இந்த விபத்தை யாராலும் சரிகட்ட முடியாது. இது விதியின் விபத்து!

வாழ்க்கையே ஒரு விபத்து. ஆனால் விபத்து வாழ்க்கையாகலாமா?

இனி, தனது ஊர்வலம் சப்த சுர ஊர்வலமா? நிசப்த சுர ஊர்வலமா என்று யோசிக்கிறாள்.

ஹே! காஞ்சிப் பெரியவரே! ஸ்ரீ ஆசார்ய சுவாமீ! அத்வைத சொரூபி! எனக்கேன் இந்தச் சோதனை? வேதனை? படிப்பினை?

'தன்னை மனிதர்கள் இகழவில்லை; ஊழ் இகழ்ந்து விட்டது' என்கிற உண்மை, காலம் கணித்த கணக்கு

ரகசியமாயிற்றே! யாரை நொந்து என்ன பயன்? அவளால் இவ்விதம் சிந்திக்க முடியவில்லை; கற்பிதம் செய்து பார்க்கவும் அந்தக் கற்பனையின் முதல் முகவரிக்குப் புரியவில்லை.

புரியவில்லை என்பதைவிட, எவ்வித தீங்குமறியாத தனக்கு இவ்விதம் ஏற்பட நியாமில்லை. எனவே புரிய வில்லை போலும்!

இருட்டு மரணங்கள் இந்த வெளிச்ச இதயத்தை இந்தப் பாடு படுத்தலாமா? ஒரு பாவமும் செய்யாத மனிதர்கள், துன்பியலால் துகளாகிப் போகிற வாழ்வின் மர்மம்தான் தத்துவங்களுக்கே அப்பாற்பட்டு நிற்கிறது. கேட்டால் முன்வினை அல்லது சென்ற பிறவிப் பயன் என்பர். இது ஒரு சமாதானமே!

முறைப்படியான ஈமக்கடமைகளை முடித்தும், பல நாட்கள் அவள் ஊமைக் குயிலாகவே உறங்கலுற்றாள். எந்தக் கச்சேரிகள் வரினும் ஏற்க மனமில்லை. ஞான சுந்தரம் இன்றிப் பாடுவதா? அன்றில் தனித்துப் பாடுவதா?

அசுணமா பழிக்காதா? பின் என்ன செய்யப் போகிறாய்? சாதகப்புள்ளைப் போல சுவாதி நீரைத் தேடி யலையப் போகிறாயா?

புரியவில்லை; புரியவில்லை; புரியவில்லை.

தம்பூரில் தூசி படிந்து வெகு நாட்களாகி விட்டன.

அத்திவாரமுமில்லை; கோபுரத்துக் கலசமுமில்லை. குறிஞ்சி எனும் இந்த இசைக் கோயிலுக்கு எதிர்காலக் கும்பாபிஷேகம்?

ஒருத்தி நாட்டு மக்கள் எவ்வளவோ வேண்டினர். பழையபடி கச்சேரிகளுக்கு ஒத்துக்கொண்டு ராகங்களை மணந்து இதயத்து ரணங்களை ஆற்றிக் கொள்ளலாமே! ஆறும் ரணங்களா இவை?

ஏ, ராஜகாந்தி! எங்கே போனாய்?

நிழலைப் போல என்னைத் தொடர்ந்த நிதரிசன மானுடனே! நீ எங்கே போனாய்?



நீயும் எனக்கு மூன்றாவது இழப்பா?

உன்னையும் எவனாவது சுட்டுக் கொன்று விட்டானா?

ஏ, காளீ! அந்தப் பவள மல்லிகை மரமிருந்தாலாவது கொஞ்சம் அதன் நிழலில் ஆறுதல் கொள்வேன்! எங்கே அந்த மானுட மல்லி? எங்கே அந்த மனிதப் பவழம்?

வாசற்படியில் ஏதோ வண்டி வந்து நிற்கும் சத்தம்.

மாளிகையில் வேலை செய்பவர்களுக்குப் பஞ்சமில்லை. சுருதி மீட்டும் கற்பகம் வந்து செய்தி சொன்னாள்; "திருவாரூர் கமலமாம், உங்களைத் தேடி வந்திருக் கிறார்கள்."

ஓ... தன்னுடன் சிட்சை பெற்ற இசை மாது; பிரபல நாட்டிய மாதல்லவா?

சோகக் குயிலாய் வெளியே வந்து வரவேற்கிறாள் குறிஞ்சி.

"வாங்க'க்கா! நலமா'க்கா?"

"வேசி நலம்; தூசி நலம்! அது குறித்து என்ன கவலை? 'மாசறு பொன்னே! வலம்புரி முத்தே! காசறு விரையே! கனியே! தேனே!' என்று இளங்கோவடிகளின் வரிகளை ஆடியாடிப் பார்த்த இந்தப் பாதங்கள், இந்த மாசறு பொன், மகிழ்ச்சி குன்றி இருப்பதைக் கேள்விப்பட்டேன்! தஞ்சைப் பெரிய கோயில் நடனத்துக்கு வந்தவள் இந்த இசைக் கோயிலைத் தரிசித்து ஆறுதல் சொல்லிவிட்டுப் போகலாமே என்று வந்தேன்!"

"உள்ளே வாங்க'க்கா!"

புகழ்பெற்ற நாட்டியகாரிகளுள் ஒருத்தியான கமலம்–முத்துசாமி தீட்சிதரிடம், குறிஞ்சி காலத்தில் சிட்சை பெற்ற கமலம் உள்ளே நுழைகிறாள்.

குறிஞ்சி முன் மாதிரி கோவென்று அழவில்லை. அங்கே கண்ணீரில்லை. கண்ணீர் என்பதே கண்கள் குளிப்பதற் காகத்தானே? சில சமயம் ஆனந்தமாகக் குளிக்கின்றன. சில சமயம் அழுகையாகக் குளிக்கின்றன. எப்படியோ அழுக்கைப் போக்கிக் கொள்கின்றன.

கற்பகம் மோர் கொண்டு வந்தாள்.

கமலம் அதனைப் பெற்றுப் பருகியவாறு, "இப்படியே; இடிவிழுந்த மாதிரி எத்தனை காலத்துக்குத்தான் இருக்கப் போகிறாய் குறிஞ்சி?" என்றாள்.

"நான் வணங்கும் சக்தி, எப்போது சக்தி தருகிறாளோ, அப்போது பாடுவேன். அதுவரை மௌனம்தான் எனது– யாரும் கண்டுபிடிக்காத – அபூர்வ ராகம்!"

கமலம் கொஞ்சநேரம் வரை மௌனமாகக் கவனிக்கிறாள்.

"ஏனக்காக அப்படிப் பார்க்கிறீர்கள்!"

குறிஞ்சியின் இதழ்களில் முதல் முறையாக முறுவல் அரும்புகிறது.

"அப்பாடா! எப்படியோ சிரித்து விட்டாயே!"

"முதல் முறையாக நானும் இப்போதுதான் பார்க்கிறேன்!" என்று கூறி மகிழ்ந்து கொண்டாள் கற்பகம்.

"உன்னைச் சிரிக்க வைத்துப் பார்க்கவாவது ஈசன் என்னை இங்கு அனுப்பி வைத்தானே, அவனுக்கு நன்றி சொல்கிறேன். நீண்ட நாட்களாக உன்னிடம் வந்து ஒரு விஷயம் கேட்டு கற்றுக் கொள்ள வேண்டும் என்று எண்ணியதுண்டு. சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. கிடைத்த சந்தர்ப்பம் இப்படித் துன்பியலாக அமைந்து விட்டதே என்கிற வேதனை!"

"என்ன விஷயம்? என்னிடம் நீங்கள் கற்றுக் கொள்வதா?"

"இப்போது எதற்கு?"

"சும்மா கேளுங்க்கா! மனசுக்காவது கொஞ்சம் ஆறுதலாக இருக்கும்!"

"நான் வந்தது உனக்கு ஆறுதல் என்றால், நிச்சயமாக ஈசனுக்கு மீண்டும் நன்றி செலுத்துகிறேன்! குறிஞ்சி! உன் பெயரில் இருக்கிற ராகம் ஊரறிந்தது. என் பெயரிலும் ஒரு



ராகம் இருக்கிறதாமே! அது தெரிந்தால், எனது நாட்டியத்தை என் பெயர் கொண்ட ராகத்திலேயே ஆனந்தமாக ஆரம்பிப்பேன்!"

குறிஞ்சி கமலராகமாய்ச் சிரிக்கிறாள்: "ஆமாம், அதுவும் ஓர் அபூர்வராகம், பாடுவோர் பாடினால் இரவிலும் கமலம் மலர்ந்து விடுமாம்!"

"அப்படியா? எனக்குக் கொஞ்சம் சொல்லித்தாயேன் என்று எப்படிச் சொல்வேன், நீ இருக்கும் மனநிலையில்?"

"அதனால் என்னக்கா? ஏ, கற்பகம்! இப்படி வா!"

கற்பகம் அருகில் வந்து நின்றாள்.

"உட்கார்!"

உட்கார்ந்தாள்.

"கமலா ராகத்தைக் கொஞ்சம் அக்காவுக்கு ஆலாபனை செய்து காட்டு!"

கற்பகம் தலைகுனிய, "பரவாயில்லை; தைரியமாகப் பாடிக் காட்டு!" என்றாள் குறிஞ்சி.

கற்பகம், 'கமலா' எனும் அந்த ராகத்தை, குறிஞ்சிப் பாணியிலேயே குரல் கொடுத்து ஆலாபிக்கிறாள். ஆ! என்ன நயமான ராகம்!

"போதும்!" என்றாள் கமலம்.

கற்பகம் எழுந்து கொண்டு, குறிஞ்சியின் பாதம் தொட்டுப் பணிந்து உள்ளே சென்றுவிட்டாள்.

கமலம் சொன்னாள்: "கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும் என்பார்கள். நேரில் கண்டேன்."

"இவள், கட்டுத்தறியல்ல; பட்டுத்துணி!"

கமலம் கமலமாய் சிரித்துக் கொண்டாள்.

"கௌரி மனோகரியில் பிறந்த ராகம். ஆரோகணம் சகமதநிச; சநிதமகசா, இல்லையா?"

"நெருப்பு என்று சொன்னாலே தீப்பிடித்துக் கொள்கிற சிட்சையல்லவா நமது தீட்சிதர் பெருமான் சிட்சை!"

"இந்தோள ராகத்தை சதுஸ்ருதிதைவதத்துடனும் காகலி நிஷாதத்துடனும் பாடுகிறபோது கமலம் ராகம் தாமரைப்பூ வாசனை மாதிரிதான் இருக்கிறது."

"கமலம் என்றுதான் இந்த ராகத்துக்குப் பெயர்; வழக்கில் கமலா என்பார்கள்."

"அதுசரி! நீ நம்ம குருநாதர் என்றதும் ஒரு விஷயம் சொல்ல மறந்து போனேன். இப்போது அவர் படுத்த படுக்கையாக இருக்கிறார். வறுமையோ வறுமை! அவரையே பிடுங்கித் தின்று கொண்டிருக்கிறது வறுமை."

வறுமை...

"சம்பாதித்த பணமெல்லாம் என்னவாயிற்று?"

"இரண்டு பொண்டாட்டிகளைக் கட்டிக் கொண்டவர் களில் உருப்பட்டவர்களில் எங்கோ ஒரு சிலர்! நல்லது குறிஞ்சி! நான் புறப்படுகிறேன்!"

"புறப்படுவதாவது? இருங்கக்கா! நானும் உங்களுடன் திருவாரூர் வருகிறேன். குருநாதரைப் பற்றிக் கேள்விப் பட்டது முதல் மனசு சரியில்லை. சாப்பிட்டுவிட்டு இரண்டு பேருமே புறப்படுகிறோம்!"

குறிஞ்சியின் குருபக்தியைக் கண்டு கமலம் கனிந்து போனாள்.

இருவரும் பகலுணவை முடித்துக்கொண்டு திருவாரூரை நோக்கிப் பயணமாயினர்.

**தி**ருவாரூரை அடைகிற போது நல்ல இரவு நேரம். இரவு கமலம் வீட்டில் ஓய்வெடுத்துக் கொண்டு காலையில் குருநாதரைச் சந்தித்துவிட்டு, ஒருத்தி நாடு நோக்கிப் பய ணிப்பதாக முடிவு.

பொழுது விடிகிறபோது கமலத்து வீட்டு வாசலில் கூட்டம் 'ஜே ஜே' என்று நின்று கொண்டிருப்பதைக் கண்டு கமலமே ஒருகணம் பொறாமைப்பட்டுப் போனாள். இத்தனைக்கு ஒருதடவைக்கூடத் திருவாரூர் வந்து குறிஞ்சி பாடியது கிடையாது. கட்டுச்சோறு மூட்டைகளும் அக்கம் பக்கத்தாரும் நிரப்பிய செய்திகள் பல செவிகளில் தேனை வார்த்திருந்தனவே!



நாமும்தான் ஊர் ஊராகச் சென்று நாட்டியம் ஆடுகிறோம்? இப்படி ரசிகர்களா? நம்மை ரசிக்க வரும் ரசிகர்களே பணமுதலைகள்தாமே? என்று எண்ணுகிற போது கமலத்துக்கு நாணமாகவும் இருந்தது.

குறிஞ்சி, காலைக் கடன்களை முடித்துக் கொண்டாள். குருநாதர் இல்லம் செல்ல, தன்னை ஒருவாறு எளிமை யோடு அலங்கரித்துக் கொண்டும் புறப்பட்டாள்.

அம்மம்மா! இந்த அலங்காரத்தைக் கண்டு எத்தனை நாட்களாய்விட்டன என்று மகிழ்ந்து போனாள் கற்பகம்.

வெளியே வருகிறாள் – இசை வெளிச்சம் குறிஞ்சி.

எல்லாரும், வயதில் சிறியவர் பெரியவர்களெல்லாம் வணங்குகிறார்கள்.

"ஏம்மா! எங்க ஊருக்கு வந்து ஒரு நாளைக்குப் பாடக் கூடாதா?" என்றாள் ஒரு வயதான அம்மாள்.

"வாய்ப்பு ஏற்படவில்லை தாயே! ஏற்படுகிறபோது வந்து பாடுவேன்!"

அனைவருக்குமே ஓர் ஆச்சரியம். இப்படி வணங்கத் தக்க ஒரு பேரழகா? திருவாரூர் தேவியே அவதாரம் பூண்டு வந்ததுபோல!

கமலம் கேட்டுக் கொண்டாள்: "குறிஞ்சி! கோயிலுக்கு போய் சுவாமியைத் தரிசனம் செய்துவிட்டுக் குருநாதர் வீட்டுக்குச் செல்லலாமே!"

குறிஞ்சி கூன்விழுந்துபோன சமுதாயமாய்ச் சிரிக்கிறாள். கேவலம் வேசிகளையும் நாடக நடிகைகளையும் அனும திக்கிற கோயில், ஜாதி பற்றியதில் தீண்டாமையைக் கடை பிடிக்கலாமா? தீண்டாதவர்களிலும் தீட்சண்ய மிக்கவர் களில்லையா? இவர்களுக்கு இடம்தராத சந்நிதானத்துள் நுழைய, எனது நிதானம் இடம் தரவில்லை என்று கூறத்தான் நினைத்தாள். இதனை கமலத்திடம் கூற முடியுமா?

வேறுவிதமாகக் கூறினாள்:

"அவசியமில்லை அக்கா! சிதம்பரம் என்னையும் என் தமிழையும் தள்ளிவைத்த பிறகு, இனி கோயில்

களுக்குச் செல்வதில்லை; கச்சேரியும் செய்வதில்லை என்று சபதம் செய்து கொண்டேன். அப்படியே ரசிகர்களை முன்னிட்டு கச்சேரி தேவை என்றால், கோயில் கோபுர வாசலுக்கு வெளியே பந்தலிட்டுப் பாடுவேன்! ஒன்றை நான் யூகிக்கிறேன். இதனை எதிர்காலத்துக்கும் சேர்த்துச்சொல்வேன்! தீண்டாமை என்கிற பிரச்சினை இந்த மண்ணைவிட்டு ஒழிய வேண்டும்! இது நீடிக்குமானால், ஒரு நாளைக்குப் புரட்சி வெடித்து உயர்ந்தவன் தாழ்ந்து போவான்; தாழ்ந்தவன் உயர்ந்து போவான். இது மருந்துக்கும் அப்பாற்பட்ட நோயாகிச் சமுதாயத்தை ரத்தக் களறியாக்கப் போகிறது! 'இட்டார் பெரியோர்' என்கிற ஔவையின் பாடலையே புறக்கணித்துச் சொல்லுகிறேன்! இரண்டு ஜாதி – இரண்டே ஜாதி ஏற்பட வேண்டும்! ஒன்று அறிவு நிரம்பிய ஜாதி; இன்னொன்று அறிவில்லா ஜாதி! அதாவது கல்வியறிவிலா ஜாதி! அறிவான ஜாதி – அவன் பறையனேயானாலும் – அந்த ஜாதிக்கே ஆலயம் முதல் அனைத்திலும் முதலிடமாக இருக்க வேண்டும்! அறிவு என்பதே சுத்தமான ஜீவாத்மா! அது பூணூல் அணிந்தால் என்ன? புலால் உண்டால் என்ன? இந்தப் பிரதானத்தை –அறிவுப் பிரதானத்தை இந்தச் சமூகம் எப்போது ஜீரணிக்கிறதோ அப்போதுதான் நாடு நந்தவனமாகும்! இல்லை சுடுகாடாகும்! இது இந்தக் குறிஞ்சியின் தீர்க்கதரிசனம்! நான் கோயிலுக்கு வரவில்லை. குருநாதர் வீட்டைவிட ஒரு சிறந்த கோயில் இருப்பதாகவும் தெரியவில்லை."

குறிஞ்சி இப்படி உணர்ச்சிவசப்பட்டுக் கூட்டத்தையும் பாராது கூறியதும், கூடியிருந்தவர்கள் எழுப்பிய மகிழ்ச்சியொலியும் கரவொலியும்...

ஏதோ, எதிர்காலச் சமுதாயத்துக்கே எதிரொலிப்பது போலிருந்தது.

அனைவரிடமும் கரம் கூப்பி விடைபெற்ற குறிஞ்சி கமலத்துடன் கோச்சு வண்டியில் புறப்பட்டாள்.

தீட்சிதர் வீட்டுவாசலுக்கு முன் கோச்சு வண்டி நிற்கிறது.



குறிஞ்சி வருகிறாள் என்கிற செய்தி அறிந்து அந்தத் தெருவே கூடிவிட்டது.

குருநாதர் வீட்டைப் பார்க்கிறாள்.

ஓ... பழைய நினைவுகளே! ஞானசுந்தரத்துடன் எப்படியெல்லாம் ஆடிப்பாடி மகிழ்ந்த நினைவுகளே!

கண்களில் மெல்லிய நீர்த்திரை...

வீதியில் ஏதோ சத்தம் கேட்கவே தீட்சிதரின் பெரிய மனைவியும் அவளது மகள் அன்னபூரணியும் கதவைத் திறந்து கவனிக்க அங்கே குறிஞ்சி, கூட்டம் சகிதமாய் நிற்க, "ஓ!... இவள் பணக்காரியாய் விட்ட கொழுப்பைக் காட்டி அவமதிக்க வந்திருக்கிறாள்" என்று நினைத்து விட்டாள்.

"எங்கேடீ வந்தே? பறைச் சிறுக்கி! எங்காத்துச் சங்கீதத்தை திருடிண்டு போய், கொழுத்த பணக்காரியாயிட்டே! அதைக் காட்ட கோச்சு வண்டியிலே வந்து இறங்கி இருக்கியா?"

கோபத்தில் வார்த்தைகள், வெந்நீர்க் குமிழிகளாய் வெடித்தன.

அன்னபூரணி குறுக்கிட்டாள்:

"இவகிட்ட என்னம்மா பேச்சு? முறத்தால் அடிச்சு விரட்டாக் குறையா விரட்டினீங்களே! உங்களை எதால் அடிக்கிறதுன்னு கேக்கற தோரணையில் ஜனங்களைக் கூட்டிண்டு வந்து நிக்கிறா! கேலி பண்றா!"

கதவு படீர் என்று சாத்தப்பட்டது; தாழிடும் சத்தமும் வேகமாகக் கேட்டது.

# இராகம் – 30



## மாஞ்சி

குறிஞ்சி, திருவாரூர் வந்திருக்கும் செய்தி காலையிலேயே, தீட்சிதர் வீட்டுக் கதவைத் தட்டியிருந்தது. இல்லையென்றால் அவ்வளவு வேகமாக அது மூடுமா?

தீட்சிதர் பெருமானாருக்கும் செய்தி செவிகளைக் குளிரச் செய்திருந்தது.

மிகுந்த படுக்கையாக இருந்தும் முத்துசாமி தீட்சிதர், "குழந்தை வந்திருக்கிறாளா? எனது புகழை நாடெல்லாம் பரப்பும் என் குழந்தை வந்திருக்கிறாளா? குறிஞ்சி வந்திருக்கிறாளா? அடி, ஈஸ்வரீ! திருத்தணிகை குருகுகா! அந்தக் குழந்தைக்கு ஏனிந்த வேதனையைக் கொடுத்தாய்? அந்த ஞானக் குழந்தைக்கு ஏனிந்த சோதனையை அளித்தாய்?" என்று மனம் முணுமுணுக்கிறது. கண்களில் நீர் முத்துக்கள். துண்டை எடுத்துத் துடைத்துக் கொள்கிறார். பின்னர் ஆரோக்கியமின்மையால் சற்றே கண்ணயர்ந்தார்.

அப்போதுதான் இந்தக் கதவு சாத்தும் கூத்து நிகழ்ந்து முடிந்திருந்தது.

அறையினுள் 'லோலோ' என்று முனகிக் கொள்கிறாள் பெரிய தீட்சிதரம்மா. அந்தக் கறுப்பின் ஏசலை, சின்ன



தீட்சிதரம்மாவான சிவந்த மேனி செவி சாய்கிறது. "என்னது! தெய்வீக வரம் பெற்ற குறிஞ்சி – எனது அன்பிற்குப் பாத்திரமான குறிஞ்சி வெளியில் காத்திருக்கிறாளா?"...

"தீண்டாத நாய்க்கு தீட்சிதர் வீட்டு வாசற்படி ஒரு கேடா?" என்பன போன்ற பெரிய தீட்சிதரம்மாவின் வசை மாரிகள் எரிச்சலாய் உதிர்ந்து கொண்டிருக்கின்றன.

வெளியே...

குறிஞ்சியின் கண்களில் காவிரிப் புனல்...

அவமானம்தான்; ஆயினும் குருநாதர் சந்நிதி. பொருட்படுத்தவில்லை.

மனம் காஞ்சி ஸ்ரீ ஆசார்ய சுவாமிகளை எண்ணி மறுகிக் கொள்கிறது. உபதேசித்து வரும் அத்வைதத்தின் பெருமை இன்னும் சரியாகப் போய் சேர வேண்டியவர்களிடம் சேரவில்லையோ என்று நொந்து கொள்கிறாள். ஆதிசங்கர பகவத்பாதர் – புலையன் வேறு; புரோகிதன் வேறு என்று சொல்லவில்லையே!

கண்ணீருடன் மனம் சங்கர ஸ்மிருதியை முணுமுணுத்துக் கொள்கிறது.

**ச்ருதி – ஸ்ம்ருதி – புராணானாம்**
**ஆலயம் கருணாலயம்**
**நமாமி பகவத்பாத**
**சங்கரம லோக சங்கரம்...**

ஹே, ஜகத்குரு!...

இதயத்தே தம்பூர் சுருதி ஒலிக்கிறது. இதயமே பேசுகிறது...

கண்ணீர்த் துளிகள் சுரங்களாய் உதிர்க்கின்றன.

வாசலுக்கு வெளியே நின்று பாடுகிறாள்.

என்ன பாடுகிறாள்? எதனைப் பாடுகிறாள்?

அன்று, எந்த நந்தனை – புலயனைக் கோயில் கோபுர வாசல் அனுமதிக்கவில்லையோ, அந்த நந்தன் அனுமதி

கேட்டு ஈசனை நோக்கிப் பாடினானே அந்தப் பாடலைப் பாடுகிறாள்...

காஞ்சி முனிவரை மனத்தில் நொந்து கொண்டு மாஞ்சி ராகத்தில் பாடுகிறாள்...

பறையன் சரித்திரத்தை ஒரு பார்ப்பான் அக்காலத்தில் பாடலாமா? பாடினானே கோபாலகிருஷ்ண பாரதி! அவன் பாடலையே பாடுகிறாள்...

**'வருகலாமோ ஐயே!'**

இடையில் சின்ன விக்கல்...

குறிஞ்சியின் நெஞ்சு அடைக்கிறது.

ஆயினும் சுதாரித்து மேலும் குரல் கொடுத்து பாடி இறைஞ்சுகிறாள்...

**'நான் அங்கே**
**வருகலாமோ? - ஐயே!'**

கமலமென்ன? கூடியிருந்த கண்கள் அனைத்திலும் பனித்துளிகள்தாம்!...

படுக்கையிலிருந்த முத்துசாமி தீட்சிதர் செவிகளில் மாஞ்சி ராகத்து நந்தன் பாடல், மூடியிருந்த கதவைக் கிழித்துக் கொண்டு ஒலிக்கிறது...

**வருகலாமோ ஐயே! உன்**
**அருகில் நின்று கொண்டாடவும்**
**பாடவும், நான் அங்கே,**
**வருக... லாமோ?**
**ஐயே! ஐயே!...**

பாடல் தேனாய், தீட்சிதர் பெருமானின் செவிகளில் பாய்ந்தாலும், சோர்வு கண்ட உடலில் சோகம் பரவுகிறது...

ஆ! என் குழந்தை குறிஞ்சி... என் குழந்தை குறிஞ்சி...

ஏன் இந்தப் பாடலை வாசற்படிக்கு வெளியே நின்று பாடுவது போல...



என்ன நடந்தது? எதற்காக வெளியில் நின்று இப்படி இறைஞ்சி, வரம் கேட்டு, அனுமதி வழங்கப் பாடுகிறாள்?...

சிறிய மனைவியை மெல்லக் குரல் கொடுத்து அழைக்கிறார்.

குரல் கேட்டு விரைந்து உள்ளே நுழைகிறாள் அவள்.

"என்னங்க?"

"வெளியில் குறிஞ்சி பாடுவது மாதிரி கேட்கிறது... வருகலாமோ என்று ஏன் அவள் அனுமதி கேட்கிறாள்?"

முத்துசாமி தீட்சிதர் தீனமான குரலில் இவ்வாறு கேட்கிறபோது சின்ன இருமல்.

பொங்கி வந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டே நடந்ததைச் சின்னவள் விவரிக்கிறாள்.

"அடி சண்டாளி! இந்தச் சண்டாளியா அவளைப் பார்த்துச் சண்டாளி என்றாள்? என்னை அழைத்துக் கொண்டு போ! அழைத்துக் கொண்டு போ! என் குழந்தை அழுகிறது! ஞானக்குழந்தை அழுகிறது! என்னைக் காண அனுமதி கேட்டு அழுகிறது... முருகா! குகா! ஐயோ வருகலாமோவா? வா... வா... வா..."

இருமுகிறார். சின்ன மனைவி அவரைக் கைத்தாங்கலாகப் பிடித்து எழுப்பி அழைத்து வர, பெரியவள் பார்த்து விட்டாள்.

"எங்கே, போறேள்?"

"வெளியே ஒரு பிராமணத்தி என்னை அழைக்கிறாள்! இந்தப் பறையன் அவளது தரிசனம் நோக்கி போகிறான்."

"என்ன பேசறேள்? நீங்க பேசற பேச்சா இது? வயசாகி நோய் வந்தா இப்படியா உளர்றது?"

"சண்டாளி! என் ஞானக் குழந்தையை உள்ளே அனுமதிக்காமல் கதவைச் சாத்தியா அவமானம் செய்தாய்? உனக்கு என்னடீ தெரியும்? குலத்தால் யாரும் உயர்ந்து விடுவதில்லை; பலத்தால் உயருகிற நியதியை நீ அறிய நியாயமில்லை."

அவர் மெல்லத் தடுமாறி நடக்கிறார்.

குறிஞ்சி பாடி முடித்து, "ஐயே!" என்று கடைசிச் சொல்லை ஆதார சுருதியில் நிறுத்துகிற போது...

கதவு, சொர்க்க வாசலைப் போலத் திறக்கிறது...

எப்படி இருந்த தீட்சிதர் மகான் இப்படியா?

"சுவாமீ!" என்று கதறிய குறிஞ்சி, நெட்டங்கமாக அப்படியே - வாசலுக்கு வெளியில் நின்றே விழுந்து கதறுகிறாள்.

"எழுந்திரு மகளே! எழுந்திரு! உன்னை எனது பெரிய மனைவி அலட்சியம் செய்து விட்டாள். அவள் உன்னை அறியாதவள்; தன்னையும் அறியாதவள். வா, குறிஞ்சி! உள்ளே வாம்மா குறிஞ்சி!"

"மன்னிக்க வேண்டும் குருநாதா! எனக்கென்று ஓர் இலட்சியம். என்னை அலட்சியம் செய்தது கைலாயமே யானாலும் காலெடுத்து வைக்கமாட்டேன். எனது மன வீட்டில் நீங்களிருக்கிறபோது, இந்த வீட்டுக்குள் நான் பிரவேசிக்க வேண்டுமா? ஒன்று சத்தியமாக நடக்கும்! நீங்கள் அழைக்கிறீர்கள் என்பதால் உங்கள் வீட்டில் இருப்பவர்கள் பேசாமல் இருப்பார்கள். நான் சென்றதும் வீட்டையே கழுவித் தள்ளுவார்கள். கோமியம் தெளிப் பார்கள். இது தேவையா? நான் கழுவித் தள்ளக் கூடிய வளல்ல; தாங்கள் அளித்த சங்கீதப் பிச்சையால் தமிழ் நாடே தழுவிக் கொண்டிருப்பவள்! இந்த அவமானம் எனக்குத் தேவையா?"

"என்னையுமா சொல்லுகிறாய் குறிஞ்சி?" என்று கண்களைத் துடைத்து கொள்கிறாள் தீட்சிதரின் சிறிய மனையாள்.

"நீங்கள் அளித்த ஆதரவுதானே தாயே, எனக்கு ஆதார சுருதி? பொதுவில் சொன்னேன்."

தீட்சிதர் தீனமான குரலில் பேசுகிறார்:

"குறிஞ்சி! உன் வாழ்க்கையில் நடந்த துன்பியலைக் கேள்விப்பட்டு அந்தத் திருத்தணிகை முருகனை எவ்வளவு திட்டினேன் தெரியுமா?"



"என்ன செய்யலாம் சுவாமீ? நமது தமிழ்த் தாத்தாவே கேட்டு வியக்கிறான். 'ஊழிற் பெருவலி யாவுள? மற் றொன்று சூழினும் தான்முந் துறும்!' எனவே இதனை ஊழ் என்றே இப்போதைக்கு நான் செய்து கொண்ட முடிவு. நடந்தது நடந்துவிட்டது சுவாமீ! தாங்கள் வறுமை யாலும், நோயாலும் வாடுவதாக கமலம் அக்கா சொன் னார்கள். எனவே காண ஓடோடி வந்தேன். எனது ஆசை ஒன்று; நிறைவேற்றுவீர்களா?"

"சொல் குறிஞ்சி!"

"சத்தியமாக மறுக்க மாட்டீர்களே!"

ஒருகணம் யோசிக்கிறார் முத்துசாமி தீட்சிதர், "வடிவே லறிய மறுக்க மாட்டேன்."

"கொஞ்சம் வாசற்படியை விட்டு வெளியே வந்து வாசற்படியில் அமருகிறீர்கள்."

மறுக்காமல் அவ்வண்ணமே அமருகிறார் முத்துசாமி தீட்சிதர்.

திரும்பிப் பார்த்துச் சமிக்ஞை செய்கிறாள்.

இரண்டு ஆட்கள் ஒரு கனத்த கோணிப்பையைத் தூக்கி வருகிறார்கள். அவர்கள் உதவியுடனேயே பையை அவிழ்க்கிறாள். அதில் நிரம்பி இருந்த பொற்காசுகளை, அப்படியே தீட்சிதர் பெருமான் சிரசில் தனது இருகரங்களால் அள்ளி அள்ளி அபிஷேகிக்கிறாள்; அகமகிழ் வுடன் அபிஷேகிக்கிறாள்.

"இந்தக் கனகாபிஷேகம் எனது குரு காணிக்கை சுவாமீ!"

ஆ! வியக்காதார் யார்? விதிர்த்துப் போகாதார் யார்?

"நான் விடைபெறுகிறேன் சுவாமீ!"

தீட்சிதரின் கண்களில் சங்கீதம் ஆனந்த நீர்த்திவலை களாய்ச் சொட்டுகிறது.

"குறிஞ்சி! நான் உன்னை ஒருநாள் கூட அருகில் அமர்த்தி சட்சமத்தையும் சொல்லவில்லை. பஞ்சமத்திலும்

நிறுத்தவில்லை. ஆனால் நீ மத்தியமமாக நின்று பாடிய இந்த மாஞ்சி ராகம். காஞ்சி மாமுனிவரின் கருணையால் ஏற்பட்ட கடாட்சம்! உனது இந்தப் புகழைக் கம்பனிருந்து பாட வேண்டும்! காளிதாசனிருந்து பாட வேண்டும்! காளிதாசனின் காளிவரப் பிரசாதத்தையும் கம்பனின் தமிழ் ஞானத்தையும் என் போன்ற இசை ஞானத்தையும் பெற்ற ஒருவன் பிறந்து என்றைக்காவது உன்னைக் காப்பியத் தலைவியாக்கி எழுதுவான்! அவ்வாறு என்றோ எழுதப் போகிறவனுக்கு இன்றே எனது ஆசீர்வாதம்!... சென்றுவா மகளே!"

முத்துசாமி தீட்சிதரின் தாள்பணிந்து எழுகிறாள் குறிஞ்சி.

கமலமும் வணங்கி எழுகிறாள்.

விடைபெற்றதும், கோச்சுவண்டி விரையத் தொடங்கியது.

முத்துசாமி தீட்சிதருடைய கண்களில் அழுத்தமான சங்கீத நீர்முத்துக்கள் சப்த சுரங்களாய் உதிர்ந்தன.

மனம், ஆதிசங்கரரின் திருபுரசுந்தரி அஷ்டகத்தைத் திரிகரணசுத்தியுடன் பஜித்துக் கொள்கிறது. அந்த சுலோகத்துக் கடைசி வரியான, 'சந்த்ர சூடாமணியம், த்ரிலோசன குடும்பனீம், த்ரிபுர சுந்தரீம் ஆச்ரயே!" என்பதை இருமுறை சொல்லிக் கொள்கிறது...

அன்றே கமலத்திடமும் விடைபெற்றுக் கொண்டு ஒருத்திநாடு நோக்கிப் பயணப்பட்டாள் குறிஞ்சி.

சஞ்சலம் சஞ்சரித்து வந்த மனத்தே இப்போது சற்றே மஞ்ஞை தோகை விரித்து மாஞ்சி ராக மகிமையால் மகிழ்ச்சி நடம்புரியத் தொடங்கியது.

சூரியச் செம்மல் மேற்கு மஞ்சத்தே சயனிக்கிற வேளையில், ஒருத்தி நாட்டையடைந்தாள் ஓரியாகி ஒருத்தியாக நின்று போன ஒண்டொடியாள் குறிஞ்சி. 'ஒருத்தி' என்ற சொல் அவளுக்கே பொருந்தும் போல இருந்தது.

மாளிகை யடைந்து ஓய்வு கண்டாள்.

இருட்டு கறுப்பு வியாபாரம் பேசத் தொடக்கமாகிக் கொண்டிருக்கிறது.



அந்தச் சமயத்தில் மயூரி வாத்தியம் வாசிப்பவனான லோகிதாசன் என்பவன் உள்ளே நுழைந்து ஒரு செய்தியைச் சொன்னான். அது–

திருச்சி கலெக்டர் நெல்சன் என்பவனை, எவனோ கொள்ளைக்காரன் சுட முயன்றதாகவும், அவன் தப்பி விட்டான் என்பதே! யார் அந்தக் கொள்ளைக்காரன் என்பது தெரியவில்லை.

மனத்தே அதுவரை ஆடிவந்த மயூரம் – மயில் – இந்த மயூரி வாத்தியக்காரன் லோகிதாசன் சொன்ன செய்தி கேட்டுத் தோகை யடங்கித் துவண்டு போனது.

யார்? ராஜகாந்தியாக இருப்பானா?

லோகிதாசன் வணங்கிப் புறப்பட்டுச் சென்றான்.

குறிஞ்சியின் நெஞ்சில் மீண்டும் குமுறியழும் கூச்சல்.

காளீ! அவன் ராஜகாந்தியாக இருக்கக் கூடாதே!

அகத்தே அலைகடலின் நுரைக் கோலங்கள், தாறுமாறாய்ப் பாய்ந்து குமிழ்களாய் வெடிக்கின்றன.

ராஜகாந்தி, ராஜகாந்தி, ராஜகாந்தி...

என் பவளமல்லி மரமே! நீ பூக்கும் பவளமல்லியின் காம்பு சிவப்பு. அது உனது குரூரம். ஆனால் மேலே விரிந்து மணக்கும் வெள்ளை இதழ்கள்? அவை உனது குணங்களல்லவா? இதயமல்லவா?

காளியின் கருணையோ?

யாரோ கதவைத் தட்டுகிறார்கள்...

எழுந்து சென்று கதவைத் திறக்கிறாள்.

அங்கே ராஜகாந்தி, கனத்த மீசை துடிக்க, கண்களில் நெருப்புப்பொறி பறக்க, இரும்பு தேகம் சிலிர்க்க நிற்கிறான்.

பல கணங்கள் குறிஞ்சியின் பிரமிப்பு. மீண்டும் சுய நினைவுக்கு வந்தவள். "ராஜகாந்தி" என்று கதறி பொங்குமாங்கடலைப் போலக் குமுறித் தன்னை மறந்து,

அவனைச் சேர்த்து மார்பில் தலை புதைத்து, இழந்து பட்ட தந்தையின் பாசத்தைத் திரட்டித் தஞ்சம் புகுந்த வளைப் போலத் தாரை தாரையாகக் கண்ணீர் வடிக் கிறாள்; தேம்பித் தேம்பி அழுகிறாள்.

"அழாதே மகளே! அழாதே! அனைத்தையும் கேள்விப் பட்டேன். உள்ளே வா!"

இருவரும் மாளிகையுள் நுழைந்து கதவைத் தாழிடு கிறார்கள்.

கற்பகம் கவனிக்கிறாள். ஆனால் வேலையாட்கள் கதி கலங்கிப் போயினர்.

"கற்பகம்! ராஜகாந்தி வந்திருக்கும் செய்தி, ஒரு கொசுவுக்கும் தெரிந்து வெளியே பறந்து சென்றுவிடக் கூடாது. ஜாக்கிரதை!"

கற்பகம் வாசலிலேயே காவலாக அமர்ந்து கொள் கிறாள்.

அறையினுள் சென்று இருவரும் அமருகிறார்கள். குறிஞ்சியின் கண்களில் மாலை மாலையாய் நீர்த் தாரைகள். வறண்டிருந்த அந்தக் கண்களில் நீருற்று எப்படித்தான் பெருகியதோ?

"மகளே! என் மகளே! இந்த நேரம் பார்த்து நானிங்கு இல்லாமல் போய்விட்டேன்! விதி, துரதிர்ஷ்ட சொக் கட்டான் விளையாடி விட்டது! அடே, சிவகங்கைக் காரா..."

ராஜகாந்தியின் பற்கள் ராட்சசமாய் நறநறக்கின்றன.

"கவலைப்படாதே மகளே! அவனை எப்படிப் பழிவாங்க வேண்டும் என்பது முடிவு செய்யப்பட்ட விஷயம். நான் இருவரைப் பழிவாங்கியதும் எனது கொடுமைகளைத் திருத்திக் கொள்கிறேன் என்று சொன்னேன் அல்லவா? ஒருவனைத் திருப்பதி வரை சென்று பழிவாங்கி விட்டேன். இந்த இடைவெளியில்தான் இந்தக் கோரம் நிகழ்ந்து விட்டது. இல்லையென்றால் சிவகங்கை அரண்மனைத் துகள் பறந்திருக்குமே! பயப்படாதே! இன்னும் ஒருவன்– அவன் கலெக்டர் நெல்சன். எனது குறி தவறி விட்டது. இனி நானிருக்க நீ எதற்கும் பயப்படத் தேவையில்லை. இனி உன் கச்சேரியின் தம்பூரே ராஜகாந்திதான்! உனது உயிர் பிரியுமானால் எனது உயிரும் அங்கேயே பிரியும்?"



குறிஞ்சி சூன்யமாய்ச் சிரித்துக் கண்களைத் துடைத்துக் கொள்கிறாள்; எப்படியோ! எனது பவளமல்லி மரத்து நிழல் கிடைத்துவிட்டது.

"குறிஞ்சி! பிறகு நிறையவே பேசுவோம்! எனது ஆட்கள் சுற்றிலும் காவல் நிற்கிறார்கள். பயமில்லை. உன்னுடன் அமர்ந்து, நீ சோறு பிசைந்து என் கையில் வைக்க நான் உண்டு எனது கோபத்தைத் தணித்துக் கொள்ள வேண்டும்."

இப்போதுதான் ராஜகாந்தியின் பாறைக் கண்களில் நீருற்றுப் பெருகியது.

"நானும் இன்னும் சாப்பிடவில்லை. உனக்கும் இட்டு நானும் உண்பேன்" என்று கூறி எழுந்து சென்றாள் குறிஞ்சி.

அந்த ஐம்பது வயது கரிய பெரிய கடோத்கஜனான ராஜகாந்தி, நாளை என்ன செய்வது என்பது குறித்துச் சிந்தனையை நாலா திசைகளிலும் சிதறடித்துக் கொண்டி ருந்தான்.

ஆயினும் அவனுக்கு ஆபத்து எக்கணத்திலும் வரலாம்; எக்கணத்தே அது வருமோ? வந்தாலும் ஆச்சரியப் படுவதற்கு இல்லை.

# இராகம் – 31



## தோடி

பொழுது விடியும்வரை ராஜகாந்தி ஆறுதல் சொன்னான்; தேறுதல் கூறினான். அதுவரையிலும் எந்த ஆபத்தும் வரவில்லை.

ராஜகாந்தி புறப்பட ஆயத்தமாகிறான்.

மேஜைமீது வெள்ளித் தட்டு; அதனை நிரப்பிய மல்லிகைப்பூ போன்ற *இட்டளிகள்; தேங்காய்ச் சட்டினி; கொத்துமல்லித் துவையல்.

பொய்களையே உடைகளாய் உடுத்திப் பெரிய மனிதர்களான சமூகத்தில், மெய்யில் நெய் விளக்கேற்றும் கொள்ளைக்கார மானுட ஆத்மாவான ராஜகாந்தி, அன்புடன் படைத்த சிற்றுண்டியை உண்ணத் தொடங்கினான்.

"ராஜகாந்தி! உனக்குக் கோழிக் குருமா சமைத்து வைக்கிற வீடல்ல இது; புலைச்சியேயானாலும் புலால் மறுத்தவள். திருவள்ளுவன் பேத்தி நான்!"

ராஜகாந்தி! கலகலவென்று சிரிக்கப் புரை காண்கிறது. தலையில் தட்டுகிறாள் குறிஞ்சி.

* மாவை இட்டு அரிப்பதால் இட்டளி என்றாயிற்று என்பது எனது கருத்து.



"நன்றாகத் தட்டு; என் தலையெழுத்தையே தட்டித் தட்டியடக்கியவள் அல்லவா நீ! குறிஞ்சி! உனக்கு அடிமையான நான் முதல், நானும் ஒரு சைவப் பிராணியாகி விட்டேன். குறிஞ்சியின் தந்தை நான்?"

விதிர்த்துப் போயின வேல்விழிகள்.

"நான்தான் உன்னை ராஜகாந்தி என்று பெயர் சொல்லியழைப்பதிலிருந்து விடுபடவில்லை. பழக்க தோஷம்!"

"சீ!சீ! நீ, என் பெயரையா அழைக்கிறாய்? ராஜகாந்தி ராகத்தையல்லவா அழைக்கிறாய்! இதுதான் நான் மகிழ்கிற ஒரே மகிழ்ச்சி! நீ இப்படியே அழைக்க வேண்டும். குறிஞ்சி! ராத்திரி உன் கையால் ஏன் சோறு சாப்பிட்டேன் தெரியுமா? உனது துயரங்களையெல்லாம் என் வயிற்றில் நிரப்பி ஜீரணிக்கவே!"

குறிஞ்சியின் கண்கள் கலங்கிவிட்டன.

"ஆ! மறுபடியும் கண்ணீரா? இரவு அவ்வளவு சொல்லியும் கண்ணீரா? உன்னைப் பழிவாங்கிய அந்த விதியை நான் சந்திப்பேன்! இழந்தவர்களைப் பற்றிக் கவலைப்படாதே! நானிருக்கிறேன் என்று சொன்ன சத்தியம் மாறாது! நான் நிசத்தை ரத்தத்தில் அபிஷேகிக்கிறவன்; பொய்யை வியர்வைத் துளிகளால் குளிப்பாட்டுகிறவனல்ல! ஒரு விஷயம் தெரியுமா?"

"என்ன ராஜகாந்தி?"

"உன்னைத் தங்காய், தங்காய் என்று அன்புடன் அழைத்த கோபாலகிருஷ்ண பாரதி என்கிற தமிழ்ப் பிரசாரகனுக்கு பொருளதவி செய்தேன்! தமிழ், தரித்திர ஒப்பனை செய்து கொள்ளக்கூடாது! இப்போது சில நூற்றாண்டாக அந்நிய மொழி உப்பரிகையில் தலை சீவுகிறது! தமிழ் தனது தலைக்கு எண்ணெயுமில்லாமல் பேன் பிடித்துத் தரையில் புரண்டு அழுகிறது! இது அந்நியர்க்கு இடம் கொடுத்த காலக் கொடுமை!"

குறிஞ்சித் தமிழ், நெஞ்சுள் குமுறுகிறது.

"ராஜகாந்தி இன்னொரு உதவி செய்வாயா?"

"காத்திருக்கிறேன்."

"திருக்கடவூர் அபிராமிபட்டரும் வறுமையால் வாடுகிறார்."

"அந்த அக்கிரகாரத்து அதிசயப் பிறவியா? நாளையே இது நடந்தேறும். குறிஞ்சியின் ஆணைகள்தாமே இந்தக் கொள்ளைக்காரனின் சட்டம்! விதி என்னைத் திருப்பதிப் பழி வாங்கும் படலத்துக்கு அனுப்பாமலிருந்தால், இந்தத் தீவினை மூண்டிருக்காது. மீண்டும் சொல்லுகிறேன். அந்த விதியையே நான் சந்திப்பேன். இன்னும் பாக்கி இருப்பவன். தமிழ்ப் பெண்களைக் கற்பழிக்கும் நெல்சன்! அந்தக் கலெக்டர் தப்பிவிட்டான்? எங்கே போய்விடப் போகிறான்! அவனைப் பழி வாங்கிவிட்டால், அக் கண முதல் நான் குறிஞ்சிதாசன்."

"இது விபத்தானது!"

"இல்லை விடுதலைப் போராட்டத்துக்கு ராஜகாந்தியும் ஓர் அணிலாக இருந்தான் என்கிற பொன் வரிகள்! தமிழ்ப் பெண்கள் ஐந்து ரூபாய்க்கு விலை போகிற அக்கிரமத்தை கரிகாலச் சோழன் கண்டானா? இல்லை. கடைசி காலத்தில் தமிழகத்தை மாலிகாஃபூரிடம் அடகு வைத்த சுந்தரபாண்டியனும் வீரபாண்டியனும் கண்டார்களா? ஆனாலும் அந்த இரு தூரோகிகளால் வந்த துர்ப்பாக்கியம்தானே தமிழகச் சரித்திரத்துக்குப் பிடித்த தரித்திரம்! இப்போது மராட்டியன் ஆட்சியில் ஒரு கற்பின் விலை ஐந்து ரூபாயல்ல மகளே! ஒரு பெண்ணின் விலை!"

ஓ... ராஜகாந்தி இவ்வளவுக்கு விஷய ஞானமுள்ளவராக இருக்கிறாரோ! வறுமையை எவ்வளவு அழகாகச் சொல்லுகிறாரே!

"குறிஞ்சி! இனி நீ கச்சேரியில் கலந்து கொள்ள வேண்டும். ஞானசுந்தரத்தை இழந்து விட்டால் நீ ராக சுந்தரங்களை இழந்துவிட முடியுமா? அந்நிய மொழியால் செத்துக் கொண்டு வரும் நமது தெய்வமாத் தமிழ், உன்னாலல்லவா தாயே, உயிர் பெற்றுத் தலைதூக்கி உலவுகிறது! நீ தனித்தே பாடலாம்."



உண்டு முடித்த ராஜகாந்தி எழுந்து கையலம்பிக் கொள்கிறான்.

அப்போது...

வெளியில் ஒரே ஆரவாரச் சத்தம்.

கற்பகம் ஓடோடி வருகிறாள்.

"அம்மா! தஞ்சை மன்னர் சரபோஜி, நம் மாளிகை நோக்கி வருகிறார்."

சரபோஜி! இங்கு ஏன் வரவேண்டும்?

ராஜகாந்தி யோசிக்கிறான்.

"மகனே! எல்லாம் நன்மைக்கே! சரபோஜியின் வருகை சுராங்கமாகவும் இருக்கலாம்; குகையாகவுமிருக்கலாம். அருகில் உள்ள தனியறைக்குப் பின்புறவாசல் இருக்கிறது! முன்புறக் கதவைப் பெயருக்குப் பூட்டி வை. ஒன்று; சரபோஜி நன்மையாக எதைக் கூறினாலும் தயங்காமல் ஏற்றுக் கொள். தீமையாக ஏதாவது கூறினால், 'ஒரு நிமிஷம்' என்ற வார்த்தையை அழுத்தமாகச் சொல்லி யோசிப்பது போல பாவனை செய்! நான் உள்ளிருந்து பூனை உருட்டுவது போல பாத்திரம் ஏதேனும் ஒன்றை உருட்டுவேன். உருட்டினால் ஒப்புக்கொள்; உருட்டவில்லை என்றால் யோசித்துச் சொல்லுகிறேன் என்று சொல்லிவிடு! பிறகு நாம் யோசிப்போம். நான் உள்ளிருக்கிற சலனம் மட்டும் உனது கண்களில் தெரியக்கூடாது. கலெக்டர் நெல்சன் என்னைச் சல்லடை போட்டுத் தேடுகிறான்."

ராஜகாந்தி அறையினுள் நுழைய குறிஞ்சி கதவைப் பூட்டுகிறாள்.

சரபோஜி மன்னர் வெளிவாசலுக்கு வந்துவிட்டார். ஊரே திரண்டு விடுகிறது. ஒருத்திநாடு என்பது அவரது காதல் நாடல்லவா? இப்போது அந்த நாட்டில் நகங்களால் பறிக்க முடியாத ஒரு தேவமலரை – இசை மலரை அகங்கள் பறிமாற்றத்தின் மூலம் பறிக்க வந்திருந்தார்.

வெளியே ஓடிச்சென்று முகங்களில் ஏழு சுரங்கள், வானவில் வண்ணமாய் பிரபையிட வரவேற்கிறாள் குறிஞ்சி.

“குறிஞ்சி! கவலைகளை மறந்து என்னை வரவேற்கிறாயே, அதுவே மகிழ்ச்சி! உனது நிலை கேட்டு சரபோஜி மட்டுமா கண்ணீர் விட்டான்? தஞ்சை புரியே அழுதது! ஆறுதல் சொல்ல இப்போதுதான் நேரம் கிடைத்தது. வந்தேன்.”

‘சுயநலமான நேரம்’ என்று கூறத்தான் நினைத்தாள்; அவசியமில்லை. அது அநாகரிகம் என்று வாய் மூடிக் கொண்டாள்.

சரபோஜி மன்னர் மட்டுமே குறிஞ்சி மாளிகையுள் நுழைகிறார். அந்தரங்கப் பாதுகாப்பாளர்கள் நுழைவதை அவர் விரும்பாமல் தடுத்து நிறுத்தி விட்டார்.

சரபோஜி மன்னரைப் பிரதான கூடத்துக்கு அழைத்துச் சென்று ஆசனத்தில் அமரச் செய்து, தானும் எதிரில் அமர்ந்தாள். அவள் இசைச் சக்கரவர்த்தினியல்லவா?

மாளிகையைச் சுற்றிக் கவனிக்கிறார் சரபோஜி மன்னர். ராகங்களின் சுர ஜாலங்களைப் போல் அலங்கரித்திருந்தாள் குறிஞ்சி.

“சரபோஜியின் கலைநுணுக்கம் மாளிகையில் தெரிகிறது.”

“இல்லை, இல்லை! குறிஞ்சியின் இசை நுணுக்கம் உங்கள் அரண்மனை அடைய முயன்றுகொண்டிருக்கிறது.”

குறிஞ்சியின் சுயமரியாதையான நிமிரலைக் கண்டு கலகலவென்று சிரித்தார் ராஜா சரபோஜி. தலையில் கனத்திருந்த தலைப்பாகையைக் கழற்றி மேசைமீது வைத்துவிட்டு அடர்ந்த மீசையை நீவிவிட்டுக் கொள்கிறார். ஐம்பது வயதை தாண்டியும் கறுத்த ரோமம்; களையான தோடிராக இனிமை அவரது உருவில் அந்த ராக மூர்ச்சனை சுரமான காந்தாரமாய் குழைந்து ஒலிக்கத்தான் செய்தது. ‘சரஸீஜ நாபமுராரே’ என்கிற சுவாதித் திருநாள் கிருதியைப் போல!”

“ஒரு கலைஞனுக்கு இருக்க வேண்டிய நியாயமான கர்வம்! அதனால்தான் உனது அழகு, ரோஜாவைத் தோற்கடிக்கிறது. ஆங்கிலத்தில் ஒரு மகாகவிஞர் வில்லியம் ஷேக்ஸ்பியர், நமது கம்பன் மாதிரி...”



“மன்னிக்கவும்; நீங்கள் ஆங்கில மகாகவி பற்றிப் பேசுங்கள். தெரிந்து கொள்கிறேன். கம்பன் மாதிரி என்று கூறாதீர்கள்! காரணம் உங்களுக்கு கம்பனைப் பற்றி ஒன்றுமே தெரியாது. அவன் பெயர் மட்டுமே தெரியும். கம்பனுக்கு இணையாக முன்னும் பிறந்ததில்லை; பின்னும் பிறக்கப் போவதில்லை; பிரபஞ்சத்திலும் பிறக்கப் போவதில்லை. இப்போது வில்லியம் ஷேக்ஸ்பியரைப் பற்றிச் சொல்லுங்கள்.”

சரபோஜி நயமாய்ச் சிரித்துக் கொள்கிறார். “உனது தமிழ்ப்பற்றுக்குத் தலைப்பாகையைக் கழற்றிய என் தலை வணங்குகிறது. தலைப்பாகையைக் கழற்றியதே உனது இசைக்கு மரியாதை தரத்தானே? நான் கம்பனைப் படிக்கவில்லை; ஒப்புக் கொள்ளுகிறேன். நீ ஷேக்ஸ்பியரை அறிய மாட்டாய்! கம்பனின் சொற்களில் சாகித்யம் இனிக்கும். *ஷேக்ஸ்பியரின் சொற்களில் சங்கீதம் கேட்கும்! அவன் முழுக்க முழுக்க ஒரு கதையைக் கற்பனையாகப் பொய்யுரைக்கவில்லை; முழுக்க முழுக்க ஒரு கதையைத் தழுவவில்லை! சரித்திரங்களில் காணப்பெற்ற சிலவரிகளை வைத்துக்கொண்டு தனது வரப்பிரசாதமான கற்பனையால் சமத்காரமான படைப்புகளைச் சாதித்துவிட்டுச் சென்றவன். ஆனால் அகராதியில் கற்பனை என்ற சொல்லுக்கு கம்பன் என்று அர்த்தம் எழுத வேண்டும். இதையும் நானறிவேன்!”

“இப்போது இது குறித்துப் பேச அவசியம்?”

“ஷேக்ஸ்பியர் ரோமியோ ஜூலியட் என்கிற காதல் நாடகக் காப்பியம் எழுதி இருக்கிறான். அதில் ஜூலியட் என்பவள்பால் ரோமியோ என்பவன் பைத்தியம் கொண்டான். என்னுடைய மகன் சிவாஜி, குறிஞ்சி என்கிற ஜூலியட் பேரில் காதல் கொண்டு பைத்தியமாய் அரண்மனையைச் சுற்றி வருகிறான்! எனவே, நான் காதல்

* சரபோஜி ஆங்கிலத்தில் பாப்புலமையுடையவர்.

பிச்சை கேட்க வாசற்படியில் நிற்க வேண்டும்! மன்னன் என்பதால் உள்ளே வந்து அமர்ந்து தலைப்பாகையைக் கழற்றி அதனைப் பிட்சாப் பாத்திரமாக்கிக் கேட்கிறேன்!"

*மன்னர் சரபோஜியின் கண்கள் கலங்கி விட்டன.

"எனது சோக நிலையறிந்துமா?"

"கவலை என்பது இரவைப் போல நிரந்தர இருட்டல்ல. இது ஒரு மூடிய 'அறை' யிருட்டு! சன்னல்களைத் திறந்து விட்டால் ஓடிப்போகிற பொய்யிருட்டு!"

நயமான இந்தச் சொற்களைக் கேட்டு, சரபோஜியின் அறிவுக்குத் தலை வணங்குவதுபோலத் தலையைக் குனிந்து கொண்டாள் குறிஞ்சி.

"குறிஞ்சி! என் மகனும் இலக்கிய அறிவு, இசையறிவு கொண்டவன். நானும் ஏன் ஷேக்ஸ்பியரைப் பற்றிய பேச்சை எடுத்தேன்? ஒருநாள் ஷேக்ஸ்பியர் எழுதிய ரோமியோ ஜூலியட்டை அவன் வாசித்துக் கொண்டிருந்தான் – உன் நினைவாகத்தான்! அதிலே ஒரு வரி; 'ரோஜாவை எந்தப் பெயரிட்டு அழைத்தாலும் ரோஜாதான்!' என்று காதலியைப் பார்த்து காதலன் சொல்கிறான். குறிஞ்சி, குறிஞ்சி என்று கதறினான். நான் பதறியடித்து ஓடினேன். 'அப்பா! ரோஜாவை எந்தப் பெயரிட்டு அழைத்தாலும் ரோஜாதான்' என்கிறான் ரோமியோ ஜூலியட்டை நோக்கி!' என்றான். உடன் நான் 'குறிஞ்சிப் பூவை எந்தப் பெயரிட்டு அழைத்தாலும் குறிஞ்சிதான்; என்கிறாயாடா?' என்றேன். அவன் என்ன சொன்னான் தெரியுமா?"

"என்ன சொன்னார்?"

"இது சாதாரணக் கற்பனை! என் குறிஞ்சி தோடி ராகம்! தோடி ராகத்தை மட்டும் எப்படிப் பாடினாலும்– அதாவது பாஷாங்கமில்லாமல் எப்படிப் பாடினாலும் தோடிதான்! என் குறிஞ்சியும் ஒரு தோடி ராகம்; இந்தப்

* அரசனிலும் சாதாரணமானவன்தான். மன்னர் என்று நான் குறிப்பிட்டு வருவது கலைமன்னர்; ஏன், கலைமாமன்னர்.



பாக்கியம் வேறு எந்த ராகத்துக்கும் கிடையாது!" என்றான்.

தலை குனிந்த குறிஞ்சி இன்னும் நிமிரவில்லை. ஓ... எவ்வளவு பெரிய சிந்தனை...

"உங்கள் குமாரர் பாஷாங்கமாகி விட்டவர்தானே?"

"அவனது திருமணத்தைச் சொல்லுகிறாயா குறிஞ்சி? தேகத்தால் பாஷாங்கப்படுவதைவிட மோசமானது ஆத்மாவால் பாஷாங்கப்படுவதல்லவா? நீயும் ஞானசுந்தரத்தை நேசிக்கத்தானே செய்தாய்? ஒரு பாஷாங்கம் இன்னொரு பாஷாங்கத்தையடைகிறபோது, சுத்தமத்திமமும் பிரதிமத்திமமும் சேர்ந்த ராகமாகிறதே யொழிய களங்கம் என்ற சொல்லுக்கே காரணமில்லை! உனது குற்றாலக் குறிஞ்சி ராகமும் பிரதிமத்திலிருந்து ஒரு சுரம் சுத்தமத்திமமானதால் தானே சுவை பட்டது? அது வக்கிரத்தால் அல்லவா வன்மை பெற்றது? என் சிவாஜியும் வக்கிரமல்ல; நீயும் வக்கிரமல்ல! வாழ்க்கை வக்கிரமென்பதை உனது அபூர்வ ராகம் எடுத்துக் காட்டுகிறது! இல்லையா?"

"ஆனாலும் நான் பாஷாங்கமல்ல; ஆத்மா தூய்மையுடையது. அது பாஷாங்க – களங்கமாவதில்லை. நீங்கள் கூறிய விளக்கத்துக்கு ஒரு திருத்தம் சொன்னேன்!"

குனிந்த குறிஞ்சியின் தலை, நாகத்தின் நிமிரலைப் போல நிமிர்ந்து இடது வலதுமாக அசைத்து நோக்குகிறது. ஆனால் சீற்றமில்லை. திருமணம் என்பதே ஆத்மாவின் இனிய சிருஷ்டிகள் என்பது போன்ற பார்வை அவளது நீல நயனங்களில் நிதரிசனமாகத் தெரிகிறது.

"இப்போது இளவரசர் எப்படி இருக்கிறார்?"

"படுத்த படுக்கையில் 'குறிஞ்சி, குறிஞ்சி' என்று உளறுகிறான்! பைத்தியமாக அரண்மனையில் உலவுகிறபோது 'குற்றாலக் குறிஞ்சி ராகம் கேட்கிறது' என்று அடிக்கடி கூச்சலிடுகிறான்! நீ அந்த ராகத்தைப் பாடினால் அவனது சித்தப்பிரமை தெளியும்; தெளிந்து விடும்!"

"அந்த ராகம்..."

"அறிவேன்! சிவகங்கை இளவரசனுக்கு இப்போது அஷ்டமத்துச் சனி! அவனை ஒரு நாளேனும் எனது சிறையில் அடைத்து உன்னிடம் மன்னிப்பு கேட்கச் செய்வேன். அந்த ராகத்தை மீட்க அரண்மனையில் ராணுவம் தயாராக நிற்கிறது! சென்னை கவர்னர் வாஷிங்டனிடமிருந்து உத்தரவு வந்து விட்டது. ராணுவத்துக்குத் தலைமை தாங்குகிறவனே திருச்சி கலெக்டர் நெல்சன்!"

நெல்சன் என்றதும் நெஞ்சு பகீரென்றது குறிஞ்சிக்கு! ராஜகாந்தியின் நெஞ்சுக்குள்ளிருக்கும் நெருப்பல்லவா அவன்?

"என்ன குறிஞ்சி யோசிக்கிறாய்?"

"ராகத்தை மீட்டுத் தந்ததும் சத்தியமாக நன்றியறிதலுடன் பாடி உங்கள் மகனுடைய பைத்தியத்தைப் போக்குவேன்! இதில் சந்தேகத்துக்கு இரண்டு சந்தர்ப்பங்களே கிடையாது! ஆனால் மணப்பது என்பது... **ஒரு நிமிஷம்** அவகாசம் தாருங்கள் யோசிக்கிறேன்!"

அழுத்தமாகக் கூறி மௌனமாக இருக்கிறாள் குறிஞ்சி.

உள்ளிருந்து எந்தவிதமான பாத்திரம் உருளுகிற சத்தமும் கேட்கவில்லை.

இப்போது அவள் சொன்னாள்:

"எனக்கென்று யாருமில்லாவிட்டாலும் என்னை நேசிப்பவர் ஒருவர் இருக்கிறார். நான் பூசிப்பவர் ஒருவர் இருக்கிறார். கலந்து ஆலோசித்து முடிவு சொல்வேன்!"

"இருவரையும் நானறிவேன்; ராஜகாந்தி; ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதியான ஜகத்குரு. நான் ராஜகாந்தியைப் பார்த்து என் ரணத்தை இங்கிருந்தே ஆற்றிக் கொள்கிறேன். இந்த ஒருத்தி நாடே என்னைக் காதல் ரணப்படுத்திய நாடல்லவா? அதனால்தான் இந்த ஊரைச் சுகபோகத்துடன், சத்திரங்களும், கல்விச் சாலைகளுமாக வைத்திருக்கிறேன்! என் காதலி முக்தாம்பாள் கேட்ட வரம்! இப்போது எனது மகன் காதலுக்காக நான் ராஜகாந்தியை நோக்கி இங்கிருந்தே வரம் கேட்கிறேன்! இத்துடன் கும்பகோணம் சென்று ஸ்ரீ ஆசார்யாள் பெருமானையும் வணங்கி வரம் கேட்பேன். அவர்கள் இசைந்தால் என் மகனை நீ மணக்கலாம்! இசையவில்லையென்றால், நீ இசையை மணந்து இசை பெறலாம்! ஒன்றை உறுதியாகவும் தஞ்சைப் பெருவுடையான் மீது ஆணையிட்டும் சொல்வேன்! நீ ராணியானால், முதலுரிமை உனக்கே உண்டு! கல்யாண மகால் என்கிற காமக்கிழத்திகள் வாழ் கழுமுள்ளில் அமர்த்த மாட்டேன்! உன் வயிற்றில் உதிக்கும் சூரியனுக்கே அரசுரிமை என்று சாசனம் எழுதி வைப்பேன்! தஞ்சை அரண்மனையில் உன் ராகங்கள்தாம் சட்டங்கள்!"



சரபோஜி மன்னரின் புத்திரபாசம் கண்களில் புனித கங்கையாய்ப் புரளுகிறது.

"முதலில் ராகத்தை மீட்டுக் கொடுங்கள்; பிறகு உங்கள் சோகத்துக்கான முடிவைக் கூடுமானவரை சுகமாகச் சொல்ல முயல்கிறேன்!"

"எப்போது தஞ்சையரண்மனைக்கு வருகிறாய்? நீ வந்த மறுகணமே ராணுவம் சிவகங்கை நோக்கி புறப்படுகிறது!"

"இன்று மாலை தஞ்சையில் இருப்பேன்; நாளை ராணுவம் புறப்படலாம்."

"வாழ்க! குறிஞ்சி, வாழ்க!"

சரபோஜி மன்னர் புறப்பட எழுந்து கொண்டார்.

"என் வீட்டுக்கு வந்து எதுவும் சாப்பிடாமல் போகிறீர்களே!"

"என் மகன் மரணத்தைச் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறான். நீ அரண்மனைக்கு வந்து அவனை மருந்து சாப்பிடச் செய்! பிறகு உன்னுடன் அமர்ந்து நான் விருந்து சாப்பிடுகிறேன்!"

சரபோஜி மன்னர் புறப்பட்டார்.

அப்போதுதான் அவர் மெல்லச் சிரித்து மெதுவாகச் சொன்னார்: "குறிஞ்சி! நான் இங்கிருந்தே 'சொல்கிறேன்'

என்று அடிக்கடி ராஜகாந்தி பற்றிச் சொன்னது எதற்காகத் தெரியுமா? உள்ளே அவன் இருக்கிறான். நானறிவேன். ஆயினும் அவன் எனது நல்ல நண்பன். காட்டிக் கொடுக்க மாட்டேன்! கலெக்டர் நெல்சன் விஷயத்தில் அவனது கவனத்தை மறுபரிசீலனை செய்யச் சொல்!"

அதிர்ந்து போன குறிஞ்சி, மன்னரை வாசல் வரை வந்து வழிகூட்டுகிறபோது அவளது கண்களில் குற்றாலக் குறிஞ்சி ராகத்துப் பிரதிமத்திம சுரமும் சுத்தமத்திம சுரமும் பனித் துளிகளாய் அரும்பி வெடித்தன.

# இராகம் – 32



## விலாசினி

ஆரவாரங்கள் அமைதிக்குப் பின்னுரை வழங்கியதிலிருந்து மன்னர் பயணம், வீதிகளை வெறிச்சோடச் செய்து விட்டது என்பது புரிகிறது.

அறையின் பூட்டைத் திறக்கிறாள், அழகின் புதுவேதமான குறிஞ்சி.

ராஜகாந்தி மலைத்துப் போனானா? சிலைத்துப் போனானா? மௌனமாய் சன்னல் கம்பிகளைப் பிடித்துக் கொண்டு தீவிரமாக ஆலோசிப்பது புரிகிறது.

அருகே சென்ற குறிஞ்சி, "ராஜகாந்தி! மன்னர் சென்று வெகுநேரமாய் விட்டது!" என்றாள்.

"தெரிகிறது. ஆனால் நான் வந்த செய்தியை எப்படியோ சரபோஜி மோப்பம் பிடித்துச் சொன்னது தான் ஆச்சரியம். அதைவிட அவனுடைய பெருந்தன்மை மேலும் ஆச்சரியத்தை விளைவித்தது."

"கடைசியாகச் சொன்ன சொற்கள் காதில் விழுந்தனவா?"

"நன்றாக! நெல்சன் இதுவரை செய்த பாவத்தை மன்னிக்கிறேன். இனியேனும் தமிழ்ப் பெண்கள் கற்பைச்

சூறையாடுவதை நிறுத்திக் கொள்ளட்டும். நானும் என் எண்ணத்தை மாற்றிக் கொள்கிறேன்!"

"இப்போதுதான் உங்களை என் உயிராக மதிக்கிறேன்!"

"குறிஞ்சி! முன்பே சொன்னேன்; உனது ஆணைதான் எனது சட்டங்கள்! உனது உயிர்தான் எனது உயிர். நீ ஒரு சத்தியம் செய்து தர வேண்டும்."

"என்ன சத்தியம்?"

"என் உத்தரவின்றி உனது உயிர் பிரியக் கூடாது."

"இது என்ன விசித்திரச் சத்தியம்? எமனுமா உனக்குப் பயப்படுவான்?"

"நான் சொல்வது செயற்கை மரணம்! இயற்கை மரணம் என்பது பிறக்கிறபோதே இதயத்தில் எழுதி அனுப்பிய சாசனம்!"

"சத்தியம் காப்பேன்! ஆமாம்! நான் சரபோஜி மன்னரிடம் பேசி வந்த போது, நீ சொன்ன ஒரு நிமிஷம் என்ற கோரிக்கையை அழுத்தமாகச் சொல்லியும், பாத்திர உருட்டல் சத்தம் ஏன் கேட்கவில்லை."

"சரபோஜி மன்னர் பேச்சு சரங்கோத்த முல்லைப் பூவாய் மணத்தது. நீயும், 'முல்லை என்ன, இதோ இரு வாட்சி' என்பது போலப் பதில் சொன்னாய்! எனக்கு ரொம்பவும் பிடித்திருந்தது. கடைசி கோரிக்கை திருமண விஷயம். அது உன் சொந்த விஷயம். இது குறித்து நான் முதலில் பேச்சை ஆரம்பிக்கிற போதுதான், சரபோஜி வந்திருக்கும் செய்தி கேட்டு, அறையில் சென்று மறைந்து கொண்டேன். நேசிப்பவனை ஒரு வார்த்தை கேட்க வேண்டும் என்று நீ சொன்னதால் ஓர் அபிப்பிராயமாகச் சொல்வேன்; இது கட்டாயமில்லை. மேலும் சரபோஜி 'இங்கிருந்தே ராஜகாந்தியைக் கேட்டுக் கொள்கிறேன்' என் பதிலிருந்து நானிருப்பதை அறிந்திருந்ததால் அவ்வாறு சொன்னார் என்று தெரிகிறது. அதன் காரணமாகக் கருத்தைச் சொல்கிறேன். சரபோஜியின் கோரிக்கையை நீ ஏற்கலாம்! போன்சலே வமிசம் தமிழ் வமிசமாகலாம்! தமிழ் மீண்டும் புத்துயிர் பெறலாம்!"



குறிஞ்சியின் மௌனம் பல கணங்கள் அவளது பாதங்களில் பதுங்கியது.

"கட்டாயமில்லை என்றும் சொன்னேன். அதை மறந்து விடாதே குறிஞ்சி!"

"நேசிப்பைக் குறித்து யோசிக்கிறேன்; பூசிப்பவரின் பூரண அனுமதியும் தேவையல்லவா?"

"எதிர்பார்க்கிறாயா? அவர் துறவி! போலித் துறவியல்ல! சத்தியமான பிரம்மசரியம் பூண்ட துறவி. இதற்கு அவர் பதில் சொல்ல மாட்டார். மாறாகப் புன்முறுவல் பூப்பார்!"

உண்மை; உண்மையில் உண்மையாவது உண்மையாகப் புரிகிறது.

"நல்லது, ராஜகாந்தி! நான் வணங்கும் மகாகாளியை உத்தரவு கேட்பேன். அந்தச் சிம்ம ரூபி எதைச் செய்ய வேண்டுமோ, என்ன செய்யவேண்டுமோ அதைச் செய்வாள். நான் பகலுக்கு மேல் தஞ்சை நோக்கிச் செல்லலாமல்லவா?"

"துணைக்கு எனது ஆட்கள் சிலர் வருவர். நான் ஒரு முக்கிய காரணமாக விரைகிறேன்."

"விதியைச் சந்திக்கப் போகிறாயா?"

"ஒரு விதத்தில்; அந்தச் சந்திப்பில் இனி நம்மிருவரிடையே அது விளையாடக் கூடாது என்று எச்சரிப்பேன்."

"இப்போது நான் ஒரு சத்தியத்தை உன்னிடம் யாசிக்கலாமா?"

"கேள் மகளே!"

"எனது உயிருக்குச் சத்தியம் கேட்டாய்; அது கோழையாகாதே என்கிற சத்தியம்! தந்தேன். இப்போது நான் கேட்பது, உனது உயிர் என்பது எமனிடம் ஒப்படைக்கப் பட்டதானாலும், நான் அவனைப் பிரார்த்தனை செய்கிறேன். என் உயிர் பிரிந்த பிறகே உனது உயிர் பிரிய வேண்டும். காரணம் இந்த அனாதைக்கு உன்னைத்

தவிர வேறு பக்கபலமில்லை. எங்கும் அகப்பட்டுக் கொள்ளாதே!"

"நான் இருக்கிறேன், மகளே! நான்... நான் பெண் சுகமே அறியாதவனுக்கு ஒரு மகள் சுகம் புரிய வைத்த அந்தச் சமயபுரத்து மாரியம்மனை இங்கிருந்தே வணங்கு கிறேன்! எங்கும் அகப்பட்டுக் கொள்ள மாட்டேன்!"

"நீ அந்த மாரியம்மனையே பிடித்துக் கொண்டாயா?"

"சமயத்தில் வரம் தருபவளாயிற்றே! நல்லது மகளே! சென்றுவா! நான் சொன்னதையும் கொஞ்சம் பரிசீலனை செய்!"

ராஜகாந்தி விடைபெற்றுத் தோட்டத்து ரகசிய வழி யாகச் சென்று மரங்களுக்குள் புகுந்து மறைந்தான். சற்றைக் கெல்லாம் எங்கோ குதிரைகளின் குளம்படி ஓசைகள் கேட்டன.

மேல்திசை வாசல் குங்குமக் கோலம் புனைந்து கொண்டிருக்கிறது.

ஆவணி மாதத்துக் காற்று சற்று அதிகமாக வீசினா லும், மாலை மயக்கம் ரதிமன்மதனுக்குரிய காமத்துப்பால் கதை சொல்லியது. திருமணங்கள் நிறைந்த திங்களல்லவா? எத்தனை வீடுகளில் அது முதலிரவு ராகத்தை பல்வேறு பட்ட மூர்ச்சனைகளுடன் பாட இருக்கிறது!

தஞ்சை அரண்மனையே தரையில் தங்க முடியாமல் மலர் விமானம் போல ஆகாயத்தில் பறப்பது போன்ற உணர் வில் ஆழ்ந்தது. சொன்னபடி குறிஞ்சி வந்து விட்டாளே!

மூங்கில் புதராகிக் கிடந்த அந்த அரண்மனையுள் புல்லாங்குழல் பிரவேசித்துவிட்டதால், எங்கு நோக்கினும் குற்றாலக் குறிஞ்சி ராகம் ஒலிப்பது போன்ற ஒரு பிரமை...

குறிஞ்சி எவருடனும் வரவில்லை. தனது தம்பூர்; அதற் குரிய கற்பகம் மற்றும் இசைக் குழுவினர்.

பிரதான விருந்தினர் மாளிகையில் பிரமாதமான ஏற்பாடுகளைக் கவனித்திருந்தார் மன்னர் சரபோஜி.



ஒரு முறை சென்று குறிஞ்சியை வரவேற்று நன்றி கூறியும் திரும்பி இருந்தார். மற்றபடி அந்த மாளிகை யின் நிழலைக்கூட எவரும் மிதிக்கக் கூடாது என்பது கடுமையான ஆணை. அக்காமார்கள் என மராட்டிய ரால் அழைக்கப் பெறும் 'பணிப்' பெண்களில், பணிவும் பண்பும் உள்ளவர்களை மட்டுமே பணிவிடைகள் புரிய தேர்ந்தெடுத்து அனுப்பி இருந்தார். கடுகளவு குறைபாடு கண்டாலும் ஒவ்வொருவர் தலையிலும் பொடுகு விழுந்து விடும் என்கிற பொறுப்புணர்வு ஒவ்வொருவர் இதயத் துடிப்பிலிருந்தும் உணர முடிந்தது.

இந்த நேரத்தில் மன்னர் சரபோஜிக்கு ஓர் இடி விழுந்த செய்தி, திருவிடை மருதூரிலிருந்து, சிவாஜியின் மனைவி சைதம்பாபாயி சாகேப் வந்திருக்கிறாளாம்! அதுவும் செய்தி களை முற்றுமாகக் கேள்விப்பட்டே வந்திருக்கிறாளாம்!

இருதினங்களுக்கு முன்பு, இரண்டாம் திருமணம் பற்றிப் பேசவந்த எசவந்த ராமச்சந்திரராவ் சூர்வேவைக் கூட, தமது குடும்ப வக்கீல் கோபாலராயரை வைத்து ஒருவாறு பேசியனுப்பி விட்டார். சிவாஜியின் சித்தபிரமை நிலையில் திருமணமா? சூர்வேயும் – மகள் காமாட்சி பாயின் தலையெழுத்து எதுவோ அது நடக்கட்டும் என்று சுமுகமாகவே விடைபெற்றுச் சென்று விட்டார். இந்தச் சூதுக்காரி சைதம்பாபாயியை அவ்வாறு விரட்டி விட முடியுமா? மகன் வயிற்றுப் பேத்திக்குப்பேத்தி; மருமகளுக்கு மருமகளாயிற்றே!

அடர்ந்த மீசையில் அடக்க முடியாத கோபத்தை நீவி நீவியடக்கிக் கொள்கிறார் சரபோஜி.

இளவரசன் சிவாஜிக்கு, குறிஞ்சி வந்திருக்கும் செய்தி யைச் சொல்லவில்லை. சொன்னால் புரியலாம்; புரியாம லும் போகலாம். முழுப் பைத்தியமில்லை; சித்தபிரமை தான். உண்பான்; உறங்குவான்; சமயத்தில் உளறுவான்; ஏன்? பாடுவான்!

செய்தி தெரிய வேண்டாமே என்பதில் மிக்கவும் கவன மாக இருந்தார் சரபோஜி மன்னர். வசிகரத்தை தரிசிக்கப்

போகிறேன் என்று கூறி ஓடிச் சென்று குறிஞ்சியைப் பார்த்து, தனது முகத்தில் துணியை மூடிக் கொண்டு உலகம் இருட்டாக இருக்கிறது என்பதுபோல ஒன்று கிடக்க ஒன்றை உளறிவிடுவானேயானால்?

அந்த வெளிச்சம் வெளியேறி விடுமே! குறிஞ்சியின் சுயமரியாதைக் குணங்களை—அவளது சுயம்புவான போக்குகளை அத்திவாரங்கள் அறியாமல் இருக்கலாம்; மாடங்கள் அறியுமே! சூள்மாறி வந்திருக்கும் இந்த நேரம் கோள் மாறிப் போய் விட்டால்? கோள்களிலேயே பத்தாவது கிரகமான சைதம்பாபாயி வந்திருக்கிறாளே...! அது போதாதா? அதனால் வரப்போகிறது நன்மை யில்லா விட்டால் போகிறது! தீமை நிகழ்ந்துவிடக் கூடாதே!

இரவு, விளக்குகளின் திரிகளுக்கு தீமூட்டி வெகு நேரமாய் விட்டது

உண்டு முடித்த குறிஞ்சி, உறங்குமுன் சற்றே ஓய்வாகச் சிந்திக்கிறாள்.

நாளை நமது அபூர்வராகம் மீட்கப்பட்டுவிடும். என் வாழ்வைக்கெடுத்த அந்த வஞ்சகன் சிவகங்கை இளவரசனை என்ன செய்யலாம்?

சே! ஊழ்வினை! அவனைக் காறித்துப்புவதால் ஞான சுந்தரம், எலும்புதுண்டுகளாய் மண்பானையிலிருந்த பூம்பாவை வெளிப்பட்டது போலவா, சவக்குழியைப் பிளந்து கொண்டு வந்து விடப் போகிறார்? 'இன்னா செய்தாரை மன்னித்துவிடு' என்றான் உலகத்தையே இரண்டடியால் அளந்த திருக்குறளான்!

அறைவாசலுக்கு வெளியே ஒரு வயதான கிழவர் காவல். எதற்காக வயதான ஒரு கிழவனைக் காவல் வைக்க வேண்டும்? சிரித்துக் கொள்கிறாள். வியப்பு அவளிடம் விலாசினி ராகம் பாடியது போலும்!

இரவு, நடுநிசித் தாண்டவத்துக்கு நட்சத்திர சலங்கை யணிந்து கொண்டிருந்தது. வானில் வளர்பிறை நிலவு.



*வித்தியாவித்தை நிலை. தனது நிலை என்பதுபோல யுகயுகமாக நடக்கும் அந்தத் தாண்டவத்தை அப்போதும் ரசிக்கத் தயாரானது.

அந்த நேரத்தில் அவித்தைபோல அங்கே வந்து கொண் டிருந்தாள் சைதம்பாபாயி – சிவாஜியின் மனையாள். அவளைத் தடுத்து நிறுத்த யாராலும் முடியவில்லை. சட்டங்களையே காயப்படுத்துகிறவளிடம் சரபோஜியின் உத்தரவாவது?

அறை நோக்கி வரும் அவித்தா விசுவரூபத்தை – தொலைவிலிருந்தே கவனித்துவிட்ட கிழவர் விரைந்து சென்று பாதிவழியிலே மடக்குகிறார்.

"யாரம்மா, நீ!"

"அரண்மனைக்குச் சொந்தக்காரி; குறிஞ்சியைப் பார்க்க வேண்டும். என்னைத் தடுக்க உனக்கு எவ்வளவு தைரியம்? கிழப்பிண்டமே!"

சைதம்பாபாயி கிழவனைப் பிடித்துத் தள்ள, அவள் தான் தடுமாறி சாயப்போனாள். அவளை இரும்புப் பிடியாக பிடித்துக் கொண்ட கிழவன், இடுப்பில் மிகத் துணிவாகக் கையை வைத்துத் துழாவி, கட்டாரியை எடுத்தான். "சைதம்பா! நீ சைத்தானாக நுழையலாமா? சாகேபாக (ராணி) அரண்மனைக்குப் போ!"

"நீ யார்? என்னைத் தொட்டதுமல்லாமல் அதிகாரம்?"

ஓங்கி அறைய கையை நோக்கியவளைப் பிடித்துக் கொண்ட கிழவன், தனது நரை தாங்கிய புனைவடிவத்தை நீக்கி காட்ட... ஓ... சரபோஜி மன்னர்!

"புரிகிறதா? போய்விடு!"

"ஒரு புலைச்சிக்குக் காவல் நிற்க உங்களுக்கு வெட்க மாயில்லை?"

* வித்தை – தேவதைகளின் உபாசனை; அவித்தை– காம்யா கர்மங்கள்; அஞ்ஞானம் (உபநிஷத்து).

"நான் கலைக்குக் காவல் நிற்க காரணம் நான் கலைஞன்! சைதம்பா என்கிற சைத்தான் வரும் என்று தெரிந்தே காவல் நிற்கிறேன்!"

"ஒரு புலைச்சி ராணியாவதா?"

"கொலைக்காரியான அவித்தை, ராணியாக இருக்கிற போது கும்பாபிஷேகத்துக்குரிய வித்தை ராணியாவது தஞ்சை செய்த தவம்! போய்விடு!"

"மறுத்தால்?"

சின்ன முறுவல். மெல்லக் கைதட்டுகிறார். நான்கு வீரர்கள் வந்து நிற்கிறார்கள்.

"சைதம்பா! நீ திருவிடை மருதூருக்கு இரவோடு இரவாகப் புறப்பட்டால் மரியாதைக்கே ஒரு மரியாதை! அடம்பிடித்தால் சிறைச்சாலை மரியாதை பெற்றுவிடும்! நமது சர்க்கேலிடம் (மந்திரி) இப்படி நிகழும் என்பதால் முன்கூட்டியே ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. சைத்தானாக இருந்தாலும் சைதாம்பாபாயிதான்! சந்தேகமில்லை! புறப்படு!"

புயலாய்ப் புறப்பட்டுவந்த சைதம்பாபாயி பூகம்பமாய் வீரர்களைப் பின்தொடர்ந்தாள்.

மீண்டும் சரபோஜிக் கிழவன், குறிஞ்சிப் பூவுக்கு வேலியானார். வெள்ளை நாரைகளான கும்பினி அதிகாரிகளின் நீண்ட அலகுகள் வேறு இருக்கின்றனவே!

குறிஞ்சிக்கு வெளியில் நடந்த எதுவுமே தெரிய நியாயமில்லை. தொலைவில் கற்பகம் நன்றாக உறங்கிக் கொண்டிருந்தாள்.

மஞ்சத்தில் சாய்ந்தும் தூக்கம் ஏன் வரவில்லை?

அந்தச் சூழலில் எங்கிருந்தோ ஓர் இனியகுரல்... ஓர் ஆணின் கம்பீரமே போலக் காற்றில் மிதந்து வருகிறது. இனிய கீதம், யார் பாடுவது?

எழுந்து சென்று குரல் வருகிற திக்கு நோக்கிச் சன்னலைப் பிடித்துக் கொண்டு செவி சாய்கிறாள்.

ஓ... என்ன இனிமையான விலாசினி ராகம்!



யாரோ அரண்மனை வித்துவான்களில் ஒருவர் தன்னை போலத் தூக்கம் வராமல் அதன் விலாசத்தைத் தேடி விலாசினி பாடுகிறாரோ?

அறைக் கதவைத் திறக்கிறாள். கிழவர் அமர்ந்திருந்தவர் எழுந்து கொள்கிறார்.

"பெரியவரே! எங்கோ பாட்டுக்குரல் கேட்கிறது. நன்றாகவும் நயமாகவும் இருக்கிறது."

"தனது விலாசத்தையும் குறிஞ்சியாகிய உனது விலாசத்தையும் கேட்டுப்பாடுகிறவன் வேறுயாருமல்லம்மா! இளவரசன் சிவாஜி! சித்தப்பிரமையில் இப்படி பல சமயங்களில் அவன் ராக விலாசங்களைத் தேடுவான்!"

"இளவரசரை நீங்கள் அவன் இவன் என்று பேசுவதாவது?"

சரபோஜியின் கண்களில் நீர்த்துளிகள் சரங்கோக்கின்றன.

"நான் அவனது சங்கீத இலக்கண ஆசான்!"

"சங்கீத இலக்கணம் தெரிந்தவரா?"

கரம் கூப்புகிறாள் குறிஞ்சி.

"அதனால்தான் சங்கீதத்துக்குக் காவல் நிற்கிறேன், குறிஞ்சி! சிவாஜி ஆரம்பத்தில் மகாவித்துவான் பல்லவி துரைசாமி ஐயரிடமும் பிறகு பல்லவி கோபாலய்யா, தஞ்சை சகோதரர்கள், சுப்பராய சாஸ்திரி... இப்படிப் பலரிடமும் இசை விலாசம் கேட்டறிந்ததால் விலாசினி எனும் அபூர்வ ராகம் பாடுகிறான். அவன் தனது இளம் வயது குருவான சுப்பராய சாஸ்திரி இயற்றிய ரீதி கௌளை ராகப் பாடலான 'ஜனனி நின்னுவினா' பாடி நீ கேட்க வேண்டுமே!"

"ஆமாம்; நீங்கள் என்ன இலக்கணம் போதித்து இருக்கிறீர்கள்?"

"சாரங்க தேவரின் சங்கீத ரத்தினாகரம், வேங்கிடமகியின் சதுர்தண்டி பிரகாசிகா, ராமா மாத்யாவின் சுரமேள

கலாநிதி, இந்தப் போன்ஸலே வமிச ராஜாக்கள் இயற்றிய சங்கீத சாரமிருதம் இப்படிப் பல இலக்கண நூல்கள்! ஆனால் எனக்குப் பாட வராது. நன்றாகப் பாடத் தெரிந்தவர்க்கு இலக்கணம் தெரியாது; நன்கு இலக்கணம் அறிந்தவர்களுக்குப் பாட வராது. இரண்டும் கைவரப் பெற்றவர்கள் எங்கோ சிலர், உன்னை மாதிரி!"

விலாசினி ராகம் இன்னும் வித்தாரமாக ஆலாபனையில் விசுவரூபமெடுத்துக் கேட்கிறது.

இளவரசர் இவ்வளவு அழகாகப் பாடுவாரா? அதுவும் அற்புத அபூர்வ ராகமான விலாசினி! தைவதம் நீக்கிய சங்கராபரணம்! சங்கரனுக்கே ஆபரணம். சங்கரியின் விலாசம் தேடிப் பாடி அணிவித்த விலாசினியல்லவா இது?

கிழவேடம் அணிந்த சரபோஜி மன்னர் துக்கம் தொண்டையை அடைக்கவே குமுங்கியழவும் செய்தார்.

குவளைக்கண் விரித்த குறிஞ்சி, கூர்ந்து கவனிக்கிறாள்.

"நீங்கள் ஏன் இப்படிக் குமுறுகிறீர்கள் பெரியவரே?"

"குறிஞ்சி அவனைக் காப்பாற்று! அவனைக் காப்பாற்று! உனக்கு இங்கு ஒரு தொல்லையும் ஏற்படக்கூடாது என்று காவல் நிற்பவனே இந்த நாட்டு மன்னன் சரபோஜி! சரபோஜி!" என்று விக்கியழுத சரபோஜி மன்னர் தமது நரைமுடிப் போர்வையை முகத்திலிருந்து நீக்க...

நடுக்கமான கிழக்குரல் மிடுக்காகக் கேட்க...

ஓ... சிறந்த நாடக வித்தகரல்லவா சரபோஜி?

குறிஞ்சியின் கயல்விழிகள் அந்த ஒருகணத்தில் குளமாகிப் போயின.

# இராகம் - 33



# குற்றாலக் குறிஞ்சி

புதுமை ராகங்களின் பொக்கிஷமான குறிஞ்சி எனும் குங்குமத் தமிழ் போற்றும் கோதை நல்லாள் பொருட்டு, அரண்மனை ஜயவாசலுக்கு வெளியே ராணுவமே அணிவகுத்து நிற்கிறது.

சிவகங்கை, தஞ்சைப் பார்வைக்கு உட்பட்டதேயானாலும், அடகு ஓலையை அனுப்ப முடியாது என்று யுவராஜன் சின்ன வல்லபதேவ உடையான் அடம் பிடிக்கிறபோது?....

ஒன்று தூது ராணுவம்; அது முறிந்து போனது. இப்போது குண்டு துளைக்கும் ராணுவமாக அணிவகுத்துப் புறப்படக் காத்திருந்தது. ஆர்க்காட்டு நவாப்பின் அதிகப் படியான சலுகைகளைச் சிவகங்கை பெற்றதால், திருச்சிக் கும்பினிக் கோட்டத்து அதிகாரம் செல்லுபடியாகவில்லை. எனவே இப்படி ஒரு ராணுவம் அவசியப்பட்டது.

ராகதேவதையான குறிஞ்சி வந்து நின்று அணிவகுப்பைப் பார்வையிட்டு விடை தர வேண்டும் என்பது அவளுடைய ரசிகனான சென்னை கவர்னர் வாஷிங்கடனின் பெருந்தன்மையான உத்தரவு.

அழகின் திருக்கொலுவாய், அலங்காரப் பொற்றேராய் எடுத்து வைத்த பாதங்களிலும் ஏழு சுரங்கள் ஒலிக்கும் இசையின் ஊர்வசியாய் வந்துகொண்டிருக்கிறாள் குறிஞ்சி.

இளவரசன் சிவாஜிக்குக் காலையில்தான் தெரியும். அவனது சித்தம் சில சமயங்களில் விலாசினி ராகம் பாடு மளவுக்குத் தெளியுமே! அந்தத் தெளிவான நேரத்தைத் தெரிந்து, அவனுடைய அன்புக்கு நண்பனாய், வலது கரமாய், குருவாய், மந்திரியாய் இருந்த வராகப்ப தீட்சிதன் சொல்ல வேண்டிய முறையில் எடுத்துச் சொல்ல, ஓரளவு புரிந்து, கண்களால் மகிழ்ந்து, பின்னர் உதடுகளால் பூரித் தான். ஓ... எனது குறிஞ்சி வருகை தந்து விட்டாள்!

அரண்மனை மாடத்திலிருந்து கவனிக்கிறான், சிவாஜி.

ஆ... 'தலையலங்காரம் புறப்பட்டதே' என்று அன்று ஒரு காதல் கவிஞன் அம்பிகாபதி பாடினானே... அப்படி குறிஞ்சியின் தலையலங்காரத்துக்குக் குதூகலக் கிரீடம் சூட்டிச் சிரிக்கிறான் சிவாஜி.

சித்தம் மெல்ல மெல்லத் தெளிகிறது... அதனுள் காதல் சிவலிங்கம் தெரிகிறது. சத்தம் கேட்கிறது... அதனுள் காதல் சதாசிவம் காட்டுகிறது...

ஓ... குறிஞ்சி, குறிஞ்சி, குறிஞ்சி...

குறிஞ்சியோ...

ராகத்தை மீட்கச் செல்லும் ராணுவத்தைப் பார்வை யிடுகிறாள்! ஆ! சீதையை மீட்கச் செல்வதுபோல...

ஆனந்தக் கண்ணீருடன் கமலமனைய புன்முறுவல் பூத்துக் கரங்கூப்ப...

ராணுவம் புறப்படலாம் என்கிற ஆணை கலெக்டர் நெல்சன் நாவிலிருந்து எழுந்தபோது...

எழுந்த நாவு எழுந்தபடி, திறந்த கண்கள் திறந்தபடி...

நெல்சனுக்கு மட்டுமா? நின்றிருந்த அனைவருக்கும்! சரபோஜிக்கும்! மாடத்தில் நின்று கவனித்த இளவரசன் சிவாஜிக்கும்!...



அதோ...

சிவகங்கை இளவரசனே தனியாக வருகிறான். பின்னங் கை கட்டப்பட்டு வருகிறான். அவனது சட்டைப் பையில் ஓலை நறுக்கொன்று தலை நீட்டி எட்டிப் பார்க்க வரு கிறான்.

அவனா வருகிறான்?

அவனுக்குப் பின்னே, எவரும் அறியாவண்ணம் ராஜ காந்தியின் துப்பாக்கிகள் நீண்டல்லவா நடக்கச் செய்தி ருக்கின்றன?

குறிஞ்சிக்குப் புரிந்து விட்டது. விதியைச் சந்திக்கப் போகிறேன் என்று புறப்பட்ட ராஜகாந்தி, அந்த விதியை எப்படியோ போராடிக் கடத்தி வந்திருக்கிறான்.

சிவகங்கை இளவரசன் நேரே குறிஞ்சியருகே வந்து மண்டியிட்டு, "என்னை மன்னித்து விடு சகோதரி! பையில் ஓலை இருக்கிறது! உன்னைத் தத்துக்கு எடுத்துக் கொண்ட தந்தை ராஜகாந்தி எழுதியனுப்பிய எனது தலை யெழுத்து!" என்று சொன்னபோது அவன் நாணத்தால் நலிந்து போனான்.

குறிஞ்சி, சரபோஜியைப் பார்க்க, சரபோஜி, சர்க்கேலைப் பார்க்க, சர்க்கேல் வந்து ஓலையை எடுத்து சரபோஜியிடம் நீட்டுகிறான். படித்து முடித்து குறிஞ்சியிடம் கொடுத்து விட்டு, நெல்சன் துரைக்கு ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துக் கூறுகிறார்:

"நமது ராணுவத்துக்கே வேலையில்லாமல் செய்து விட்டான் ராஜகாந்தி! குறிஞ்சியிடம் இந்தச் சிவகங்கை யான் மன்னிப்பு கேட்க வேண்டும் என்று உயிரை விட்டு வைத்தானாம்! மனிதாபிமானத்தைக் கற்றுத் தந்தவளே குறிஞ்சியாம்! இந்தச் சிவகங்கையானைச் சிறையிலடைக்க உத்தரவிட்டிருக்கிறான். தவறினால் அரண்மனையே துகளாகும் என்றும் எச்சரித்தும் இருக்கிறான்."

நெல்சன் நெஞ்சில் நெருப்பு மேலும் கனன்றது. கவனிக் கிறார் சரபோஜி. "நெல்சன்! உங்கள் மீதும் பகையில்லை

என்று குறிப்பிட்டு இருக்கிறான். அதை நான் சொல்லாமல் விட்டேன். ஆனால் ஒரு நிபந்தனை – நீங்கள் தமிழ்ப் பெண்கள் கற்போடு விளையாடுவதை இன்றுடன் நிறுத்திக் கொள்ள வேண்டுமாம்!"

"யாரிவன், எனக்கு ஆணையிட?" என்ற நெல்சனின் நெஞ்சு நெருப்பாய்க் கறுவிக் கொள்கிறது.

சரபோஜி, சிவகங்கை சின்ன வல்லபனை நோக்கிக் கேட்கிறார்: "எங்கே குற்றாலக் குறிஞ்சி ராகம்?"

"கைகட்டை அவிழ்த்து விடுங்கள்."

கட்டு அவிழ்க்கப்படுகிறது.

இடுப்பில் செருகி இருந்த அடகு ஓலையை எடுத்து நீட்டுகிறான். அதனைக் குறிஞ்சி பெறுகிறாள்; படிக்கிறாள்; பின் ஆணையிடுகிறாள்.

"இந்த ஓலையை இவனே, இவன் கைப்பட எரிக்கட்டும். எரிக்குமுன் இவனது துர்நடத்தைகளையும் சேர்த்து எரிக்கட்டும்! மாவீராங்கனை ராணி வேலுநாச்சியாரும், மருது பாண்டியர்களும் மானம் காத்த சிவகங்கைக்கு இனி மாசு தேடமாட்டேன் என்கிற சத்திய சபதத்துடன் எரிக்கட்டும்!"

மதுரையை நோக்கிக் கண்ணகி கொடுத்த குரல் போலிருந்தது குறிஞ்சியின் குரல்.

ஓலை எரிந்து சாம்பலானது.

"இவனைச் *சிறையில் அடையுங்கள். இவனது மனைவி மகா பதிவிரதை. அவள் மாங்கல்யம் பொருட்டே இவனை ராஜகாந்தி விட்டு வைத்தார். இல்லை என்றால்... ஒவ்வொரு எலும்பும் ஒவ்வொரு ஊரில் புதைக்கப்பட்டிருக்கும்! என் மரியாதைக்குரிய பெரிய சிவகங்கை ஜமீந்தார் இவனை என்றைக்கு விடுதலை செய்து அனுப்பலாம் என்று ஓலையனுப்புகிறாரோ அப்போது விடுதலை செய்து அனுப்பிவிடலாம். தஞ்சை மன்னர் எனது வேண்டுதலை ஏற்பார் என்று நம்புகிறேன்!" என்று குறிஞ்சியின் ஆணைக் குரல் மேலும் வானை முட்டியது.

* இரண்டாம் சரபோஜி காலத்தில் சிவகங்கை ஜமீந்தாரின் மகன், சிறையில் வைக்கப் பெற்றான். அவனை விடுவிக்க வேண்டுமென்று, மகாராஜாவுக்கு சிரஸ்தேதார் எழுதியதாக, 1828–க்குரிய ஆவணக் குறிப்புள்ளது. ஜமீந்தார் மகன் சிறைப்பட்ட காரணம் புலப்படவில்லை. 'தஞ்சை மராட்டிய மன்னர் கால அரசியலும் சமுதாய வாழ்க்கையும் – கே.எம்.வேங்கடராமய்யா, பக்கம் 94.



ராணுவம் கலைந்தது; குறிஞ்சியின் வேண்டுதல் நிறைவேற்றப்பட்டது. ஆனால் நிறைவேற்றியது யார்?

சரபோஜி குறிஞ்சியை நோக்கிச் சொன்னார்: "குறிஞ்சி! ராஜகாந்தியின் இந்த முயற்சியிலிருந்து எனது கோரிக்கையை ஏற்றுக் கொண்டுவிட்டான் என்பது புரிகிறது. என் மகன்... அதோ மாடத்தில் பார்... ஓரளவு சித்தம் தெளிந்து விட்டான். இப்போது நீ குற்றாலக் குறிஞ்சி ராகம் பாடுகிறாய்; அதனை செவிமடுத்து அவன் மேலும் மேன்மையுறுகிறான்! ஸ்ரீ ஆசார்யாள் சுவாமிகள் கும்பகோணத்திலிருப்பதாக அறிந்தேன். நாளைய காலை, நானே சென்று ஆக்ஞாபனம் பெற்று வருவேன்!"

குறிஞ்சி காயத்ரி மந்திரமாய் முறுவலிக்கிறாள். கண்கள் காயாம் பூவாய் மலருகிறது. 'மங்கையர்க்குத் தனியரசி எங்கள் தெய்வம்' என்று கூறிய சேக்கிழார் பார்வை. இவையே சரபோஜிக்கு குறிஞ்சி அளித்த பதில்கள்.

இரவுக்கு ஆலோலம் பாடும் இனிய அந்திமாலைப் போது, கதிரவனை வழியனுப்பக் கரம் கூப்புகிறது.

நிலவு பிரசன்னத்துக்காக, வானம் நட்சத்திர மந்திரங்களை ஓதி ஒளியாகம் நடத்துகிறது.

சங்கீத மகாலில், விளக்குகள் நடக்கப் போகிற விலாசமறிந்து விலாசினி இராகம் பாடத் தொடங்கிவிட்டன.

குற்றாலக் குறிஞ்சி ராகம் சங்கீத மகாலையே சரணடையச் செய்யப் போகிறதே!

இசையுகத்துக் கலாச்சாரத்தையே பிரம்ம சொரூபமாக்கிப் பிரணவ விளையாட்டு விளையாடி விட்ட ராகமல்லவா?

சங்கீத மகாலில் மனிதர்கள் நிரம்பி வழிந்தாலும், அமைதி. இதயங்களுக்கு, 'உங்கள் துடிப்பைத் தவிர வேறு துடிப்பு இருக்கக் கூடாது' என்று எச்சரிக்கிறது.

நடுவே...

பட்டுத்துணி விரிக்கப்பட்ட சின்ன மேடையில் அமர்ந்து தியானத்தில் மூழ்கிக் காணப்படுகிறாள் குறிஞ்சி.

எந்தவிதப் பக்க வாத்தியமுமில்லை. வெறும் ஆலாபனை மட்டுமே! சிறைபட்ட ராகம் மீண்டதன் சிறப்பான மகிழ்ச்சியை, ஆலாபனையில் அள்ளிக் கொட்டிவிட வேண்டும் என்கிற ஆர்வத் துடிப்பு, தம்பூரில் தெம்பு கண்டால் போதுமே!

பத்திரகாளி பிரத்தியங்கிராதேவி மந்திரம், குறிஞ்சியின் மனத்தே கோபுரமாய் ஒலிக்கிறது. 'க்ஷும்'!

ஸ்ரீ ஆசார்யாள் பெருமான், எதிரே நிற்பது போன்ற பிரமை.

'ஏ, பிரத்தியங்கிரா தேவி!'

அதர்வண வேதத்து மந்திர காண்டத்துச் சௌனக சாகையையும், பிப்பிலாத சாகையையும் மனம், தூய்மை யுடன் ஓதிக் கொண்டது!

'மங்கள ரூபிணி! சௌபாக்ய ஜனனீ! கிருபா ரூபிணி! ஆனந்த ரூபிணி! பக்த பிரியே! சரப சக்தி! புராதனீ! ஓ... பிரேத போஜனீ! பிரேத போஜனீ! பிரேத வாகினீ! க்ஷும்! க்ஷும்! க்ஷும்!'

எங்கோ ஸ்ரீ ஆசார்யாள் சுவாமிகள், 'நாராயணா' என்று கூறுவது போன்ற குரல்...

மனித விலாசம் வேறு; மன விலாசம் வேறு. இவள் மனவிலாசத்துக்குரியவளாயிற்றே!

தியானம் முடிந்து இமைகளைத் திறக்கிறாள், மன்பதை யில் எங்கோ எப்போதோ பிறக்கும் காப்பியப் பேரழகி குறிஞ்சி!



அந்தச் சின்னஞ்சிறு தாழ்வான மேடையில், கற்பகத்தைக் கூடத் தம்பூர் மீட்ட அனுமதிக்கவில்லை. தானே அதனை மடியில் கிடத்தி வணங்குகிறாள். ஆசான் அளித்த அன்புப் பரிசு அல்லவா? பிறகு அவளது செங்காந்தள் விரல்கள் சுருதி சேர்த்து மீட்டுகின்றன.

'ஓம்'...

குரல் ஆதார சுருதியில் இழையத் தம்பூர் மீட்டுகிறாள் குறிஞ்சி.

ஆதார சுருதியில் இழைந்த குரல், பஞ்சமத்தைத் தொடாமல், நேரே மேல் சட்சமத்துக்குச் சென்று நின்று – நீண்ட நேரமாக நின்று – இழைய...

சங்கீத மகால் அப்போதே சரணடைந்து விட்ட மாதிரி...

மடியில் தவழ்ந்த தம்பூரில் குறிஞ்சியின் காந்தள் விரல் கள் ஒரே சீராய் மீட்ட....

'ஏ, சிதம்பர நடராஜனே! நந்தன் உன்னை உள்ளே வந்து கண்டான்; இந்த நந்தினி, தமிழ் பொருட்டு உன்னை அலட்சியம் செய்தாள்! வா, இங்கே! வந்து எனது தமிழ் ராகம் – குற்றாலக் குறிஞ்சி ராகத்தைக் கேள்! கேள்!'...

என்பதுபோல இன்னமும் மேல் சட்சமத்தில் மூச்சுப் பிடிக்க நின்று தம்பூரோடு இழைகிறாள்...

அடுத்து அந்த ராகத்து ஆரோகண அவரோகணத்தைத் தனது குயில் குரலில் ஆதார சட்சமத்துக்கு வந்து, படிப் படியாக – ஒவ்வொரு சுரமாகக் குரல் கொடுத்து நின்று ஏறி இறங்குகிறாள்.

**சரிகம நிதநி பதநிச்...**

**ச்நிதம க ம் ப கரிச...**

பிரதிமத்திம ராகமான இதன் சுரங்களில் அவரோகண பாஷாங்க + சுரமான சுத்த மத்திமம் வருகிறபோது அதில் நிற்க...

மயக்கமோ மயக்கம்...

ஸ்ரீ ஆசார்யாள் குரல் எங்கிருந்தோ கேட்கிறது: "சுரத்தைத் தான் பாஷாங்கமாக்கச் சொன்னேன்!"...

ஓ... ஓரிரு முறை ஞானசுந்தரத்துடன் பாஷாங்கமாக முயன்றதன் தண்டனையோ இதுவரை அனுபவித்தது!

இனி... இனி...

தம்பூரை மீட்டிக் கொண்டு தெய்வீக நிலையில் ஒரு ராக தேவதை விண்ணிலிருந்து மண்ணுக்கு வந்து மன்னர் சபையைக் கௌரவிப்பதுபோல ஆலாபனை செய்கிறாள்.

"ஆகா!" "ஊகூ" என்கிற புரியாத ரசிப்பது போன்ற பொய்யான பாவனைக் குரல்கள் எழ வேண்டுமே! ஒரே அமைதி; மயக்கம் நிறைந்த அமைதி.

ஒரே ஒரு புலன் மட்டுமே உறங்காமல் விழித்திருக்கின்றது. அது செவிப்புலன். இவ்விதம் இருக்க, ரசனைக் குரலாவது? பாராட்டுக் குரலாவது?

ஓ... இந்த புதிய ராகத்தால், நாத ஜீவ சுரங்களால், ஈன்ற பொழுதில் சான்றோர் எனக் கேட்ட தாய் ராகமான வாசமிகு 'வாசஸ்பதி', வனப்பால் பெருமை அடைகிறது. அந்தப் பாஷாங்க – 'ம' மத்திமத்துக்குரிய தந்தை ராகம் அரிகாம்போதி, 'பனியின் விந்துளி போலவே' என அருணகிரி நாதர் திருப்புகழாய் மகிழ்கிறது. பனித்துளியாய் சிந்திய அந்த ஒரு சுரம் –ம– சுத்தமத்திமம் – அது வல்லவோ மகாலை மயங்கியது? அந்த மகேசுவரனான நடராஜனையே மயக்கி விட்டது? ஆ! எப்படி எல்லாம் ஆலாபனையை விரிவு படுத்துகிறாள்...

கானமா இது? தேவகானத்துக்கும் ஒருபடி மேலே மேலே... மேலே...

எங்கோ கூத்த பெருமானின் எடுத்த பாத சிலம்பொலி கேட்கிறது... தஜ்ஜம்!

கானாமிருதமா இது?... தகஜம்!



தத்தித்தா, தகஜனு தித்தித்தா, தகஜனு தகஜனு தித்தித்தா...

கந்தருவியாய், குற்றால அருவியாய், அதற்கும், மேலே பிரம்மபுத்திராவின் உற்பத்தி அருவியாய் பாடுகிறாள் பாடுகிறாள், பாடுகிறாள்...

'தத்தித்தா' என்று எதனைத் தத்தித் தரக் கேட்கிறாள்?

குறிஞ்சியின் இமைகள் மூடிய நெற்றிச்சுழி முன்னே நிருத்தமிடும் நடராஜ பெருமான்...

"தித்தித்தா? தித்தித்தா?" என்று சபையோரை நோக்கிக் குற்றாலக் குறிஞ்சி ராகம் 'தித்தித்ததா' என்று கேட்கிறாளா?

காற்றே, ஒரு கணம் மயங்கி அசையும் பொருள்களை அசையாமல் செய்து விடவே, பஞ்சபூத நாயகனான பரமேஸ்வரனே 'ஓ... இயக்கம் கெடுகிறது' என்று பயந்து எழுந்தோடி வந்து. அது இயங்க நடனமாடுகிறானா?

சங்கீத மகாலே சரணடைந்து மயங்க... சரபோஜி மயங்க... சிவாஜி சித்தம் குளிர...

அதே பாஷாங்க மத்திமத்தில் குறிஞ்சியின் குரல் இழைந்து நின்றபோது...

நின்ற போது...

ஞானசுந்தர நினைவுகள்...

தனித்துப்பாடும் தருமசங்கடங்கள்...

சலங்கையொலி அந்தரமாய் நிற்கிறது...

ஓ...

நிரந்தரக் குரலும் நின்றது; தம்பூர் மீட்டும் காந்தள் விரல்கள் காணாமற் போயின.

அமைதி, அமைதி, அமைதி...

கற்பகம் சற்று முன்னே ஓடி வந்து கவனித்து விட்டு, "அம்மா!" என்கிற உலகின் ஆதிச் சொல்லால் அலறிய போதுதான்...

மகால் விழித்தது; மன்னரும் விழித்தார்; சிவாஜி சித்தம் தடுமாறிப் போனான்.

குறிஞ்சி, கூத்தபிரான் பாதங்களில் குன்றாத ஜோதியாய் அமர்ந்து போனாள்.

ஆனந்தக் கண்ணீரில் மயங்கிய மகால், அவலக் கண்ணீரில் ஆழ்ந்து போனது.

இளவரசன் சிவாஜி "ஓ... குறிஞ்சி" என்று அலறிய அலறல்...

மன்னர் சரபோஜி எழுந்து வந்து மண்டியிட்டு மரியாதை செலுத்துகிறபோது...

அவையே எழுந்து நிற்கிறது...

சிவாஜியைத் தேற்றுகிறார் சரபோஜி: "இவள் தெய்வ மகள்; தெய்வத்துள் தெய்வமாகி விட்டாள்! மனதைத் தேற்றிக் கொள்."

குறிஞ்சி சாயவில்லை; அப்படியே சிலைபோல அமர்ந்தே தம்பூருடன் இருக்கிறாள்...

வெளியே சலசலப்பு...

பெருத்த சலசலப்பு...

"குறிஞ்சி, என் மகளே குறிஞ்சி!"

ராஜகாந்தி –சங்கீத மகாலுக்கு வெளியே மறைந்திருந்த ராஜகாந்தி – அங்கங்கள் அனைத்தும் துடிக்க மகாலுள் நுழைந்து பாய்ந்து ஓடி வருகிறபோது...

நெல்சனின் ஓங்கிய உத்தரவு காவல் நெஞ்சில் நெருப்பு மூட்ட....

துப்பாக்கிகள் வெடிக்கின்றன...



குண்டுகள் அவனைத் துளைக்கின்றன... ஒன்றா இரண்டா?

ரத்தம் பீறிட மகாலில் சாய்கிறான் ராஜகாந்தி...

"நெல்சன்! இதயமிலா அரக்கனே! நிறுத்து" என்று ஆங்கிலத்தில் கர்ஜிக்கிறார் சரபோஜி மன்னர்.

மீண்டும் அமைதி...

தரையை – குறிஞ்சி நடந்து வந்த பாதையை – ரத்தத்தால் மெழுகியவாறு "குறிஞ்சி... குறிஞ்சி! என் மகளே! உன் உயிர் பிரிந்த பிறகே என் உயிர் பிரிய வேண்டும் என்று நீ கேட்டுக்கொண்ட வாக்குறுதி நிறைவேறிவிட்டது; மகளே, மகளே!"

ஊர்ந்து ஊர்ந்து வருகிறான்...

எத்தனை குண்டுகள்?

புழுவாய்த் துடித்துப் புரண்டு புரண்டு ஊர்ந்து வந்த ராஜகாந்தி, சிலைபோல், தம்பூர் மடியில் தவழ அமர்ந்திருந்த குறிஞ்சியை அண்ணாந்து கவனிக்கிறான்.

"என் மகளே!"

கண்களில் குற்றாலக் குறிஞ்சி ராகம் கண்ணீரில் கரைகிறது...

மேலும் அருகே ஊர்ந்து சென்று, தாவி, அந்தச் சின்ன மேடையைப் பற்றித் தட்டுத் தடுமாறி ஏறி, குறிஞ்சியின் மெல்லிய பாதங்களைப் பற்றித் தலை வைக்கிறான். ராஜகாந்தி ராகம் வானில் ஒலித்தது.

அடுத்த கணம்...

அந்த அசைவில், குறிஞ்சியின் பூத உடலும் அவன் தலைமேல் சாய்ந்தது.

அந்த இனிய அன்பின் பரிசுத்தப் பிணைப்புக்கு இடையே இருந்த தம்பூர், அதிர்ச்சியின் காரணமாக எழுப்பிய நாதம்...

குற்றாலக் குறிஞ்சி ராகத்தின் ஜீவ நாதமாய் ஒலித்த போது, எங்கும் ஒலித்த குரல்கள்...

குறிஞ்சி...

குறிஞ்சி...

குற்றாலக் குறிஞ்சி!...

அவளது அந்தத் தம்பூர்...

அது எழுப்பிய இனிய நாதம்...

எண் திசைகளிலும் இனிதாய் நிறைந்து புகழ் பரப்பியதை யாரே மறுப்பர்? மறப்பர்?

இன்னொரு தமிழ்க் குறிஞ்சி எப்போது பிறந்து, மக்கள் இதயங்களில் பாடப் போகிறாள்?

**(நிறைவு)**

## ஆசிரியரின் பிற நூல்கள்

சந்திரோதயம்

நந்திவர்மன்

சுதந்திர பூமியில் வெள்ளை நாரைகள்

ராஜ ராகம்

கடவுள் காப்பியம்

தென்னங்கீற்று

ரத்த ஞாயிறு

காஞ்சிக் கதிரவன்

ராஜ கர்ஜனை

அஜாதசத்ரு